Book No 12

N. DORAIRAJAN
ELECTRICAL WIRING CONTRACTOR
5, VADAMALAI PILLAI ST.
VEPERY POST, MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சித்தர் ரஹஸ்யமென்னும்

ஆரூட அலங்காரம்.

மூலமும் – உரையும்.

இஃது
சில கணித சிகாமணிகளின்
வேண்டுகோளின்படி
எட்டுப்பிரதியும் அச்சுப்பிரதியும்
தற்காலம் சோதிடர்கள்
அனுபோகமாக சொல்லிக்கொண்டு வரும்
ஆரூடங்களை கேட்டு வாங்கியும்
ஆராய்ந்து

செஞ்சி–ஏகாம்பர முதலியாரவர்களால்

எழுதப்பெற்று

கன்னியபுத்தூர்

அரங்கநாதமுதலியார்

அவர்களால்

நான்காம்பதிப்பு

சென்னை சாரதா நிலயம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

1935.

இதன் விலை] ரிஜிஸ்டர் காபிரைட். [

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், சிததர் ரஹஸ்யமென்னும் ஆரூட அலங்காரம் மூலமும் உரையுமாக இந்நூலை செஞ்சி - ஏகாம்பரமுதலியா ரவர்களால் எழுதி முடிவு பெற்றதை கன்னியபுததூர் - அரங்கநாதமுதலியார் மேற்படியா ருக்குப் பொருளுதவி புரிந்து சகலசுதந்தரமும் பெற்றுக்கொண் டமையால் இது மேற்படி கன்னியபுத்தூர் - அரங்கநாதமுதலியார் அனுமதியின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம் கனம் பொருந்திய கவர்னமெண்ட் சட்டப்படி (ரிஜிஸ்டர் காபிரைட) செய்யப்பட்டது.

விளம்பரம்.

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், எனது கம்பெனியில் எல்லாவிதப் புத்தகங்களும் ரப்பர் முத்திரைகளும் ஆயுள்வேத அனுபோக அவிஷ்தங்களும் உயர்ந்த அத்தர் வாசனை திரவியங்களும் தங்ககிலிட்டு நகைகளும் ஜர்மன் சில்வர் நகைகளும் விலைசரசமாய் அனுப்பப்படும்.

க. அரங்கநாதமுதலியார் அண்டு கோ,

நெ, 11. தாண்டவராயப்பிள்ளை தெருவு,

சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

இப்புத்தகத்தில் அடங்கிய

ஆரூடங்களின் அட்டவணை.

1 உத்தம மத்திம ஆரூடம்
2 வருஷபலன் ஆரூடம்
3 திதிகளின் ஆரூடம்
4 நட்சத்திரங்களின் ஆரூடம்
5 யோகங்களின் ஆரூடம்
6 கரணங்களின் ஆரூடம்
7 வாரங்களின் ஆரூடம்
8 மாதங்களின் ஆரூடம்
9 இராசிகளின் ஆரூடம்
10 திசைகளின் ஆரூடம்
11 கிரகங்களின் ஆரூடம்
12 தேவதைகளின் ஆரூடம்
13 அதிர்ஷ்ட ஆரூடம்
14 அவயவ தொடுகுறி ஆரூடம்
15 பஞ்சபட்சி ஆரூடம்
16 பலகரை ஆரூடம்
17 ஜெனன ஆரூடம்
18 ருதுக்களின் ஆரூடம்
19 வேளையின் ஆரூடம்
20 ஜாமங்களின் ஆரூடம்

அட்டவணை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சித்தர் ரஹஸ்யமென்னும்

ஆரூட அலங்காரம்.

மூலமும் — உரையும்.

விநாயகர் - காப்பு.

விருத்தம்.

சீரூரும் சித்தர்முத்தா முனிவர் மூதோர்
 செப்பியதோர் கணிதநூற் றேடியாய்ந்து
ஏரூருமித்தரைவாழ் பல்லோர்காண
 ஏர்க்கையாம் சிததருட ரஹசியமென்னும்
பேரூரும் ஆரூட அலங்காரத்தைப்
 பேசவே செந்தமிழாற் பெருமையாகக்
காரூரு மூலமுரை யாகப்பாடக்
 கணபதியின் கமலபதங் காப்புதானே.

முகவுரை — விருத்தம்.

ஆதியாம் சித்தரூட ரஹசியமென்னும்
 அருமையுள ஆரூட அலங்காரத்தை
ஓதியே யொருமுறைதான் வாசித்தோர்கள்
 உலகினிலே புகழ்பெருக உண்மையாக
நீதியாம் சோதிடர்க ளாவாரப்பா
 நேர்மையுடன் பலாபலனை நிகழ்த்துவார்கள்
சோதியா மின்னூலே யாசானுகும்
 சுத்தமுடன் கண்டுமனம் மகிழத்தானே.

1-வது உத்தம மத்திம ஆரூடம்.

சக்கரம்.

1	2	3	4	5	6	7	8	9
சு	சே	சோ	ல	லி	லு	லே	லோ	அ
10	11	12	13	14	15	16	17	18
இ	உ	எ	ஒ	வ	வி	வு	வே	வோ
19	20	21	22	23	24	25	26	27
க	கி	கு	ங	ங்	ச	கே	கோ	ஹ
28	29	30	31	32	33	34	35	36
கி	ஹு	ஹே	ஹோ	ட	டி	டு	டே	டோ
37	38	39	40	41	42	43	44	45
ம	மி	மு	மே	மோ	டா	டி	டு	டே
46	47	48	49	50	51	52	53	54
டோ	ப	பி	பு	ஷ	ண	ட	பே	போ
55	56	57	58	59	60	61	62	63
ரா	ரி	ரு	ரே	த்த	த	தீ	து	தே
64	65	66	67	68	69	70	71	72
தோ	ந	நீ	நு	நே	நோ	ய	யி	யு
73	74	75	76	77	78	79	80	81
யே	யோ	ப	பி	பு	த	ப	ட	பே
82	83	84	85	86	87	88	89	90
போ	ஜ	ஜி	கி	கு	சே	சோ	க	கி
91	92	93	94	95	96	97	98	99
கு	கே	சோ	ஸ	ஸீ	ஸு	ஸ	ஸோ	த
100	101	102	103	104	105	106	107	108
தி	து	த	ஜ	ஞ	தே	தோ	ச	சி

ஆரூடம் பார்க்கும் விபரம்.

மேற்கண்ட ஆரூட சக்கரத்தில் அடைத்திருக்கும் எண்களுக் குறிய எழுத்துகளில் ஏதேனுமொன்றை தொடச்சொல்லி அவர்

கள் தொட்ட லக்கத்திற்குறிய எழுத்தின் பாடலை வாசித்து ஆருடம் கேட்க வந்தவர்களின் மனம் திருப்தியடையும் படியாக நினைத்து வந்த காரியம் ஆகும் ஆகாது தாமதத்தின் பேரில் ஆகும் என்றும் அனுபோகமாகச் சொலலலாம்.

1-சு-எழுத்தை தொட்டப லன்.

விருத்தம்.

சீர்பெருமொன்றேடொத்த சு-வென்னுமெழுத்தை தொட்டால்
நேர்பெரநினைத்தவேலை நீடியேகைதான் கூடும்
ஏர்பெரபெரியோராலே யேற்றதோருதவியாகும்
பேர்பெரமனையிற்செல்வம் பெரிகிடுமுத்தமந்தான்

(இ.ள்) ஒன்றுவது லக்கத்தினு டைய சு-வென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்திருக்கின்ற காரியம் நீடிடும், கை கூடும், பெரியோர்களால் உதவியுண்டாகும், மனையில் செல்வம் பெருகும் உத்தமம் எ-று. 1

2-சே-எழுத்தை தொட்டபலன்.

தானெனயிரண்டைச்சார்ந்த செ-யெனுமெழுத்தை தொட்டால்
நானெனநினைத்தவேளை நாள்படமுடிவதாகும்
ஊனெனபிணியும்நீங்கும் உறவினர்வந்துசேர்வார்
தேனெனபோனசொத்துத் தேடிடகிடைக்கும்பாரே

(இ-ள்) இரண்டாவது லக்கத்தினுடைய செ-எனும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்த காரியம் கைகூடிவர நாள்செல் லும் பிணியானதுதீரும், உறவினர் வந்துசேர்வார்கள், போனசொத் தை தேடிப்பார்க்க அகப்படும் மத்திபத்தில் உத்தமம் எ-று. 2

3-சோ-எழுத்தை தொட்டபலன்.

பார்க்கவேமூன்றினோடு பதிந்த சோ-வெழுத்தைதொட்டால்
தோர்க்கவேநினைத்தவேலை தோஷமாம்பலிதமில்லை
மூர்க்கமாங்கலகந்தன்னால் மோசமாம்பொருளுஞ்சேதங்
கோர்க்கவேயரசராலே கொடுமையும் விளையுமென்னே

(இ-ள்) மூன்றுவது லக்கத்தினுடைய சோ-வென்னும் எழுத் தை தொட்டதால் இப்போது நீ நினைத்த காரியம் முடிவுபெருது.

தோஷமுண்டாம், கோபத்தால் வந்த கலகத்தினால் மோசமாய்ப் பொருள் சேதமாகும், அரசர்களாலே கொடுமையானது விளையும் மத்திபம் எ-று. 3

4-ல-எழுத்தை தொட்டபலன்.

மென்னவேநாலினோடு மருவும் ல-யெழுத்தைத்தொட்டால்
கன்னியமாகக்கொண்ட கருத்தது பொருத்துகூடும்
அன்னியருதவியாலும் அரும்பொருள் வருகும்பின்னால்
மன்னியேபோனஜீவன் மாதுயர்படுகுஞ்சொல்லே

(இ-ள்) நான்காவது லக்கத்தினுடைய ல-யெழுத்தை தொட்டதால் இப்போது நீ மனதில் நினைத்த காரியம் பொருமையில் கைகூடும், அன்னிய மனிதர்களின் உதவியால் பொருள் பின்பாகக் கிடைக்கும், மனையைவிட்டுப் போன ஜீவன் போனவிடத்தில் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் உத்தமத்தில் மத்திபம் எ-று. 4

5-லி-எழுத்தை தொட்டபலன்.

சொல்லவேயந்தினோடுச் சூழ்ந்த லி-யெழுத்தைதொட்டால்
புல்லவேநினைத்தவேலை புகழுடன்பலிதமாகும்
வல்லதோர்வழக்குவெல்லும் வஞ்சியும்பெருவான்பிள்ளை
நல்லதோர்சுபங்கள்தானும் நாடிவந்தணுகுஞ்சீறே

(இ-ள்) ஐந்தாவது லக்கத்தினுடைய லி-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தவேலை புகழுண்டாகும்படியாய் சீக்கிரத்தில் முடியும், தொடுத்த வழக்கு வெல்லும் மனையாள் ஆண்பிள்ளையைப் பெருவாள் சுபகாரியங்கள் செய்யும்படியாக வந்து நேரும் உத்தமம் எ-று. 5

6-லு-எழுத்தை தொட்டபலன்.

செறெனயாறினோடுச் சேர்ந்ததோர் லு-வைத்தொட்டால்
பாறெனகைவிட்டேதான் போனதோர்பொருள்வராது
நறெனதொழிலிலேதான் நிந்தையாம்பகையும்நேரும்
டறெனயெதைசெய்தாலுங் குணமில்லையென்றுசெப்பே

(இ-ள்) ஆறுவது லக்கத்தினுடைய லு-வென்னும் எழுத்தை தொட்டதால் கைவிட்டுப் போனபொருள் கிடைக்காது செய்யும்படியானத் தொழிலில் நிந்தையானப் பகைநேரும், எந்த காரியத்தைப் பிரவேசிததுச் செய்யினுங் குணமில்லையாம் மத்திபம் எ-று. 6

7-லே-எழுத்தை தொட்டபலன்

செப்பவேயேழினோடு சேர்ந்ததோர் லே-யைத்தொட்டால்
மெப்பவேயுதேசித்த மேலெனுந் தொழிலுமாகும்
ஒப்பவேவியாபாரத்தில் ஓங்கியலாபமுண்டாம்
கொப்பெனவழக்குவெல்லும் குறித்ததோர் மனைகொள்வாயே

(இ-ள்) எழாவது லக்கத்தினுடைய லே-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ உத்தேசித்திருக்கும் படியானத் தொழில் பலிதமாகும், வியாபாரஞ்செய்ய அதிக லாபமுண்டாகும், வழக்கு தொடுக்க வெல்லும், குரித்திருக்கும்படியான மனையை வாங்குவாய் உததமம் எ-று. 7

8-லோ-எழுத்தை தொட்டபலன்

கொள்ளவேயெட்டினோடு குலவிய லோ-வைத்தொட்டால்
கள்ளமாய்போனசொத்து காண்பது மில்லையில்லை
உள்ளதோர்பொருளுஞ்சேதம் உறவினர்பகையுமாவார்
தெள்ளெனபிணியுந்தானுந் தீரநாள்செல்லுங்காணே

(இ-ள்) எட்டாவது லக்கததினுடைய லோ-வென்னும் எழுத்தை தொட்டதால் கள்ளத்தனமாகப் போனபொருள் மறுபடியுங் கிடைக்க மாட்டாது, பொருள் சேதமாகும், பந்துக்கள் பகையாவார்கள், வந்தணுகிய நோயானது தீர்வதற்கு நாட்செல்லும் மத்திபம் எ-று. 8

9-அ-எழுத்தை தொட்டபலன்

காணவேவொன்பானோடுக் கலந்த அ-யெழுத்தைதொட்டால்
பூணவேபொருளுங்கிட்டும் போனவர் வந்துசேர்வார்
தோணவேதொழிலுமோங்கும் தோகையருறவுமாகும்
வேணவேவியாபாரத்தில் விருத்தியும் லாபமுண்டாம்

(இ-ள்) ஒன்பதாவது லக்கத்தினுடைய அ-என்னும் எழுத்தை தொட்டதால் பொருள் கிடைக்கும், போனவர் வந்து சேர்வார்கள் செய்யுந் தொழிலானது ஓங்கும், ஸ்திரீகள் உறவு கூடும், வியாபாரத்தில் விருத்தியும் லாபமும் உண்டாகும் உத்தமம் எ-று. 9

10-இ-எழுத்தை தொட்டபலன்

உண்டெனபத்திநோடு உற்ற இ-எழுத்தைதொட்டால்
விண்டெனகொண்டயெண்ணம் வீணதாம்முடிந்திடாது

துண்டெனபகையும்நேரும் தூரமேபோனார்மீளார்
பண்டெனதெய்வகுற்றம் பாதையும்படுத்தும்பாரே

(இ-ள்) பத்தாவது லக்கத்தினுடைய இ-என்னும்எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்திருக்கும்படியான எண்ணம் முடிவுபெறாது பகையானது நேரும் தூரம்போனவர்கள் வந்துசேரமாட்டார்கள் தெய்வ குற்றத்தினால் பாதையுண்டாம் மத்திபம் எ-று. 10

11-உ-எழுத்தை தொட்டபலன்

படுத்தியபதினொன்றோடு பரவும் உ-எழுத்தைதொட்டால்
தொடுத்திடநினைத்தவேலை துயரமேசெய்யும்மெத்த
அடுத்திடம்பகையுண்டாகும் ஆரிழைபிரிந்துபோவாள்
கெடுத்திடதொழிலும்வீணாய் கிட்டியலாபம்போமே

(இ-ள்) பதினொராவது லக்கத்தினுடைய உ-யென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்துசெய்ய யெண்ணங் கொண்டிருக்கும்படியான தொழில் முகாந்திரத்தில் துயரமானது செய்யும், அடுத்த யிடமும் பகையுண்டாகும், மனையாள் பிரிந்து போவாள், எத்தொழிலிலும் லாபங்கிடைக்க மாட்டாது மத்திபம்

12-எ-எழுத்தை தோட்டபலன்.

போமெனபனிரண்டோடு பொருந்தும் எ-யெழுத்தைதொட்டால்
நாமெனநினைத்தவேலை நாடிடும்பொருளுங்கிட்டும்
தாமெனகலகம்நீங்கும் தானியம்விருத்தியாகும்
ஆமெனஆவுகொள்ள அதிகபால் பாக்கியமுண்டாம்

(இ-ள்) பனிரண்டாவது லக்கத்தினுடைய எ-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் தடையில்லாமலாகும், பொருள் கிடைக்கும், சேனநாள் கலகம் நீங்கும், தானியம் விருத்தியாகும், பசுக்கொள்ள பால்பெருகும் உத்தமம் எ-று. 12

13-ஓஎழுத்தை தோட்டபலன்.

உண்டெனபதிமூன்றோடு உற்ற ஓ-யெழுத்தைதொட்டால்
கொண்டதோரெண்ணமோடு கொடும்பகை யகன்றிடாது
பெண்டிரால்வந்ததீங்கு பீடிக்கும் பாதைசெய்யும்
கண்டிடயெதைசெய்தாலும் கஷ்டமேவிளையும்பாரே

(இ-ள்) பதிமூன்றாவது லக்கத்தினுடைய ஓ-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தயெண்ணங் கைகூடாது மூண்டபகையும் ஒழியாது, பெண்சாதியினால் வந்ததீங்கானது பீடிக்கும் பாதை செய்யும் எத்தொழிலை செய்தாலும் கஷ்டமே செய்துக்கொண்டுவரும் மத்திபம் எ-று. 13

14-வ-எழுத்தை தோட்டபலன்

பாறெனபதினாலோடு பரவும் வ-யெழுத்தைதொட்டால்
சீறெனபோறவேலை சித்தியாம் சீக்கிரத்தில்
நேறெனயெதிரிதன்னை நீடிடவெல்லலாகும்
காறெனயுத்தியோகங் காணவேபலக்குமேயாம்

(இ-ள்) பதினாலாவது லக்கத்தினுடைய வ-என்னும் எழுத்தை தொட்டதால் போகும்படியான காரியம் சித்தியாகும், சீக்கிரத்தில் முடியும் எதிரியைவெல்லலாகும் உத்தியோகம் நாளுக்குநாள் விருத்தியாகும் உத்தமம் எ-று. 14

15-வி-எழுத்தை தோட்டபலன்

மேலனபதினைந்தோடு மருவும் வி-யெழுத்தைதொட்டால்
கோலனநினைத்தவேலை கூடிடநாளேயாடும்
சாலனமருந்துமுண்ண சாந்தியாம்பிணியுந்தீரும்
வேலனகலகந்தானும் வந்துபின்தீருங்கூறே

(இ-ள்) பதினைந்தாவது லக்கத்தினுடைய வி-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலை தாமதத்தில் முடிவாகும் மருந்துதின்ன பிணிபானது தீரும், கலகமானது வந்து பின்னால் சுகமுண்டாகும், மத்திபத்தில் உத்தமம் எ-று. 15

16-வூ-எழுத்தை தோட்டபலன்

கூறெனபதினாறோடுக் குலவும் வூ-யெழுத்தைதொட்டால்
பேறெனப்பெரியோராலே பேசியக்கர்மமாகும்
நேறெனதேடும்ஜீவன் நேர்மையாய் கைபிற்சிக்கும்
ஆறெனயெதைசெய்தாலும் மனுகூல முண்டாஞ்சாற்றே

(இ-ள்) பதினாறாவது லக்கத்தினுடைய வூ-என்னும் எழுத்தை தொட்டதால் பெரியோர்களுடைய உதவியினால் நினைத்த காரியம் முடியும் இப்போது தேடிக்கொண்டு போகும்படியான ஜீவன்

கையில் அகப்படும் எந்தகாரியத்தை உத்தேசித்து செய்கினும் அனுகூலமாகும் உத்தமம் எ-று. 16

17-வே-எழுத்தை தொட்டபலன்

சாற்றவேபதினேழோடு சார்ந்த வே-யெழுத்தைதொட்டால்
தோற்றதோர்பொருளுங்கிட்டா துலங்கிடாநினைத்தவேலை
நேற்றியாயெதைசெய்தாலும் நஷ்டமே விளைக்குமப்பா
ஏற்றவேமாதமூன்று போகபின் சுகமுண்டாமே

(இ-ள்) பதினேழாவது லக்கத்தினுடைய வே- எழுத்தை தொட்டதால் கைவிட்டுப்போன பொருள் கிடைக்கமாட்டாது, நினைத்தகாரியமும் முடியாது, எந்தகாரியங்களில் பிரவேசித்தாலும் நஷ்டமுண்டாகும், மூன்றுமாதம் கழிந்தால் சுகந்தரும் மத்திபம் எ-று. 17

18-வோ-எழுத்தை தொட்டபலன்

ஆமெனபதினெட்டோடு அடுத்த வோ- யெழுத்தைதொட்டால்
சேமெனநினைத்தவேலை சிக்கிட சிலநாட்செல்லும்
தாமெனபிணிதீராது தந்தைதாய் விரோதமாவார்
போமெனயாத்திரைபோக பொல்லாத தீங்குண்டென்னே

(இ-ள்) பதினெட்டாவது லக்கத்தினுடைய வோ- எழுத்தை தொட்டதால் இப்போது நீ மனதில்நினைத்தகாரியம் முடிய நாட்செல்லும் பிணியானது தீராது தாய்தந்தையர்கள் பகையாவார்கள் யாத்திரைபோக தீமையுண்டாகும் மத்திபம் எ-று. 18

19-க-எழுத்தை தொட்டபலன்

என்னபத்தொன்பானோடு யேற்ற க-எழுத்தைதொட்டால்
மன்னராலுதவியாகும் மகிட்சியாம்நினைத்தவேலை
கன்னியால்பொருளுஞ்சேருங் கலகமுமொழிந்துபோகும்
பன்னியேபோனஜீவன் பண்புடன்வருகுங்காணே

(இ-ள்) பத்தொன்பதாவது லக்கத்தினுடைய க - எழுத்தை தொட்டதால் மன்னர்களால் உதவியாகும் நினைத்தகாரியம் முடியும், கன்னியென்னும் ஒருசிறுபெண்ணினால் பொருள்கிடைக்கும், கலகமானது ஒழியும், இடம்விட்டு போனஜீவன் வந்துசேரும் உத்தமம் எ-று. 19

20-கி-எழுத்தை தொட்டபலன்.

காணவேயிருபானோடுக் கலந்த கி-யெழுத்தைதொட்டால்
தோணும்வியாக்கூலமெத்த துலங்கிடாநினைத்தவேலை
பூணவேசிறையுமுண்டாம் பொருளதுசிலவதாகும்
வேணவேயெதைசெய்தாலும் வருத்தமேவணிகிக்காட்டும்

(இ-ள்) இருபதாவது லக்கத்தினுடைய கி-என்னும் எழுத்தைத்தொட்டதால் மனவியாகூலம் அதிகரிக்கும் இப்போது நீ நினைத்த காரியம் முடியாது சிறைபடச்செய்யும் பொருள் விரையமாகும் எந்தக்காரியங்களில் பிரவேசித்து செய்ய துடங்கினும் யுத்தம் அதிகரிக்கும் மத்திபம் எ-று. 20

21-கு-எழுத்தை தொட்டபலன்.

காட்டவே யிருபத்தொன்றிற்கலந்த கு-யெழுத்தைதொட்டால்
தாட்டியாம் நினைத்தவேலை தடையிலா முடிவதாகும்
கூட்டுவியாபாரஞ்செம்ய கூடியலாபமுண்டாம்
நீட்டியே கொடுக்கவாங்க நிலமையுண்டாகுஞ்சொல்லே

(இ-ள்) இருபத்தோருவது லக்கத்தினுடைய கு-எழுத்தைத் தொட்டதால் நினைத்தகாரியம் தடையில்லாமல் முடியும், கூட்டுவியாபாரஞ் செய்ய லாபங்கிடைக்கும், கொடுக்கல் வாங்கலில் நிலமையுண்டாகும் மகா உத்தமம் எ-று. 21

22-ங-எழுத்த தொட்டபலன்.

சொல்லவே யிருப்பான்ரண்டிற் சேர்ந்த-ங-யெழுத்தைதொட்டால்
தொல்லையாம் நினைத்தவேலை தோஷமாம் பலித்திடாது
நல்லவர்பகையுமாவார் நாடியபொருள்கைகிட்டா
வல்லவே பிரிந்துபோன வஞ்சியர் வந்துசேராள்

(இ-ள்) இருபத்திரண்டாவது லக்கத்தினுடைய ங-எழுத்தை தொட்டதால் தொல்லை துலையாது நினைத்த காரியம் முடியாது நல்லவர் பகையாகுவார் இப்போது நீ நாடிதேடி யோகும்படியான பொருள் கிடைக்கமாட்டாது உன்னை விட்டுப் பிரிந்துபோன மாதும் வந்து சேரமாட்டாள் மத்திபம்-எ-று. 22

23-ங்-எழுத்தை தொட்டபலன்.

சேறென யிருபான்மூன்றிற் சேர்ந்த ங்-கெழுத்தை தொட்டால்
தாறென நினைத்தவேலை தடையதா மொருவராலே

சீறென சினேகிதத்திற் சீரிய பகையுண்டாகும்
தேறென வெளியூர்போனார் திரும்பிடா நாளாமென்னே

(இ-ள்) இருபத்திமூன்றாவது லக்கத்தினுடைய ங்-கென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலை ஒரு மனிதனால் தடையாகும் சினேகித விஷயத்தில் பகை நேரும், வெளியூர் போன பேர்கள் வர நாள்செல்லும் மத்திபம் எ-று. 23

24-ச-எழுத்தை தொட்டபலன்.

மென்னவேயிருபானாலில் மருவுஞ் ச-யெழுத்தை தொட்டதால்
உன்னவே நினைத்தவேலை உடனது பலிதமாகும்
பன்னவே குறித்தமாது பரிவுடன் வந்து சேர்வாள்
வின்னமு மொன்றுமில்லை வெகுபேர்கள் நேயங்கூடும்

(இ-ள்) இருபத்திநான்காவது லக்கத்தினுடைய ச - என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலை உடனே பலிதமாகும், குறித்த ஸ்திரீயும் வந்து சேர்வாள் யாதொரு வின்னமுங் கிடையாது வெகுபேர்கள் நேயமானது கூடும் உத்தமம் எ-று. 24

25-கெ-எழுத்தை தொட்டபலன்.

கூடவே யிருபானைந்திற் குலவும கெ-யெழுத்தைதொட்டால்
தேடவே நினைத்தவேலை தீங்கெனத் தடையதாகும்
நீடவே வழக்கினாலே நேர்ந்திடுங் கஷ்டமெத்த
ஓடியே போனபேரும் உடனவர் வருவதில்லை

(இ-ள்) இருபத்தைந்தாவது லக்கத்தினுடைய கெ-எழுத்தைத் தொட்டதால் நினைத்தவேலை தடையாகும் வழக்கினால் கஷ்டமுண்டாகும், வீடுவிட்டு ஓடிபோனவர்கள் உடனே வரமாட்டார்கள் மத்திபம் எ-று. 25

26-கோ-எழுத்தை தொட்டபலன்

தில்லென யிருபானாறிற் றிகழுங் கோ-யெழுத்தைதொட்டால்
நல்லென நினைத்தவேலை நலமுடன் சித்தியாகும்
தொல்லையுந் துலைந்துபோகும் தொடுத்ததோர் வழக்குவெல்லும்
புல்லவே போனஜீவன் பொருளுடன் வருகும்பாரே

(இ-ள்) இருபத்தாறாவது லக்கத்தினுடைய சோ-யென்னும் எழுத்தை தொட்டதால்,நினைத்தகாரியம் சித்தியாகத்தானே முடியும்

தொல்லையானது விலகும் தொடுத்த வழக்கு வெல்லும், வீடுவிட்டுப் போனஜீவன் பொருளோடும் வந்துசேரும் உத்தமம். 26

27-ஹ-எழுத்தை தொட்டபலன்.

காறென யிருபானேழிற் கலந்த ஹ-யெழுத்தைதொட்டால்
பேறென போறவேலை பெண்ணினால் தடையதாகும்
நேறென கஷ்டந்தானும் நீங்கவோர் திங்கட்செல்லும்
சீறென யெதைச்செய்தாலுஞ் சிந்தையில் கலக்கம் நேரும்

(இ-ள்) இருபத்தேழாவது லக்கத்தினுடைய ஹ-யென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ உத்தேசித்துப்போகும்படியான காரியம் ஒரு பெண்பிள்ளையினால் தடையாகும், கஷ்டமானது துலைய ஒருமாதஞ் செல்லும் நீ எத்தொழிலை செய்தாலும் மனதிற்கு கலக்கமாகவேயிருக்கும் மத்திபம் எ-று. 27

28-கி-எழுத்தை தொட்டபலன்.

நேரவே யிருபானெட்டில் நீடுங்-கி-யெழுத்தைத் தொட்டால்
சேரவே வருத்துமுண்டுச் செய்தொழில் பலிதமாகும்
கோரவே யாணும்பெண்ணும் கூடியே போனார் மீள்வார்
தேரவே வழக்குவெல்லும் தீமையும் விலகுமாதே

(இ-ள்) இருபத்தெட்டாவது லக்கத்தினுடைய கி-என்னுமெழுத்தை தொட்டதால் வருத்துண்டாகும், செய்யும்படியான தொழில் விருத்தியாகும், ஆணும் பெண்ணுமாய் கூடிக்கொண்டு போனவர்கள் மீண்டுவருவார்கள் வழக்கானது வெல்லும் இப்போது பிடிக்கும்படியான தீமையானது நீங்கும எ-று. 28

29-ஹூ-எழுத்தை தொட்டபலன்

மீளென யிருபத்தொன்பான் மருவும் ஹூ-எழுத்தை தொட்டால்
ஆளெனப்போறவேலை அலைச்சலாம் முடிந்திடாது
கோளென வொருவனாலே குற்றமும் வந்துசேரும்
கேளென வழக்கினாலே கெடிதியுந் தானுண்டாமே

(இ-ள்) இருபத்தொன்பதாவது லக்கத்தினுடைய ஹூ-எழுத்தை தொட்டதால் இப்போது நீ போகும்படியான வேலை அலைச்சல் படச்செய்யும் முடிவுபெறாது ஒரு மனிதனால் குற்றம் வந்தணுகும் தொடுக்கும்வழக்கினால் கெடிதி சம்பவிக்கும் மத்திபம் எ-று. 29

30-ஹே-எழுத்தை தொட்டபலன்.

ஆமெனமுப்பதோடு அமர்ந்த ஹே-யெழுத்தைதொட்டால்
தாமெனநினைத்தவேலை தையலால்முடிவதாகுங்
போமெனப்பொருளுங்கிட்டும் போனவர்வந்துசேர்வார்
நாமெனசுபங்கள்தாமும் நாடியமனையிலாகும்

(இ-ள்) முப்பதாவது லக்கத்தினுடைய ஹே-என்னும் எழுத்தைத் தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் ஒரு பெண்பிள்ளையால்முடியும், பொருள் கிடைக்கும் போனபேர்கள் வந்து சேர்வார்கள் சுபமானக்காரியங்கள் மனையில் நடக்கும் உத்தமம். 30

31-ஹோ-எழுத்தை தொட்டபலன்.

ஆகவே முப்பானொன்றே அடுத்த ஹோ-யெழுத்தை தொட்டால்
தாகமாம் நினைத்தவேலை தானது முடிவதில்லை
சோகமாம் போனஜீவன் சுகமுடன் வருவதில்லை
பாகமே பிரிவதில்லை பலனில்லை யென்றுசாற்றே

(இ-ள்) முப்பத்தோராவது லக்கத்தினுடைய ஹோ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலை முடிவுபெறாது சோகப்பட்டு போனஜீவன் சுபமாக வந்து சேரமாட்டாது பாகம்பிரிய நாள்செல்லும் தற்காலம் யாதொரு பலனுங் கிட்டாது மத்திபம். 31

32-ட-எழுத்தை தொட்டபலன்.

சாற்றவே முப்பானிரண்டில் சார்ந்த ட-யெழுத்தை தொட்டால்
ஏற்றவே யெதைசெய்தாலு மிமிசையாங் கைகூடாது
போற்றவே மனையாளாலே பொல்லாங்கு வந்துதீரும்
தோற்றவே மூன்றுமாதம் துலைந்திட சுகமுண்டாமே

(இ-ள்) முப்பத்திரண்டாவதுலக்கத்தினுடைய ட-என்னும்எழுத்தைத் தொட்டதால் எந்தக் காரியத்தைப் பிரவேசித்துச் செய்யினும் இமிசையாகுமேதவிர கைகூடி வரமாட்டாது, மனையாளினால் பொல்லாங்கானது வந்து உடனே தீரும் இவையெல்லாம் மூன்றுமாதம் கழிய அதின்மேல் சுகமுண்டாகும் மத்திபம் எ-று. 32

33-டி-எழுத்தை தொட்டபலன்

ஆமென முப்பான்மூன்றை அடுத்த டி-யெழுத்தை தொட்டால்
தாமென போறவேலை நலம்பெறும் முடிவதாகும்

தாமென வுறவுகூடுந் தையலாள் நேசமாவாள்
சேமென யுத்தியோகஞ் சீர்பெற யாகுஞ்சித்தி

(இ-ள்) முப்பத்தி மூன்றாவது லக்கத்தினுடைய டி-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ குறித்துப் போகும்படியான காரியம் நன்மையாக முடியும், உறவுகூடும் மாதர்கள் சினேகமாவார் உத்தியோகமும் சீர்பெறும்படியாக சித்தியாகும் உத்தமம் எ-று 33

34-டு-எழுத்தை தொட்டபலன்.

சித்தியாம் முப்பான்நாலிற் சேர்ந்த டு-யெழுத்தை தொட்டால்
நத்திய தொழில் கிட்டாது நாடிய வேலையாகா
உத்தமோர் மெய்யிற்கண்ட ஒருபிணி துலைந்திடாது
பத்திய வழக்கினாலே பாதை யுண்டாகுஞ் சொல்லே

(இ-ள்) முப்பத்தி நாலாவது லக்கத்தினுடைய டு-என்னும் எழுத்தை தொட்டதால் நாடிப்போகும்படியான தொழில் முடிவுபெறாது உடம்பில் வாய்த்தபிணி தீராது வழக்கினால் பாதை யுண்டாம் மத்திபம் எ-று. 34

35-டே-எழுத்தை தொட்டபலன்.

சொல்லவே முப்பானைந்தை சேர்ந்த டே-யெழுத்தைத்தொட்டால்
நல்லதோர் நடக்கையுண்டாம் நாடிய தொழிலுமாகும்
வல்லவருதவியாலே வழக்கது உடனே வெல்லும்
பொல்லாப்பு துலைந்துபோகும் போனது வந்துகிட்டும்

(இ-ள்) முப்பத்தைந்தாவது லக்கத்தினுடைய டே-என்னும் எழுத்தை தொட்டதால் நன்மையான நடக்கையானது உண்டாகிநாடிப்போகும்படியான தொழில் முடிவாகும், ஒருவருடைய உதவியினால் வழக்கானதுவெல்லும் பொல்லாங்கானதுந் துலைந்துபோகும் போன பொருளுங்கிடைக்கும் உத்தமம் எ-று. 35

36-டோ-எழுத்தை தொட்டபலன்.

கிட்டவே முப்பானாறிற் கலந்த டோ-யெழுத்தை தொட்டால்
தொட்டதோர் தொழிலுமாகா துலவது போனோர் மீளார்
நஷ்டமே மிகவுண்டாகும் நாரியர் பகையுமாவார்
துஷ்டர்கள் நேயத்தாலே துயரமுமிகவுண்டாமே

(இ-ள்) முப்பத்தாறுவது லக்கத்தினுடைய டோ-என்னும்எழுத்தை தொட்டதால் நினைத்த தொழில் செய்ய முடிவுபெறாது துலதூரம் போனபேர்கள் வந்து சேரார்கள் நஷ்டம் அதிகமாக உண்டாகும் ஸ்திரீகளின் பகை நேரும், துட்டர்களுடைய நேசத்தினால் துயரமதிகரிக்கும் மத்திபம் எ-று. 36

37-ம-எழுத்தை தோட்டபலன்·

ஆமென முப்பானேழில் அமர்ந்த ம-எழுத்தைதொட்டால்
போமென நினைத்தகர்மம் புகழ்பெற முடிவதாகும்
தாமெனத் தொழிலுங்கிட்டுந் தையலும் பெருவாள்பிள்ளை
நாமென யெதைசெய்தாலும் நன்மையே பெருகுமென்னே

(இ-ள்) முப்பத்தேழாவது லக்கத்தினுடைய ம-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் நன்மையாக முடிவாகும், தொழிலுங்கிட்டும் மனையாளும் ஆண்பிள்ளையைப் பெருகுவாள் எந்த காரியங்களைப் பிரவேசித்து செய்யினும் நன்மையானதுப் பெருகும் தீமையானது விலகும் உத்தமம் எ-று. 37

38-மி-எழுத்தைதோட்டபலன்.

என்னவே முப்பானெட்டோ டிருக்கு மி-யெழுத்தை தொட்டால்
முன்னியே நினைத்தவேலை முடிந்திடநாளதாகும்
மன்னியே போனஜீவன் வருகுமோர் வாரந்தன்னில்
கன்னிய கஷ்டமெல்லாங் காட்டிபின் சுகமுண்டாமே

(இ-ள்) முப்பத்தெட்டாவது லக்கத்தினுடைய மி-என்னும்எழுத்தை தொட்டதால் இபபோது நினைததகாரியம் முடிய நாடசெல்லும் மனைவிட்டுப் பிரிந்துபோனஜீவன் ஒரு வாரத்திற்குள் வந்து சேரும் முந்தி அதிக கஷ்டங்களைக்காட்டி பின்பு சுகமுண்டாகும் மத்திபம் உத்தமம் எ-று. 38

39-மு-எழுத்தை தோட்டபலன்.

சுகமென முப்பானொன்பான் சூழ்ந்த மு-யெழுத்தை தொட்டால்
உகமையா நினைத்தவேலை உத்தமம் உடனேயாகும்
தகமென பிணியுந்தீருந் தக்கதோர் நேயங் கூடும்
அகமென மனையிற்றானும் ஆகுஞ்சோபனங்களென்னே

(இ-ள்) முப்பதொன்பதாவது லக்கத்தினுடைய மு-வென்னு எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் உத்தமமாகும்

உடனே கைகூடிவரும், தேகத்தில் வாய்ந்த பிணியானது தீரும் அருமையான சிநேகிதங்கூடும் மனையில் சுகசோபனங்கள் நடக்கும் உத்தமம் எ-று. 39

40-மே-எழுத்தை தோட்டபலன்.

என்னவே நாற்பதோடு யிருக்கும் மே-எழுத்தைதொட்டால்
பன்னியே நினைத்தவேலை பாதையாம் முடிவதில்லை
கன்னியால் கலகமாகுங் காரியங் கேடதாகும்
உன்னிய வழக்கினாலே உற்றிடுந் துயரமாதே

(இ-ள்) நாற்பதாவது லக்கத்தினுடைய மே-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்த வேலையினால் பாதை யுண்டாகும் முடிவுபெறாது ஸ்திரீயினால் கலகம்நேரும். காரியங்கெடும் நேர்ந்தவழக்கினால் துயரமுண்டாகும் மத்திபம் எ-று. 40

41-மோ-எழுத்தை தோட்டபலன்.

மாதென நாற்பத்தொன்றை மருவும் மோ-எழுத்தைதொட்டால்
போதென மனமதாகப் போறதோர் வேலைசாயும்
தோதென துணைவராலுந் துலங்கிட லாபங்காணும்
ஓதென வெளியூர் போனோர் உடன்வந்துசேர்குவாரே.

(இ-ள்) நாற்பத்தோராவது லக்கத்தினுடைய மோ-என்னும் யெழுத்தை தொட்டதால் இப்போது மனதில் நினைத்துப் போகின்ற காரியம் உடனே பலிதமாகும், துணைவர்களால் லாபங்கிடைக்கும் வெளியூர் போயிருக்கின்றவர்கள் உடனேவந்து சேர்வார்கள் உத்தமம். 41

42-டா-எழுத்தை தோட்டபலன்·

வாறென நாற்பான்ரண்டை வடைந்த டா-யெழுத்தைதொட்டால்
போறெனப் போறவேலை பெருமையாய் முடிவதாகும்
நேறென யெதைச்செய்தாலும் நேர்மையாய்வசமதாகும்
தேறெனபோனஜீவன் தெற்கெனுந் திசையில்பேசே

(இ-ள்) நாற்பத்திரண்டாவது லக்கத்தினுடைய டா—என்னும் யெழுத்தை தொட்டதால் இப்போது குறித்துப்போகும்படியானவேலை பெருமையாகத்தானே முடிவுபெரும், எந்த காரியங்களில் பிரவேசித்தபோதிலும் அந்தக்காரியங் கைவசமாகும் வீடுவிட்டுப்பிரிந்து போனஜீவன் தென்திசையில் சேர்ந்து வாழும் உத்தமம். 42

43-டி-எழுத்தை தோட்டபலன்.

பேசிய நாற்பான்மூன்றிற் பெருகும் டி-யெழுத்தைதொட்டால்
ஆசையாய் நினைத்தவேலை யாவதுக் கஷ்டமாகும்
தோஷமாய் போனஜீவன் திரும்பிட வெகுநாட்செல்லும்
நேசமும்விட்டுநீங்கும் நேரிழைபிரிவாள் சொல்லே

(இ-ள்) நாற்பத்திமூன்றாவது லக்கத்தினுடைய டி-என்னும்எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் முடிவதுகஷ்டமாகும் கலகப்பட்டுப்போனஜீவன் திரும்பிவந்துசேர நாட்செல்லும் ,நேசமானது பிரிந்துபோகும், ஸ்திரீயும் உன்னைவிட்டு நீங்கிடுவாள் மத்திபம் எ-று. 43

44-டு-எழுத்தை தோட்டபலன்.

சொல்லவே நாற்பான்நாலிற் சூழ்ந்த டு-வெழுத்தைதொட்டால்
நல்லது நினைத்தவேலை நலமுடன் முடிவதாகும்
வல்லவருதவியுண்டாம் வர்த்தகம் பலிதமாகும்
வெல்லவேவேந்தராலே வெகுசுகமுண்டாங்கூறே

(இ-ள்) நாற்பத்திநான்காவது லக்கத்தினுடைய டு-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்திருக்கும்படியான காரியம் நன்மையாகத்தானே முடிவாகும் வல்லமையுள்ள மனிதர்கள் உதவியுண்டாகும் வர்த்தகஞ்செய்ய பலவிதமான லாபங்காணும் அரசர்களுடைய உதவியினால் மேன்மையும் சுகமுமுண்டாகும் எ-று. 44

45-டே-எழுத்தை தோட்டபலன்.

கூறவே நாற்பானைந்தில் கூடும் டே-யெழுத்தை தொட்டால்
நேறவே போறவேலை நாள்பட முடிவதாகும்
பாறவேமணமுங்கூடும் பாக்கியமிகவுண்டாகும்
மீறவே நாட்குநாளு மிகநலமுண்டாம்பாரே.

(இ-ள்) நாற்பத்தைந்தாவது லக்கத்தினுடைய டே-யென்னும் எழுத்தை தொட்டதால் நீ குறித்துப் போகின்றவேலை நாட்படமுடியும், மணங்கூடும் பாக்கியம்பெருகும் இவையெல்லாம் நாட்குநாள்மிகவும் நன்மையுண்டாகும் மத்திபத்தில் உத்தமம். 45

46-டோ-எழுத்தை தோட்டபலன்.

பார்க்கவே நாற்பானாறிற் பதிந்த டோ-எழுத்தைதொட்டால்
கோர்க்கவே நினைத்தகர்மங் கூடிடுந் தாமதத்தில்
சேர்க்கவே பந்துவாளுஞ் சீருடன் சிறப்புண்டாகும்
தோர்க்கவே போனசொத்துந் துலங்கிட கிட்டும்நேரே

(இ-ள்) நாற்பத்தாறாவதுலக்கத்தினுடைய டோ-என்னும்எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் தாமதத்தில் முடியும், பந்துக்களாற் சீருஞ்சிறப்புமுண்டாகும், கைவிட்டு அபலமாகப் போனசொத்து மறுபடியும் தானேவந்து கிடைக்கும் உத்தமத்தில் மத்திபம். 46

47-ப-எழுத்தை தோட்டபலன்.

நேறவே நாற்பானேழை நண்ணும் ப-வெழுத்தை தொட்டால்
கூறவே குறித்தகர்மங் கூடியே வருவதில்லை
சேறவே பகையுண்டாகுஞ் சீறியவழக்குதோற்கும்
தேறவே தொழிலும்போகுந் தேவதை குற்றமாமே

(இ-ள்) நாற்பத்தேழாவது லக்கத்தினுடைய ப-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் கைகூடிவரமாட்டாது, சேருமிடங்களில் பகைநேரும், தொடுத்த வழக்கானது தோர்வை யடைந்துபோகும்,செய்யும்படியான தொழிலும்போகும், இவைகள்யாவும் தேவதைகள் குற்றமென்றறியவும் மத்திபம் எ-று. 47

48-பி-எழுத்தை தோட்ட பலன்.

மானென நாற்பானெட்டில் மருவும் பி-யெழுத்தை தொட்டால்
நாமென நினைத்தவேலை நலமுடன் பலிதமாகும்
தாமென மணமுங்கூடும் தடைபிலைசிறையுமீளும்
போமெனப் பெரியோராலே பெருமையுண்டாகும்விள்ளே

(இ-ள்) நாற்பத்தெட்டாவது லக்கத்தினுடைய பி-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்த காரியம் முடிவாகும், கலியாணம் கைகூடும், சிறையானதுமீளும், பெரியோர்களினால் பெருமையானதுஉண்டாகும் உத்தமம் எ-று. 48

49-பூ-எழுத்தை தோட்டபலன்.

விள்ளவே நாற்பானென்பான் விளங்கும் பூ-யெழுத்தைதொட்டல்
கள்ளமாம்நினைத்தவேலை காணநாட்சென்றுமாகும்
உள்ளவேமருந்துவுண்ண உற்றதோர் பிணியுந்தீரும்
தெள்ளவேநாட்குநாளுந் தீமையும்விலகுமென்னே

(இ-ள்) நாற்பத்தொன்பதாவது லக்கத்தினுடைய பூ-வென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் நாள்பட முடிவாகும் மருந்துஉண்ண நோயானதுதீரும், ஆனால் இவைகளெல்லாம் நாட்குநாள்தீர்ந்து தீமையானது விலகும் உத்தமத்தில் மத்திபம் எ-று. 49

50-ஷ-எழுத்தை தோட்டபலன்.

விலகவே அன்பதோடு விளங்கும் ஷ எழுத்தை தொட்டால்
இலகவே நினைத்தவேலை யேற்கையாய் முடிவதாகும்
கலகமுங் கவலைதீருங் கன்னியருறவுமாகும்
நலகிய நன்மையெல்லாம் நாட்குநாள்சுகமுண்டாமே

(இ-ள்) அன்பதாவது லக்கத்தினுடைய ஷ-என்னு ம்எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலைகூடியசீக்கிரத்தில்முடிவுபெறும், கலகமுங் கவலையுந்தீரும் மாதர்கள் உறவாவார்கள் இவைகளெல்லாம் நாட்குநாள் சுகமுண்டாகும் நன்மைதரும்உத்தமம். எ-று. 50

51-ண-எழுத்தை தோட்டபலன்.

ஆமென அன்பத்தொன்றை அடுத்த ண-யெழுத்தைதொட்டால்
தாமென தொழிலும்போகும் தடையதாம் நினைத்தவேலை
நாமென நஷ்டமோடு நண்ணிய வருத்துமில்லை
போமென பெண்டீருக்கும் பீடையாம் பிணியேகாட்டும்

(இ-ள்) அன்பத்தோருவதுலக்கத்தினுடைய ண-என்னும் எழுத்தை தொட்டதால் செய்யும்படியானதொழில் போகும், நினைத்தவேலை தடையதாகும் நஷ்டங்காட்டும், வருத்துகுறையும் மனையாளுக்கு பீடையாகிய பிணியானது அணுகும் மத்திபம். 51

52-ட-எழுத்தை தோட்டபலன்.

காட்டுமே யன்பான்றண்டை கலந்த ட-யெழுத்தைதொட்டால்
தேட்டமாய் நினைத்தவேலை தேடிட முடிவதாகும்
நாட்டமா யாடுமாடு நற்பரி கொள்ளநன்றுங்
கூட்டமாம் வியாபாரத்தில் குறையிலா லாபமுண்டாம்

(இ-ள்) அன்பத்திரண்டாவது லக்கத்தினுடைய ட-என்னும்எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தவேலையில் பிரயத்தினஞ்செய்ய முடிவாகும், ஆடுமாடுகளுடன் அஸ்வங்கொள்ள நன்மையுண்டாகும், கூட்டுவியாபாரத்தில் லாபங்கிடைக்கும் உத்தமம் எ-று. 52

53-பெ-எழுத்தை தோட்டபலன்.

உண்டென யன்பான்மூன்றேடுற்ற பெ-யெழுதத்தை தொட்டால்
தெண்டமாம் நினைத்தவேலை தீங்கதாய் முடிந்திடாது
பண்டென பழையநாளின் பகையதால் கெடுதிநேரு
மிண்டென வொருவனாலே மெத்தவுங் கலகமாமே

(இ-ள்) அன்பத்திமூன்றுவது லக்கத்தினுடைய பெ-என்னும் எழுத்தை தொடடதால் இப்போது நீ நினைத்தவேலை தீங்காகும் முடிவுபெறமாட்டாது, பழையநாளின் பகையானது உண்டு அதனால் கெடுதியானது நேரும், ஒருவனால் கலகம் மூளும் மத்திபம்-எ-று. 53

54-போ-எழுத்தை தோட்டபலன்.

மாமென யன்பானாலை மருவும் போ-எழுத்தை தொட்டால்
தாமென நினைத்தவேலை தடையிலா முடிவதாகும்
சோமென சோகந்தீருஞ் சொற்பனம் பலிதமாகும்
ஆமெனப் பெரியோராலே அன்புருஞ் சுபங்களென்னே

(இ-ள்) அன்பத்திநான்காவது லக்கத்தினுடைய போ-என்னும் எழுத்தைதொட்டதால் இப்போது நினைத்தவேலை தடையில்லாமல் முடியும், சோகமானது தீரும், சொற்பனம் பலிதமாகும், பெரியோர்களால் சுகமுண்டாகும் உத்தமம் எ-று. 54

55-ரா-எழுத்தை தோட்டபலன்.

என்னவே யன்பானைந்தை ஏற்ற ரா-எருத்தை தொட்டால்
முன்னவே நினைத்தவேலை முடிந்திடநாளதாகும்
பன்னிய பகையினாலே பலபொருள் சேதமாகும்
தன்னுட மதிப்பை போக்குந் தயனும் பகையாவானே

(இ-ள்) அன்பத்தைந்தாவது லக்கத்தினுடைய ரா-என்னும்எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் கெடுதியாகும் முடிவுபெறாது,

பகையினல் பலபொருளுஞ் சேதமாகும், தன்னுடைய மதிப்பானது அழியும் மனையாளும் மறபினரும் பகையாகுவார் மத்திபம். எ-று 55

56-ரி-எழுத்தை தோட்டபலன்.

வாளென யன்பாறாரை வடுத்த ரி-எழுத்தை தொட்டால்
நாளென நினைத்தவேலை நண்ணிடுஞ் சித்தியாகும்
கோளென வந்ததெல்லாங் கொற்றவராலேதீரும்
ஆளென அடிமைசேரும் அரிவையர் நேயங்கூடும்

(இ-ள்) அன்பத்தாறுவது லக்கத்தினுடைய ரி-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்த காரியஞ் சித்தியாகும் கோளாராக வந்து நேர்ந்த துன்பங்களெல்லாம் அரசர்களால் நிவர்த்தியாகும் அடிமையுண்டாகும் ஸ்திரீகளின் நேசமானதுகூடும் எ-று 56

57-ரு-எழுத்தை தோட்டபலன்.

கூடவேயன்பானேழிற் குலவும் ரு-யெழுத்தை தொட்டால்
வாடவே நினைத்தகர்மம் வாகுடன் முடிந்திடாது
தேடவே போனசொத்தும் திரும்பவும் வந்திடாது
நாடவே நல்லோரெல்லாம் நண்ணிடப் பகையாவாரே

(இ-ள்) அன்பத்தேழாவது லக்கத்தினுடைய ரு-எழுத்தைதொட்டதால் நினைத்த காரியம் முடியாது கைவிட்டுப் போனசொத்தும் திரும்பிவரமாட்டாது, நல்லோர்கயெல்லாம் பகையாவார்கள் மத்திபம் எ-று 57

58-ரே-எழுத்தை தோட்டபலன்.

வாறென அன்பானெட்டை வடுத்த ரே-யெழுத்தைதொட்டால்
நேறென நினைத்தகர்மம் நீடிடும் விருத்தியாகும்
சீறென சினேகனாலே சிறந்ததோர் உதவியாகும்
போறென பெண்டீர்கொள்ள பெருமையுந் தானுண்டாமே

(இ-ள்) அன்பத்தெட்டாவது லக்கத்தினுடைய ரே-என்னும்எழுத்தை தொட்டதால், நினைத்தகாரிம் நீடிடும்விருத்தியாகும், சினேகிதர்களால் உதவியுண்டாகும் பெண்டீர்கொள்ள பெருமையானது உண்டாகும் உத்தமம் எ-று 58

59-க்ரா-எழுத்தை தோட்டபலன்.

ஆமென அன்பத்தொன்பான் அடுத்த க்ரா-எழுத்தை தொட்டதால்
போமென புத்திகேடாம் போறதோர் வேலைகேடாம்
தாமென வழக்கினலே தாங்கொணு துயரமுண்டாம்
நாமென போனஜீவன் நாளதாம் வந்துசேர

(இ-ள்) அன்பத்தொன்பதாவது லக்கத்தினுடைய க்ரா-என்னும் எழுத்தை தொட்டதால் புத்தியானது கெடும் இப்போதுபோகும்படியானவேலை முடிவுபெறமாட்டாது வழக்கினல் துயரமுண்டாகும் இடம்விட்டுபோனஜீவன் வந்துசேர நாளாகும் மத்திபம் எ-று. 59

60-த-எழுத்தை தோட்டபலன்.

வந்திட யருபானேடு வடுத்த த-யெழுத்தைதொட்டால்
சிந்தையில் நினைத்தயெண்ணம் சீக்கிரம்முடிவதாகும்
மைந்தரால் மகிழ்ச்சியுண்டாம் மாடாடு கொள்ளநன்றும்
முந்திய வழக்குவெல்லும் மூண்டதோர் பிணியும்நீங்கும்

(இ-ள்) அருபதாவது லக்கத்தினுடைய த-யென்னும் எழுத்தை தொட்டதால் மனதில்நினைத்தகாரியம் சீக்கிரத்தில் முடிவாகும் புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டாகும், ஆடுமாடுகொள்ள பலந்தருகும் பழையநாள் வழக்கானது வெல்லும் இப்போதுமூண்டிருக்கும் வியாதிநீங்கும் உத்தமம் எ-று 60

61-தீ-எழுத்தை தோட்டபலன்.

நீங்கவே யருபானென்றோ டிருக்குந் தீ-யெழுத்தைதொட்டால்
பாங்குடன் நினைத்தவேலை பட்சத்தில் முடிவதாகும்
தீங்கதுநாட்குநாளுந் துலைந்துபின் சுகத்தைக்காட்டும்
வாங்கியெகடன் தன்னலே வருத்தமும் விளையுமென்னே

(இ-ள்) அருபத்தொன்றுவது லக்கத்தினுடைய தீ-என்னும் எழுத்தைதொட்டால் இப்போது நீ நினைத்திருக்கும்படியான காரியம் ஒரு பட்சத்திற்குள்முடிவாகும், தீங்கானது நாளுக்குநாள் நீங்கி பின்பு சுகத்தைதருகும் வாங்கியகடன் தன்னல் வருத்தமானதுஉண்டாகும் மத்திபத்தில் உத்தமம் எ-று 61

62-து-எழுத்தை தொட்டபலன்.

மென்னவே யருபான்றண்டை மருவுந் து-எழுத்தை தொட்டால்
கன்னியமாகத்தானே கருதிய தொழிலுங் கிட்டும்
பன்னிய பகையுந்தீரும் பன்புரும் மனையில் கெர்ப்பம்
உன்னிய யிவைகள்யாவும் ஓர்திங்கள் கழியநன்றாம்

(இ-ள்) அருபத்திரண்டாவது லக்கத்தினுடைய து-என்னும் யெழுத்தை தொட்டதால் இப்போது பெருமையாகத்தானே யோசித் திருக்கும்படியான தொழில் கைகூடிவரும் பகையானது தீரும் மனையாளுக்கு கெர்ப்பந்தரிக்கும், இவைகள்யாவும் ஒருமாதம் கழியநன்மையைத்தருகும் உத்தமத்தில் மத்திபம் எ-று. 62

63-தே-எழுத்தை தொட்டபலன்

நன்றென யருபான்மூன்றில் நண்ணுந் தே-யெழுத்தை தொட்டால்
சென்றவர் வருத்துமாவார் செய்தொழில் பலிதமாகும்
வென்றிட வழக்குவெல்லும் வெகுபேர்கள் நேயங்கூடும
குன்றென பயிரும்விருத்தி குறையிலாதோங்குமாதே

(இ-ள்) அருபத்து மூன்றாவது லக்கத்தினுடைய தே-என்னும் எழுத்தைதொட்டதால்இடம்விட்டுப் போனபேர்கள் வந்துசேர்வார்கள், செய்யும்படியான தொழிலும் பலிதமாகும் வழக்குதொடுக்கவெல்லும், வெகுபேர்களுடைய நேசமுண்டாகும் பயிர்தொழில் செய்ய விருத்தியாகும் குறையொன்றும் வராது உததமம்.எ-று. 63

64-தோ-எழுத்தை தொட்டபலன்.

மாதெனயிருபான்நாலை மருவுந் தோ-யெழுத்தைதொட்டால்
ஓதென நினைத்தகர்மம் ஒருவனால் தடையதாகும்
போதென பொருளினாலே பொல்லாங்கு தானுண்டாகும்
ஏதென யெவர்களுக்கும் யேற்கையில்லாதானென்னே

(இ-ள்) அருபத்து நாலாவது லகத்தினுடைய தோ - என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்துப்போகின்றகாரியம்ஒரு மனிதனால் தடையாகும், பொருள் முகாந்திரத்தினால் பொல்லாங்கு நேரும், எவர்களுக்கும் உன்னுடைய சொல் யேற்கையிராது மத்திபம் எ-று. 64

65-ந-எழுத்தை தொட்டபலன்.

நென்னவே யருபானைந்தை நண்ணி ந-எழுத்தைதொட்டால்
தன்னுட கருத்தின்போலுந் தடையிலாமுடிவதாகும்
பன்னிய நோயுந்தீரும் பகைவரும் உறவேயாவார்
கன்னியம்மிகவுண்டாகும் கலியாணம் மனையிலாமே

(இ-ள்) அருபத்தைந்தாவது லக்கத்தினுடைய ந-வென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ மனதில் கொண்டிருக்கும்படியான யெண்ணம் தடையில்லாமல் முடிவாகும், நோயானதுதீரும் பகைவர்களும் உறவாவார்கள் கன்னியமுண்டாகும் உன்னுடைய மனையிற்றனே கலியாணம் நடக்கும் உத்தமம் எ-து. 65

66-நீ-எழுத்தை தொட்டபலன்.

தாமென யருபானாறை தங்கும் நீ-யெழுத்தை தொட்டால்
தாமென நினைத்தகர்மம் தடையதாம் மாதராலே
போமென யிடத்தைவிட்டு போனவர் வரநாட்செல்லும்
நாமென தொழில்செய்தாலும் நஷ்டமேகாட்டும்பாரே

(இ-ள்) அருபத்தாறுவது லக்கத்தினுடைய நீ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் ஒரு ஸ்திரீயினால் தடைபடும், இடம்விட்டுப்போனவர்கள் வந்துசேர நாள்செல்லும்எத் தொழிலை செய்தாலும் நஷ்டமானது காட்டும்மத்திபம் எ-று. 66

67-நு-எழுத்தை தொட்டபலன்.

பார்க்கவே யருபானேழில் பதிந்த நு-எழுத்தை தொட்டால்
தீர்க்கமாம் நினைத்தவேலை தீவிரம் முடிவதாகும்
கோர்க்கவே மனையிற்றானும் குலவிய மணமுங்கூடும்
ஏர்க்கவே ஸ்திரீயினாலே யேற்றதோ ருதவியாமே

(இ-ள்) அருபத்தேழாவது லக்கத்தினுடைய நு-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் கூடிய சீக்கிரத்தில் முடிவாகும், மனையில் சுபகாரியங்களும் விவாகமும்நடக்கும் ஒருஸ்திரீயினால் தக்க உதவியாகும் உத்தமம் எ-று. 67

68-நே-எழுத்தை தொட்டபலன்.

ஆமென யருபானெட்டை யடுத்த நே-எழுத்தைதொட்டால்
போமென நினைத்தகர்மம் பொருமையாய் முடிவதாகும்
தாமென போனஜீவன் தடைப்பட்டு பின்னுல்கிட்டும்
நாமென உத்தியோகத்தில் நன்னிடுங் கலகந்தானே

(இ-ள்) அருபத்தெட்டாவது லக்கத்தினுடைய நே-என்னும் எழுத்தை தொட்டால் இப்போது நினைத்தகாரியம் பொருமையில் முடியும், இடம்விட்டுப் போனஜீவன் தடைபட்டு பின்னும்கிட்டும் செய்யும்படியான உத்தியோகத்தில் கலகம்நேரும்மத்திபம் எ-று. 68

69-நோ-எழுத்தை தொட்டபலன்.

தானென யருபானொன்பான் தங்கும் நோ-யெழுத்தை தொட்டால்
தேனென நினைத்தவேலை தேடிட முடிவதாகும்
ஊனென பிணியுந்தீரும் உதவினர்வந்துசேர்வார்
நானென நினைத்தபெண்ணும் நலமுடன் வந்துசேரும்

(இ-ள்) அருபத்தொன்பதாவது லக்கத்தினுடைய நோ-என்னும் எழுத்தை தொட்டால் நினைததகாரியம் முயற்சிசெய்ய முடிவதாகும் பிணியானது தீரும், உறவினர்கள் வந்து சேர்வார்கள் இப்போது குறித்திருக்கும் படியான பெண்ணே நிலையாகக் கிடைக்கும் உத்தமம் எ-று. 69

70-ய-எழுத்தை தொட்டபலன்.

சேரவே யெழுபதோடுச் சேர்ந்த ய-யெழுத்தை தொட்டால்
நேரவே நினைத்தவேலை நாளதுபட்டேயாகும்
கோரவே குடும்பந்தன்னில் கூறொணுக் கலகமாகும்
மீரவே வழக்கினாலே மெத்தவாம் தனங்கள்சேதம்

(இ-ள்) எழுபதாவது லக்கத்தினுடைய ய-என்னும் எழுத்தை தொட்டால் இப்போது நினைத்தகாரியம் நாள்பட முடிவாகும் குடும்பத்தில் சொல்லமுடியாத கலகம் நடக்கும், வழக்கினால் தனச்சேதமாகும் மத்திமம் எ-று. 70

71-யி-எழுத்தை தொட்டபலன்.

சேதமாம் யெழுபத்தொன்றை சேர்ந்த யி-யெழுத்தை தொட்டால்
போதவே கொண்டயெண்ணம் புகழுடன் முடிவதாகும்
வேதிய னொருவனாலே வேணதோ ருதவியாகும்
போதவே யெதைசெய்தாலும் பெருகிடும் லாபமென்னே

(இ-ள்) எழுபத்தோருவது லக்கத்தினுடைய யி-என்னும் எழுத்தை தொட்டால் இப்போது மனதில் நினைத்திருக்கும்படியான எண்ணம் தடையில்லாமல் முடிவாகும், ஒரு பிராமணனால் நல்லவுதவியுண்டாகும், எந்த தொழிலையாகிலும் செய்ய லாபம்பெருகும் உத்தமம் எ-று. 71

72-யு-எழுத்தை தொட்டபலன்.

மென்னவே யெழுபான்றண்டை மருவும் யு-யெழுத்தை தொட்டால்
வின்னமாம் நினைத்தவேலை வேந்தரால் தடையதாகும்
கன்னிய மொன்றுமில்லை கஷ்டமே குடியதாகும்
உன்னிய வொருவராலே ஒதொணு கலகமாகும்

(இ-ள்) எழுபத்தி யிரண்டாவது லக்கத்தினுடைய யு-என்னும் எழுத்தை தொட்டால் இப்போது நினைத்தவேலை அரசர்களால் தடையாகும், பெருமைதாழும் கஷ்டம் அதிகரிக்கும் ஒருவனால் என்னேரமும் கலகமுண்டாகும் மத்திபம் எ-று 72

73-யே-எழுத்தை தொட்டபலன்.

ஆகவே யெழுபான்மூன்றை அடுத்தயே-யெழுத்தை தொட்டால்
ஏகவே யெடுத்தவேலை யிஷ்டம்போல் முடிவதாகும்
பாகமும் பிரிவதாகும் பழையநாள் வழக்குவெல்லும்
சோகமுந் துலைந்துமேலாஞ் சுகங்களுண்டாகுஞ்சாற்றே

(இ-ள்) எழுபத்திமூன்றுவது லக்கத்தினுடைய யே-என்னும் எழுத்தை தொட்டால் நினைத்தவேலை தடையில்லாமல் முடிவாகும் பாகம்பிரியும், பழையநாளின் வழக்கானது வெல்லும் சோகமானது துலையும் சுகமுண்டாகும் உத்தமம் எ-று. 73

74-யோ-எழுத்தை தொட்டபலன்.

சாற்றவே யெழுபாநாலை சார்ந்த யோ-யெழுத்தைதொட்டால்
போற்றவே கொண்டயெண்ணம் பொருமையில் முடிவதாகும்

நேற்றியா யெதைசெய்தாலும் நிந்தையே யதிகரிக்கும்
ஆத்திரபடாமற் றிங்கள் ஆறதுக் கழிய நன்றாம்

(இ-ள்) எழுபத்திநாலாவது லக்கத்தினுடைய யோ-யென்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்த காரியம் பொருமையில் முடிவாகும், அருமையாகத்தானே எந்த காரியங்களைச் செய்யினும் நிந்தையானச் சொல் வரும் இவைகள் யாவும் நீங்கிச் சுகமுண்டாகும் இன்னம் ஆறுமாதம் கழியவேணும் மத்திபம் எ-று. 74

75-ப-எழுத்தை தொட்டபலன்.

கழியவே யெழுபானைந்த கலந்த ப-யெழுத்தை தொட்டால்
வழியென நினைத்தவேலை வண்மையாய் முடிவதாகும்
ஒழியென பிணியும் நீங்கும் வோங்கிடும் வாணிபங்கள்
பழியெனுங் கலகந்தீரும் பாவைய ருறவுமாமே

(இ-ள்) எழுபத்தைந்தாவது லக்கத்தினுடைய ப-என்னும் எழுத்தை தொட்டதால் மனதில் நினைத்தகாரியம்முடிவாகும், நோய்தீரும் வர்த்தகம்செய்ய விர்த்தியாகும் கலகமானது ஸ்திரீகள் நேசமுண்டாகும் உத்தமம் எ-று. 75

76-பி-எழுத்தை தொட்டபலன்.

தாமென எழுபத்தாரை தாவும் பி-யெழுத்தை தொட்டால்
நாமென கொண்ட யெண்ணம் நங்கையால் தடையதாகும்
போமெனப் பொருளும் போகும் போனவர்வர நாட்செல்லும்
ஆமென விஷத்தால்பீடை யணுகுமென் றுரைத்திடாயே

(இ-ள்) எழுபத்தாராவது லக்கத்தினுடைய பி-என்னும் எழுத்தை தொட்டதால், இப்போது நீ மனதில் கொண்ட யெண்ணம் முடியாது, ஒரு ஸ்திரீயினல் தடைபடும் பொருள் சேதமாகும், இடம்விட்டுப்பிரிந்து போனவர்வர நாட்செல்லும், விஷசெந்துக்களினல் பீடையானது அணுகி அதனல் பாதைபடச்செய்யும் மத்திபம் எ-று 76

77-பு-எழுத்தை தொட்டபலன்.

உரைத்திட யெழுபானேழை யுற்ற பு-யெழுத்தை தொட்டால்
பெருததிட நினைத்தவேலை பேசியபடியேயாகும்

வருத்தமும் விலகிப்போகும் வளம்பெற வழக்குவெல்லும்
திருத்தமா யெதைசெய்தாலும் திருவது பெருகுமென்னே

(இ-ள்) எழுபத்தேழாவது லக்கத்தினுடைய பு-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்துப் போகும்படியான வேலை மனம்போல் முடிவுபெறும், வருத்தமானதுதீரும், வழக்கானதுவெல்லும், யோசித்து எந்தக் காரியங்களைச் செய்யினும் கீர்த்தியும் புகழுந் தனமும் பெருகும் உத்தமம் எ-று. 77

78-த-எழுத்தை தொட்டபலன்.

என்னவே யெழுபானெட்டை யடுத்த த-யெழுத்தை தொட்டால்
வின்னமாம் நினைத்தவேலை வேதனை படவே செய்யுங்
கன்னியாற் கலகம்நேருங் கைப்பொருள் விரையமாகும்
பன்னிய வழக்கு மீரும் பழியது வருகும்பாரே

(இ-ள்) எழுபத்தெட்டாவது லக்கத்தினுடைய த-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் நிறைவேறாது, துன்பமுண்டாகும், ஸ்திரீயினல் கலகம் நேரும்,பொருள் விரையமாகும், வழக்கானது மீரும்,பழியானது வந்துமூளும் மத்திபம் எ-று. 78

79-ப்-எழுத்தை தொட்டபலன்.

பாறென யெழுபா னொன்பான் பதிந்த ப்-யெழுத்தை தொட்டால்
சீறென நினைத்தவேலை சீக்கிரம் முடிவதாகும்
நேறென பகையும் வெல்லும் நேரிழை யுறவுமாவாள்
பேறென யுத்தியோகம் பெருகிடுந் திருவுண்டாமே

(இ-ள்) எழுபத்தி ஒன்பதாவது லக்கத்தினுடைய ப்-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம் கூடிய சீக்கிரத்தில் முடிவுபெருகும், பகையானது துலைந்துபோகும், ஸ்திரீயும் உறவாடி வருவாள், உத்தியோகமும் உயரும் அதினல் தனமுண்டாகும் கீர்த்தியானது பெருகும்உத்தமம் எ-று, 79

80-ட-எழுத்தை தொட்டபலன்.

ஆமென யெண்பதோடு அமர்ந்த ட-யெழுத்தை தொட்டால்
நாமென நினைத்த கர்மம் நாளது பட்டேயாகும்
போமென போனஜீவன் பொருந்திடும் மேற்குதிக்கில்
தாமென தேடிப்பார்க்க தடையிலா சிக்கும்பாரே

(இ-ள்) எண்பதாவது லக்கத்தினுடைய ட-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் தாமதத்தில் முடிவாகும் வீடுவிட்டுப் போனஜீவன் மேற்கு திக்கில் போய்ச் சேர்ந்திருக்கும் அதைத் தேடிப்பார்க்கதடையில்லாமல் கிடைக்கும் மத்திபத்தில் உத்தமம் எ-று, 80

81-பே-எழுத்தை தொட்டபலன்.

பார்கவே யெண்பத்தொன்றில் பதிந்த பே-யெழுத்தை தொட்டால்
கோற்கவே நினைத்தவேலை குற்றமாம் முடிந்திடாது
ஏற்கவே யெதை செய்தாலும் யிலாபமுங் கிடைத்திடாது
தோற்கவே மைந்தராலே தொல்லையும் நேருமென்னே

(இ-ள்) எண்பத்தோருவது லக்கத்தினுடைய பே-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தவேலை குற்றமாகும் கூடிவரமாட்டாது, எத்தொழில் செய்யினும் லாபங் கிடைக்கமாட்டாது, மைந்தர்களால் தொல்லையுண்டாகும் மத்திபம் எ-று, 81

82-போ-எழுத்தை தொட்டபலன்.

என்னவே யென்பான் றண்டை யடந்த போ-யெழுத்தை தொட்டால்
மின்னவே நினைத்தவேலை மிகநலஞ்செய்யநன்றும்
கன்னியம் மிகவுண்டாகும் கருதிய பொருளுங் கிட்டும்
பன்னிய பலர்களுக்கும் பட்ச முண்டாடுங் கூறே

(இ-ள்) எண்பத்திரண்டாவது லக்கத்தினுடைய போ-என்னும் எழுத்தை தொட்டதால இப்போது நினைத்த வேலையைச் செய்ய மிகவும் நன்மையைத்தரும், கன்னியவானுக்கும், நினைத்தபொருள்கிடைக்கும், பலபேர்களுக்கும் பட்சமுண்டாகும் உத்தமம் எ-று 82

83-ஜ-எழுத்தை தோட்டபலன்.

கூறியயென்பான் மூன்றைக் குலவுஞ் ஜ-யெழுத்தை தொட்டால்
காரியங் கேடதாகுங் கருதிய தொழிலு மாகா
வீறிய பலமுங்குன்றும் வேந்தரால் வருத்தம் நேரும்
மீறிய மனையாள் மைந்தர் மிகபகையாவர்காணே

(இ-ள்) எண்பத்திமூன்றுவது லக்கத்தினுடைய ஜ-மென்னும் யெழுத்தைத் தொட்டால் காரியங் கெடும் நினைத்ததொழில் முடியாது, பலமானது குறையும், அரசர்களால் துன்பம்நேரும் மனையாளுக்கும்மைந்தர்களுக்கும்பகையாவார்கள் மத்திபம் எ-று. 83

84-ஜீ-எழுத்தை தோட்டபலன்.

காணவே யெண்பாநாலைக் கலந்த ஜீ-யெழுத்தை தொட்டால்
பூணவே நினைத்தவேலை புகழ்பெற சித்தியாகும்
தோணவே யடுத்தோராலே துலங்கிடுங் கீர்த்தி செல்வம்
வேணவே விளங்க நாளும் வெற்றியுண் டாகுஞ்சொல்லே

(இ-ள்) எண்பத்திநான்காவது லக்கத்தினுடைய ஜீ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்துப் போகும்படியானவேலை உடனே சித்தியாகும், இப்போது அடுத்தப் பெரியோர்களாலே கீர்த்தியும் செல்வமும் பெருகும் நாளும் வெற்றியானது உண்டாகும் உத்தமம் எ-று. 84

85-கி-எழுத்தை தோட்டபலன்.

சொல்லவே யென்பானைந்தை சேர்ந்த கி-எழுத்தை தொட்டால்
தொல்லையாங் கெடுதிநேரும் தோஷமாம் நினைத்ததாகா
புல்லவே வெளியூர் போனர் பட்சத்தில் வந்துசேர்வார்
நல்லவர் பகையுமாவார் நாணமுண்டாகும் பேசே

(இ-ள்) எண்பத்ஐந்தாவது லக்கத்தினுடைய கி-யென்னும்எழுத்தை தொட்டதால் தொல்லையுண்டாகும், கெடுதி நேரும், தோஷமாகத்தானே இப்போது நினைத்த காரியம் முடியாது; வெளியூர்போனவர் இன்னம் பதினைந்து நாளுக்குள் வந்துசேர்வார்கள் நல்லவர்கள் பகையாவார்கள், அதனல் நாணமுண்டாகும் மத்திபம் எ-று. 85

86-கு-யெழுத்தை தோட்டபலன்.

பேசவே யென்பானறில் பேணுங் கு-யெழுத்தை தொட்டால்
தோஷமுந் துலைந்துபோகும் தொடுத்த காரியங்களாகும்
நேசராலுதவியுண்டாம் நேரிழை வந்துசேர்வாள்
பாசமா கன்று காலி பருகிடு மென்றுசாற்றே

(இ-ள்) எண்பத்தாறுவது லக்கத்தினுடைய கு-என்னும் எழுத்தை தொட்டதால் தோஷமானது விலகும் நினைத்த காரியம் முடியும்

நேசர்களால் உதவியுண்டாகும், மனையாளும்வந்துசேர்வாள், கன்று
காலியும் பெருகும் நன்மையைத்தருகும் உத்தமம்எ-று 86

87-கெ-எழுத்தை தொட்டபலன்.

சாற்றவே யெண்பானேழை சார்ந்த கெ-யெழுததைதொட்டால்
தோற்றவே நினைத்தகர்மம் தொல்லையாம் முடிந்திடாது
போற்றவே களவுபோனப் பொருளது கிடைத்திடாது
தூற்றவே மனையாளாலே தொந்திரவாகுமென்னே

(இ-ள்) எண்பத்தேழாவது லக்கத்தினுடைய கெ-என்னும் எழுததை தொட்டதால் நினைத்தகாரியம் கலகமாகும் முடிவுபெறமாடடாது, களவுபோன பொருள் கிடைக்கமாட்டாது, மனையாளினால் தொந்திரவு உண்டாகும் மத்திபம் எ-று. 87

88-கோ-எழுத்தை தொட்டபலன்.

என்னவே யென்பாநெட்டோ டிருக்குங் கோ-எழுத்தை தொட்டால்
கன்னியமாகத்தானே கருதியத் தொழிலுமாகும்
உன்னுங்கை தொழிலினாலே ஓங்கிடும் லாபமெத்த
மன்னிய மனையாளாலே மகிட்சியுண்டாகும் விள்ளே

(இ-ள்) எண்பத்தெட்டாவது லக்கத்தினுடைய கோ-என்னும் எழுத்தைதொட்டதால் இப்போது பெருமையாக நினைத்தவேலை கைகூடிவரும், செய்யும்படியான கைத்தொழினால் லாபம் கிடைக்கும், மனையாளினால் மகிட்சியானது உண்டாகும் உத்தமம் எ-று. 88

89-க-எழுத்தை தொட்டபலன்.

விள்ளவே யெண்பத்தொன்பான் விளங்குங் க-எழுத்தைதொட்டால்
கொள்ளவே நினைத்தவேலை கூடிடதிங்களாகும்
கள்ளமாய் போனசொத்து கண்ணினிற் காண்பதில்லை
உள்ளதோர் வழக்கினாலே உற்றிடுந் துயரமேலோய்

(இ-ள்) எண்பத்தொன்பதாவது லக்கத்தினுடைய க-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம் முடிவுபெற ஒருமாதமாகும், களவுபோன சொத்தை மறுபடியும் காண்பது அரிதாகும், நேர்ந்திருக்கும்படியான வழக்கினால் துயரமானது அதிகரிக்கும் மத்திபம் எ-று. 89

90-கி-எழுத்தை தொட்டபலன்.

மேலென தொண்ணூறோடு மருவுங் கி-எழுத்தைதொட்டால்
கோவென கோதையாலே கோரியக் கருமமாகும்
ஆலனயாடுமாடும் அன்புடன் கொள்ள நன்றும்
தாலன மனையிற்றானும் தழைக்க சோபனங்களாமே

(இ-ள்) தொண்ணூறாவது லக்கத்தினுடைய கி-என்னும் எழுத்தைதொட்டதால் நினைத்தகாரியம் ஒரு ஸ்திரீயினால் முடிவாகும், ஆடுமாடு கொள்ள நன்மையுண்டாகும், மனையில் சுப சோபனங்கள் நடக்கும் குடும்பமானது தழைக்கும் உத்தமம் எ-று 90

91-கு-எழுத்தை தொட்டபலன்.

ஆமென தொண்ணூற்றொன்றில் யமர்ந்த கு-எழுத்தைதொட்டால்
நாமென நினைததவேலை நாளது சென்றுகூடும்
போமெனப் பொருளும்போகும் போனவர்வரநாட்செல்லும்
தாமென தமையனாலுந் தாங்கொணா துயரமுண்டாம்

(இ-ள்) தொண்ணூற்றோராவது லக்கத்தினுடைய கு-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் நாள்சென்று கூடிவரும், இப்போது பொருள் சேதமாகும், வீடுவிட்டுப்போனவர் வந்துசேர நாள்செல்லும், தமையனால் துயரமானது உண்டாகும் மத்திபம் எ-று

92-கெ-எழுத்தை தொட்டபலன்

துய்யதொண்ணூத்திரண்டில் துலங்குங் கெ-யெழுத்தை தொட்டால்
செய்யவே நினைத்தகர்மஞ் சீக்கிரம் முடிவதாகும்
ஐயமுந் துலைந்துபோகும் அரசராலுதவியாகுந்
தையலும் பெருவாள்பிள்ளை தழைத்திடுந் தொழிலுமென்னே

(இ-ள்) தொண்ணூததிரண்டாவது லக்கத்தினுடைய கெ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்த கர்மம் சீக்கிரத்தில்முடிவாகும்,பயந்தீரும் அரசர்களால் உதவியுண்டாகும் மனையாளும் ஆண்பிள்ளைகளைப்பெருவாள், தொழிலானது தழைக்கும் உத்தமம்.எ-று. 92

93-சோ-எழுத்தை தொட்டபலன்.

என்னதொண்ணூற்றிமூன்றி லிருக்கும் சோ-எழுத்தை தொட்டால்
மன்னியே நினைத்தகர்மம் மாதமோர் மூன்றிலாகும்

பன்னிய வழக்கினாலே பணமதுச் சிலவதாகும்
அன்னியமனிதனாலே அடுத்திடும் கலகந்தானே

(இ-ள்) தொண்ணூற்றி மூன்றாவது லக்கத்தினுடைய சொ-என்னும் எழுத்தை தொட்டதால் நினைத்தகாரியம் மாதம் மூன்றில் கைகூடும், தொடுத்த வழக்கினால் பணச்சிலவாகும் ஒரு அன்னிய மனிதனாலே கலகம்நேரும் மத்திபம் எ-று 93

94-ஸ-எழுத்தை தோட்டபலன்.

தானென தொண்ணூற்றினாலே தங்குஞ் ஸ-எழுத்தை தொட்டால்
நானென நினைத்தவேலை நலமுடன் சித்தியாகும்
தேனெனப் பெரியோராலே திகழ்பெற யுதவியுண்டாம்
கோனென கீர்த்தியோங்க குலவிடுஞ் செல்வந்தானே

(இ-ள்) தொண்ணூத்தி நாலாவது லக்கத்தினுடைய ஸ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்த காரியம் சித்தியாகும் பெரியோர்களின் உதவியுண்டாகும் கீர்த்தியோடும் செல்வமானது பெருகும் உத்தமம் எ-று. 94

95-ஸி-எழுத்தை தோட்டபலன்.

தக்கதொண்ணூற்றியந்தை தாவும் ஸி-யெழுத்தைதொட்டால்
மிக்கவே நினைத்தகர்மம் முடிவதுதிண்ணமாகும்
சிக்கென குடும்பம்வேறாய் சிதரிடும்யிடம்விட்டோடும்
மக்கட்டும் பீடைகாட்டும் மன்னரால் துயரமாமே

(இ-ள்) தொண்ணூற்றைந்தாவதுலக்கத்தினுடைய ஸி-என்னும் யெழுத்தைதொட்டதால்நினைத்தகாரியம் முடிவுபெறமாட்டாது, குடும்பம் பிரிந்துவிடும், இடம்விட்டோட்டும், மக்கட்குப் பீடையானது காட்டும், அரசர்களால் துயரமான்து உண்டாகும் மத்திபம் எ-று. 95

96-ஸீ-எழுத்தை தோட்டபலன்.

வாமெனத் தொண்ணூற்றாறை மருவும் ஸீ-எழுத்தைதொட்டால்
தாமென நினைத்தவேலை தடையிலாயிலாபமாகும்
நாமென நினைத்தவீடு நலமுடன்வாங்கநன்றாம்
போமென வழக்குதீரும் பொல்லாங்கு மில்லைசொல்லே

(இ-ள்) தொண்ணூற்றி யாறாவது லக்கத்தினுடைய ஸீ-என்னும் எழுத்தை தொட்டதால், இப்போது நினைத்தவேலை தடையில்லாமல் முடியும், குறித்திருக்கும்படியான வீட்டைவாங்க நன்மையுண்டாகும், வழக்கானது தீரும், பொல்லாங்கு ஒன்றுமில்லை உத்தமம் எறு.

97-ஸ-எழுத்தை தோட்டபலன்.

சொல்லவே தொண்ணூற்றேழை சேர்ந்த ஸ-எழுத்தை தொட்டால்
நல்லவே நினைத்த கர்மம் நாளதுப் பட்டேயாகும்
தொல்லையும் மிகவுண்டாகுந் தூரமே போனார் மீளார்
வல்லதோர் வழக்கினாலே வரும்பொருள் சேதமாகும்

(இ-ள்) தொண்ணூற்றி யேழாவது லக்கத்தினுடைய ஸ்-என்னும் யெழுத்தைதொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் நாள்பட்டு முடிவாகும், தொல்லையானது பெருகும், தூரதேசம் போனபேர்கள் மீண்டு வரமாட்டார்கள் வழக்கினால் பொருள் சேதமாகும், மத்திபம். எ-று. 97

98-ஸோ-எழுத்தை தோட்டபலன்.

ஆகவே தொண்ணூத்தெட்டை அடுத்த ஸோ-எழுத்தைதொட்டால்
பாகமும் பிரிந்துபோகும் பயிர்த்தொழில் விருத்தியாகும்
தாகமாம் வழக்கு வெல்லுந் தனையற்கும் வித்தையோங்கும்
மோகமாம் ஸ்திரீயினாலே மெத்தவுஞ் சுகங்களுண்டாம்

(இ-ள்) தொண்ணூத்தி யெட்டாவதுலக்கத்தினுடைய ஸோ-என்னும் எழுத்தை தொட்டதால் பாகமானது பிரிந்துபோகும் பயிர்த்தொழிலானது விருத்தியாகும், வழக்கானது வெல்லும் மைந்தர்களுக்குவித்தை யோங்கும் ஒரு ஸ்திரீயினால் மேன்மையாகிய சுபங்களுண்டாகும் யாதொரு காரியமும் தடையில்லாமல் செய்யலாம் உத்தமம் எ-று. 98

99-த-எழுத்தை தோட்டபலன்·

உண்டென தொண்ணூற்றொண்பா னுற்ற த-யெழுத்தைதொட்டால்
மிண்டென நினைத்தவேலை மனதுபோல் முடிந்திடாது
பெண்டீரும் பகையுமாவாள் பேசிய பெண் கிட்டாது
பண்டெனும் பந்துவெல்லாம் மகையாவ றென்றுகூறே

(இ-ள்) தொண்ணூத் தொன்பதாவது லக்கத்தினுடைய த-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்த காரியம் மனம் போல் முடியாது, பெண்டீரும் பகையாவாள், இப்போது பேசியிருக்கும்படியான பெண்ணும் தவரிப்போகும் பந்துக்களெல்லாம் பகையாவார்கள் மத்திபம எ-று 99

100-தீ-எழுத்தை தோட்டபலன்.

கூறவே நூற்றினேடுக் குலவுந் தீ-யெழுத்தை தொட்டால்
சீறென நினைத்தவேலை சீக்கிரம் முடிவதாகும்
பேறென மணமுங்கூடும் பெருமையும் புகழுண்டாகும்
நேறென குடும்ப மோங்கும் நிகழ்த்துவாய் கோதைமாதே

(இ-ள்) நூறுவது லக்கத்தினுடைய தீ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம் சீக்கிரத்தில் முடிவாகும், கலியாணங்கூடும். அதினால் பெருமையும் புகழுண்டாகும், குடும்பம்விருத்தியாகும், செல்வம் பெருகும் உத்தமம் எ-று. 100

101-து-எழுத்தை தோட்டபலன்.

மாதென நூற்றியொன்றை மருவுந் து-யெழுத்தை தொட்டால்
தோதென நினைத்தவேலை தோல்வியாம் முடிந்திடாது
போதென சினேகிதங்கள் பிரிந்துபோம் சுகமிராது
ஓதென வுற்றார் பெற்றார் உறவினர் பகையாவாரே

(இ-ள்) நூற்றியோருவது லக்கத்தினுடைய து-எழுத்தை தொட்டதால் நினைத்த காரியம் தொல்லையாக முடியும், முடிவுபெறமாட்டாது சினேகிதமாகவிருந்தபேர்கள் பிரிந்துபோவார்கள், அதினால்சுகமில்லாமற்போகும், தாய் தந்தை மனைவி மைந்தர், உற்றார், உறவினர் இவர்கள் யாவரும் பகையாவார்கள் அதனால் கொடுமை யுண்டாம் மத்திபம் எ.று. 101

102-த-எழுத்தை தோட்டபலன்

வாறென நூற்றிரண்டில் வாழுந் த-யெழுத்தைதொட்டதால்
நேறென நினைத்தவேலை நீடிடும் நிலமையாகும்
தூறெனதூரபோனர் திங்களில் வந்துசேர்வார்
பேறெனப் பெரியோராலே பெருமையுண்டாகுமென்னே

(இ-ள்) நூற்றிரண்டாவது லக்கத்தினுடைய த-என்னும் எழுத்தை தொட்டதால்இப்போது நினைத்தகாரியம் நீடும் நிலமையாகமுடி

யும் தூரதேசம்போயிருப்போர்கள் இன்னம் ஒரு மாதத்திற்குள் வந்துசேர்வார்கள், யெரியோர்களால் நன்மையுண்டாகும்உத்தமம் எ-று

103-ஜ-எழுத்தை தோட்டபலன்

என்னவே நூத்திமூன்றை யடுத்த ஜ-எழுத்தை தொட்டால்
மன்னியே நினைத்தவேலை மாதுயர் முடிந்திடாது
கன்னிய நாற்கால்ஜீவன் களவுபோனது கிட்டாது
பன்னிய பிணியுந்தீரா பகையது யுண்டாம்பேசே

(இ-ள்) நூத்திமூன்ருவது லக்கத்தினுடைய ஜ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தவேலையால் துயரமானது உண்டாகும் முடிவுபெறமாட்டாது களவாகப்போன நாற்கால்ஜீவன் கிடைக்கமாட்டாது, பகையுண்டாகும், பாதைபடசெய்யும் மத்திபம் எ-று.

104-ஞ-எழுத்தை தோட்டபலன்

பேசிய நூத்திநாலில் பெருகும் ஞ-யெழுத்தை தொட்டால்
நேசமாம் நினைத்தவேலை நீடிடும் முடிவதாகும்
தோஷமுந் துலைந்துபோகும் தூரத்தின்சேதிகிட்டும்
பாசமா யெதைசெய்தாலும் பலிதமுமாகும்பாறே

(இ-ள்) நூத்திநாலாவது லக்கத்தினுடைய ஞ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்த வேலை நீடிடும் முடிவாகும் தோஷ மானதுத் துலைந்துபோகும் தூரதேசத்திலிருந்து சேதியானது வரும், இச்சையாகத்தானே எந்த காரியத்தை செய்யினும்பலிதமும விருத்தியுமுண்டாம் உத்தமம் எ-று. 104

105-தே-எழுத்தை தோட்டபலன்.

பாறென நூத்தியைந்திற் பறவுந் தே-யெழுத்தை தொட்டால்
கோறென குறித்தவேலைகூடிட நாளதாகும்
நேறெனப் பகையினாலே நிந்தையும் பழியுண்டாகும்
பேறென தேடிப்போகும் பொருளது கிடைத்திடாதே

(இ-ள்) நூத்தியைந்தாவது லக்கத்தினுடைய தே-என்னும் எழுத்தை தொட்டால் நினைத்த காரியம் முடிய நாளாகும், பகையினால் நிந்தையும் பழியுமுண்டாகும், தேடிப்போகும் பொருள் கிடைக்கமாட்டாது மத்திபம எ-று. 105

106-தோ-எழுத்தை தொட்டபலன்.

கிடைத்திட நூத்தியாறை கிட்டுந் தோ-யெழுத்தை தொட்டால்
அடுத்திட நினைத்தவேலை அரசரால் முடிவதாகும்
தொடுத்திட வழக்குவெல்லும் தோகையும் பெருவாள்பிள்ளை
எடுத்திட வியாபாரத்தில் யிலாபமும் வருகுங்காணே

(இ-ள்) நூத்தியாறுவது லக்கத்தினுடைய தோ-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம் அரசர்களால் முடிவாகும் தொடுத்த வழக்கானது வெல்லும், மனையாளும் பிள்ளையைப்பெருகுவாள், வியாபாரஞ்செய்ய ஆரம்பிக்கில் லாபமுண்டாம் உத்தமம்.

107-ச-எழுத்தை தொட்டபலன்.

காணவே நூத்தியேழிற் கலந்த ச-எழுத்தை தொட்டால்
நாணவே நினைத்தவேலை நங்கையால் தடையதாகும்
பூணவே யெதை செய்தாலும் பொல்லாங்கு வந்துநேரும்
வேணதோ ருதவிப்போகும் விசனமுமுண்டாகுமென்னே

(இ-ள்) நூத்தியேழாவது லக்கத்தினுடைய ச-என்னும் எழுத்தை தொட்டதால் இப்போது நினைத்தவேலை ஒருஸ்திரீயினால் தடையாகும், எந்தகாரியத்தை பிரவேசித்து செய்யினும் பொல்லாப்புஉண்டாகும், உதவியாயிருந்தவர் பிரிந்துபோவார்கள்மத்திபம் எ-று. 107

108-சீ-எழுத்தை தொட்டபலன்.

என்னவே நூத்தியெட்டோ டிருக்கும் சீ-யெழுத்தை தொட்டால்
கன்னியமிகவுண்டாகுங் கருதியக் கருமமாகும்
உன்னிய உதவியுண்டாம் உறவினர் வந்துசேர்வார்
மன்னிய மாதராலும் மகிட்சியுண்டாகுமாதே

(இ-ள்) நூத்தியெட்டாவது லக்கத்தினுடைய சீ-என்னும் எழுத்தை தொட்டதால் கன்னியமுண்டாகும், நினைத்தகாரியம் முடியும், உதவியுண்டாகும், உறவுகூடும், மாதரால் மகிட்சியுண்டாகும் மத்திபம் எ-று. 108

உத்தம மத்திப ஆரூடம்
முற்றிற்று.

வருஷங்களின் ஆரூடம்.

சக்கரம்.

1 பிரபவ	2 விபவ	3 சுக்கில	4 பிரமோ	5 பிரசோற்	6 ஆங்கிரச
7 ஸ்ரீமுக	8 பவ	9 யுவ	10 தாது	11 ஈஸ்வர	12 வெகுதா
13 பிரமாதி	14 விக்கிரமா	15 விஷு	16 சித்திரபா	17 சுபானு	18 தாரண
19 பார்த்திப	20 விய	21 சர்வசித்	22 சர்வதாரி	23 விரோதி	24 விக்குறு
25 கர	26 நந்தன	27 விஜய	28 ஜய	29 மன்மத	30 துன்முகி
31 ஏவிளம்பி	32 விளம்பி	33 விகாரி	34 சார்வரி	35 பிலவ	36 சுபகிருது
37 சோபகி	38 குரோதி	39 விசுவாவ	40 பராபர	41 பிலவங்க	42 கீலக
43 சௌமிய	44 சாதாரண	45 விரோதி	46 பரிதாபி	47 பிரமாதீ	48 ஆனந்த
49 ராட்சச	50 நள	51 பிங்கள	52 காளயுத்	53 சித்தாத்த	54 ரௌத்ரி
55 துன்மதி	56 துந்துபி	57 உத்தி	58 இரத்தா	59 குரோத	60 அட்சய

ஆரூடம் சொல்லும் விபரம்.

வசனம்.

ஆரூடம் கேட்க ஆவலோடு வந்து எதிரில் நிற்போர்களை அறுபதில் குறையக்கேட்டு அவர்கள் சொல்லும் லக்கத்தை கியாபகமாக வைத்து அந்த லக்கத்திற்குரிய வருஷபாடலை வாசித்து அவர்கள் நினைத்துவந்த காரியம் இன்னதென்றும் அது ஆகும் ஆகாதென்றும் அல்லது இத்தனை நாளைக்குள் முடியுமென்றும் சொல்லலாம் அன்றியும் லக்கஞ் சொல்லத் தெரியாதபேர்களை மேற்கண்ட சக்கரத்திலடைததிருக்கும் வஷருங்களில் ஒன்றைத் தொடச்சொல்லியும் பலாபலன்களை சூட்சமாகச் சொல்லி மகிழலாம்.

1-வது பிரபவ வருடபலன்.

விருத்தம்.

சீறாரும் பிரபவமே யுதித்ததாலே
சிந்தையிலே நினைத்ததுவும் ஜீவனாகும்
பேறாகும் பெருமையுடன் வந்துசேரும்
பெரியோர்களுதவியினாற் பொருளுங்கிட்டும்
ஏறாரு மெதிரிதனை வெல்லலாகும்
இஷ்டம்போ லெதைசெயினு மேற்கையாகுங்
காறாருங் குருபலனு முனக்குண்டாகுங்
கருதியத் திங்களொன்றுக் கழியத்தானே

(இ-ள்) பிரபவவருடம் உதயமானதால் இப்போது நீ ஒரு ஜீவனை நாடிக்கேட்டாய் அந்த ஜீவன் வந்துசேரும், பெரியோர்களின் உதவியினால் பொருள் கிடைக்கும், உன்னுடைய எதிரியை ஜெயஞ் செய்குவாய், எந்தக் காரியங்களில் பிரவேசிக்கினும் நன்மையே தருகும், இன்னம் ஒரு மாதங்கழிய குருபலனுண்டாகும் எ-று. 1

2-வது விபவ வருடபலன்.

தானெனவே விபவவருட முதித்ததாலே
தானினைத்துக் கேட்டதுவுங் கன்னியாகும்
தேனெனவே தென்மேற்கு மூலைபக்கம்
திசைதப்பிப் போச்சுதப்பா தேடிபார்க்க
நானெனவே நாளெட்டிற் கிடைப்பாள்பாரு
நங்கையற்கு வோர்துணையு மில்லையில்லை
கோனெனவே குடும்பத்தின் கலகந்தீரும்
குலதெய்வந் தனக்குநீ பூஜைபோடே.

(இ-ள்) விபவ வருடம் உதையமானதால் இப்போது நீ ஒரு கன்னியை நாடிக்கேட்டாய் அந்தப்பெண் தென்மேற்குமூலைபக்கம் போய்த் திசைதப்பி நிற்கின்றது, அதைத் தேடிப் பார்க்க நாள் எட்டில் கிடைக்கும் ஒருவர் துணையுமில்லாமல் தனியாக விருக்கின்றனள், இன்னமும் குடும்பத்தில் கலகமானது தீரும், உன்னுடைய குல தெய்வத்திற்கு தவராமல் மாதம் ஒரு பூஜையானது போட்டுக்கொண்டுவர நன்மையாம் எ-று. 2

3-வது சுக்கில வருடபலன்.

போடவே சுக்கிலவாண் டுதித்ததாலே
புண்ணியனே நினைத்ததுவும் பொருளதாகும்
நாடவே நஷ்டமாய்ப் போனதுண்டு
நம்பாதே யதுவுங்கை கிட்டாதப்பா
கூடவே நாலுபேர் பாகமாச்சுக்
கொற்றவனே வெளியதுதான் தாண்டிப்போச்சு
தேடியே யலைந்துதனச் சிலவிடாதே
திகழான யாரூடந் தப்பிடாதே.

(இ-ள், சுக்கிலவருடம் உதையமானதால், இப்போது நீ நினைத்ததுப் பொருளாகும் அந்தப்பொருள் களவாகப் போனதுண்டு, அது உன் கையில் கிடைக்கமாட்டாது, ஏனெனில் அதை நாலுபேர் பாகமாகப் பங்கிட்டுக்கொண்டு வெளியூர் போய்விட்டார்கள், நீ தேடி தனச் சிலவிடுவதில் பிரயோசனமில்லை ஆரூடமொழி தப்பாதுஎ-று.3

4-வது பிரமோதூத வருடபலன்.

தப்பாமல் பிரமோதூத வுதித்ததாலே
தான்கேட்டக் கலகமதை சாற்றக்கேளாய்
ஒப்பாக உனக்கெதிரி ஒருவனுண்டு
உளவாக யிருக்கின்றா னுத்தமன்போல்
செப்பவே யவனுறவை நீக்கிப்போடு
ஜெயமாகு முன்னுடைய காரியங்கள்
மெப்பவே செய்தொழிலும் விருத்தியாகும்
மேலான குருவுனக்கு கிடைப்பார்பாரே.

(இ-ள்) பிரமோதூத வருடம் உதயமானதால் இப்போது நீகலகத்தைப்பற்றிக்கேட்டாய் அந்த கலகம் வந்தவாறு எவ்விதமெனில் உனக்கு எதிரியானவன் ஒருவனுண்டு அவன் உனக்கு நல்லவன்பேல் இருந்துகொண்டு கலகம்செய்துக்கொண்டு வருகின்றான், அவனுடைய நேசத்தை நீக்கிவிடுவாயாகில் உன்னுடைய கலகமுந்தீரும், காரியங்கள்ஜெயமாகும், செய்யும்படியான தொழிலும் விருத்தியாகும், மேன்மையான குருவினுடைய உபதேசமும் பெருகுவாய் எ-று., 4

5-வது பிரசோற்பத்தி வருடபலன்.

பார்க்கவே பிரசோற்பத்தி வுதித்ததாலே
பரிவான மண்மனைகள் கொள்ளக்கேட்டாய்
தீர்க்கமாய் வாங்கவுமே நன்மையுண்டாம்
தேவியற்குங் கருதரிக்குந் தீதுநீங்கும்
மூர்க்கமாய்ப் போனவரும் வந்து சேர்வார்
முதன்மையா யுனக்கொருவ ருதவியாவார்
ஏர்க்கவே கேட்டபொரு ளீவாரப்பா
இம்மொழியுந் தப்பாது யெழிலாய்காணே

(இ-ள்) பிரசோற்பத்திவருடம் உதையமானதால் இப்போது நீ மண் மனை கொள்ளும்படியாக உத்தேசித்துக் கேட்டாய் அதைவாங்க நன்மையுண்டாகும், மனையாளுக்குங் கெர்ப்பந்தரிக்கும், தீதானது நீங்கும், கோபத்தோடுப் பிரிந்துபோனவரும் வந்து சேருவார்கள், அவனுக்குப் பொருளுதவி செய்வார்,இம்மொழிதப்பாது நம்புவாய் எ-று.

6-வது ஆங்கீரச வருடபலன்.

காணவே யாங்கிரசா யுதித்ததாலே
களவதுப் போனதுண்டு நாற்கால்சீவன்
பூணவே ஈசான்னிய மூலைபக்கம்
பிடிபட்டு யொருவர்கை வசத்திருக்கும்
தோணவே தூரம்நால் மயிலதாகும்
துரிதமுடன் போய்பார்க்க தானேகிட்டும்
வேணவே பலதொழிலும் விருத்தியாகும்
வெகுநாளின் வழக்கதனை வெல்லுவாயே

(இ-ள்) ஆங்கீரச வருடம் உதையமானதால் நாற்கால்சீவனென்று களவுபோனதைப்பற்றி கேட்டாய், அது ஈசானிய மூலைபக்கம்ஒருவர் கையில் அகப்பட்டு கட்டுண்டிருக்கின்றது, தூரம்நாலுமயிலாகும் உடனே தேடிக்கொண்டுபோய் பார்க்கக் கிடைக்கும், அத்துடன் பல விதமான தொழில் செய்யினும் விருத்தியாகும் வெகுநாளாக யிருந்த வழக்கானது வெல்லும் எ-று
6

7-வது ஸ்ரீமுக வருடபலன்

வெல்லவே ஸ்ரீமுக உதித்ததாலே
விளங்கவே நினைத்தவகை விளம்பக்கேளாய்

புல்லவே யூர்பயணம் போகநன்றும்
புகழாக மணங்களது செய்யநன்றும்
நல்லதோர் நேயமது செய்யநன்றும்
நலமாக அவிழ்தங்கள் கொள்ளநன்றும்
சொல்லவே குடியதுவும் போகநன்றும்
சொந்தமாய் மாடாடு கொள்ளநன்றும்

(இ-ள்) ஸ்ரீமுக வருடம் உதையமானதால் இப்போது நீ நினைத்தபடியாகத்தானே வெளியூர்போக நன்மையுண்டாகும், மணஞ்செய்ய சுகமானதுப் பெருகும், சினேகஞ்செய்ய உதவியுண்டாகும்,மருந்துண்ணப் பிணியானது நீங்கும் குறித்தவீட்டில் குடியானது போக குடும்பந் தழைக்கும் சொந்தமாக ஆடுமாடு கொள்ள விருத்தியாகும்

8-வது பவ வருடபலன்.

நன்றாகப் பவவருட முதித்ததாலே
நாட்டமது கொண்டபெண் சித்தியாகும்
குன்றாம வுத்தியோகம் விருத்தியாகும்
குடும்பத்தில் நேர்ந்ததோர் கலகந்தீரும்
சென்றதோர் ஜீவனுமே வந்துசேரும்
பெப்பரிய பயிர்த்தொழிலும் பலிதமாகும்
வென்றிட வெகுபேர்கள் நேயங்கூடும்
வேந்தரா லுதவியதுத் தானுண்டாமே

(இ-ள்) பவவருடம் உதையமானதால் இப்போது நீமனதில்நினைத்தபடி குறித்தபெண் கிடைக்கும், உத்தியோகம் விருத்தியாகும் குடும்பத்தில் நேர்ந்திருக்கும்படியான கலகமானது திரும், திசைதப்பிப் போன சீவனும் தானேவந்து சேரும், பயிர்த்தொழில்செய்ய பலிதமாகும், வெகுபேர்களுடைய நேசமானது கூடும் அரசர்களுடையஉதவியுண்டாகும்எ-று.
8

9-வது யுவ வருடபலன்.

உண்டெனவே யுவவருட முதித்ததாலே
உத்தமனே யுன்மனதில் நினைத்தவாறு
பண்டான பழையதனந் தான்கிடைக்கும்
பாவையரும் வுரவாக வந்துசேர்வாள்

கொண்டதோர் கோவினல் பாக்கியமுண்டாம்
கூட்டுவியா பாரமதில் லாபமுண்டாம்
கண்டதோரிப்பலன்கள் நாட்குநாளுங்
காணவே யோங்குமெனக் கண்டுபேசே

(இ-ள்) யுவவருடம் உதையமானதால் இப்போது நீர் உன் மனதில் நினைத்த எண்ணத்தின்படியே பழையநாளின் தனமானது கிடைக்கும், பகையாகப் பிரிந்துபோன மனையாளும் வந்துசேர்வார்கள் வாங்கின பசுவினல் பால்பாக்கியமுண்டாம், கூட்டுவியாபாரத்தில் இலாபம் பெருகும், ஆனல் இப்பலன்களெல்லாம் நாட்குநாள் பலிதமாகும் எ-று. 9

10-வது தாது வருடபலன்.

பேசவே தாதுவமே யுதித்ததாலே
பெருமையுடன் நீநினைத்த பெண்ணுங்கிட்டாள்
தோஷமாய் தொடர்ந்தபிணி தான்தீராது
தொல்லையாம் மருந்துண்ண யதிகரிக்கும்
ஆசையா யடுத்தயிடம் பகையதாகும்
அரசரால் பயமதுவு மதிகரிக்கும்
வாசமா யிவையெல்லாம் நீங்கத்தானே
வடிவேலர் திருவடியை வணங்குவாயே.

(இ-ள்) தாது வருடம்உதைய மானதால்நினைத்துக் கேட்டபெண் கிடைக்கமாட்டாது, தோஷமாக தேகத்தில் வாய்த்த பிணியுந்தீராது மருந்துண்ண அதிகரிக்கும் ஆசையாகப்போய் அடுக்குமிடமெல்லாம் பகையாகும், அரசர்களால் பயம் அதிகரிக்கும், ஆதலால் இவைகள் யாவும் நீங்க வடிவேலர் சன்னதியைச்சுற்றி அவருக்கு அபிஷேகஞ் செய்துவைப்பாய் எ-று. 10

11-வது ஈஸ்வர வருடபலன்.

வாயென ஈஸ்வர யுதித்ததாலே
வளமாக நினைத்ததையும் வழுத்தக்கேளாய்
தோயவே மனையாட்கும் வந்ததோஷம்
தொலையவே திங்களுமே மூன்றதாகும்
ஆயவே யணைவரையும் பகையதாக்கும்
அரிவையர் கெர்ப்பமது அழிந்துபோகும்

மாயவேமாடாடு சேதமாகும்
மருமமாய் நினைத்ததுவும் முடிந்திடாதே

(இ-ள்) ஈஸ்வர வருடம் உதையமானதால் இப்போது நீ நினைத்தகாரியமென்னவெனில் மனையாட்கு வாய்த்ததோஷம்தீரமாதம் மூன்ருகும், அனைவரையும் பகைபடுத்தி வைக்கும் மனையாளின் கெற்பமானது அழிந்துபோகும், மாடாடுமுதலியதும் சேதமாகும் நினைத்தகாரிய முடியாது எ-று. 11

12-வது வெகுதான்னிய வருடபலன்

முடிந்திடவே வெகுதானிய முதித்ததாலே
முதன்மையாய் நீநினைத்தமனிதன்ருனும்
படிந்திட யுனக்குமே யுதவியாவான்
பழியானப் பிணிதுலையும் பயிருமோங்கும்
கடிந்திடக் கன்னியினல் கலகம் நீங்கும்
காணுமற் போனதோர் ஜீவன்கிட்டும்
தொடர்ந்ததோர் தோஷயெல்லா மகன்றுபோகும்
துலங்கிட புத்திர விருத்தியாமே.

(இ-ள்) வெகுதானியவருடமுதயமானதால் இப்போதுநீ நினைத்துக்கேட்டமனிதனல் உதவியானது உண்டாகும். பழியாகநேர்ந்த பிணியானது துலையும், பயிர்த்தொழில் விருத்தியாகும் ஒரு ஸ்திரீயினல் கலகமானது நீங்கும் காணமற்போன ஜீவனுங்கிடைக்கும், தோஷமானதுந்துலையும் புத்திரவிருத்தியுண்டாம் எ-று, 12

13-வது பிரமாதி வருடபலன்.

ஆமெனப் பிரமாதி யுதித்ததாலே
அன்பாக நினைத்தபடி யருவைசேர்வாள்
தாமெனத் தமையனு லுதவியாகும்
தன்னுடைய மனைதனிலே புதையலுண்டாம்
நாமெனவே நாலாண்டி லதுவுங்கிட்டும்
நாடிய திசையேக லாபமுண்டாம்
போமெனவே பூவையரும் பெருவாள்பெண்ணை
புகழாகத் திருமாலின் கிருபையுண்டாம்

(இ-ள்) பிரமாதிவருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்தபடியே ஸ்திரீயானவள் வந்து சேர்வாள் தமைனல் உதவியுண்டாகும்,

தன்னுடைய மனையில் புதையலுண்டு அதுநாலுவருடத்திற் கிடைக்கும், நினைத்திருக்கும்படியான திசையை நாடிப்போக லாபங்கிடைக்கும்,மனையாள்பெண்பெருகுவாள், திருமாலுடையகிருபையுண்டாம்

14-வது விக்கிரம வருடபலன்.

உண்டாக விக்கிரம யுதித்ததாலே
உன்மனதில் நினைத்தபசு கொள்ளநன்றும்
பண்டாக மனைக்கோல பலன்களுண்டாம்
பரிவாக துரவெடுக்கப் பெருகுந்தண்ணீர்
மிண்டாக யெதிரிகளை வெல்லலாகும்
மேலானப் பெரியோர்க ளுறவுகூடும்
கொண்டாடும் குலதெய்வந் தனக்குநீயும்
கோரியே பூசையது செய்யநன்றும்

(இ-ள்) விக்கிரமவருடம் உதயமானதால் உன் மனதில் நினைத்திருக்கும்படியான பசுக்கொள்ள பால்பாக்கியமுண்டாகும் மனைக்கோல பலனுண்டாகும், துரவு எடுக்க தண்ணீர் பெருகும், எதிரியை ஜெயம் செய்யலாம், பெரியோர்கள் உறவானது கூடும், உன்னுடைய குலதெய்வத்திற்கு பூசைபோட உத்தமம் நன்மைதரும் எ-று. 14

15-வது விஷு வருடபலன்.

நன்றாக விஷு வருட முதித்ததாலே
நாடிநீ கேட்டதுவும் பொருளதாகும்
குன்றாம லதுமுன்கை வசமதாகும்
கொண்டதோர் மனைமாளாற் குலவுஞ்செல்வம்
சென்றதோர் மைந்தரும் வந்துசேர்வார்
சேனைநாள் வழக்கதுவுந் துலைந்துபோகும்
நின்றதோர் தொழிலதுவும் செய்யநீடும்
நேசர்களு முதவியது புரிவார் பாரே.

(இ-ள்) விஷு வருடம் உதயமானதால் இப்போது நீ நாடிக் கேட்டப் பொருளானது உன்னுடைய கைவசமாகும் கொண்ட பெண்டீரால் செல்வம் பெருகும், பிரிந்துபோனமைந்தர்களும் வந்துசேர்வார்கள், வெகுநாளா யிருந்தவழக்குந் துலைந்துபோகும் நிறுத்திய தொழிலைமறுபடியும் ஆரம்பித்துச்செய்ய விருத்தியாகும் சினேகிதர்களும் உதவிசெய்வார்கள் எ-று. 15

16-வது. சித்திரபானு வருடபலன்.

பார்க்கவே சித்திரபானு வுதித்ததாலே
பரிவாக நீ நினைத்தத் தொழில்கிட்டாது
கோர்க்கவே கோரியவூர் போகநன்று
குறித்திட்ட மனிதனு லுதவியுண்டாம்
ஏர்க்கவே தோட்டமது வைக்கநீடும்
எழிலான செட்டதுவும் விருத்தியாகும்
பூர்க்கவே போனபொருள் புகழாய்கிட்டும்
புண்ணியனே கிணறெடுக்க சுரக்கும்நீரே

(இ-ள்) சித்திரபானு வருடம்உதையமானதால்இப்போதுநீநினைத்ததொழில் கிட்டாது கோரியிருக்கும்படியானவூர்க்குப்போக நன்மையுண்டாகும், குறித்தமனிதனால் உதவியாகும், தோட்டம் வைக்க விருத்தியாகும், மரங்கள் தழைக்கும், கைவிடடுப்போனபொருள் கிடைக்கும், கிணறெடுக்க நீர் சுரக்கும் எ-று. 16

17-வது சுபானு வருடபலன்

நீறென சுபானுமே யுதித்ததாலே
நினைத்ததோர் வீட்டிற்கும் போகதீதாம்
சேறென செல்வமது சிதறிப்போகும்
சீரிய கிரகமதால் பாதைகாட்டும்
தோறென கொற்றவரால் கொடுமைநேரும்
குடும்பத்திற் கலகமதுக் குடியாய்நிற்கும்
பேறெனவே பிசாசியினால் பீடைகாட்டும்
பின்னமாம் சிறையுண்டாம் பேசுவாயே

(இ-ள்) சுபானுவருடம் உதையமானதால் இப்போது நீ நினைத்திருக்கும்படியான வீட்டிற்குப்போக தீமையுண்டாவதுடன், செல்வமானது சிதறிப்போகும், நவக்கிரகங்களால் பாதைகாட்டும், அரசர்களால் கொடுமையானது நேரும், குடும்பத்தில் கலகம் குடியாகவிருக்கும், பிசாசுகளால் பீடையானது காட்டும், சிறைபடச் செய்யும். எ-று. 17

18-வது தாரண வருடபலன்

பேசவே தாரணவாண் டுதித்ததாலே
பெருமையுடன் நினைத்ததொழில் பண்பாய்கிட்டும்

கூசவே வாய்த்தபிணி குடிவிட்டோடும்
குறித்ததோர் பெண்கிடைக்கும் மணமுமாகும்
வாசமாம் வர்த்தகமும் விருத்தியாகும்
வாதாக நேர்ந்ததோர் வழக்குவெல்லும்
நேசமாம் நிலைதப்பி போனஜீவன்
நேராக வந்துமே சேர்வார்காணே

(இ-ள்) தாரண வருடம் உதயமானதால் இப்போதுநீ நினைத்திருக்கும்படியான தொழில்கிடைக்கும் உடம்பில்வாய்த்தபிணியானது நீங்கும், குறித்தபெண்ணே கிடைக்கும் கலியாணங்கூடும், வர்த்தகம் விருத்தியாகும், வாதாகநேர்ந்த வழக்கானது செலிக்கும் நிலைதப்பிப் போன ஜீவன் தானே நேராகவந்து சேரும் எ-று. 18

19-வது பார்த்திப வருடபலன்

காணவே பார்த்திப வுதித்ததாலே
களவது போனசொத்தை கருதிக்கேட்டாய்
பூணவே யப்பொருளைப் பெண்ணெடுத்து
புழக்கடையில் மரத்தடியில் புதைத்துவைத்தாள்
தோணவே யங்கனபோய் தோண்டிப்பார்க்க
துலங்கவே யப்பொருளுங் கிடைக்குமப்பா
நாணவே நாளதனைப் போக்கவேண்டாம்
நம்பிநீ யிட்சணமே நாடிப்பாரே.

(இ-ள்)பார்த்திபவருடம் உதயமானதால் இப்போது நீ களவு போனசொத்தைப்பற்றிக்கேட்டாய் அந்தப்பொருளை ஒருபெண்பிள்ளையானவள் எடுத்து புழக்கடையில் மரத்தின்கீழ் புதைத்து வைத்திருக்கிறுள் இப்போது நீ அங்குபோய் தோண்டிப்பார்க்க அந்தப்பொருளானதுகிடைக்கும் நாளைப்போக்காமல் உடனேபோய்ப்பார்க்க கிடைக்கும் எ-று. 19

20-வது விய வருடபலன்.

பாறெனெ வியவருட முதித்ததாலே
பண்பாக் நினைத்தபயிர் செய்யநன்று
சீறெனெ யுத்தியோகஞ் செய்யநன்று
சிறந்ததோர் வாணிபத்தில் லாபமுண்டு
பேறெனெ பந்துக்க ளுறவுமாவார்
பெருமையாய் குறித்ததோ ரிடமுங்கிட்டும்

சேறெனெ நெடுந்தூரம் போனபேரும்
நெருங்கிய நாளெட்டில் வந்துசேர்வார்

(இ-ள்) வியவருடம் உதயமானதால் மனதில் நினைத்தபடியாய் பயிர்த்தொழில்செய்ய விருத்தியாகும் உத்தியோகஞ்செய்ய பலக்கும் வர்த்தகஞ்செய்ய லாபங்கிடைக்கும்,பந்துக்கள் உறவாகுவார்,குறித்த பிடமுங்கிடைக்கும், தூரதேசம்போனபேர்கள் இன்னம்நாளெட்டில் வந்து சேர்வார்கள் எ.று. 20

21-வது சர்வசித்து வருடபலன்.

சேர்ந்திட சர்வசித்து வுதித்ததாலே
ஜெயமாக தானினைத்த சீவன்கிட்டும்
கூர்ந்திட கோரியதோர் வழக்குவெல்லும்
கூடிய சினேகமதால் நன்மையாகும்
நேர்ந்திட கைத்தொழிலும் நிலையாய்நீடும்
நெடுந்தூரம் போனவரும் வந்துசேர்வார்
பேர்ந்திட பிணியதுவுந் துலைந்துபோகும்
பழையமனை தான்கிடைக்கும் பார்க்கத்தானே.

(இ-ள்) சர்வசித்துவருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்துக்கேட்டசீவன் அகப்படும், தொடுத்த வழக்கானது வெல்லும். நேசித்திருக்கும் சினேகிதர்களால் நன்மையுண்டாகும் கைத்தொழிலும் நீடியோங்கும், துலைதூரம் போனபேர்களும்வந்துசேர்வார்கள். பிணியானது நிவர்த்தியாகும், பழைய மனையானது கிடைக்கும் எ-று. 21

22-வது சர்வதாரி வருடபலன்.

பார்க்கவே சர்வதாரி யுதித்ததாலே
பண்பாக யுன்மனதில் நினைத்தவாறு
ஏர்க்கவே யெத்தொழிலும் பலிதமாகும்
யேந்திழைக்குங் கெர்ப்பமுண்டாம் பிணியும்நீங்கும்
தேர்கவே செய்தொழிலும் விருத்தியாகும்
சிதரியே போனபொருள் வந்துதிக்கும்
கோர்க்கவே மனைமாடு கொள்ளநன்றும்
குடிபுகவும் நலமெனவே கூறுவாயே.

(இ-ள்) சர்வதாரிவருடம் உதயமானதால் இப்போது நீ மனதில் நினைத்தவாறு எந்த தொழில் செய்யப் பிரவேசிக்கினும் தடையில்லாமல் பலிதமுண்டாகுங், மனையாளுக்கு கெற்பமுண்டாகும், சோகமானதுதீரும். செய்யும்படியான தொழிலும் உத்தியோகமும் விருத்தியாகும், கைவிட்டுசிதரிப்போனபொருள் கிடைக்கும் மனைமாடுஇவைகள்கொள்ள நன்மை யுண்டாகும் குடிபுகவும் குடும்பம் விருத்தியாகும் எ-று. 22

23-வது விரோதி வருடபலன்

கூறவே விரோதியாண் டுதித்ததாலே
குற்றமாம் நினைத்ததுவும் கொடுமைசெய்யும்
பேறவே பேசுமொழி பிறண்டுபோகும்
பெண்டீர்க்கும் பிணியணுகும் பாதைகாணும்
நேறவே நம்பினதுங் கைகிட்டாது
நேசமும் பிரிந்துவிடும் நிலையுமாகும்
தேறவே யிவையெல்லாந் துலைவதற்குத்
திங்களா ருகுமென திடமாய்ச்சொல்லே

(இ-ள்) விரோதிவருடம் உதையமானதால் இப்போதுநீ நினைத்தகாரியங்களில் பிரவேசிக்க கொடுமை செய்யும் பேசும் மொழியானது பிறண்டுபோகும் மனையாளுக்கும் நோயணுகி பாதைசெய்யும் நம்பி யிருக்கும்படியானது உன்கை வசமாகாது, நேசமானதும் பிரிந்துப்போகும் நிலையானது மாறும் இவையெல்லாம் நீங்கிச் சுகமுண்டாக இன்னம் ஆறுமாதம்கழியவேணும் எ-று. 23

24-வது விக்குருதி வருடபலன்

சொல்லவே விக்குருதி யுதித்ததாலே
சுகமாக நீநினைத்த பெண்ணேகிட்டும்
வல்லதோர் மனைவாங்க விருத்தியாகும்
வரசரால் வழக்கதுவுந் துலைந்துபோகும்
புல்லவே வாகனங்கள் கொள்ளநன்றாம்
பூமியிலே பலிதமுடன் பொருளுமுண்டாம்
நல்லவர் நேசமானது வந்துகூடும்
நம்பிய மனிதரா லுதவியாமே

(இ-ள்) விக்குருதிவருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்தபெண் கிடைக்கும் மனைகொள்ள விருத்தியாகும், அரசரால் வழக்கானது தீரும், வாகனம் வாங்க நன்மை யுண்டாகும், பூமி பலிதமாகும், பொருள் கிடைக்கும், நல்லோர்கள்நேசமானதுகூடும், நம்பியிருக்கும்படியானமனிதரால்உதவியுண்டாகும் கவலையானது தீரும்எ-று.

25-வது கர வருடபலன்,

ஆமென கரவருட முதித்ததாலே
அப்பனே களவதுவும் போனசொத்தும்
காமென நங்கையவ ளெடுத்துமேதான்
நல்லதோ ருரிதனிலே வைத்தாளப்பா
தாமெனத் தடையிலா ததுவுங்கிட்டும்
தனிவழியே போனசுதன் வந்துசேர்வான்
போமென பொல்லாதக் கலகந்தீரும்
பூமீயிலே லாபமுண்டாம் புகலுவாயே.

(இ-ள்) கரவருடம் உதயமானதால் களவாகப்போன சொத்ததனை ஒரு பெண்பிள்ளையானவள் எடுத்து உரிகுடுவையில் போட்டு வைத்திருக்கிறாள் அதைத் தேடிப்பார்க்கக் கிடைக்கும், தனிவழியாகப்போன மைந்தனும் வந்துசேருவான், பொல்லாப்பாய் நேர்ந்த கலகமானது வொழியும் பூமியில் லாபமுண்டாகும் எ-று 25

26-வது நந்தன வருடபலன்.

புகலவே நந்தனவாண் டுதித்ததாலே
போனதோர் ஜீவனதுப் பேசக்கேளாய்
தகலவே நிருதியென்னும் மூலைதன்னில்
தானொருவர் கைவசமாய் தங்கிநிற்கும்
அகலவே யரசருட மூலமாய்க்கேள்
அப்பனே யதுவுமுன் வசமதாகும்
இகலவே யின்னமோர் வாரத்திற்குள்
இஷ்டம்போல் கிடைக்குமென யியம்புவாயே,

(இ-ள்) நந்தனவருடம் உதயமானதால்இப்போது போனஜீவன் நிருதிமூலையில் ஒருவருடைய கைவசமாகவிருக்கும் அது அரசர்களுடைய மூலத்தினால் அது உன் வசமாக வந்துசேரும்' இன்னம் ஒரு வாரத்திற்குள் உன் யிஷ்டம்போல் யாவும் சித்தியாகமுடியும் எ-று.

27-வது விஜய வருடபலன்.

இயம்பவே விஜயவாண் டுதித்ததாலே
இப்போது நினைத்ததோர் வழக்கு வெல்லும்
வயம்பெறவே வர்த்தகமும் விருத்தியாகும்
வாகாக மாதவளும் வசியமாவாள்
நயம்பெறவே நல்லமனை கோலநன்றும்
நஷ்டமாய் போனபொருள் வந்துசேரும்
ஜெயம்பெறவே சித்தியாங் கலகந்தீரும்
ஜென்மத்தில் வாய்த்தநோ யகலும்பாரே

(இ-ள்) விஜய வருடம் உதையமானதால் இப்போது நினைத்துக் கேட்ட வழக்கானது வெல்லும், வர்த்தகத்தில் விருத்தியுண்டாகும் குறித்த ஸ்திரீ வசியமாவாள், மனையானது கோல நன்மையுண்டாகும் நஷ்டமாகப்போனபொருள் கிடைக்கும், ஜெயம்பெற சித்தியுண்டாகும், கலகமானது ஒழியும், தேகத்தில்வாய்த்தநோயானது தீரும்.

28-வது ஜய வருடபலன்.

பாறென ஜெயவருட முதித்ததாலே
பரிவாக வுத்தியோகம் விருத்தியாகும்
சீறென சேனைநாள் வழக்குவெல்லும்
சிறப்பாக மைந்தருக்கும் வித்தையோங்கும்
பேறென தனதான்னியம் பலிதமாகும்
பெருமையாய் கலியாணம் மனையிலாகும்
கோறென குறித்தோரால் பொருளுங்கிட்டும்
குலவிய பந்துக்களும் சேர்க்கையாமே.

(இ-ள்) ஜயவருடம் உதயமானதால் நினைத்துக்கேட்ட உத்தியோகம் விருத்தியாகும், வெகுநாளாக யிருந்த வழக்கானது வெல்லும், மைந்தர்களுக்கு வித்தையானது வோங்கும் தனதானியம் பலிதமாகும், மனையில் கலியாணம்நடக்கும், குறித்திருக்கும்படியான மனிதர் மூலமாய் பொருள் கிடைக்கும், பந்துக்கள் சேர்க்கையாவார்கள் எ-று. 28

29-வது மன்மத வருடபலன்,

சேர்க்கவே மன்மதவாண் டுதித்ததாலே
சிந்தையிலே நினைத்தநாற்கால் ஜீவன்கிட்டும்
மூர்க்கமாய் கலகமிட்டுப் போனபேருங்
முக்கியமாய் சேதியது தெரிவிப்பாகள்
ஏர்க்கவே யூர்பயணம் போகநன்று
யெண்ணிய வர்த்தகமும் செய்யநன்று
தீர்க்கமாய் மாடாடு கொள்ளநன்று
திறமையாய் பயிர்த்தொழிலும் பலிதமாமே.

(இ-ள்) மன்மதவருடம் உதையமானதால் இப்போது நினைத்துக்கேட்ட நாற்கால் ஜீவனானதுக்கிடைக்கும், மூர்க்கமாக சண்டைபோட்டு கோபத்தோடு போனபேர்கள் சேதியானதுத் தெரிவிப்பார்கள், இம்போது நினைத்த வூர்ப்பயணம்போக நன்மை யுண்டாகும் வர்த்தகம்செய்ய விருத்தியாகும், ஆடுமாடு கொள்ள க்ஷேமத்தைதருகும் பயிர்த்தொழில்புரிய பலிதமுண்டாகும் எ-று. 29

30-வது துன்முகி வருடபலன்.

ஆமென துன்முகியாண் டுதித்ததாலே
அரிவையற்கு வாய்த்தபிணி யகன்றுபோகும்
தாமென கடனது வாங்கத்தீரும்
தான்போன ஜீவனுமே மேற்கே கிடடும்
நாமென யரசரால நன்மையாகும்
நாடிய காரியமும் ஜெயமதாகும்
போமென பெண்கொள்ள புகழுண்டாகும்
பொன்பொருளுந் தான்கிடைக்கும் பெருகத்தானே.

(இ-ள்) துன்முகி வருடம்உதைய மானதால் மனையாளுக்கு வாய்த்த பிணியானது அகலும், கடன் வாங்க உடனேதீரும், களவாகப் போனசீவன் மேற்குதிக்கில் கிடைக்கும், அரசர்களுடைய நன்மையுண்டாகும், இப்போது நாடிப்போகும்படியான காரியம் ஜெயமாகும், பெண்கொள்ள அதனால் புகழோடு பொன்பொருளுங் கிடைக்கும் பெருக்கும் எ-று. 30

31-வது ஏவிளம்பி வருடபலன்.

பெருகவே ஏவிளம்பி யுதித்ததாலே
பெட்பாக நினைத்தபொருள் சித்தியாகும்

குருகவே பீடிக்கும் பேயுமோடும்
கொடுமையாய் வாய்த்தநோ யதுவுந்தீரும்
தருகவே தையலும் பெருவாள்பிள்ளை
தானித்த வூர்போக லாபமுண்டாம்
வருகவே வஞ்சியர்கள்! உறவுமுண்டாம்
வழிதப்பி போனவரும் வந்துசேர்வார்.

(இ-ள்) ஏவிளம்பி வருடம் உதயமானதால் இப்போது நினைத்த பொருள் சித்தியாகும், பீடிக்கும்படியான பேயானது விட்டகலும் நோயானது தீரும், மனையாளும் ஆண்பிள்ளையைப் பெருகுவாள், இப்போது நினைத்த ஊர்பபயணம்போக லாபமுண்டாம்,ஸ்திரீகளின்உறவானறு கூடும் வழிதப்பி போனவரும் வந்து சேர்வார் எ-று. 31

32-வது விளம்பி வருடபலன்.

சேரவே விளம்பியாண் டுதித்ததாலே
சித்தியாங் குறித்ததோ ரசுவங்கொள்ள
நேரவே நேசரா லுதவியாகும்
நீடியக் கஷ்டமுந் துலைந்துபோகும்
மீரவே செய்தொழிலும் விருத்தியாகும்
மிண்டானப் பகையதுவுந் துலைந்துபோகும்
கோரவே குறித்ததோ ரிடத்திற்ருனும்
குடிபுக நன்மையது தருகும்பேசே

(இ-ள்) விளம்பி வருடம் உதயமானதால் இப்போது குறித்திருக்கும்படியான அஸ்வத்தை கொள்ள நன்மையைத்தருகும், நேசர்களால் உதவியுண்டாகும். கஷ்டமானது துலைந்துபோகும் செய்யும்படியான தொழிலும் விருத்தியாகும் பகையானது அகலும் குறித்த மனையிற்குடிபுக நன்மையைத்தருகும் எ-று. 32

33-வது விகாரி வருடபலன்.

பேசவே விகாரியாண் டுதித்ததாலே
பெருகிடுந் துன்யமுடன் விசனமெத்த
கூசவே குறைபட்டுப் போனஜீவன்
குற்றமாம் திரும்பியே வருவதில்லை
தோஷமாம் தொழில்தனிலே கலகம்நேரும்
துஷ்டர்களால் பொருளதுவுஞ் சேதமாகும்

ஆசையா யடுத்தவிடம் பகையதாகும்
அலச்சலது மிகவுண்டா மரிந்திடாயே.

(இ-ள்) விகாரிவருடம் உதயமானதால் துன்பமானதுபெருகும, விசனமுண்டாகும், துயரப்பட்டு போனஜீவன் திரும்பிவரமாட்டாது செய்யும்படியான தொழில் முகாந்திரத்தில் கலகம் நேரும், துஷ்டர்களுடைய சகவாசத்தினல் பொருள் சேதமாகும், அன்புகொண்டு போய் அடுக்குமிடமும் பகையாகும், அலைச்சல்படச்செய்யும் எ-று.

34-வது சார்வரி வருடபலன்.

அரிந்திடவே சர்வரியாண் டுதித்ததாலே
அடவாக நினைத்தபொருள் வருவதில்லை
பிரிந்திடவே மனைதனிலே வழக்குநேரும்
பீடையாம் பிசாசதனல் பிணியுண்டாகுஞ்
தெரிந்திடவே திசைதப்பிப் போனசிவன்
தேடிடவே தென்மேற்கு மூலைகிட்டும்
குறைந்திடவே செய்தொழிலுங் குற்றமாகும்
கொம்பனையாள் தன்னலே கோளுண்டாமே.

(இ-ள்) சார்வரிவருடம் உதயமானதால் இப்போதுநினைத்தபொருள்வரமாட்டாது, மனையில் வழக்கானதுநேரும்,பீடையணுகும்,பிசாசியினல் பிணியுண்டாகும், திசைதப்பிப்போனசிவனை தேடிப்பார்க்கத் தென்மேற்கு மூலையில் அகப்படும், செய்யும்படியான தொழிலிற்குற்றமானது நேரும், மனையாளினல் கோளுண்டாகும் எ-று. 34

35-வது பிலவ வருடபலன்.

கோளென பிலவ்வாண் டுதித்ததாலே
கூடிடும் நினைத்தபடி குற்றம்நீங்கும்
கேளென களவது மோனசொத்தும்
கீர்த்தியாந் தந்திரத் தாலேகிட்டும்
தாளென யெதிரிகளை ஜெயங்கள் செய்வாய்
தக்கதோர் வாணிபமும் விருத்தியாகும்
நாளென நாள்பத்தில் நல்லசெய்தி
நாடியேவரகேட்டு மகிழுவாயே.

(இ-ள்) பிலவவருடம் உதயமானதால் நினைத்தபடியாகத்தானே குற்றமானது நீங்கும், களவுபோன சொத்தானது தந்திரத்தினால் கிடைக்கும், யெதிரிகளை ஜெயங்கள் செய்குவாய், வர்த்தகம் விருத்தியாகும், இன்னம் பத்துநாளைக்குள் துலவிருந்து நல்லசெய்திவரக்கேட்டு மனமகிட்சி கொள்வாய் எ-று. 35

36-வது சுபகிருது வருடபலன்.

மகிழவே சுபகிருது வுதித்ததாலே
　　மைந்தற்கு மணஞ்செய்ய நன்மையாகும்
புகழவே போனதோர் பொருளுங்கிட்டும்
　　பூமியொடு மாடுவீடு வாங்கநன்றாம்
திகழவே வழக்கதுவுந் தொடுக்கவெல்லும்
　　தீதாக வாய்த்தபிணி மருந்தால்தீரும்
இகழவே யெதிரிகளும் வணங்குவார்கள்
　　எத்தொழிலை செய்திடினும் விருத்தியாமே

(இ-ள்) சுபகிருது வருடம் உதயமானதால்மைந்தனுக்கு மணமானது சூட்ட நன்மையைத் தருகும், கைவிட்டுப்போன பொருளானது கிடைக்கும், பூமி மாடு மனை இவைகள் வாங்க விருததியாகும், வழக்குதொடுக்க வெல்லும், வந்தணுகிய நோயானது மருந்துண்ண தீரும், எதிரிகளானவர்கள் வந்துவணங்குவார்கள், எந்ததொழிலைப் பிரவேசித்து செய்யினும் விருத்தியாகும் எ-று. 36

37-வது சோபகிருது வருடபலன்.

விருத்தியாஞ் சோபகிருது வுதித்ததாலே
　　வெகுதுயரம் நினைத்ததுவும் விரும்பக்கேளாய்
வருத்தமாய்ப் போனவரும் வருவதில்லை
　　வாதிட்ட வழக்கதுவுந் தீர்ந்திடாது
பொருத்தமாய் பேசியதோர் பெண்கிட்டாது
　　பொருள்கேட்ட யிடந்தனிலே பேர்ந்திடாது
திருத்தமாய் திங்களேழ் சென்றதானால்
　　தீங்கெலாந் தானொழியுந் திகழாய்காண

(இ-ள்) சோபகிருது வருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்த துயரமான காரியத்தை சொல்லக்கேளாய், வருத்தமாகவீடுவிட்டுப் போனபேரும் வந்து சேரமாட்டார்கள், வாதாக நேர்ந்த வழக்குந் தீராது, பேசியபெண்ணுங் கிடைக்காது, பொருள்கேட்ட யிடத்

தினும் பொருள் கொடுக்க மாட்டார்கள், மாதம் எழ்சென்றதானால் இவைகள் யாவும் நீங்கிநாட்குநாள் சுகத்தைத் தருகும் புகழுண்டாகும் போனபேர்களும் வந்து சேர்வார்கள். 37

38-வது குரோதி வருடபலன்.

காணவே குரோதியாண் டுதித்ததாலே
　　கண்மணியே நினைத்ததோர் கவலைதீரும்
தோணவே தொடுவழக்குந் துலைந்துபோகும்
　　துணைவரால் பொருளதுவு முதவியாகும்
வேணதோர் தோழில்புரிய விருத்தியோங்கும்
　　வெகுபேர்கள் நேயத்தால் நன்மையாகும்
பூணவே போனதோர் சீவன்றானும்
　　புகழாக வருகும்நா ளெட்டிற்றானே.

(இ-ள்) குரோதிவருடம் உதயமானதால் இப்போது நினைத்துக் கேட்ட கவலையானது தீரும், தொடுவழக்கானது துலையும், துணைவர்களால் பொருளுதவியாகும், தொழிலானதுப் புரியவிருத்தியோங்கும் வெகுபெயர்களுடைய நேயத்தால் நன்மையானது பெருகும், போன சீவனும் நாளெட்டில் வந்து சேரும் எ-று. 38

39-வது விசுவாவசு வருடபலன்.

தானாக விசுவாவசு வுதித்ததாலே
　　தானினைத்த வுத்தியோகந் தடையதாகும்
தேனாக தாய்தந்தைப் பகையுமாவார்
　　தேடியப் பொருளதுவும் விரையமாகும்
ஊனாக வொருவனிடப் பகையினாலே
　　உடம்பினில் வாய்த்தபிணி பாதைசெய்யும்
கோனான கொற்றவரால் பகைய்ம்நேரும்
　　கோரிய சீவனதுக் கிட்டிடாது

(இ-ள்) விசுவாவசு வருடம் உதயமானதால் இப்போது நீநினைத்துக்கேட்ட உத்தியோகம் கிடைக்கமாட்டாது. தாய்தந்தையர் பகையாவார், தேடியப் பொருளும்விரையமாகப்போகும், ஒருவருடையப கையினால் தேகத்தில் வாய்த்த பிணியினால் பாதை யுண்டாகும், அரசர்பகைநேரும் கோரிப்போகும் சீவன் கிடைக்கமாட்டாதுஎ-று. 39

N. DORAIRAJAN,
ELECTRICAL WIRING CONTRACTOR,
5, VADAMALAI PILLAI ST.,
VEPERY POST, MADRAS.

40-வது பராபவ வருடபலன்.

கிட்டவே பராபவவாண் டுதித்ததாலே
 கீர்த்தியாய் நீநினைத்த பொருள்கிடைக்கும்
மட்டிலா மாடுமனை விருத்தியாகும்
 மனைவியால் செல்வமது மனையிலோங்கும்
திட்டமாய் தேடிய சிவன்கிட்டும்
 திகழாக மனையாட்கும் கெர்ப்பமுண்டாம்
தொட்டதோர் தொழில்களெல்லாம் விருத்தியாகும்
 துலதூர மிருந்துசேதி வருகும்பாரே

(இ-ள்) பராபவ வருடம் உதயமானதால் இப்போது நீநினைத்த காரியம் முடியும் பொருள் கிடைக்கும், மாடுமனை விருத்தியாகும் மனையாளினால் செல்வமானது ஓங்கும், தேடிய சிவனனது தானே வந்து சேரும் மனையாளுககு கெர்ப்பமுண்டாகும், தொழில் யாவும் விருத்தியாகும், துலைதூரத்திலிருந்து சேதியானது வருகும் எ-று.

41-வது பிலவங்க வருடபலன்.

பார்க்கவே பிலவங்க யுதித்ததாலே
 பாகமது மனம்போலும் பிரிவதாகும்
தீர்க்கமாய் வித்தையதுப் பலிதமாகும்
 தீராத பெரும்பிணியுந் தீர்ந்துபோகும்
ஏர்க்கையாய் பெரியோர்கள் நேயம்கூடும்
 யீடாக கொடுத்தபொருள் வந்துசேரும்
சேர்க்கவே நேயர்களும் விர்த்தியாவார்
 செல்வமதுப் பெருகுமென சிறப்பாய் சொல்லே

(இ-ள்) பிலவங்க வருடம் உதயமானதால் உன்னுடைய மனதில் கொண்ட யெண்ணத்தைப்போல் பாகமானதுப்பிரியும், வித்தைபலிதமாகும், தீராதப்பிணியுந் தீரும், பெரியோர்களுடைய நேயமானது கூடும், கடன்கொடுத்த பொருளும் கைவசமாக வந்துசேரும். மைந்தர்களும் விர்த்தியாவார்கள் மனையில் செல்வமானது பெருகும் சிறப்புண்டாகும் எ-று. 41

42-வது கீலக வருடபலன்.

சொல்லவே கீலகவாண் டுதித்ததாலே
 சோதனையாய் நினைத்ததுவுஞ் சோர்வதாகும்
புல்லவே கண்டதோர் கினவினாலே
 பொல்லாத கொடுமையது தானுண்டாகும்
தொல்லையாம் வீணாகத் தோஷஞ்சாறும்
 தோகையர் தங்களால் கலகம்நேரும்
அல்லல மலச்சலுடன் துயரஞ்செய்யும்
 அன்பான சிநேகிதமும் பிரியும்பாரே.

இ-ள்;) கீலகவருடம் உதயமானதால் இப்போது நினைத்தவேலை சோர்வடையும், கண்டகினவினால் கொடுமையானது உண்டாகும், தொல்லையான தோஷமானது வந்துசாறும், ஸ்திரீகளினால் கலகம்நேரும், அலைச்சல்படச்செய்யும் துயரமுண்டாகும், அன்பான சிநேகிதமும் பிரிந்துபோகும் எ.று. 42

43-வது சௌமிய வருடபலன்.

பாறென சௌமியவாண் டுதித்ததாலே
 பரிவாக நினைத்ததொழிற் சித்தியாகும்
நேறென நாணயமு மிகவுண்டாகும்
 நேசனால் போனபொருள் வந்துகிட்டும்
சீறென விவாகமது செய்யநன்றும்
 சேனைநாள் வழக்கதுவுஞ் செயமதாகும்
பேறெனப் பேச்சதுவும் முடிவதாகும்
 பெண்டீரால் சுகம்பெருகும் பேசுவாயே.

(இ.ள்) சௌமிய வருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்துக்கேட்ட தொழிலானது விருத்தியாகும், நாணயமும் மென்மேலாகும், நேசர்களால் போன பொருள் வந்துசேரும், விவாகம் செய்ய நன்மையானது பெருகும். பழையநாளின் வழக்கானது தீரும் ஜெயமுண்டாகும். ஒருவரிடத்தில் பேசிய பேச்சானது முடிவுபெரும், பெண்டீரால் சுகம்பெருகும் எ-று. 43

44-வது சாதாரண வருடபலன்.

பேச சாதாரணவாண் டுதித்ததாலே
 பின்னமாம் பிணியுமோ ருண்டிற்றீரும்

வாசமாம் வரசரால் பொருள் கிடைக்கும்
வஞ்சியர் பகையதுவும் துலைந்துபோகும்
தோஷ்மாம் துலைதூரம் போனோர் மீள்வார்
துலங்கிடு முத்தியோக விருத்தியாகும்
பாசமாய் பழையதனம் வந்து சேரும்
பாலர்களும் பண்பாக வாழ்வார்கூறே.

(இ-ள்) சாதாரண வருடம் உதயமானதால் இப்போது வாய்த்திருக்கும்படியான நோயானது ஒரு வருஷத்தில் தீரும். அரசர்கள் மூலமாய்ப் பொருள் கிடைக்கும் ஸ்திரீகளால் நேர்ந்த வழக்கானது துலையும், துலதூரம் போனபேர்களும் மீண்டுவருவார்கள். உத்தியோகமும் விருத்தியாகும், பழைய தனமுங் கிடைக்கும், பாலர்களும் விருத்தியடைவார்கள் எ-று. 44

45-வது விரோதிகிருது வருடபலன்.

கூறவே விரோதிகிருது உதித்ததாலே
குற்றமாம் நினைத்தமனை கொள்ளதீதாம்
பேறவே பெருமையினால் பேச்சும்பேச்சு
பின்னமா மதினாலே தோஷஞ்சாறும்
தேறவே தான்போனப் பொருள்கிட்டாது
தேவியற்க்கு கெர்ப்பமது யழிந்துபோகும்
நேறவே கஷ்டங்கள் மிகவேகாட்டும்
நிலைதப்பிப் போம்படியாய் நேருங்காணே

(இ-ள்) விரோதிகிருது வருடம் உதயமானதால் இபபோது நீ நினைத்து கேட்ட மனையை வாங்க அதனால் கெடுதியுண்டாகும், பெருமையாகப் பேச்சும் பேச்சியினால் பின்னமாகிய தோஷ மானது சாறும் தோஷமாகப்போன பொருள் கிடைக்க மாட்டாது, மனையாளுக்கு கெர்ப்பமானது அழிந்துபோகும், கஷ்டமானது மிகவுண்டாகும், நிலைவிட்டு பேர்ந்துப் பொகும்படிச் செய்யும். 45

46-வது பரிதாபி வருடபலன்.

காணவே பரிதாபி யுதித்ததாலே
கருதியே நினைத்ததோர் கஷ்டந்தீரும்
பூணவே புகன்றமொழியுருதியாகும்
புழ்கபெருக பெரியோர்க ளுதவிகூடும்

தோணவே தொடுக்குமோர் வழக்குவெல்லும்
துணைவரால் வந்ததோர் கலகந்தீரும்
வேணவே மாடாடு விருத்தியாகும்
விளம்பவே நாட்குநாள் சுகமுண்டாமே.

(இ-ள்) பரிதாபி வருடம் உதயமானதால் இப்போது நினைத்துக்கேட்ட கஷ்டமானது தீரும், சொன்னசொல் உருதியாக முடியும், பெரியோர்கள் உதவியானது கூடும், தொடுக்கும் படி யான வழக்கானது வெல்லும், துணைவர்களால் நோந்த கலகந்தீரும், ஆடு மாடு கொள்ள விருத்தியாகும், இவைகளெல்லாம் நாட்குநாள் சுகந்தருகும் எ-று. 46

47-வது பிரமாதீச வருடபலன்.

உண்டென பிரமாதி யுதித்ததாலே
உத்தமனே நினைத்தபொருள் கிடைத்திடாது
கண்டென கலகமதால் கவலையுண்டாம்
கருதிய மனிதனால் காணும்நஷ்டம்
மிண்டென செய்தொழிலி லிடரதாகும்
மிக்கதோர் பந்துகளும் பகையதாவார்
வண்டென வாய்த்தபிணி வருத்தம் செய்யும்
வாடியே போனவரும் வந்துசேருர்

(இ-ள்) பிரமாதீசவருடம் உதயமானதால் இப்போது நினைத்துக் கேட்ட பொருள்கிடைக்க மாட்டாது. கலகத்தினால் கவலையுண்டாகும், நம்பியிருக்கும் படியான மனிதனால் நஷ்டமுங்காணும், செயும்படியான தொழிலில் இடரானது நேரும், பந்துவர்க்கங்களும் பகையாவார்கள், தேகத்தில் வாய்த்த நோயானது பாதைசெய்யும், மனம்வாடி போனவர் வந்துசேருர்கள் எ-று. 47

48-வது ஆனந்த வருடபலன்.

வந்திடவே யானந்தா யுதித்ததாலே
வளமாக நினைத்தபொருள் வருத்துமாகும்
முந்திட சொன்னமொழி யுறுதியாகும்
முனைவாக செய்தொழிலும் விருத்தியாகும்
நொந்திட பட்டதோர் கஷ்டந்தீரும்
நோக்கிய திசையேக லாபங்காணும்

அந்தமாம் சுபசோபனங்க ளாகும்
அரிவையரும் புத்திரனை பெருவாள் பாரே

(இ-ள்) ஆனந்த வருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்தபொருள் வந்துசேரும், முன்பாகச்சொன்ன மொழியானது உருதியாகும், செய்யும் படியானத் தொழிலும் விருத்தியாகும், பட்டகஷ்டங்கள் யாவுந்தீரும், இப்போது போகும் படியாக குறித்திருக்கும் திசையிற்போக லாபமுண்டாகும், சுபசோபனங்கள் நடக்கும் மனையாளும் புத்திரனைப் பெருவாள் எ-று. 48

49-வது இராட்சச வருடபலன்.

பார்க்கவே இராட்சசவாண் டுதித்ததாலே
பரிவாக நினைத்தநாற்கால் ஜீவன்கிட்டும்
வேர்க்கவே யாணோடு பெண்ணும்கூடி
வெகுதூரம் போனவரும் வந்துசேர்வார்
ஏர்க்கவே மாடாடு மனையேகொள்ள
எழிலாக நாட்குநாள் விருத்தியாகும்
தீர்க்கமாய் திருமணங்கள் செய்யநன்றும்
திருமாது மனைதனிலே வாழ்குவாளே

(இ-ள்) இராட்சச் வருடம் உதயமானதால் இப்போது காணமற்போன நாற்கால்ஜீவன் அகப்படும், ஆண் பெண்ணுமாகக்கூடி தூரதேசம் போனபேர்களும் வந்துசேர்வார்கள், மாடு ஆடு மனைகொள்ள நாட்குநாள் விருத்தியாகும், கலியாணம்செய்ய நன்மையுண்டாகும் திருமாதும் மனையிலிருந்து வாழ்குவாள் எ-று. 49

50-வது நளவருட பலன்.

வாழவே நளவருட முதித்ததாலே
வளமாக நினைத்தபொருள் வந்துசேரும்
சூழவே சுத்தமுடன் மணமுங்கூடும்
சொல்லிய வாக்கதுவு முருதியாகும்
மீழவே மேலான சினேகங்கூடும்
மிக்கதோர் பூமியது விருத்தியாகும்
தாழவே தந்தையுடப் பொருளுங்கிட்டும்
தானேர்ந்த வழக்கதுவுந் தீரும்பாரே

(இ-ள்) நளவருடம் உதயமானதால் நினைத்த பொருளானது வந்துசேரும்' மணம்கூடும் சொல்லிய வாக்கு உருதியாகும் மேலான சினேகிதம் கிடைக்கும், பூமியில் பயிர்தொழில் செய்ய விருத்தியாகும், தந்தை யினுடையப் பொருள் கிடைக்கும், வழக் கானது தீரும் எ-று. 50

51-வது பிங்கள வருடபலன்.

பாறென பிங்களவாண் டுதித்ததாலே
பழியானக் கலகமதுத் தீர்ந்திடாது
நேறென னேர்ந்ததோர் நோயினாலே
நீடியே பித்தமே யதிகரிக்கும்
தேறென தெருப்பட்டுப் போனவஜீன்
தென்மேற்கு மூலையிலே தானேவாழும்
கூறென குடும்பத்திற் கலகம்நேரும்
கோளினால் குற்றமெனக் கூறுவாயே

(இ-ள்) பிங்கள வருடம் உதயமானதால் இப்போதுப் பழியாக நேர்ந்த கலகமானது தீர்ந்திடாது, தேகத்தில் வாய்த்த பிணியினால் பித்த மதிகரிக்கும் தெருப்பட்டுப்போன சீவன் தென்மேற்கு மூலையிற்போய் வாழும், குடும்பத்திலுங் கலகம் நேரும், கோளினால் குற்றமுண்டாகும் எ-று. 51

52-வது காளயுக்தி வருடபலன்.

கூறவே காளயுக்தி யுதித்ததாலே
குணமாக செய்தொழிலைப் பற்றிக்கேட்டாய்
நேறவே யதினாலும் நிந்தையுண்டாம்
நெருங்கிய நேசத்தில் விரோதமாகும்
பூறவே புதுமனையுங் கோலதீதாம்
பேனவருந் திரும்பிவர நாளேயாகும்
சேறவே களவாகப் போனசொத்தும்
சிலவழிந்து விட்டதென செப்புவாயே

(இ-ள்) காளயுக்தி வருடம் உதயமானதால் இப்போது நீ செய்யும்படியான தொழிலைப்பற்றி கேடடாய் அதினால் நிந்தை யுண்டாகும், நெருங்கிய நேசத்திலும் விரோதம்நேரும், புதுமனையானதுகோல தீமையணுகும் வீடுவிட்டுப் போனவர்கள் வந்துசே

நாளாகும், கைவிட்டுக் களவாகப போனபொருள் சிலவழிந்து
விட்டன அதை குறித்துத தேடுவதில் பயனில்லையாம் எ-று. 52

53-வது சித்தாத்திரி வருடபலன்.

செப்பவே சித்தாத்திரி வுதித்ததாலே
செய்தொழிலும் விருத்தியாம் சிநேகராலே
ஒப்பவே யுத்தேசம் போலேயாகும்
ஓடியே போனமைந்தன் வந்துசேர்வான்
செப்பவே துலவிருந்து சேதிகிட்டும்
செழிப்பாகப் பசுக்கொள்ள விருத்தியாகும்
தப்பியநாற் கால்ஜீவன் வந்துசேரும்
தான்தொடுத்த வழககதுவுங் கெலிக்கும்பாரே

(இ-ள்) சித்தாத்திரி வருடம் உதயமானதால் செய்யும்படி யானத் தொழிலும் விருத்தியாகும், சிநேகிதரால் உத்தேசித்தகாரியம் முடிவாகும், வீடுவிடடு ஓடிப்போன மைந்தனும் வந்துசேர்வான், துலவிலிருந்து நன்மையானச் சேதியானது வரும், பசுமாடு கொள்ள விருத்தியாகும், திசைதப்பிப்போன நாற்கால் ஜீவன் வந்து சேரும் தொடுத்த வழககுங் கெலிக்கும் எ-று. 53

54-வது ரௌத்திரி வருடபலன்.

கெலிக்கவே ரவுத்திரியாண் டுதித்ததாலே
கெட்டியாய் நினைத்ததோர் தொழிலுங்கிட்டும்
பலக்கவே யுத்தியோகம் பரிகிநீடும்
பண்பாக வாகனாதி பலவுஞ்சேரும்
விலக்வே வெகுநாளின் வழக்குதீரும்
விளங்கவே மைந்தர்களுஞ் செழித்துவாழ்வார்
கலக்கவே கலியாணம் மனையிலாகும்
கவலையெலா மொழிந்துசுகங் காணுந்தானே

(இ-ள்) ரௌத்திரி வருடம் உதயமானதால் இப்போது நீ நினைத்த தொழிலானது தடையில்லாமல் செய்யக் கிடைக்கும், உத்தியோகமும் உயர்ந்து நீடும், வாகனாதிகள் பலவும் வந்து சேரும், வெகுநாட்பட்ட வழக்கானது தீரும், மைந்தர்களும் செழிப்பாக வாழ்குவார், கலியாணம் மனையிலாகும் கவலையானது வொழியும் சுகமுண்டாகும் எ-று. 54

55-வது துன்மதி வருடபலன்.

தானக துன்மதியாண் டுதித்ததாலே
தையலர்க்கு வாய்த்தபிணி தானேதீரும்
தேனக தேடியதோர் ஜீவன்கிட்டும்
திகழாகப் பூமிகொள்ள திடமதாகும்
மானக மனைகோல மகிட்சியுண்டாம்
மாடாடுப் பரிகொள்ள விருத்தியாகும்
கோனகக் கொண்டதோர் மனையாளாலே
குலவிடுஞ் செல்வமெனக் கூறுவாயே.

(இ-ள்) துன்மதிவருடம் உதயமானதால் இப்போது மனையாளுக்கு வாய்த்திருக்கும் படியானப் பிணியானது தானே தீர்ந்து போகும், தேடிப்போகும்படியான ஜீவன் கிடைக்கும், பூமியானது வாங்க திடப்படும், மனையானதுக்கோல மகிட்சியானது உண்டாகும் மாடு ஆடு குதிரை இவைகள் கொள்ள விருத்தியாகும், கொண்டப் பெண்டீரினால் செல்வம் பெருகும் எ-று. 55

56-வது துந்துபி வருடபலன்.

வாயென துந்துபியாண் டுதித்ததாலே
வருத்தமே விளைவிக்கும் நினைத்ததெல்லாம்
தோயென கண்டதோர் கினவினாலே
ஆயென யலைசசலும் திரிச்சலாகும்
அருமையாஞ் சிநேகிதமும் பிரிந்துபோகும்
நேயின நெடுந்தூரம் போனபேரும்
நிந்தையாம் வருத்தமது படுகுவாரே

(இ-ள்) துந்துபி வருடம் உதயமானதால் இப்போது நினைத்தக் காரியம் யாவும் வருத்த முண்டாகச் செய்யும், கண்ட கினவினால் தோஷ மாகிய துயர முண்டாகும், அலைசசலும் திரிச்சலும் படச்செய்யும், அருமையான சிநேகிதமும் பிரிந்துப்போகும், நெடுந்தூரம் போனபேர்களும் நிந்தையாகிய வருத்தப்படுவார்கள் எ-று. 56

57-வது உருத்திரோற்காரி வருடபலன்.

படுக ருத்திரோற்காரி யுதித்ததாலே
பரிவாக நினைத்தபொருள் சேதமாகும்

விடுகவே வீண்கலகம் வந்துநேரும்
வேந்தரால் பொருளதுவும் விரையமாகும்
தொடுகவே தோஷமும் பெருகிநீடும்
தொல்லையாம் செய்யுமோர் தொழிலும்போகும்
நடுகவே நடுக்கமும் மிகவுண்டாகும்
நங்கையர் கலகமது மூளுமென்னே

(இ-ள்) உருத்திரோற்காரி வருடம் உதயமானதால் நினைத்தபொருள் சேதமாகும், வீண்கலகமானது வந்துநேரும், அரசர்களால் பொருள் சேதமாகும், தோஷமானதுப் பெருகும், செய்யும்படியான தொழில்போகும், நடுக்கமுண்டாகும், ஸ்திரீகளினால் கலகம் நேரும் எ-று. 57

58-வது இரத்தாட்சி வருடபலன்.

வேறு-விருத்தம்.

என்னரத்தாட்சியாண்டு யெழிலுடனுதித்ததாலே
உன்னியேயுத்தேசித்த தொருபொருளுடனேகிட்டும்
கன்னியும்வந்துசேர்வாள் கவலையுமொழிந்துபோகும்
மன்னியம்மனைமாடாடு மகிழுடன்கொள்ளநன்றே

(இ-ள்) இரத்தாட்சி வருடம் உதயமானதால் இப்போது நீ வுத்தேசித்தபடியே பொருளானதுக் கிடைக்கும், மனையாளும் வந்துசேர்வாள், கவலையானதுத் தீரும், மனை மாடு ஆடு கொள்ள நன்மையுண்டாம் எ-று. 58

59-வது குரோதன வருடபலன்.

நன்றென குரோதனவாண் டுதித்ததாலே
நின்று நீ நினைத்துக்கேட்ட நேர்மையாம்வழக்குதீரும்
சென்றதோர் துணைவர்தானுஞ் சிறப்புடன்வந்துசேர்வார்
வென்றிட வெகுபேர்நேயம் வரிசையாய்கூடும்பாரே

(இ-ள்) குரோதன வருடம் உதயமானதால் இப்போது நீ குறித்துக்கேட்ட வழக்கானது தீரும், உன்னைவிட்டுப் பிரிந்துபோனதுணைவரும் வந்து சேர்வார்கள், வெகு பேர்களுடைய நேயங்கூடும் எ-று. 59

60-வது அட்சய வருடபலன்.

பாறெனவட்சயவாண்டு பண்புடனுதித்ததாலே
பேறெனநினைத்தவேலை பொருத்துமேமுடிவதாகும்
நேறெனநிலமையாக நிகழ்த்தியசொல்லுமோங்கும்
கூறெனகொடுமைதீர்ந்து குணப்படுமென்றுபேசே.

(இ-ள்) அட்சய வருடம் உதயமானதால் இப்போது நினைத்த வேலையானதுப் பொருமையாக முடிவாகும், நிலைமையாகச் சொன்ன மொழியானது உறுதியாகும், ஓங்கும் கொடுமையானது தீர்ந்து குணப்படும் சுகமுண்டாகும் எ-று. 60

வருடங்களின் ஆரூடம்

முற்றிற்று.

திதிகளின் ஆரூடம்.

சக்கரம்.

1 பிரதமை	2 துதியை	3 திரிதியை	4 சதுர்த்தி
5 பஞ்சமி	6 சஷ்டி	7 சப்தமி	8 அஷ்டமி
9 நவமி	10 தசமி	11 ஏகாதசி	12 துவாதசி
13 திரயோதசி	14 சதுர்த்தசி	15 பௌர்ணமி	16 அமாவாசி

ஆரூடம் சொல்லும் வகை அறியும்.

விபரம்.

ஆரூடம் கேட்கவந்து எதிரில் நின்றோர்களை திதிகளின் பெயரில் ஒன்றையாவது அல்லது பதினாறில் குறையவாவதுக் கேட்டு அவர்கள் சொல்லும் திதி அல்லது லக்கத்தை கியாபமாகவைத்து அத்திதி லக்கத்திற்குறிய பாடலை வாசித்து அவர்கள் நினைந்து

வந்த காரியங்களையும் இனிமேல் நடக்கப்போகின்ற காரியங்களையும் சொல்லலாம். திதியின் பெயரும் லக்கமும் தெரியாத பெயர்களை மேற்கண்ட சக்கரததி லடைத்திருக்கும் திதிகளில் ஒன்றைத் தொடச்சொல்லி அத்திதியின் பாடலையும் வாசித்து பலாபலன்களை சூட்சமாகச் கண்டுச் சொல்லலாம்.

1-வது பிரதமையின் பலன்.

விருத்தம்.

பேசவேநன்மையான பிரதமைபலனைக்கேளாய்
நேசமாய்சுதன்பிறக்கில் நீடியபுத்திமானும்
வாசமாய்நினைத்தகர்மம் வாகுடன்முடிவதாகும்
பாசமாய்காரியங்கள் யோசித்துசெய்யநன்றே

(இ-ள்) பிரதமையின் பலன் யாதெனில் சுதன்பிறக்கில் புத்திமானாகவிருப்பான், இப்போது நீ கேட்டகாரியம் முடிவாகும் ஆனால் எந்தகாரியங்களையும் யோசித்துச் செய்ய நன்மையுண்டாகும் ஏ-று.
1

2-வது துதியையின் பலன்

நன்றெனதுதியைதானும் நலமுடனுதித்ததாலே
சென்றதோர்வேலைசாயும் சீருடன்புகழுமுண்டாம்
நின்றதோர்வழக்குவெல்லும் நினைத்ததோர்பூமிகிட்டும்
குன்றனசுதன்பிறக்கிற் கோளனுமென்றுபேசே

(இ-ள்) துதியையின் பலன் யாதெனில் இப்போது நீ நினைத்துப் போகும்படியான வேலையானது முடியும், அதனால் சீரும் புகழுமுண்டாகும், நின்ற வழக்கானது வெல்லும், நினைத்திருக்கும்படியான பூமியானது கிடைக்கும், அன்றியும் சுதன் பிறக்கில் கோளனாக விருப்பான் ஏ-று.
2

3-வது திரிதியையின் பலன்

பேசவேதிரிதியைதான் பெட்புடனுதித்ததாலே
வாசமாம்நினைத்தவேலை வளம்பெறமுடிவதாகும்
ஆகவேகளவுபோன ஆடையாபரணங்கிட்டும்
நேசமாம்சினேகனாலே நிலமையும்படுகுமென்னே

(இ-ள்) திரிதியையின் பலன் யாதெனில் இப்போது நீ நினைத்தவேலை முடிவாகும், களவாகப்போன ஆடை யாபரணங்கள் கிடைக்கும், ஒருசினேகிதனால் சகலமான காரியங்களும் நிலைப்படும் சுகமுண்டாம் ஏ-று.
3

4-வது சதுர்த்தியின் பலன்

யென்னவேசதுர்த்திதானும் எழிலுடனுதிததாலே
கன்னியமந்திரங்கள் கற்றிடப்பலிதமாகும்
மன்னியபரதேசங்கள் மகிழ்ச்சியாய்போகநன்று
உன்னியயுத்தேசங்கள் உறுதியாய்கூடும்பாறே

(இ-ள்) சதுர்த்தியின்பலன் யாதெனில் இப்போது மனதில் நாட்டங்கொண்டிருக்கும் மந்திரத்தை கற்றுக்கொள்ள சித்தியாகும் பரதேசங்களில் சென்று சஞ்சாரஞ்செய்ய நனமையுண்டாகும், உத்தேசித்திருக்கும்படியானக் காரியமும் முடிவுபெறும் ஏ-று.
4

5-வது பஞ்சமியின் பலன்

பாறெனபஞ்சமிதான் பண்புடனுதித்ததாலே
பேறெனதுக்கமெத்த பெருகிடும்பிணியும்பாதை
நேறெனவேதமோத நீடியக்கீர்த்தியோங்கும்
கோறெனகுறித்தமாது கொப்பெனவருவான்சொல்லே

(இ-ள்) பஞ்சமியின்பலன் யாதெனில் துக்கமும் அதிகரிக்கும், பிணியும் பாதைபடச்செய்யும், வேதபாராயணங்க ளோதக்கீர்த்தியானது ஓங்கும், குறித்த ஸ்திரீயானவள் வந்துசேருவாள்
5

6-வது சஷ்டியின் பலன்

சொல்லவேசஷ்டிதானும் சுகமுடனுதித்ததாலே
புல்லவேநினைத்தவாறு புகழுரும்பிரபுவாலே
வல்லவேவதுவைசெய்ய வருத்தமுந்துலைந்துபோகும்
நல்லதோர்செயங்கூடும் நலமுடன்பொருளுங்கிட்டும்

(இ-ள்) சஷ்டியின்பலன் யாதெனில் இப்போது நீ எண்ணிய எண்ணம் பிரபுக்களால் முடிவுபெறும். கலியாணஞ்செய்ய கஷ்டமும் வருத்தமுந்தீரும், நல்ல சினேகங்கூடும், பொருள் கிடைக்கும் ஏ-று.
6

7-வது சப்தமியின் பலன்

கிட்டவேகீர்த்தியாகச் சப்தமியுதித்ததாலே
கட்டவேகவலைதீருங் காரியஞ்சித்தியாகும்
தொட்டதோர்சனியும்நீங்குந் தூரமேபோனார்மீள்வர்
நட்டதோர்பயிருமோங்கும் நங்கையும்நேசமாவாள்

(இ-ள்) சப்தமியின்பலன் யாதெனில் கவலையானதுதீரும், நினைத்தகாரியஞ் சித்தியாகும், பிடித்த சனியானதுவிலகும், தூரதேசம் போனவர்கள் மீண்டுவருவார்கள், பயிர்த்தொழிலானது விருத்தியாகவோங்கும், ஸ்திரீயும் நேசமாவாள் எ-று. 7

8-வது அஷ்டமியின் பலன்.

ஆகவேநன்மையாக அஷ்டமியுதித்ததாலே
ஏகவேவிசனமெல்லாம் இலட்சுமிகடாட்சமுண்டாம்
போகவேபொருளினோடு போனதோர்ஜீவன்கிட்டும்
தாகமாமெடுத்தவேலை தடையிலாமுடியும்பாரே

(இ-ள்) அஷ்டமியின்பலன் யாதெனில் மனதி லுண்டாகியவிசனமெல்லாம் ஒழியும், இலட்சுமிகடாட்சமுண்டாகும், பொருளோடுப்போனஜீவன் கிடைக்கும், இப்போது எடுத்தவேலை தடையில்லாமல் முடியும் எ-று. 8

9-வது நவமியின் பலன்.

பார்க்கவேநவமிதானும்பரிவுடனுதித்ததாலே
தீர்க்கமாங்கீர்த்தியுண்டாந் தேடியபொருளுங்கிட்டும்
மூர்க்கமாம்பெண்டுபிள்ளை முனிவிலாபிறிந்துபோகும்
சேர்க்கவேசிநேகத்தாலே சினமதுயகலுமென்னே

(இ-ள்) நவமியின்பலன் யாதெனில் நினைத்தபொருளானதுகிடைக்கும், தேடிப் போகும்படியான ஜீவன்கிட்டும், பெண்டுபிள்ளைகளும் பிறிந்துபோவார்கள் சிநேகிதத்தினால் கோபமானதுதீர்ந்து சுகமுண்டாம் எ-று. 9

10-வது தசமியின் பலன்.

என்னவேதசமிதானுமெழிலுடனுதித்ததாலே
கன்னியமாகத்தானே கருதியதருமமோங்கும்

மன்னியமைந்தராலும் மகிட்சியுமிகவுண்டாகும்
உன்னியயாவருக்கும் யோக்கியனாக்கும்பாரே.

(இ-ள்) தசமியின் பலன் யாதெனில் இப்போது கன்னியமாக மனதில் நினைத்த தரும விஷயமானது ஓங்கும், மைந்தர்களால் மகிட்சியானது உண்டாகும் யாவரும் புகழும்படியாக யோக்கியனாக்கும் எ-று. 10

11-வது ஏகாதசியின் பலன்.

பாறெனயேகாதசிப் பண்புடனுதித்ததாலே
நேறெனகுருவினாலே நல்லுபதேசமுண்டாம்
ஓறெனஸ்திரீயினாலே உற்றதோருதவியாகும்
சேறெனமொழியினாலே சிறந்திடும்நீதிதானே.

(இ-ள்) ஏகாதசியின் பலன் யாதெனில் நினைதிருக்கும்படியான குருவினிடத்தில் உபதேசங்கள் பெற நன்மையுண்டாகும் ஒருஸ்திரீயினால் உதவியுண்டாகும், பேசும்படியான மொழியினால் சிறப்பும்நீதியும்நிலமையுண்டாகும் எ-று. 11

12-வது துவாதசியின் பலன்.

தானெனதுவாதசிதான் தகமையாயுதித்ததாலே
மானெனமதியுமுண்டாம் மங்கையருறவுமாவார்
தேனெனதேடுஞ்சீவன் திகள்பெறநேராய்க்கிட்டும்
கோனெனவாணிபங்கள் குலவிடும்கோதைமாதே

(இள்) துவாதசியின்பலன் யாதெனில் நினைத்த புத்தியானது கூர்மையாக விளங்கும் மாதர்களின் நேயமுண்டாகும் உறவு கூடும், இப்போது தேடும்படியான ஜீவன் தானே நேராக வந்து சேரும், வர்த்தக விஷயங்களில், மேன்மேலாக லாபமுண்டாகும் எ-று. 12

13-வது திரியோதசியின்பலன்.

மாதெணதிரியோதசி மகிழுடனுதித்ததாலே
தோதெனநினைத்தவேலை திலங்கிடமுடிவதாகும்
ஏதெனயெதிரிதன்னை யிஷ்டம்போல்ஜெயிக்கலாகும்
போதெனதொழிலினாலே பொன்பொருள்மிகவேகிட்டும்

(இ-ள்) திரியோதசியின்பலள் யாதெனில் இப்போதுநினைத்த வேலை மிடிவாகும், எதிரியை உன்மனம்போல் செயம் செய்ய லாகும், செய்யும்படியானத் தொழிலினுல் பொன்பெருாள்ருகிக்டகும் எ-று. 13

14-வது சதுர்தசியின் பலன்.

கிட்டவேசதுர்த்தசிதான் கீர்த்தியாயுதித்ததாலே
பொட்டனபிறர்கள்சொத்து புசழுடன்வந்துசேரும்
கஷ்டமும்நாட்டுநாளு கடந்திடுஞ்சுகமுண்டாகும்
இன்டம்போல்குறித்ததிக்கு யேகவும்நன்மையாமே

(இ.ள்) சதுர்த்தசியின்பலன் யாதெனில் யோசித்திருக்கும் படியான பிரர்களுடைய சொத்து உன்னுடைய வசமாக வந்து சேரும், கஷ்டமானது நாட்குநாள் தீரும் சுகமுண்டாகும், இப்போது இஷ்டமாக போக நினைத்திருக்கும் திசையேக நண்மையுண்டாம் எ-று. 14

15-வது பௌர்ணமியின் டலன்.

ஆமெனபௌர்ணமிதான் அடவுடனுதித்ததாலே
தாமெனவித்தைபுத்தி தயாளமுந்தானுண்டாகும்
நமெனசொன்னவாக்கு நலமுடன்பிசகாநீடும்
போமெனமனதிற்கொண்ட பொல்லாங்குதீருந்தானே

(இ-ள்) பௌர்ணமியின்பலன் யாதெனில் வித்தைபுத்தி தயாளம் இவைகள் உண்டாகும், சொன்னசொல் தவராமல் முடியும், மனதில் நினைத்திருக்கும்படியான பொல்லாப்பானது நீங்கிவிடும். 15

திதிகளின் ஆருடம்

முற்றிற்று.

நட்சத்திரங்களின் ஆருடம்.

சக்கரம்.

1 அஸ்வனி	2 பரணி	3 கிர்த்திகை	4 உரோகணி
5 மிருகசீரிடம்	6 திருவாதிரை	7 புநர்பூசம்	8 பூசம்
9 ஆயிலியம்	10 மகம்	11 பூரம்	12 உத்திரம்
13 அஸ்தம்	14 சித்திரை	15 சுவாதி	16 விசாகம்
17 அனுஷம்	18 கேட்டை	19 மூலம்	20 பூராடம்
21 உத்திராடம்	22 திருவோணம்	23 அவிட்டம்	24 சதையம
25 பூரட்டாதி	26 உத்திரட்டா	27 இரேவதி	1 அசுவனி

ஆருடம் சொல்லும் விபரம்.

ஆருடம் கேட்கவந்து எதிர்நின்றோர்களை பார்த்து அவர்களின் பெயரைக் கேடடு அப்பெயருக்குறிய நட்சத்திரத்தைக் கொண்டாவது இருபத்தேழில் குறையாவதுக்கேட்டு அவர்கள் சொல்லும் லக்கத்திற்குறிய நட்சத்திரப்பாடலை வாசித்து அவரவர்கள் நினைத்துவந்த கருத்தை திருப்தியடைய சொல்லலாம், அப்படி நட்சத்திரமும் லக்கமும் சொல்லத்தெரியாதபெயர்களை மேற்கண்ட சக்கரத்தில் அடைதிருக்கும் நட்சத்திரங்களில் ஏதேனுமொன்றை தொடச்சொல்லி தொட்ட நட்சத்திரத்தின் பாடலை வாசித்தும் சொல்லலாம்.

1-வது அசுவனியின் பலன்.

விருத்தம்

காணவேயஸ்வனிதான் களிப்புடனுதித்ததாலே
பூணவேபொருளுந்தானும் போனதுவந்துசேரும்

வேணவேவுறவுகூடும் வெகுஜனவருத்துமுண்டாம்
நாணவேகேட்டவஸ்து நாலெட்டில்வருகும்பாரே

(இ-ள்) அசுவனி நட்சத்திர முதயமானதால் போனபொருள்வந்துசேரும், வேணபேர்கள் உறவுகூடும், ஜெனவருத்துண்டாகும், இப்போது நீநினைத்துக் கேட்டவஸ்துநாள்எட்டிற்குள் கிடைக்கும்எ-று

2-வது பரணியின் பலன்.

பார்க்கவேபரணிதானும்பண்புடனுதித்ததாலே
நேர்க்கவேபோனசொத்து நிறமதுகருஞ்சிவப்பாம்
சேர்க்கவேயவையுங்கிட்டும் சென்றவர்வந்துசேர்வார்
கார்க்கவேமனையாளுக்கு கர்ப்பமும்சுகமுமுண்டாம்

(இ-ள்) பரணிநட்சத்திரம் உதயமானதால் போனசொத்தின் நிறமானதுகருப்பும்சிவப்புகலந்தநிறமுள்ளதாகும் அவையுங்கிடைக்கும், தூரதேசம் போனவர் வந்துசேர்வார்கள், மனையாள் கர்ப்பிணியாவாள் மனையில் சுபசோபனங்கள் நடக்கும், எ-று. 2

3-வது கிர்த்திகையின் பலன்.

உண்டெனகிருத்திகைதான் உதயமாயுதித்ததாலே
கண்டெனநினைத்தபொருள் கறுப்பெனநிறமதாகும்
பண்டெனவருத்துமில்லை பணமதுசிலவதாகும்
வண்டெனமெய்யில்வாய்த்த வரும்பிணிதீராதென்னே

(இ-ள்) கிர்த்திகைநட்சத்திரம் உதயமானதால் நினைத்தபொருள் கருப்புநிறமுள்ளதாகும் அதுவருத்தில்லை பணச்சிலவுநேரும் தேகத்தில்வாய்த்த பிணியான துபாதைப படுத்தும்தீராது. எ-று.

4-வது உரோகணியின் பலன்.

என்னவேரோகணிதான் யெழிலுடனுதித்ததாலே
உன்னவேயிடஞ்சலாக ஓடினோர்வந்துசேர்வார்
கன்னவேகையேசோர்ந்த கனப்போருள்குடைக்கும்நோய்
பண்ணியதுயரமோடு பகையதுதுலைந்துபோமே

(இ-ள்) உரோகணிநட்சத்திரம் உதயமானதால்இடஞ்சலாக ஓடிப்போனவர்வந்துசேர்வார் கைவிட்டுப் போனபொருள் கிடைக்கும்,துயரந்துலையும் பகையானதுதீரும் எ-று. 4

5-வது மிருகசீரிடத்தின் பலன்.

போமெனமிருகசீரம் பொருந்திடயுதித்ததாலே
நாமெனநினைத்ததோன்றும் நலமிலைமுடிந்திடாதாம்
தாமெனபிறையாணஞ்சென்றோர் தவித்துசஞ்சலத்தால்மாள்வர்
ஆமெனபகையினோடு அலைச்சலுமுண்டாஞ்சொல்லே

(இ-ள்) மிருகசீரிடநட்சத்திரம் உதயமானதால், நினைத்தகாரியம் ஒன்றும்முடிவுபெறமாட்டாது, பிறையாணமாகச்சென்றவர்தவித்துசஞ்சலத்தினால்மாள்வார் பகையுண்டாகும்அலைச்சல்படச்செய்யும்எ-று.

6-வது திருவாதிரையின் பலன்

சொல்லவேயாதிரைத்தான் சுகமுடனுதித்ததாலே
நல்லவேநினைத்தபெருள் நிறமதுநீலமாகும்
செல்லவேயதுவுமுந்தன் கைவசமாகச்சேரும்
புல்லவேதூரம்போனோர் புகழுடன்வருவார்நேரே

(இ-ள்) திருவாதிரைநட்சத்திரம் உதயமானதால்இப்போது நீ நினைத்தபொருள்நீலவர்ன முடையதாகும், அதுவுமுந்தன்கைவசமாகவந்துசேரும்,தூரதேசம்போனபேர்கள் நேராகவந்துசேர்வார்கள் எ-று.

7-வது புனர்பூசத்தின் பலன்.

நேறெனபுனர்பூசந்தான் நிலமையாயுதித்ததாலே
பேறெனநீநினைத்தப் பொருளதுசிறப்பேயாகும்
தேறெனநெடுந்தூரந்தான் தேடியேபோனபேர்கள்
சீறெனநிதியுங்கொண்டு சிறப்புடன்வந்சேர்வார்

(இ-ள்) புனர்பூச நட்சத்திரம் உதயமானதால் இப்போதுநீநினைத்த பொருள் சிகப்பு நிறமுள்ளதாகும் தூரதேசம் போனபேர்கள்பொருள்,பணி,நிதிகளோடு வந்துசேர்வார்கள் எ-று. 7

8-வது பூசத்தின் பலன்.

சேரவேபூசந்தானுஞ் சிறப்புடனுதித்ததாலே
போரவேநீநினைத்துப் பொருளதுகருப்புவெண்மை
நேரவேயதினால்பொல்லா நிந்தையுஞ்சிலுகுண்டாகும்
சீரவேபொருளுந்தானுஞ் சிக்கிடாதென்றுபேசே

(இ-ள்) பூசநட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்தப் பொருளானதுகருப்பும் வெண்மைநிறமுள்ளதாகும் அப்பொருளினால் நிந்தையானகலகமுண்டாகும், பொருள்கிடைக்கமாட்டாது எ-று.

9-வது ஆயிலியத்தின் பலன்.

பேசவேயாயில்லியந்தான் பெட்புடனுதித்ததாலே
காசவேநினைத்தபொருள் கருப்பொடுவெளிப்புமாகும்
தோசமாம்பிணியேகொண்டு தூரமும்போனார்மீளார்
வாசமாம்சுபங்களாகா வாய்த்தநோய்தீர்ந்திடாதே

(இ-ள்) ஆயிலியநட்சத்திரம்உதயமானதால் இப்போதுநீநினைத்த பொருள் கருப்பும் வெளுப்புமுள்ளதாகும் தோஷமாகிய பிணியுடன் தூரதேசம் போனபேர்கள் திரும்பி வரமாட்டார்கள், சுபகாரியங்கள் நடக்கமாட்டாது வாய்த்தநோயுந்தீராது எ-று. 9

10-வது மகத்தின் பலன்.

தீர்ந்திடமகமேதானும் திசழுடனுதித்ததாலே
கூர்ந்திடநினைத்தபொருள் குங்குமவர்ணமாகும்
சேர்ந்திடயதுவுமுன்கை சிறப்புடன்வந்துசேரும்
நேர்ந்திடகுறித்தபெண்ணை நீள்மணஞ்செய்யநன்றும்

(இ-ள்) மகநட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்த பொருள் குங்குமவர்ணமுள்ளதாகும், அப்பொருளும் உன்னுடையக் கைவசமாகவந்துசேரும், குறித்திருக்கும்படியானப்பெண்ணை மணம் புரியநன்மையுண்டாகும் எ-று. 10

11-வது பூரத்தின் பலன்.

நன்றெனப்பூரந்தானும் நாடிடயுதித்ததாலே
நின்றிடநினைத்தபொருள் நீள்பசசைநிறமதாகும்
சென்றதுவந்துசேரா சீர்மணமுடிந்திடாது
வென்றிடவெளியூர்போனோர் வருவதுமில்லையென்னே

(இ-ள்) பூரநட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்தப் பொருள்பச்சைநிறமுள்ளதாகும், அதுபோனதுவந்துசேரமாட்டாது கோறியக் கலியாணம் முடியாது, வெளியூர் பேனபோகளும் வந்து சேரமாட்டார்கள் எ-று. 11

12-வது உத்திரத்தின் பலன்.

என்னவேயுத்திரந்தான் யெழிலுடனுதித்ததாலே
கன்னியேயிழைந்தபொருள் கருப்போடுசிகப்புவித்தாம்
பன்னியேபோனபொருள் பரிவுடனுன்கைகிட்டும்
மன்னியநேயங்கூடும் மரும்பகைதுலந்துபோமே

(இ-ள்) உத்திரநட்சத்திரம் உதயமானதால் இப்போது இழந்து போனபொருள் கருப்புசிவப்புமாகிய வித்துவிரையாகும், போனபொருள்மீண்டு வந்துஉன்னுடையவசமாகும், நேயங்கூடும், பகைகள்யாவுந்துலைந்துபோகும் எ-று. 12

13-வது அஸ்தத்தின் பலன்.

போமெனயத்தந்தானும் பொருந்திடயுதித்ததாலே
பாமெனகேட்டபொருள் பலவிதநிறமேயாகும்
நாமெனயதுவுஞ்சேதம் நாடியேவெளியூர்போனோர்
தாமெனமணம்புரிந்து தழைக்கவேவருவார்மாதே

(இ-ள்) அஸ்த நட்சத்திரம் உதயமானதால் இப்போது கேட்ட பொருள்பலவிதமான நிறமுள்ளதாகும், அதுவுஞ் சேதமாகிவிட்டன, வெளியூர் போனபேர்கள் மனஞ்செய்துக் கொண்டு வந்து சேர்வார்கள் எ-று. 13

14-வது சித்திரையின் பலன்.

மாதெனசித்திரைதானும் மரிவிவந்துதித்ததாலே
சேதமாம்சிகப்புமஞ்சள் சேர்ந்ததோர்வெள்ளையாகும்
போதெனயதுவுங்கிட்டா பெருகிடுஞ்சிறுகுசண்டை
ஏதெனமணமுங்கூடா தென்றுநீயியம்புவாயே

(இ-ள்) சித்திரைநட்சத்திரம்உதயமானதால் இப்போதுக்கைதவறிப்போனப்பொருளானதுசிகப்பு மஞ்சள்வெள்ளைநிறமுள்ளதாகும் அப்பொருள் கிடைக்கமாட்டாது சிறுகுசண்டையுமுண்டாகும், கலியாணக்காரியம் முடியாது எ-று. 14

15-வது சுவாதியின் பலன்.

வரயெனசுவாதிதானும் வாகுடனுதித்ததாலே
தாயெனதானினைத்த தரும்பொருள்தங்கமாகும்

நேயெனயதுவுங்கிட்டும் நெடுந்தூரம்போனபேர்கள்
ஆயவாண்சேயும்பெற்று அன்புடன்வந்துசேர்வார்

(இ-ள்) சுவாதி நட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்தபொருள் தங்கமாகும் அதுவும் உன் கையிற் கிடைக்கும் நெடுந்தூரமாகப் போனபேர்கள் ஆண் குழந்தையைப் பெற்று யெடுத்துக்கொண்டுவந்து சேர்வார்கள் எ-று. 15

16-வது விசாகத்தின் பலன்.

வந்திடவிசாகந்தானும் வாகுடனுதித்ததாலே
சிந்தையில்நினைத்தவஸ்து சிறுக்கசப்புள்ளதாகும்
தொந்தமாந்திங்களுக்குள் தோற்றமாமதுவுங்கிட்டும்
விந்தையாம்சோபனங்கள் விளங்கிடமுடிந்திடாதே

(இ-ள்) விசாக நடசத்திரம் உதயமானதால் இப்போது மனதில் நினைத்தப் பொருளானது சிறுகசப்புள்ள வஸ்துவாகும் அதுஒரு மாததில் வந்துசேரும் உத்தேசித்திருக்கும் சுபசோபனங்கள் முடியமாட்டாது எ-று. 16

17-வது அனுடத்தின் பலன்.

முடிந்திட வனுடந்தானும் முதலெனயுதித்ததாலே
கடிந்திடநீநினைத்தக் கனப்பொருள்வெள்ளியாகும்
படிந்திடயவையுங்கிட்டும் பரதேசம்போனோர்மீள்வார்
நடந்திடயெண்ணம்போலும் நன்மையுண்டாகும்பாரே

(இ-ள்) அனுடநட்சத்திரம்உதயமானதால் இப்போதுநீநினைத்தப் பொருள்வெள்ளியாகும்அதுவும் கிடைக்கும்பரதேசம்போனபேர்களும்மீண்டுவந்துசேர்வார்கள் எண்ணிய எண்ணமபோல் யெல்லாக்காரியங்களும் நன்மையுண்டாகும் எ-று. 17

18-வது கேட்டையின் பலன்.

பார்க்கவேகேட்டைதானும் பரிவுடனுதித்ததாலே.
பூர்க்கைசோர்ந்துபோன பொருளும்பித்தளையேயாகும்
ஏர்க்கவேநினைத்தபொருள் யேதெனுங்கிடைத்திடாது
கார்க்கவேயுறவுகூடார் கைசோர்ந்தபொருள்வாராது

(இ-ள்) கேட்டை நடசத்திரம் உதயமானதால் கைசோர்ந்துப் போனபொருள்பித்தளையினால் செய்ததாகும்இப்போதுநீநினைத்தபொருள்களில்யெதுவுங் கிடைக்கமாட்டாது. உறவின்முறையார்வந்து சேரார்கள்கைசோர்ந்துப் போனபொருளுங் கிடைக்காது எ-று. 18

19-வது மூலத்தின் பலன்.

வாறெனமூலந்தானும் வாகுடனுதித்ததாலே
மாறெனநினைத்ததிப்போ மாடாடுத்தானுமாகும்
சீறெனயவைகள்தானுஞ் சிறப்புடன்வந்துசிக்கும்
பேறெனயன்னியராலே பொருளதுகிடைக்குமென்னே

(இ-ள்) மூலநட்சத்திரம்உதயமானதால் இப்போது நீநினைத்துக் கேட்டதுமாடுஆடாகும், அவைகள்சிறப்பாகத்தானேகிடைக்கும்அன்னிய மனிதரால் பொருள் கிடைக்கும் எ-று. 19

20-வது பூராடத்தின் பலன்

என்னவேபூராடந்தான் எழிலுடனுதித்ததாலே
மின்னவேநினைத்ததிப்போ மனையொடுபூமியாகும்
பன்னவேயவையுங்கிட்டா பலபொருள்சேதமாகும்
உன்னியமணமுமாகா துறவினர்பிறிவார்தானே

(இ-ள்) பூராடநசத்திரம் உதயமானதால் இப்போதுநீ நினைத்துக் கேட்டப்பொருள்வீடும் பூமியுமாகும்அவைகிடக்கமாட்டாதுபலபொருளுஞ்சேதமாகும்கலியாணம்முடியாது, உறவினர்யாவரும் பிரிந்துப் போவார்கள் எ-று. 20

21வது உத்திராடத்தின் பலன்.

தானெனஉததிராடந் தயவுடனுதித்ததாலே
ஊனெனமதிற்றூனும் ஒன்றுமேநினைத்ததில்லை
மானெனமகிட்சியுண்டாம் மங்களசுபங்களாகும்
கோனெனயெவருமெச்ச குணமுளனாகுவானே

(இ-ள்) உத்திராடநட்சத்திரம்உதயமானதால் இப்போதுநீஉன்மணதில்ஒன்றும்நினைக்கவில்லைஆயினும் மகிட்சியுண்டாகும், மங்களமாக சுபகாரியங்கள்நடக்கும் யாவர்களும் மெச்சும்படியான குணமுள்ளோனாக்கும் எ-று. 21

22-வது திருவோணத்தின் பலன்.

ஆகவேதிருவோணந்தா னன்புடனுதித்ததாலே
தாகமாம்நீநினைத்த தருமபொருள்தயன்னியமாகும்
பாகமாய்மனதின்போலும் பரிவுடன்வந்துசேரும்
சோகமாங்கையேசோர்ந்த சொத்துமேவந்துகிட்டும்

(இ-ள்) திருவோணநடசந்திரம்உதயமானதால் இப்போதுநீநினைத்தப்பொருள்தான்னியமாகும் அதுவும்உன்மனம்போல் வந்துசேரும் சோகமாகத்தானே கைசோர்ந்துப் போனபொருளும் நேராகவந்து இடைக்கும் எ-று. 22

23-வது அவிடடத்தின் பலன்.

கிட்டவேயவிட்டந்தானுங் கீர்த்தியாயுதித்ததாலே
திட்டமாய்நினைத்ததெல்லாந் திகழுடன்முடிவதாகும்
கஷ்டமும்விலக்கிப்போகுங் கலியாணம்முடிவதாகும்
நஷ்டமாய்போனசொத்தும் நலமுடன்வருகும்பாரே

(இ-ள்) அவிட்டநட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்தகாரியங்கள்யாவும் தடையில்லாமல்முடியும், கஷ்டமானது விலகும், கலியாணம் காரியம்முடியும், நஷ்டமாகததானே போனபொருள் வந்துசேரும் எ று. 23

24-வது சதயத்தின் பலன்.

பாறெனசதையந்தானும் பரிவுடனுதித்ததாலே
கேறெனநினைத்ததிப்போ நீள்பயிர்தொழிலேயாகும்
சீறெனயதுவுமெத்த சிறந்திடயோங்கிடாது
பேறெனசங்கடங்கள போமெனவுறைத்திடாயே

(இ-ள்) சதய நட்சத்திரம் உதயமானதால் இப்போது நீ நினைத்தது பயிர்தொழிலாகும் அது அவ்வளவாய் விருத்திதரமாட்டாது, சங்கடங்கள்தீரும் சவுக்கியமுண்டாம் எ-று. 24

25-வது பூரட்டாதியின் பலன்.

உரைத்திடப்பூராட்டாதி ஓங்கிடயுதித்ததாலே
வருத்துமேகுறைவதாகும் வதிகமேசிலவதாகும்
வெருத்திடப்பகையுமுண்டாம் வழககதுகெலித்திடாது
கருத்துடன்வெளியூர்சென்றோர் கலகமும்படுகுவாரே

(இ-ள்) பூரட்டாதிநட்சத்திரம் உதயமானதால் வருத்தானதுக்குறையும், சிலவானனு அதிகரிக்கும், வெருப்பாகியப்பகையுண்டாகும்வழக்கானதுகெலிக்கமாட்டாது வெளியூர்போனபேர்கள் கலகப்படுவார்கள் எ-று. 25

26-வது உத்திரட்டாதியின் பலன்

வாறெனஉத்திரட்டாதி வாகுணனுதித்ததாலே
பேறெனகேட்டபொருள் பேசவேபச்சையாகும்
கேறெனயவையுங்கிட்டா நேர்ந்திடுஞ்சிலுகுசண்டை
போறெனசுற்றத்தாரும் பொல்லாதாராகுவாறே

(இ-ள்) உத்திரட்டாதிநட்சத்திரம்உதயமானதால் கேட்டபொருள்பசசைநிறமுள்ளதாகும் அதுவும் உன்கைவசப்படமாட்டாதுசிலுகுசண்டைகளும் உண்டாகும், சுற்றத்தாரும் பொல்லாதவர்க ளாகுவார்கள் எ-று. 26

27-வது இரேவதியின் பலன்.

ஆகவேயிரேவதிதா னடவுடனுதித்ததாலே
தாகமாய்சோர்ந்தபொருள் தானதுமுத்தேயாகும்
பாகமாயதுவுங்கிட்டும் பயணமேபோகநன்றும்
ஏகவேவெளியூர்போனோர் எழில்மணம்புரிகுவாரே

(இ-ள்) இரேவதிநட்சத்திரம்உதயமானதால் கைசோர்ந்துப்போனபொருள்முத்தாகும், அவையுங்கிடைக்கும், ஊர்பயணம் போகநன்மையுண்டாகும், வெளியூர் போயிருக்கின்றவர்கள் கலியாணம்முடித்துக்கெண்டுவந்துசேர்வார்கள் எ-று. 27

நட்சத்திரங்களின் ஆரூடம்

முற்றிற்று.

N. DORAIRAJAN,
ELECTRICAL WIRING CONTRACTOR.
5, VADAMALAI PILLAI ST.,
VEPERY POST, MADRAS.

யோகங்களின் ஆரூடம்

சக்கரம்.

1 விஷ்கம்பம்	2 பிரீதி	3 ஆயுஷ்மான்	4 சௌபாக்கிய
5 சோபனம்	6 அதிகண்டம்	7 சுகர்மம்	8 திருதி
9 சூலம்	10 கண்டம்	11 விருத்தி	12 துருவம்
13 வியாகதம்	14 அரிஷணம்	15 வச்சிரம்	16 சித்தி
17 விதிபாதம்	18 வரியான்	19 பரீகம்	20 சிவம்
21 சித்தம்	22 சாத்தியம்	23 சுபம்	24 சுப்பிரம்
25 பிரமம்	26 மாகேந்திரம்	27 வைகிருதி	1 விஷ்கம்பம்

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங்கேட்கவந்துஎதிர்நின்றோர்களை பார்த்துஅவாளைஇருபத்தேழில்குறையக்கேட்டுஅவர்கள் செல்லியலக்கத்தைகியாபகமாகவைத்துஅந்த லக்கத்திற்குறியயோகபாடலை வாசித்துஅவரவர்கள்நினைத்துவந்தகருத்தைசொல்லாம், அல்லதுமேற்கண்ட சக்கரத்தில்அடைத்திருக்கும்யோகங்களில் ஏதேனுமொன்றை தொடச்சொல்லிதொட்ட யோகத்தின்பாடலை வாசித்தும் சொல்லலாம்.

1-வது விஷ்கம்பத்தின் பலன்.

விருத்தம்.

ஆனவிஷ்கம்ப மூதிக்கிறதனிற் பிறந்தோன் தனவானும்
தானேநினைத்த வழக்கொழியுந் தழைக்கு மாடாடுசெல்வம்
மானேமணமுந் தான்கூடும் மகிழ்வாயினங்கள் தான்சேரும்
தேனேசத்துருக் களைஜெயிப்பன் தேடும்பொருளுங் கிட்டுமெனே.

(இ-ள்) விஷ்கம்பயோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளைபிறக்பில் தனவானாகுவன், இப்போது நீ நினைத்தவழக்கானது ஒழியும், மாடாடுடன் செல்வமானதுப் பெருகும், மணமானதுக்கூடும், பந்துக்கள் வந்து சேர்வார்கள், சத்துருக்களை ஜயஞ் செய்குவான், தேடிப் போகும்படியானப் பொருளுங் கிடைக்கும் எ-று- 1

2-வது பிரீதியின் பலன்.

எனவேபிரீதி யேயுதிக்கி லதனிற்பிறந்தோன் தீரமுளன்
நினவேநினைத்த படிமுடியும் நீடுஞ்செய்யுந் தொழிலதுவும்
முனமேபோன பொருள்கிடைக்கு மீண்டுவருவார் சிரைபட்டோர்
அனமேபிணியு மகன்றுவிடு மவிழ்தங்கொள்ளச் சுகமாமே

(இ-ள்) பிரீதி யென்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளைபிறக்கில் தீரமுடையவனாக விருப்பான், இப்போது நீ நினைத்தபடியேமுடியும், செய்யும்படியானத்தொழிலும் விருத்தியாகும் முன்பாகப்போனபொருளுங்கிடைக்கும், சிறைபட்டபேர்களும்மீண்டு வருவார்கள் வாய்த்திருக்கும் படியானப்பிணியும் துலைந்துப்போகும், அவிழ்தங்கொள்ளச் சுகமுண்டாகும் எ-று. 2

3-வது ஆயுஷ்மானின் பலன்

ஆமேயாவுஷ் மானுதிக்கி லதனிற் பிறந்தோன்பலசாலி
தமேகோரும் பெண்கிட்டும் தழைக்கும்பயிர்தொழி லாமுதலாய்
நாமேநாண யங்களுடன் நடக்கும்வாணி பங்களுமே
போமேகளவு போனபொருள் புகழாய்வருகுந் தான்மாணே

(இ-ள்) ஆயுஷ்மானென்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளைபிறக்கில் பராக்கிரம சாலியாகவிகுப்பான், இப்போது நீ கோரியிருக்கும்படியான பெண்கிடைக்கும், பயிர்தொழில் முதலானதும் பலிதமாகும், நாணயமாக வர்த்தகங்கள் நடக்கும், களவுபோனபொருள் தானே வந்து சேரும் எ-று. 3

4-வது சௌபாக்கியத்தின் பலன்.

காணசவுபாக் கியமதனிற் களிக்கப்பிறந்தோன் பாக்கியவான்
பூணசுகமாம் பிணிதீரும் போனஜீவன் தான்கிடைக்கும்
வேணபேர்க ளுதவியுடன் விளங்குந் தெய்வபக்தியுமே
போணதாயார் தந்தையுடன் துணைவர்முதலாய் புகழ்வாரே

(இ-ள்) சௌபாக்கியமென்னும் யோகமானது உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளைபிறக்கில் பாக்கியவானாக விருப்பான் இப்போது வாய்த்த பிணியானது தீரும், போன ஜீவன் கிடைக்கும், வெகுபேர்கள் உதவியுண்டாகும் தெய்வபக்தி யோங்கும் தாய்தந்தையர்கள் அண்ணன்தம்பிகள் முதலாக யாவரும் புகழ்வார்கள் எ-று. 4

5-வது சோபனத்தின் பலன்.

வரியசோப னமதனில் வாகாய்ப்பிறந்தோன் நற்குணவான்
பிரியமாக நினைத் ததுவே பெண்ணுமாணுந் தானாகும்
அரியவங்க மீதேரியடைவாய்போனோர் வருவார்கள்
தெரியவழக்குந் தான்வெல்லும் தீமையகலு மெனப்பேசே

(இ-ள்) சோபனமென்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளைபிறக்கில் நற்குணமுடையவனாக விருப்பான் இப்போது நீ நினைத்துக்கேட்ட ஆணும் பெண்ணும் கப்பலின் மீதேறிச் சென்றார்கள் அவர்களும் வந்து சேர்வார்கள் வழக்கானது வெல்லும் தீமையானது அகன்றுப்போகும் எ-று. 5

6-வது அதிகண்டத்தின் பலன்.

பேசயதிகண் டமதனிற் பிறந்தோன்தனமுந் தான்சேர்ப்போன்
வாசமாகப் புதியமனை வாங்கக்குடி போகநன்றும்
நேசம்பெரியோ ருதவியுண்டாம் நினைத்தபொருளுங் கைவசமாம்
பாசமாக மனையாளும் பாலன்றன்னைப் பெருவாளே

(இ-ள்) அதிகண்டமென்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளைபிறக்கில் தனஞ் சேர்ப்பவனாகுவான் இப்போது நீ கோரியிருக்கும்படியான புதுமனையை வாங்கி குடிபுக நன்மையுண்டாகும், பெரியோர்களுடைய உதவியுண்டாகும் நினைத்திருக்கும்படியானப் பொருளுங் கைவசமாகும், மனையாளும் ஆண்குழந்தையைப் பெருகுவாள் எ-று. 6

7-வது சுகர்மத்தின் பலன்.

பெருகசுகர்ம மாமதனிற் பிறந்தோன்புண்ணியன் புத்தியுளான்
வருகவெளியூர்ப் போகநலம் வாகாய்வதுவை செய்யநலம்
தருகபூமி வாங்கநலம் தாணியங்கள் கொள்ளநலம்
உருகபோன ஜீவனுமே உடனே வருகுமேபார்க்க

(இ-ள்) சுகர்மமென்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்தில் பிள்ளை பிறக்கில் புண்ணியவானாகவும் புத்திசாலியாகவு மிருப்பான், இப்போது நினைத்தபடி வெளியூர்போக நலந்தருகும், விவாகஞ்செய்ய நன்மையுண்டாகும், பூமிவாங்க விருத்தியாகும், தாணியங்கொள்ள லாபங்கிடைக்கும், போன ஜீவனும் உடனே வந்து சேரும் எ-று. 7

8-வது திருதியின் பலன்.

பார்க்கதிருதி யிற்பிறந்தோன் பண்பிலான் பொறுமையுளன்
வேர்க்கவாய்த்த பிணிதீரா வேண்டும்பொருளுங் கிட்டாது
மூர்க்கமாகப் போனவரும் மீளார்மீண்டுந் தான்வாரார்
ஏர்க்கையாக யெதைசெயினு யிடரேவருகு மெனசாற்றே

(இ-ள்) திருதி யென்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளை பிறக்கில் பண்பில்லாதப் பொறுமை யுடையவனாக விருப்பான், இப்போது வாய்த்த பிணியானதுத் தீரமாட்டாது நினைத்தபொருளுங் கிடைக்காது, மூர்க்கமாகத்தானே போனவர் திரும்பிவந்து சேரமாட்டார்கள், இஷ்டமாக யேதைசெய்யினும் இடரானது வருகும் எ-று. 8

9-வது சூலத்தின் பலன்.

சாற்றசூல மாமதனிற் சார்பாய்பிறந்தோன் கலகனுமாம்
தோற்றமாக நினைத்ததுவும் தொல்லைசெய்யுங் கிட்டாது
ஏற்றமனையும் பாழாகும் யெடுத்தவழகுந் துயர்தருகும்
போற்றபொருளுஞ் சேதமுரும் பிள்ளைபெண்டும் பகையாமே

(இ-ள்) சூலம் யென்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் கலகப்புரியனாக விருப்பான் இப்போது நீ நினைத்த காரியத்தினால் தொல்லையானது நேரும் கைக்குக் கிடைக்கமாட்டாது, மனையும் பாழாகும், தொடுத்த வழக்கினால் துயரமானது உண்டாகும் பொருள் சேதமாகும் பிள்ளைகளும் பெண்டிரும் பகையாவார்கள் எ-று. 9

10-வது கண்டத்தின் பலன்.

ஆமெனகண்ட மாமதனிற் றடவாய்பிறந்தோன் மூதேவி
போமேநினைத்தப் பெண்ஜீவன் பிணியால்பாதை பட்டுய்வான்

தாமேதொழிலுங் கேடாகுந் தங்கும்நிலையை விட்டோடும்
நாமேநஷ்ட முங்காட்டும் நாடும்விடமும் பகைசெய்யும்

(இ-ள்) கண்டம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் மூதேவி தனமுடையவனாக விருப்பான், இப்போது நீ நினைத்த பெண் ஜீவனுடைய பிணியானது தீராது, தொழில்கெடும், நிலைவிட்டோட்டும் நஷ்டமானது உண்டாகும், நாடிப்போகும்படியான யிடமும் பகையாகிவிடும் எ-று. 10

11-வது விருத்தியின் பலன்.

செய்யவிருத்தி யாமதனிற்சிறுப்பிறந்தோன் பிரசங்கி
துய்யநினைத்தப் பொருள்கிடடுந் தூரப்போனோர் தான்வருவார்
ஐயமில்லை செய்தொழிலு மதிகவிருத்தி தானாகும்
கையுஞ்சோர்ந்தப் பொருள்கிட்டும் கடனுந்தீருங் காண்பாயே

(இ-ள்) விருத்தி என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் பிரசங்கியாக விருபபான் இப்போதுநினைத்து கேட்டப் பொருள் கிடைக்கும், தூரதேசம் போனபேரும் வந்து சேர்வார்கள், செய்யும்படியான தொழிலில் பயம் ஒன்றுமில்லை அதிகமாக விருத்தியாகும் கைசோர்ந்துபோன பொருள் கிடைக்கும் பழையநாள் கடனும்தீரும் எ-று. 11

12-வது துருவத்தின் பலன்.

காணதுருவ மாமதனிற் கருதிப்பிறந்தோன் தனவானும்
பூணுமுத்தி யோகம்பெரும் பூமிதேடப் பலனுண்டாம்
தோணுஞ்சிநேகந் தன்னாலே தோற்றபொருளுந் தான்வருகும்
நாணும்பிணியின் பயமொழியும் நங்கைவந்து சேர்வாளே

(இ-ள்) துருவம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளை பிறக்கில் தனவானாக விருப்பான், உத்யோகம் பெருகும், பூமிவாங்கப் பலன் உண்டாகும், சினேகிதனால் தோற்றப்பொருளும் வந்துசேரும், பிணியினுடைய பயமானது ஒழியும், குறித்த ஸ்திரீயும் வந்து சேர்வாள் எ-று. 12

13-வது வியாகத்தின் பலன்.

சேரவியாகத மாமதனிற் சிறக்கப்பிறந்தோன் விரோதியனும்
கூறநினைத்தப் பொருள்கூடா குடும்பவழக்குந்தான்தீரா

போரஜீவ னுந்திரும்பா பொல்லாபிணியு மொழியாது
கோரும்வழக்குங் கெலியாது கொடுத்தபொருளும் வாரூதே

(இ-ள்) வியாகதம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளை பிறக்கில் விரோத முடையவனாக விருப்பான் இப்போது நீ நினைத்த பொருள் கைகூடிவராது, குடும்பத்தில் நேர்ந்த வழக்கானது தீராது போனஜீவனும் திரும்பிவரமாட்டாது வாய்த்த பிணியும் ஒழியாது, கோரிய வழக்கானது கெலிக்கமாட்டாது, கொடுத்த பொருளும் வரமாட்டாது எ-று. 13

14-வது அரிஷணத்தின் பலன்.

வாராயரிஷண மாமதனில் வாகாய்பிறந்தேன் புத்தியுளான்
தோறுய்தொடுத்த வழக்குவெல்லுந் துலையாபிணியுந் தான்துலையும்
நேறுய்மனைமா டாடுடனே நிலமுங்கொள்ள சுகதுண்டாம்
பேறுய்பேச்சும் பெருமையுறும் பெண்டீர்பிள்ளை பெருவாளே

(இ-ள்) அரிஷணம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளை பிறக்கில் புத்திவானாக விருப்பான், தொடுத்த வழக்கானது வெல்லும், நாள்பட்ட பிணியுந்தீரும் மனை, மாடு, ஆடு, நிலம், இவைகள் கொள்ள சுகமுண்டாகும், பேசசிய பேச்சு பெருமை யுண்டாகும், பெண்டீரும் ஆண்பிள்ளையைப் பெருவாள் எ-று. 14

15-வது வச்சிரத்தின் பலன்.

பெருகவச்சிர மாமதனிற் பிறந்தசேயும் பூமியுளான்
தருகநினைத்தப் படிமுடியும் தனையராலே கீர்த்தியுறும்
குருகக்களவாய் போனபொருள் கூடிமாதால் தான்வருகும்
சிருகயெதிரித் தனைவெல்வாய் சிந்தைமகிழ்வு முண்டாமே

(இ-ள்) வச்சிரம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் பூமியுள்ளவனாக விருப்பான், நினைத்தப்படியே காரியம் முடிவாகும் பிள்ளைகளால் கீர்த்திப் பெருகும் களவாகப் போனபொருள் ஸ்திரீகளால் கிடைக்கும், எதிரிகளை வெல்வாய் சிந்தைமகிழ்சசி யுண்டாகும் எ-று. 15

16-வது சித்தியின் பலன்.

ஆமேசித்தி யாமதனில் அடவாய்பிறந்தோ னபிமானி
தாமேநினைத்த வூர்போக தக்கதொழிலுந் தினங்கிடைக்கும்

போமேபோன ஜீவனுமே புகழால்வந்து தான்சேரும்
நாமேநாளு மெட்டினிலே நண்ணும்வழக்கு மொழிந்திடுமே

(இ-ள்) சித்தி யென்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளை பிறககில் அபிமானியாக விருப்பான், இப்போது நினைத்திருக்கும் ஊருக்குபோக மேலான உத்தியோகங் கிடைக்கும் போன ஜீவன் தானேவந்து சேரும், இன்னம் நாள் யெட்டில் கோரிய வழக்கு வெல்லும் எ-று 16

17-வது விதிபாதத்தின் பலன்.

மொழியவிதி பாதமதனில் முனிவாய்ப்பிறந்தோன் வஞ்சகனும்
பழியாம்நினைத்தப் பொருள்வாரா பயணங்கொள்ளநன்றாக
வழியாயெந்த தொழிற்செயினும் வதிகஷ்ட மேதருகும்
ஒழியாவழக்கும் மேலோங்கும் உறவிற்பகையாய் பிறிவாமே

(இ-ள்) விதிபாதம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் வஞ்சகனாக விருப்பான் இப்போது நினைத்தபொருள் வந்து சேரமாட்டாது ஊர்பயணம்போக கெடுதி நேரிடும், வழியாகத்தானே எந்த தொழிற் செயினும் அதிகமான கஷ்டத்தையே தருகும், வழக்கு தொடுக்க வெல்லமாட்டாது, உறவின்முறையார்கள் பகையாகிப் பிறிந்துபோவார்கள் எ-று. 17

18-வது வரியானின் பலன்.

ஆமேவரியா னாமதனிற் கடவாம்பிறக்கில் மாதுஷ்டன்
போமேநினைத்துப் போந்தொழிலும் பொல்லாப்போடு பொய்யாகும்
தாமேகொண்ட மாதாலே தனமும்போகுங் குலைநேரும்
பூமேயரசர் தன்னாலே பூணும்விலங்கும் சிறையுமெனே.

(இ-ள்) வரியான் என்னும் யோகம் உதயமானதால் அந்தயோகத்திற் பிள்ளை பிறக்கில மகா துஷ்டனாக விருப்பான், இப்போது நீ நினைத்துப் போகும்படியானத் தொழில் பொல்லாங்கும் பொய்யான வார்த்தையுமாகும், தானே தேடிக்கொண்ட மாதினால் பொருட்சேதமுங் குலையும் நேரும் அரசர்களாலே விலங்கு பூணும் சிறைபடச் செய்யும் எ-று. 18

19-வது பரீகத்தின் பலன்.

எனவேபரீக மாமதனில் யேற்கப்பிறந் தோனாமீனன்
கனவேகொண்ட யெண்ணமதாற் கலகம்நேருங் கைகூடா

அனவேகள்ளர் பயம்நேரும் அடுத்தநோயு மதிகரிக்கும்
தனமேமெத்தச் சிலவாகுந் தந்தைதாயும் வெருப்பாரே

(இ-ள்) பரீகம் என்னும்யோகம் உதயமானதால் அந்தயோகத்திற்பிள்ளைபிறக்கில்ஈனனாகவிருப்பான்இப்போது நீகொண்டயெண்ணத்தினால் கலகம்நேரும் கைகூடிவரமாட்டாது,கள்ளர்களால் பயம்நேரும் வாய்த்த பிணியானது அதிகமாகும், தனமானது அதிகசிலவாகும், தாய் தந்தையர்களும் வெருப்பார்கள் எ-று. 19

20-வது சிவத்தின் பலன்.

பாறேசிவமாம் யோகமதிற் பண்பாய்ப்பிறந்தோன் நன்மையுளன்
நேரேநினைத்த ஜீவனுமே நிலையாய்வந்து தான்சேரும்
போறவேலைக் கைகூடும் பெரியோருதவி யுண்டாகும்
கோறும்பாக மேபிறியுங் கொடியபேயும் பறந்திடுமே

(இ-ள்) சிவம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற்பிள்ளைபிறக்கில் நன்மையுடையவனாக விருப்பான் இப்போது நீ நினைத்துக்கேட்ட ஜீவன் நிலமையாகத்தானே வந்துசேரும், போகும்படியான வேலையுங் கைகூடிவரும், பெரியோர்கள் உதவியுண்டாகும் கோரியிருக்கும் படியானப் பாகமானது பிரியும், வெகுநாளாய் தொடர்ந்திருந்தபேயும் பரந்தோடும் எ-று. 20

21-வது சித்தத்தின் பலன்.

திடமேசித்த மாமதனிற் றிகழாய்ப்பிறந்தோன் பிரபுவாம்
உடனேநினைத்தத் தொழில்முடியும்ஓடிப்போன ஜிவன்வரும்
அடமேகொண்ட யெதிரிதனை அரசர்மூலத் தால்வெல்லும்
கடனேயொழியுங் கலகம்போங் கண்டகினவும் பலிப்பாமே

(இ-ள்) சித்தம் யென்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் பிரபுக்கள்நேசமும் பிரபுவாகவுமிருப்பான், இப்போது நீ நினைத்ததொழில் உடனே முடியும், ஓடிப்போனஜிவனும் வந்துசேரும், அடங்கொண்டிருக்கும் எதிரியை அரசர்மூலத்தால் ஜெயஞ்செய்யலாகும், கடன்தீரும், கலகமானது ஒழியும், சண்டகினவும் பலிதமாகும் எ-று. 21

22-வது சாத்தியத்தின் பலன்.

ஆமேசாத்திய மாமதனி லடவாய்ப்பிறந்தோன் வித்வானாம்
தாமோநினைத்த மாதுதனை தக்கமணமுஞ் செய்யநலம்

போமேபோனப் பொருள்வருகும் புதையுங்கிடைக்கும் புகழ்மனையில்
நாமேகொண்ட யெண்ணம்போல் நாட்குநாளு நடந்திடுமே

(இ-ள்) சாத்தியம் யென்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் வித்துவானாக விருப்பான், இப்போது குறித்திருக்கும்படியான பெண்ணையே மணஞ் செய்ய நன்மையுண்டாகும், போனப்பொருள் வந்துசேரும், புதையல் மனையில் கிடைக்கும் இப்போது கொண்டிருக்கும் எண்ணம்போல் நாட்கு நாள் நடந்தேரிவரும் சுகமுண்டாம் எ-று. 22

23-வது சுபத்தின் பலன்.

நடக்கசுபமா மாமதனில் நலமாய்பிறந்தோன் ஸ்திரீபிரியன்
எடுக்கநினைத்த யெண்ணம்போ லெல்லாதொழிலுங் கைகூடும்
பிடிக்கபெரியோர் நேயத்தால் பெருமையோடுப் பொருள்வருகும்
தொடுக்கவழக்கு மேகெலிக்கும் தூரப்போனோர் தான்வருவார்

(இ-ள்) சுபம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகததிற் பிள்ளைபிறக்கில் ஸ்திரீகளின்மேல் பிரியமுடையவானாக விருப்பான், இப்போது நினைத்திருக்கும்படியான எண்ணம்போல் செய்துவர எல்லாதொழிலுங் கைகூடிவரும் பெரியோர்களுடைய நேயத்தால் பெருமையுண்டாகும், பொருள் கிடைக்கும், வழக்குத் தொடுக்க கெலிக்கும் தூரதேசம் போயிருப்பவரும் வந்து சேர்வார்கள் எ-று. 23

24-வது சுப்பிரமத்தின் பலன்.

வருகசுப்பிர மாமதனில் வாகாய்பிறந்தோன் தர்மனுமாம்
பெருகநினைத்த படியேதான் பிள்ளைபிறக்கும் பிணிதீரும்
சிருகவிருந்தக் குடும்பமது செழிந்துமேலாய் தானோங்கும்
குருகக்கொண்டப் பெண்ணாலே கூடுமுறவு மெனப்பேசே

(இ-ள்) சுப்பிரமம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளை பிறக்கில் தர்மவானாகவிருப்பான். இப்போது நீ நினைத்தப்படியே பிள்ளையானதுப் பிறக்கும் பிணியானது ஒழியும் சின்னகுடும்பமாக விருந்தது பெரியகுடும்பமாக வோங்கும், கொண்ட மனையாளினால் உறவுகூடும் எ-று. 24

25-வது பிரமத்தின் பலன்.

பேசபிரம மாமதனிற் பிறந்தோன் தயாளன்தர்மமுள்ள
கூசநினைத்தப் பெருளதுவுங் கூடிவரநா ளெட்டாகும்

தோசமாகத் தொடர்ந்தபிணி துலையதிங்க ளாருகும்
வாசமாகப் போனதொடு வானும்பெண்ணும் வருவாரே

(இ-ள்) பிரமம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்தில் பிள்ளைபிறக்கில் தயாள முடையவனும் தர்மவானுமாகவிருப்பான், இப்போது நீசந்தேகமாக நினைத்தபொருள் வந்து சேர நாள் எட்டாகும், வாய்த்தபிணியானது தீர மாதம் ஆறுகும், வாசமாகத்தானே கூடிக்கொண்டுப்போன ஆணும் பெண்ணும் வந்துசேர்வார்கள் எ-று. 25

26-வது மாகேந்திரத்தின் பலன்.

வாகாய்மாகேந் திரமதனில் வந்தோன்சகல முமறிவான்
போகாவருகும் நினைத்பொருள் புகழாய்சுபங்க ளேநடக்கும்
ஆகாத வருமுறவார் அடுத்தப்பகையுந் தான்துலையும்
யோகாயோ கங்களுண்டாம் யுறவால்கீர்த்தி வரும்பாரே

(இ-ள்) மாகேந்திரம் என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் சகல விஷயமும் அறிந்தவனாக விருப்பான், இப்போ நீ நினைத்தபொருள் சேதமாகாமல் வந்துசேரும், சுபகாரியங்கள் நடக்கும், ஆகாதபேர்களும் வந்து வுறவாடுவார்கள், பகைபானதுத்துலையும், யோகங்களுண்டாகும் உறவின்முறையாருல் கீர்த்தியானது பெருகும் எ-று. 26

27-வது வைதிருதியின் பலன்.

பார்க்கவைதி ருதியதனிற் பாலன்பிறக்கிற் பலவானும்
ஏர்க்கநினைத்தப் பொருளதுவும் யிடருய்நிற்கு முடியாது [ள்
சோர்க்கவழக்குந் தோல்வியுருங் கொண்டபெண்ணும் பகையாவா
ஆர்க்கும்பொல்லா நெனச்செய்யும் அடிமைபடவே வைத்திடுமே

(இ-ள்) வைதிருதி என்னும் யோகம் உதயமானதால் அந்த யோகத்திற் பிள்ளை பிறக்கில் பலவானாகவிருப்பான், இப்போது நினைத்துக்கேட்டப் பொருளானது இடஞ்சலாக விருக்கும் முடிவு பெறமாட்டாது, வழக்குத்தொடுக்க தோல்வி யடைந்துப்போகும் கொண்டமனையாளும் பகையாவாள், ஆற்கும் பொல்லாதவனாகச் செய்யும், ஒருவர்களுக்கு, அடிமைப்படச்செய்யும். எ-று. 27

யோகங்களின் ஆரூடம்
முற்றிற்று.

காணங்களின் ஆரூடம்

சக்கரம்.

1 பவம்	2 பாலவம்	3 கௌலவம்	4 தைதுலை
5 கரசை	6 வணிசை	7 பத்திரம்	8 சகுனி
9 சதுஸ்பாதம்	10 நாகலம்	11 கிமிஸ்துக்கி	1 பவம்

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங் கேட்க வந்தவர்களை மேற்கண்டசக்கரத்தில் அடைத்திருக்கும் காணங்களில் ஏதேனு மொன்றைத் தொடச் சொல்லி அவர்கள் தொட்டகரணபாடலைவாசித்து அவர்கள் நினைத்துவந்த காரியம் இன்னதென்றும் ஆகும் ஆகாதென்றும் சொல்லலாம், அல்லது பதினொன்றில் குறையக்கேட்டு அவர்கள் சொல்லிய லக்கத்தை கியாபகமாகவைத்து அந்த லக்கக்திற்குறிய காணபாடலை வாசித்தும் சொல்லலாம்

1-வது பவத்தின் பலன்.

கலி-விருத்தம்.

அரிய பவமதை யன்புடன் தொட்டதால்
குரிய நினைத்தவை கூடிட நாட்செல்லும்
பிரிய மாகவே பேசியப்பெண்கிட்டா
நெரிய தாய்நின்ற நிலையதுப் பெருமே

(இ-ள்) பவம் என்னும் காணத்தை தொட்டதால் இப்போது நினைத்த காரியம் கைகூடிவர நாட்செல்லும், பிரியமாகக் கேட்ட பெண்கிடைக்க மாட்டாது, நெரியாகநின்ற நிலையானது பெரும்.

2-வது பாலவத்தின் பலன்.

பெருகவே பாலவ மதை தொட்டதால்
குருகவே கொண்ட குறையது நீங்கிடும்
தருகவே தக்கத் தொழிலுங் கிடைத்திடும்
மருகவே மனை மா டாடு விருத்தியாகும்

(இ-ள்) பாலவம் என்னும் காணத்தை தொட்டதால் இப்போதுக் குடியாகவிருக்குங் குறையானது நீங்கும், தக்கத் தொழிலானது கிடைக்கும், மனை மாடு ஆடு முதலியவைகள் விருத்தியாகும் எ-று. 2

3.வது கௌலவத்தின் பலன்.

ஆமெனக் கௌலவ மாமதத் தொட்டதால்
சேமெனத் தேடிய ஜீவன் கிடைத்திடும்
தாமென வொரு தையலுஞ் சேருவாள்
நாமென நலம் நன்மையுண் டாகுமே

(இ-ள்) கௌலவம் என்னும் காணத்தைத் தொட்டதால் இப்போது தேடிய ஜீவன் கிடைக்கும், ஒரு ஸ்திரீயானவள் வந்து சேருவாள், நலம்பெறத்தக்க நன்மையானது உண்டாகும் எ-று. 3

4-வது தைதுலையின் பலன்.

உண்ட தைதுலை யுற்றதை தொட்டதால்
கண்டம் நீங்கிடுங் களவது வெளிபடும்
கொண்ட கோவினுற் குலவிடும் பாக்கியம்
பண்ட தாகப் பழமனைக் கிட்டுமே

(இ-ள்) தைதுலை என்னும் காணத்தை தொட்டதால் வாய்த்த கண்டமானது நீங்கும், களவாகப் போனபொருள் வெளிப்படும், பசுகொள்ள பால்பாக்கிய முண்டாகும், பழமையாக விருந்த மனையானது கிடைக்கும் சுகமுண்டாகும் எ-று. 4

5-வது கரசையின் பலன்.

கிட்டவே கரசை தனை தொட்டதால்
நட்ட மானதோர் நற்பொருள் வாய்த்திடா
தொட்டதோர் தொழில் தோஷமா மோங்கிடா
இஷ்டரும் பகை யாவறென் றேற்றுவாயே

(இ-ள்) கரசை என்னும் காணம் உதயமானதால் இப்போது நஷ்டமாகப் போனபொருள் கிடைக்கமாட்டாது, செய்யும்தொழிலும் விருத்தியாகாது, இஷ்டர்களும் பகையாவார்கள் எ-று. 5

6-வது வணிசையின் பலன்.

ஏற்ற வணிசையை யியல்புடன் தொட்டதால்
தோற்ற மாகவே துலங்குந் தொழில்களும்

நேற்றி யாகவே நீடுமுத்தி யோசமும்
போற்ற வேபூமி லாபமுண் டாகுமே

(இ-ள்) வணிசை என்னும் கரணத்தை தொட்டதால் இப்போது நினைத்திருக்கும்படியான தொழில் செய்ய சித்தியாகும் யோகமும் உயரும், பூமியில் லாபமுண்டாகும் எ-று. 6

7-வது பத்திரத்தின் பலன்.

ஆகவே பத்திர மாதை தொட்டதால்
தாக மானதோர் தன்துயர் தீர்ந்திடா
பாக மாகவே பலபொருள் பேதமாகும்
சோக மாகவே செய்தொழில்போகுமே

(இ ள்) பத்திரம் என்னும் கரணத்தை தொட்டதால் இப்போது நிந்தையாக வாய்த்திருக்கும் துயரமானது தீராது பல பொருளுஞ் சேதமாகும், செம்யும்படியானத் தொழில்போகும். 7

8-வது சகுனியின் பலன்.

போக்கும் சகுனியை பொருந்திட தொட்டதால்
நோக்குந் திசைதனில் நோய்பிணி சாறுமே
பாற்க பகைத்தோர் பாவையுஞ் சேர்குவாள்
ஏற்குமிடம் விட்டு யோகிடச் செம்யுமே

(இ-ள்) சகுனி என்னும் காணத்தைத் தொட்டதால் இப்போது நீ நோக்கமாகக் கொண்டிருக்கும் திசையேக நோயானது வாய்கரும், பகையாகப்போன ஸ்திரீயும் வந்துசேர்வாள் இருக்கும் இடமானதைவிட்டுப் போகும்படியாகச் செய்யும் எ-று. 8

9-வது சதுஷ்பாதத்தின் பலன்.

செய்யவே சதுஷ்பா தத்தை தொட்டதால்
துய்ய நினைத்தப் பொருளது தான்வரும்
ஐய மகன்றிடும் அறஞ்சிறை மீண்டிடும்
வெய்யவே போன ஜீவனும் வந்திடும்

(இ-ள்) சதுஷ்பாதம் என்னும் காணத்தை தொட்டதால் இப்போது நினைத்தப் பொருள் கிடைக்கும், அச்சமானது நீங்கும் சிறையானது மீளும், போன ஜீவனும் வந்துசேரும் எ-று. 9

10-வது நாகவத்தின் பலன்.

வந்திட நாகவமதை தொட்டதால்
நிந்தை யாகும் நினைத்ததுங் கிட்டிடா
சிந்தை நோகுஞ் செய்தொழில் கலகமாம்
தொந்த மாகவே தோற்றுமென் றுறைசெயே

(இ-ள்) நாகவம் என்னும் கரணத்தை தொட்டதால் இப்போது நீ நினைத்தப் பொருள் கிடைக்கமாட்டாது, சிந்தை நோகச் செய்யும் செய்யும்படியான தொழிலில் கலகம் நேரும், இவையெல்லாமுடனே காட்டும் எ-று. 10

11-வது கிமிஸ்துக்கினத்தின் பலன்.

உரைக்கவே கிமிஸ்துக்கின முதித்ததாலே
வருக்கத்திற் பகைவந்ததுந் தீர்ந்திடும்
பெருக்கவே போனபொருளதுக் கிட்டும்
இருக்குமுத்தியோக மெழிலுடன் பெருகுமே

(இ-ள்) கிமிஸ்துக்கினம் என்னும் கரணத்தைத் தொட்டதால் இப்போது வந்த பந்துக்களில் பகையானது தீரும் போன பொருள் கிடைக்கும், இப்போதிருக்கும்படியான உத்தியோகமும் பெருகும் எ-று. 11

கரணங்களின் ஆருடம்

முற்றிற்று

வாரங்களின் ஆரூடம்

சக்கரம்.

1 ஞாயிறு	2 திங்கள்	3 செவ்வாய்	4 புதன்
5 வியாழம்	6 வெள்ளி	7 சனி	1 ஞாயிறு

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடம் கேட்க வந்தோர்களை ஒரு வாரத்தின் பெயரைச் சொல்லெனக்கேட்டு அவர்கள் சொல்லிய வாரத்தைக் கியாபகமாக வைத்து அந்த வாரத்திற்குரிய பாடலை வாசித்து வரும் பலாபலன்களை சொல்ல வேண்டும.

1-வது ஞாயறின் பலன்.

விருத்தம்

ஆதியாம் வாரந்தானும் அன்புடனுதித்ததாலே
நீதியாய் நினைத்தசீவன் நிலையினில்வந்துசேரும்
வாதியா மெதிரிதன்னை வாகுடன் வெல்லலாகும்
ஓதிட நேசனாலே யுதவியுண் டாகும்பாரே

(இ-ள்) ஞாயிறு உதயமானதால் இப்போது நினைத்த ஜீவன் நிலையில் வந்துசேரும், வாதியாக வரும் எதிரிகளை வெல்லலாம், நேசனால் உதவியானது உண்டாகும் உத்தமம் எ-று. 1

2-வது திங்கட்கிழமையின் பலன்.

பாறென திங்கட்தானும் பரிவுட னுதித்தசாலே
சிறென நினைத்தவேலை சீக்கிரம் முடிவதாகும்
பேறென பிடித்தபேயும் பெண்ணைவிட் டகன்றுபோகும்
காறெனக் கலகந்தீருங் கலியாணம் மனையிலாகும்

(இ-ள்) திங்கள் உதயமானதால் இப்போது நினைத்த வேலை சீக்கிரத்தில் முடிவாகும், பிடித்தப் பேயானது பெண்ணைவிட்டு அகன்று போகும், கலகமானதுத் தீரும் கலியாணம் மனையிலாகும்எ-று. 2

3-வது செவ்வாய்கிழமையின் பலன்.

ஆகவே செவ்வாய்தானும் அடவுட னுதித்ததாலே
தாகமாம் நிந்தைநேரும் தனயரால் பொருளும் போகும்
பாகமாம் தொழிலிற்றானும் பருகிடும் பெரியசண்டை
சோகமாந் துணைவராலே சோர்வது யாகுங்கூறே

(இ-ள்) செவ்வாய் உதயமானதால் நிந்தையானது நேரும் மைந்தர்களால் பொருள் விரையமாகும், செய்யுப்படியானத் தொழில் சண்டையுண்டாகும், துணைவராலும் சோர்வடையச் செய்யும் எ-று. 3

4-வது புதன்கிழமையின் பலன்.

கூறவே புதன்கிழமை கொப்பன யுதித்ததாலே
நேறவே நிலத்தினாலே நேர்ந்ததோர் வழக்குதீரும்
பேறவே பாலன்றன்னை பள்ளியில் வைக்கநன்றாம்
தேறவே தேவியாரும் திகழ்சுதன் பிறக்கும்பாரே

(இ-ள்) புதன்கிழமை உதயமானதால் நிலத்தினால் நேர்ந்த வழக்கானது தீரும், பாலனை பள்ளியில்வைக்க நன்மையாகும் வித்தையோங்கும், மனையாளும் ஆண்பிள்ளையைப் பெறுகுவாள்

5-வது வியாழக்கிழமையின் பலன்.

பார்க்கவே வியாழந்தானும் பண்புட னுதித்ததாலே
தீர்க்கமாய் நினைத்தவாறு சுதனுக்கும் மணங்களாகும்
ஏர்க்கையா யுத்தியோகம் யெழிலுடன் பெருகிநீடும்
சேர்க்கவே மாதினாலே செல்வமும் வருகுமென்னே

(இ-ள்) வியாழககிழமை உதயமானதால் இப்போது நினைத்திருக்கும் எண்ணம்போல் மைந்தனுக்குங் கலியாணம் முடியும், உததியோகமும் உயர்ந்து நீடும் நாடிய ஸ்திரீயினால் செல்வம் பெருகும் எ-று. 5

6-வது வெள்ளிக்கிழமையின் பலன்.

என்னவே வெள்ளிதானு மமழலுட னுதித்ததாலே
கன்னியும் வந்துசேர்வாள் காரியஞ் சித்தியாகும்
மன்னிய மாடுயாடு மனையதுக் கொள்ளநன்றாம்
உன்னிய பயணந்தன்னில ஓங்கிடுஞ்செல்வந்தானே

(இ-ள்) வெள்ளிக்கிழமை உதயமானதால் ஸ்திரீ சேர்க்கையுண்டாகும், நினைத்தகாரியஞ்சித்தியாகும் மாடு ஆடு மனைகொள்ள நன்மையுண்டாகும் இப்போது உத்தேசித்திருக்கும் ஊர்க்குப் போக செல்வமும் சிறப்பு முண்டாகும் எ-று. 6

7-வது சனிக்கிழமையின் பலன்.

தானென சனியின்வாரம் தானது வுதித்ததாலே
ஊனென நினைத்தவேலை யொன்றுமே சித்தியாகா
கானென பயணந்தன்னில் கள்ளரால் துன்பம்நேரும்
கோனென வரசராலே கொடுமை யுண்டாகும்மாதே

(இ-ள்) சனிக்கிழமை உதயமானதால் இப்போது நினைத்த வேலை ஒன்றும் சித்தியாக மாட்டாது பயணத்தில் கள்ளர்களால் துன்பம்நேரும், அரசர்களால் கெடுமையானது உண்டாகும். 7

வாரங்களின் ஆருடம்

முற்றிற்று.

மாதங்களின் ஆருடம்.

சக்கரம்.

1 சித்திரை	2 வைகாசி	3 ஆனி	4 ஆடி
5 ஆவணி	6 புரட்டாசி	7 ஐப்பசி	8 கார்த்திகை
9 மார்கழி	10 தை	11 மாசி	12 பங்குனி

ஆருடம் சொல்லும் விபரம்.

ஆருடங் கேட்கவந்து எதிர்நின்றோர்களை ஒரு மாதத்தின் பெயரையாவது அல்லது பனிரண்டில் குறையாவதுகேட்டு அவர்களசொல்லும் மாதத்தையும் குறயச்சொல்லிய லக்கத்தையும் கியாபகமாகவைத்து அந்த மாதலக்கத்திற்குறிய பாடலைவாசித்து அவர்கள் நினைத்துவந்த காரியங்களை சொல்கவேண்டும்.

1-வது சித்திரையின் பலன்.

காணவே சித்திரைமாதங் களிப்புட னுதித்ததாலே
வேணதோர் வித்தைசாஸ்திரம் விளங்கிடும் கீர்த்திமேலாய்
பூணவே தந்தைதாயார் புகழுடன் பிரியமாவார்
தோணவே மகிட்சியோடு துலங்கிடுந் திருவுந்தானே

(இ-ள்) சித்திரைமாதம் உதயமானதால் வித்தைபெருகும், சாஸ்திரகேள்வியுண்டாகும், கீர்த்தியானதுப்பெருகும், தாய்தந்தையர்களும் பிரியமாகுவார், மகிட்சியுண்டாகும் திருவும்சேரும்.

2-வது வைகாசியின் பலன்.

தானென வைகாசித்தான் தயவுட னுதித்ததாலே
தேனென வித்தையோங்குந் தைரியந் தானுண்டாகும்
நானென யெதைசெய்தாலும் நலம்பெற கீர்த்தியோங்கும்
ஊனென உறவுகூடும் உத்தேசம் முடியும்பாரே

(இ-ள்) வைகாசிமாதம் உதயமானதால், வித்தையானதுப் பலிதமாகும், தயிரியமுண்டாகும், எந்தகாரியங்களை பிரவேசித்து செய்யினும் கீர்த்தியானதுவோங்கும் உறவினர்கள் வந்துகூடுவார்கள், நினைத்தகாரியம் தடையில்லாமல் முடிவாகும் எ-று. 2

3-வது ஆனியின் பலன்.

பார்க்கவே யானிதானும் பண்புட னுதித்ததாலே
மூர்க்கமாங் கோபத்தாலே மூண்டதோர் கலகந்தன்னால்
சேர்க்கவே விரையமாகுந் துலங்கிடும் புத்திரவிருத்தி
ஏர்க்கவே தீரமுண்டா யிருந்திட வாழ்வுண்டாமே

(இ-ள்) ஆனிமாதம் உதயமானதால் கோபத்தினல் மூண்ட கலகமதனல் விரையமானது உண்டாகும், புத்திரவிருத்தியாகும், தீரமுண்டாகும், வாழ்வுபெருகும் எ-று. 3

4-வது ஆடியின் பலன்.

உண்டென யாடிதானு முதயமாய் வந்ததாலே
பண்டென தனமுங்கிட்டும் பழையநாள் வழக்குவெல்லும்
கொண்டதோர் மனைவியாலே குடும்பமும் விருத்தியாகும்
விண்டதோர் வாக்குவெல்லும் விளங்கிடும் புண்ணியந்தானே

(இ-ள்) ஆடிமாதம் உதயமானதால் தனங்கிடைக்கும், பழய நாள் வழக்கானது வெல்லும், கொண்டபெண்டீரால் குடும்பமானது விருத்தியாகும், சொன்னசொல் ஜெயமாகும் புண்ணியம் பெருகும் எ-று. 4

5-வது ஆவணியின் பலன்.

தானென யாவணித்தான் தயவுட னுதித்ததாலே
நானென பிரபுவாலே நலம்பெறும் நேசமுண்டாம்
கோனென தெய்வபக்தி கோரிட நன்மையாகும்
ஊனென வோடிப்போன ஜீவனும் வருகும்பாரே

(இ-ள்) ஆவணிமாதம் உதயமானதால் பிரபுக்களால் நலம் பெறும் நேசமுண்டாகும், தெய்வங்களின்மீது அன்புவைத்துக் கோரிட நன்மையுண்டாகும், ஓடிப்போன ஜீவனும் வந்து சேரும் எ-று. 5

6-வது புரட்டாசியின் பலன்.

பாறென புரட்டாசிதான் பரிவுட னுதித்ததாலே
நேறென வெளியூர்போக நிலமையா முத்தியோகம்
சீறென செல்வமோங்கும் சித்தியாம் வித்தைதானும்
பேறென களவுபோனப் பொருளது கிடைக்கும்பாரே

(இ-ள்) புரட்டாசிமாதம் உதயமானதால் வெளியூர் போக நிலமையான உத்தியோகங்கிடைக்கும் செல்வமானதுப்பெருகும் வித்தை பலிதமாகும், களவுப்போனப்பொருள் கிடைக்கும். 6

7-வது ஐப்பிசியின் பலன்.

பார்த்திட யற்பிசிதான் பழியென வுதித்ததாலே
வேர்த்திட சிறுகுசண்டை வாய்த்திடும் விசனமுண்டாம்
சேர்த்திட சகலமுந்தான் சிதரிடுஞ் சேதமாகும்
தோத்திட தோஷமாக தோன்றிடும் பிணியுமென்னே

(இள்) ஐப்பிசிமாதம் உதயமானதால் சிறுகும் சண்டையும் நேரும், அதனல்விசனமுண்டாகும், சகலமும்சேதமாகும் சிதரிப் போகும், தோஷமாக பிணியானதுதோன்றி பாதைபடச் செய்யும் எ-று. 7

8-வது கார்த்திகையின் பலன்.

என்னவே கார்த்திகைதான் எழிலுட னுதித்ததாலே
அன்னைதந் தையாகளாலே அருமையும் பெருமையுண்டாம்
உன்னியதனமு முண்டாம் உற்றதோர் பூமியுண்டாம்
மன்னர்க ளுதவியுண்டாம் மாதர்கள் நேயமுண்டாம்

(இள்) கார்த்திகைமாதம் உதயமானதால் அன்னை தந்தையர்களாலே அருமையும் பெருமையுமுண்டாகும், தனங்கிடைக்கும், பூமிவாங்க நன்மைதருகும், அரசர்களுடைய உதவியுண்டாகும், ஸ்திரீகளுடைய நேசங்கூடும் எ-று. 8

9-வது மார்கழியின் பலன்.

நேயமாய் மார்கழிதான் நீடிட வுதித்ததாலே
ஆயவே தேவபக்தி யன்புடன் செய்யநன்றும்
தாயுட னமுதங்கிட்டுந் தங்கிய வழக்குவெல்லும்
சேயினல் கீர்த்தியோங்குஞ் சிந்தையில் மகிட்சியாமே

(இ-ள்) மார்கழிமாதம் உதயமானதால் தெய்வபக்தி புரிய நன்மையுண்டாகும், தாயாருடைய தனமானதுக் கிடைக்கும் நின்றவழக்கும் வெல்லும், புத்திரரால் கீர்த்தியானது ஓங்கும் மன மகிழ்ச்சி யுண்டாகும் எ-று, 9

10-வது தையின் பலன்.

ஆமென தையேதிங்கள் அடவுட னுதித்ததாலே
தாமென கோரிநின்ற தனமுங்கை வசமேயாகும்
போமென போனஜீவன் புகழுடன் வந்துசேரும்
நாமென தொழில்களெல்லாம் நலமுடன் பலிதமாமே

(இ-ள்) தைமாதம் உதயமானதால் இப்போது கோரிகேட்ட தினம் கைவசமாக வந்துசேரும், போனஜீவனும் திரும்பிவருகும் செய்யும்படியானத் தொழில்யாவும் பலிதமாகும் எ-று. 10

11-வது மாசியின் பலன்.

பலித்திட மாசிதானும் பரிவுட னுதித்ததாலே
சலித்திட வருத்தமுண்டாஞ் சந்ததி தாழ்வதாகும்
வலுத்திட யெதைசெய்தாலும் விரோதமேவந்துமூளும்
நலித்திட மெய்யிற்றானும் நங்கையர் பிணியுண்டாமே

(இ-ள்) மாசிமாதம் உதயமானதால் சலிப்பும் வருத்தமும் உண்டாகும், சந்ததியில்லாமற்போகும், எவ்விதமுயற்சிதேடினும் விரோதமுண்டாகும் தேகத்தில் ஸ்திக்களின் நோயானது வாய்க்கும் எ-று. 11

12-வது பங்குனியின் பலன்.

உண்டென பங்குனிதா னுதயமாய் வந்ததாலே
பண்டுள பங்குபாகம் பரிவுடன் தீர்ப்பதாகும்
அண்டையர் மடுத்தவீடு அடவுடன் வாங்கநன்றும்
விண்டதோர் வழக்குதானும் வேந்தரால் தீரும்பாரே

(இ-ள்) பங்குனிமாதம் உதயமானதால் பங்குபாகந் தீரும், அடுத்தமனைவாங்க நன்மைதருகும், வழக்கானது அரசர் மூலத்தால் தீரும் எ-று. 12

மாதங்களின் ஆரூடம்

முற்றிற்று.

இராசிகளின் ஆரூடம்.

சக்கரம்.

மீனம் உபயராசி	மேஷம் சரராசி	ரிஷபம் ஸ்திரிராசி	மிதுனம் உபயராசி
கும்பம் ஸ்திரராசி	இராசிகள்.		கடகம் சரராசி
மகரம் சரராசி			சிங்கம் ஸ்திரராசி
தனுசு உபயராசி	விருட்சிகம் ஸ்திரராசி	துலாம் சரராசி	கன்னி உபயராசி

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடம் வந்து கேட்பவர்களின் வாய்முதலெழுத்தை கியா பகமாகவைத்து அந்த எழுத்துக்குடைய இராசியை ஆரூடமாகக் கொண்டு பலாபலன்களை சொல்லவேண்டும் எந்தராசியில் ஜெனனமோ அந்தராசி ஜென்மராசியாம் அதாவது ஜென்மலக்கின மென்றும் உதயராசி என்றும் ஆரூடங்களில் வருமாறு தெரிந்துக்கொள்ளவும்.

கேட்டகாரியம் இன்னருக்கென்று தெரியச்சொல்லும்வகை.

கலி-விருத்தம்.

மூன்னு மாரூடம் முதயமாக வரில்
பன்னி கேட்டதோர் பண்புளக் காரியம்
தன்ன தாகுந் தனக்கென வந்ததாம்
கன்னியமுடன் கண்டுறைசெய்வையே

(இ-ள்) கேட்ட ஆரூடம் உதயராசியாகவரில் அந்த காரியம் கேட்டவர்களுக்கே யென்றும் தெரியச்சொல்கவேண்டும் எ-று. 1

செய்ய ரண்டா மிடமது தானுமே
துய்ய வாரூட மாகத் துலங்கிடில்
குய்ய வேகுடி யாளருக் கேயென
வைய மீது வரியனி சாற்றிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் இரண்டாமிடமாக வரில் குடியாள ருக்கென்று சொல்வதாம் எ-று. 2

சாற்ற மூன்று மிடமது தானுமே
ஏற்ற வாரூட மாக வுதித்திடில்
தோற்ற மாகுஞ் சகோதரர் தனக்கென
நேற்றி யாகவே நீகண் டுரைத்திடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் மூன்றுமிடமாகவரில் சகோதரரை பறறிகேட்டதாகச் சொல்கவும் எ-று. 3

உரைக்கவே காண வுற்ற நாலாமிடம்
சிரக்க வாரூடஞ் செய்ய யுதித்திடில்
பெருக்க மாதுரை பற்றி கேட்டதென
வருக்க மாகவே வாகுட ஞேதிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் நாலாமிடமாகவரில் மாதுருவைப் பற்றிகேட்ட காரியமென்று கண்டு பலன்கள் சொல்கவேண்டும். 4

ஓத வைந்தா மிடமது தானுமே
போத வாரூட மாக வுதித்திடில்
ஏதவே பிதுருக் கென்று கண்டுமே
சோதியாய் பலன் சொல்லி மகிழுமே

(இ-ள்) கேட்ட ஆரூடம் ஐந்தாமிடமாகவரில் பிதுருவுக் கென்று சொல்கவேண்டும் எ-று. 5

மகிழவே யாறு மிடமது தானுமே
புகழ வாரூட மாக வுதித்திடில்
இகழ சத்துருத் தனக்கெனக் கேட்டதாய்
திகழுரப் பலன் திடமுடன் செப்பிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் ஆறுமிடமாகவரில் சத்துருவைப் பற்றி கேட்டதாகச்சொல்கவேண்டும் எ-று 6

செப்ப யேழாமிடஞ் சேரவுந் தாணுமே
மெப்ப வாரூட மாக வுதித்திடில்
அப்பனே களத்திர மதைப் பற்றியே
ஒப்ப கேட்டதா யுகந்து நீசாற்றிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் ஏழாமிடமாகவரில் களத்திரத்தைப் பற்றி கேட்டகாரியமாகுமென்று சொல்கவேவுண்டும் எ-று. 7

சாற்ற யெட்டாமிடஞ் சார்பது வாகவே
ஏற்ற வாரூடமாக வுதித் திடில்
போற்றுமா யுருவைப் பற்றி கேடடதாய்
தேற்றமாய் பலன் திகழ்வி ுற சொல்லிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் எட்டாமிடமாகவரில் ஆயுளைப்பற் றிக்கேட்டதெனச் சொலகவேண்டும் எ-று. 8

சொல்ல வொன்பா மிடமதுதானுமே
நல்லவா ரூட மாகவே நண்ணிடில்
புல்லவே பிதா மார்களைப் பற்றியே
வல்லவா ரூடம் வாகாய் வழுத்துமே

(இ-ள்) கேட்ட ஆரூடம் ஒன்பதா மிடமாகவரில் பிதாமார் களைப்பற்றி கேட்டதாகச் சொல்கவேண்டு மென்பதாம் எ-று. 9

வழுத்த வேவளர் பத்தா மிடமுமே
செழித்தவா ரூடஞ் சேர வுதித்திடில்
தொழிதத தொழில்முறை தன்னையும் பற்றியே
கழித்தவா ருடங் கண்டுறை செய்குமே

(இ-ள்) கேட்ட ஆருடம் பத்தாமிடமாக வரில் தொழில் முறைகளைப் பற்றிக் கேட்டதாக கண்டு பலன்சொல்கவேண்டும். 10

செய்ய பதிெனான்றுஞ் செப்ப மிடமுமே
துய்ய வாருட மாக துலங்கிடில்
வைபய்யவே யாதாய மதைப் பற்றியே
ஐயமன்றி கேட்ட தாகும் புகருவாய்

(இ-ள்) கேட்ட ஆருடம் பதினொரு மிடமாகவரில் ஆதாயங் களைப்பற்றி கேட்டதெனச் சொல்கவேண்டு மென்பதாம் எ-று. 11

பகரவே பனி ரண்டா மிடமுமே
தகரவா ரூடந் தானே யுதித்திடில்
நகரவே காணும் நஷ்டத்தை பற்றியே
புகர கேட்டதென கண்டுபுகன்றிடே

(இ-ள்) கேட்ட ஆரூடம் பனிரண்டா மிடமாகவரில் நஷ்டத் தைபறறி கேட்டதாகும் எ-று. 12

பொது-ஆரூடம்.

விருத்தம்

மக்களுட ராசிபா ருடந்தோன்றி
    மதிரவியும் புகர்பொன்றும் புந்திநிற்கில்
சிக்கனவே மக்கள்சிந் தனையாமென்று
    செகமதினில் சாதகற்கு தெளிவாய்சொல்லு
துக்கனவே யவருடனே சனியும்பாம்பும்
    தோன்றிட கள்ளறென தொகுப்பாய்விள்ளு
நிக்கவே கள்ளர்களு டில்லாவிட்டால்
    நிலைவிட்டுத் தெருப்பட்டோ ரென்றுகாணே

(இ-ள்) மக்கள் இராசிஆரூட மாகவர அவற்றில் சூரியன் சந்திரன் சுக்கிரன் வியாழன் புதன் இவர்கள் நிற்கில் மக்களுடைய சிந்தனையாகும் அவர்களுடனே சனி இராகு கேது இவர்கள் நிற்கில் கள்ளரக் குறித்துக் கேட்டதாகும், அல்லது நிலையைவிட்டுத்தெருப்பட்டுப் போனவர்களாகும் எ-று. 13

சூரியனுமுதிக்க வாருட ந்தோன்றில்
    சொல்லொணு ராஜபய வார்த்தையாகும்
வீரியமா மதிபுதனுங் குருவுஞ்சுக்கிரன்
    விளங்கவே யிவருதிக்க சுபமேயாகும்
கூரியதோ குஜனுதிக்கில் கலகம்நேரும்
    குரித்தசனி தானுதிக்கில் நஷ்டங்காணும்
சீரியதோர் பாம்புதிக்கிற் பிணியாமோது
    செப்பயவை தப்பவிஷ பயமாம்பாரே

(இ-ள்) சூரியன் ஆரூடமாக வுதிக்கில் இராஜ பயமெனச் சொல்கவேண்டும், சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் ஆரூடமாக வுதிக்கில் சுபகாரியங்களைபற்றி கேட்டதாகும் அந்தகாரியம் முடிவாகும், செவ்வாய் வுதிக்கில், கலகம்நேரும் சனி உதிக்கில் நஷ்டங்காணும் இராகுகேது இவர்களுதிக்கில் பிணிபயம் அல்லது விஷபயம் நேருமெனச் சொல்கவேண்டும் எ-று. 14

பாரப்பா பாபக்கோள் உதயம்நிற்கில்
    பகரக்கேள் மரணமதை குறித்ததாகும

நேரப்பா வாரூடந் தன்னிற்நிற்கில்
    நிந்தையாம் பிணியென்று நிகழ்த்தலாகும்
கூரப்பா வுதையவா ரூடங்கட்கு
    குறித்த ரண்டாமிடமா மதனில்நிற்க
தூரப்பா நஷ்டமதை குறித்கதென்று
    அலங்கவே யாரூடந் தொகுத்திடாதே

(இ-ள்) பாபக் கோட்கள் உதய விராசியில் நிற்க மரணத்தைப்பற்றிக் கேட்டதாகும், ஆரூடராசியில் நிற்கில் பிணியைக் குறித்துக் கேட்டதாகும், உதய ஆரூடங்கட்கு இரண்டாமிடத்தில் நிற்கில் நஷ்டத்தை குறித்து கேட்டதாகும் எ-று. 15

எட்டென்ற யிடபலனே நஷ்டமாகும்
    இயம்புமா றுமிடமே யூரார்க்காகும்
திட்டமே பனிரெண்டிற் பிணியதாகும்
    தீக்கோளின் செய்கையென்று தெரிந்துகொள்ளு
கிட்டுமே சுபக்கோளா தாயமுண்டாம்
    கேட்டபொருள் கைகூடுங் குறவில்லாமல்
மட்டில்லா திரேகமிக சவுக்கியமுண்டு
    மண்மீது வாரூடம்மகிழ்ந்துசொல்லே

(இ-ள்) பாபக் கிரகங்கள் எட்டாமிடத்தில் நிற்க நஷ்டத்தைக் குறித்ததாம், ஆறுமிடத்தில் நிற்க ஊர்ப்பாட்டைக் குறித்ததாம், பனிரண்டாமிடத்தில் நிற்க பிணியைக் குறித்துக் கேட்டதாம், மேற்கூறியயிடங்களில் சுபக்கோட்கள் நிற்கில் ஆதாயமும் கேட்டபொருள் கைகூடு மென்பதையும் தேக சவுக்கியத்தையும் சொல்கவேண்டும் எ-று. 16

காலந்தெரிந்து கொள்ளல்.

கண்மணியே யாரூடங் கேட்கும்போது
    காணயந்த பெயருடையோன் தனக்கேயப்போ
தண்மையுள்ள மூன்றுரு வொன்பானோடு
    தானுதிக்க பனிரண்டும் பூதகாலம்
எண்ணவே யுதையம்நா லேழுபத்து
    உதிக்கவா ரூடமது பவிஷ்யகாலம்
பண்ணவே ரண்டுஐந்து யெட்டோடின்னம்
    பதினொன்றே யுதிக்கிற்வர்த்த மானகாலம்

N. DORAIRAJAN,
ELECTRICAL WIRING CONTRACTOR,
5, VADAMALAI PILLAI ST.,
VEPERY POST, MADRAS.

(இ-ள்) 3-6-9-12, ஆகிய யித்தானங்கள் ஆரூடமாகவரில், பூதகாலமென்று அறிந்து சொள்ளவேண்டும், உதையம் 4-7-10, இத்தானங்கள் ஆரூடமாகவரில் பௌஷியகால மென்றறியவும், 2-5-8-11-, இத்தானங்கள் ஆரூடமாகவரில் வர்த்தமானக் கால மென்றுஅரியவும் எ-று. 17

போனபோருள் வரும் வாராதென்று அறியும் வகை.

உன்னியகோலேதானு முதயமதாகததோன்ற
மன்னியமேடந்தானு மாரூடமாயுதிக்கில்
கன்னியேகைவிட்டேதான் கடர்ந்ததோர்பொருளுந்தானும்
வின்னமேயாகுங்கண்டாய் வாராதுயென்றுபேசே

(இ-ள்) துலாம்விராசி உதயமாக மேஷவிராசி ஆரூடமாக வுதிக்க கைசோர்ந்துப் போனபொருள் ஒருக்காலும் வந்துசேர மாட்டாது எ-று. 18

பேசவேமேடராசி பரிவுடனுதையமாக
ஆகவேநிரையேதானு மாரூடமாயுதிக்கில்
கூசவேபோனசொத்துங் குணமுடன்கண்ணிற்காண
வாசமாய்வருகுமென்று ைகுடனுரைத்திடாயே

(இ-ள்) மேடவிராசி உதயமாக துலாவிராசி ஆரூடமாகவுதிக்கில் போனபொருள் மறுபடியும் கண்ணிற்காணும் படியாக கூடிய சீக்கிரத்தில் வந்துசேரும் எ-று, 19

உரைத்திடயிடபராசி யுதயமாகத்தோன்ற
கருத்துடன்தேளேதாமுங் காணயாரூடமாக
பொருத்திடபோனபொருள் புகழுடன்தானுமல்லோ
சருத்துடன்தானேவந்து சார்புடன்சேரும்பாரே

(இ-ள்) இடபவிராசி உதயமாக விருச்சிகவிராசி ஆரூடமாக வுதிக்கில் போனபொருள் தானேவந்து சேரும் எ-று. 20

பார்ககவேதேளேதானும் பரிவுடனுதயமாக
கோர்க்கவேவிடையேகாண குலவுமாரூடமாக
கார்க்கவேகைவிடடேதான் கடந்ததோர்பொருளுந்தானும்
வேர்க்கவேயொருபோதுந்தான் வாறுதுசென்றுசொல்லே

(இ-ள்) விருட்சிகவிராசி உதயமாக இடபவிராசி ஆரூடமாக வுதிக்கில் கைவிடடுப்போனபொருள் வாறுதென்று சொலலவும.

சொல்லவேசிலையதானுஞ் சுகமுடனுதயமாக
வல்லதோர்மிதுனந்தானு வாரூடமாகத்தோன்றில்
புல்லவேபோனதொரு பொருளதுவுடனேதானும்
அல்லலில்லாமற்றுனும் அன்புடன்வருகுமென்னே

(இ-ன்) தனுசு விராசி உதயமாக மிதுனவிராசி ஆரூடமாகத் தோன்றில் போனபொருள்ளானது ஆடங்கமில்லாமல் உடனேவந்து சேரும் எ-று. 22

என்னவேமிதுனந்தானு மெழிலுடனுதயமாக
மன்னியவில்லேதானு மாரூடமாகத்தோன்ற
பன்னியேகைவிட்டேதான் பழியெனபோனசொத்து
வின்னமாய்போகுமல்லால் வாறுதுயென்றுபேசே

(இ-ள்) மிதுனவிராசி உதயமாக தனுசுவிராசி ஆரூடமாகத் தோன்றில் போனபொருளானது வின்னமாகிவிடும் வந்துசேர மாட்டாது எ-று. 23

பேசவேமகராசி பெட்புடனுதயமாக
வாசமாங்கடகந்தானும் வருகவாரூடந்தோன்றி
தோசமாய்போனபொருள் தோன்றிடதிரும்பியேதான்
நேசமாய்வாராதென்று நிலைபடகண்டுசாற்றே

(இ-ள்) மகரவிராசி உதயமாக கடகவிராசி ஆரூடமாகத் தோன்றில் தோஷமாகத்தானே போனபொருள் திரும்பிவந்து சேரமாட்டாதுஎ-று. 24

சாற்றவேகடகந்தானுஞ் சார்புடனுதயமாக
ஏற்றதோர்மகராசி யாரூடமாகத்தோன்றில்
தோற்றதோர்பொருளுந்தானுந் துலங்கிடகண்ணிற்காண
நேற்றியாய்வருகுமென்று நிகழ்த்துவாய்நேருய்தானே

(இ-ள்) கடகவிராசி உதயமாக மகரவிராசி ஆரூடமாகத் தோன்றில் தோற்றப்பொருளானது கண்ணிற் காணும்படியாகக் கிடைக்கும் எ-று. 25

தானெனசிம்பராசி தானவையுதையமாக
ஊனெனகும்பராசி உதிக்கவாரூடமாக
கானென்கைவிட்டேதான் கடந்துமேபோனசொத்து
நானென்னவாறுதென்று நலமுடன்விள்ளுவாயே

(இ-ள்) சிம்பவிராசி உதயமாக கும்பவிராசி ஆரூடமாகத் தோன்றில் கைவிடடுக் கடந்துப் போனபொருள் வந்துசேரமாட்டாது எ-று. 26

விள்ளவேகுடும்பம்தானும் விளங்கவேபுதயமாக
அள்ளவேசிம்பராசி யாரூடமாகத்தோன்றில்
கள்ளமாய்கைவிட்டேதான் கடந்ததோர்பொருளுந்தானும்
தெள்ளவேதேடியேதான் தானதுவருகும்பாரே

(இ-ள்) கும்பவிராசி உதயமாக சிம்பவிராசி ஆரூடமாகத் தோன்றில் கள்ளமாகத்தானே கைவிட்டுப்போனப் பொருள் தானே தேடிவந்துசேரும் எ-று. 27

பாறெனகன்னியேதான் பரிவுடனுதயமாக
நேறெனமீனந்தானு நீடயாரூடந்தோன்றில்
போறெனகைவிட்டேதான் போனதோர்பொருளுந்தானும்
சீறெனவசமேவந்து சேராதுயென்றுசொல்லே

(இ-ள்) கன்னியாவிராசி உதயமாக மீனவிராசி ஆரூடமாகத் தோன்றில் கலகப் பட்டுக்கை விட்டுப் போனப்பொருள் தன்வசமாக வந்துச்சேரமாட்டாதெனச் சொல்கவும் எ-று. 28

சொல்லவேமீனராசி சுகமுடனுதயமாக
வல்லதோர்கன்னிதானும் வருகவாரூடந்தோன்றி
புல்லவேகைவிட்டேதான் போனதோர்பொருளுந்தானும்
தொல்லையில்லாமற்றானே துலங்கிடவருகும்பாரே

(இ-ள்) மீனவிராசி உதயமாக கன்னியாவிராசி ஆரூடமாகத் தோன்றில் கைவிட்டுப்போன பொருள் வந்துசேரும் எ-று. 29

உதயவாரூடங்கட்கு வோங்கியமூன்றில்தானும்
சதுருடன்பாபக்கோட்கள் சார்ந்துமேதானேநோக்கில்
நிதியெனும்பொருளும்நஷ்டம் நேர்படவரிந்துகொள்ளும்
பதியெனும்சுபக்கோள்நோக்கில் பலித்திடுமென்றுசொல்லே

(இ-ள்) உதயவாரூடங்கட்கு மூன்றுமிடத்தில் பாபக்கோள்கள் நின்று அவறறைபாபக்கோளே நோக்கில் நஷ்டங்காணும் சுபக்கோள்கள் நோக்கில் நஷ்டங்காணுது -று. 30

இராசிகளின் ஆரூடம்

முற்றிற்று.

திசைகளின் ஆரூடம்.

சக்கரம்.

15 வடகிழக்கு	16 தீவு	1 கிழக்கு	2 தீவு	3 தென்கிழக்கு
14 தீவு	திசைகள் அறியும்			4 தீவு
13 வடக்கு	சக்கரம்.			5 தெற்கு
12 தீவு				6 தீவு
11 வடமேற்கு	10 தீவு	9 மேற்கு	8 தீவு	7 தென்மேற்கு

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங் கேட்கவந்து நின்றோர்களின் திசை, தீவு திக்குமுதலியதையும் மேற்கண்டசக்கரத்தில் அடைத்திருக்கும் வாருபோற் கண்டுபிடித்து எந்ததிசை தீவு, திக்குகளில்நின்றார்களோ அந்தந்த திசை தீவு, திக்குகளுக்குரிய பாடலைவாசித்து அவரவர்கள் எண்ணிவந்த எண்ணங்களையும் எள்ளுக்காய்ப் பிளந்தாற்போல் சொல்கவேண்டு மென்பதாம்

1-வது கிழக்கு திக்கில் நின்றபலன்.

விருத்தம்.

அரியவேகிழக்குதன்னில் அன்புடன்வந்துநின்று
பிரியமாய்நாடிகேடட பொருளதுவருத்துமாகும்
மருவியமணமுங்கூடும் மாதர்கள்சேர்க்கையுண்டாம்
குருகியப்பிணியுந்தீரும் குடும்பமும்செழிக்கும்பாரே

(இ-ள்) இப்போது நீ கிழக்குதிசையாக நின்றுக் கேட்ட ஆரூடமாவது என்னவெனில் ஒரு பொருளைக் குறித்துக்கேட்டாய் அந்தபொருள் வந்துசேரும் கலியாணம்முடியும், மாதர்கள் சேர்க்கையாவார்கள் நோயானதுதீரும் குடும்பமானது நாளுக்கு நாட்செழித்து விருத்தியாகஓங்கும் எ-று. 1

2-வது தீவில் நின்றபலன்.

பாற்க்கவேகிழக்கடுத்த பாரதீவதனில்நின்று
ஏர்க்கவேநினைத்துக்கேட்ட யாரூடம்பலிதமில்லை
கோர்க்கவேகொண்டஎண்ணங் குறைபடும்நஷ்டங்காணும்
வேர்க்கவேவேந்தராலும் வருத்தமுண்டாகுமென்னே

(இ-ள்) கிழக்கைஅடுத்த தீவில்நின்று கேட்ட ஆரூடத்தினால் யாதொரு பலனுமில்லை, கொண்டஎண்ணங் குறைபடச்செய்யும் நஷ்டமுண்டாகும், அரசர்களால் வருத்தமுண்டாகும்,

3-வது தென் கிழக்கில்நின்றபலன்,

என்னவேதென்கிழக்கு எழிலுடன்நின்றுகெட்ட
கன்னியும்வந்துசேர்வாள் கவலையுந்துலைந்துபோகும்
உன்னியவுரவினாலே உதவியுந்தானுண்டாகும்
பன்னியபயமுந்தீரும் பலதொழில்விருத்தியாமே

(இ-ள்) தென்சிழக்காக நின்றுகேட்ட ஆரூடத்தினால் குறித்த கன்னியானவள வந்துசேர்வாள். கவலையானதுந் துலைந்து போகும், உறவினரால் உதவியானது உண்டாகும், பபமானது தீரும், பலவிதமானத் தொழிலும் பலிதமாகும் எ-று. 3

4-வது தீவில் நின்றபலன்.

ஆமெனதென்கிழக்கு யடுத்ததீவதனில்நின்று
தாமெனக்கேட்டகர்மம் தானதுப்பலிதமில்லை
நாமெனதோட்டம்வாங்க நஷ்டமாம்விருத்தியாகா
போமெனசிலநாள்தானும் போகபின்சுகமுண்டாமே

(இ-ள்) தென்கிழக்கை அடுதததீவில் நின்றுகேட்ட ஆரூடத்தினால் நினைத்தகர்மம் பலிதமில்லை, குறித்திருக்கும் படியான தோட்டம்வாங்க விருத்தியாகாது நஷ்டத்தையேதருதும், சிலநாள் போக சுகமுண்டாகும் எ-று. 4

5-வது தேற்கில்நிறன்பலன்,

சுகமுடன்தெற்கில்நின்று சுற்றமாய்கேட்டகர்மம்
தகமையாய்பலிதமாகுந் தக்கதோருதவியுண்டாம்
வகைதப்பிபோனபேரும் வாகுடன்வந்துசேர்வார்
உகமையாயெதைசெய்தாலு மோங்கிடும்லாபந்தானே

(இ-ள்) தெற்கில் நின்றுகேட்ட ஆரூடத்தினால் பலிதமாகும் உதவியுண்டாகும், வகைதப்பிப் போனபேர்களும் வந்துசேர்வார்கள், உகமையோடு யெந்த காரியத்தைசெய்யினும் லாபுங்கிடைக்கும் எ-று. 5

6-வது தீவில் நின்றபலன்.

தானெனதெற்கைசார்ந்த தீவினில்நின்றுக்கெட்ட
ஊனெனகர்மந்தானு மொன்றுமேபலித்திடாது
கானெனசெய்யும்வேலை கஷ்டமாமதுவும்போகும்
நானெனமாதராலே நண்ணிடுங்கலகமென்னே

(இ-ள்) தெற்கை அடுத்ததீவில் நின்றுகேட்ட ஆரூடத்தினால் ஒன்றும் பலிதமிராது செய்யும்படியான வேலைபோகும் கஷ்டமுண்டாகும், மாதர்களால் கலகமுண்டாகும் எ-று. 6

7-வது தேன் மேற்கு நின்றபலன்.

என்னதென்மேற்குதன்னில் எழிலுடன்நின்றுகேட்ட
மன்னியவாரூடந்தான் மனதின்வார்முடிவதாகும்
பன்னியபலபேராலே பாக்கியம்வந்துசேரும்
உன்னியேவந்துசேரும் உடன்வந்துசேருங்காணே

(இ ள்) தென்மேற்கில் நின்றுகேட்ட ஆரூடத்தினால் எண்ணியகாரியம் எண்ணம்போல்முடியும் பலபேர்களாலும் பாக்கியம் வந்துசேரும் போனஜீவனும் வந்துசேரும் எ-று. 7

8-வது தீவில் நின்றபலன்.

காணதென்மேற்கடுத்த கருதுந்தீவதனில்நின்று
தோணவேகேட்டகர்மம் தோஷமாம்பலித்திடாது
நாணவேமெய்யிற்கொண்ட நலியதுதுலைந்திடாது
ஊணவேயொருவராலு முதவியுமில்லைசொல்லே

(இ-ள்) தென்மேற்கை அடுத்ததீவில் நின்றுகேட்ட ஆரூடத்தினால் நினைத்தகாரியங் கைகூடிவரமாட்டாது, தேகத்தில்வாய்த்த நோயானது தீராது, ஒருவருதவியுங் கிடையாது எ-று. 8

9-வது மேற்கில் நின்றபலன்.

சொல்லவேமேற்குநின்று சுகமுடன்கேடட்கர்மம்
நல்லதுபலிதமாகும் நாடியபொருள்கைசேரும்

தொல்லையாம்வழக்குவெல்லும் தூரத்திசேதிகிட்டும்
வெல்லவேயதனால்கீர்த்தி வருகுமென்றுரைத்திட்டாயே

(இ-ள்) மேற்குநின்று கேட்ட ஆரூடத்தினால் பலிதமுண்டா
கும் நாடிப்போகும்படியான பொருளுங்கிடைக்கும், தொல்லையா
கிய வழக்குதீரும் தூலவிலிருந்து சேதிவரும், அதனால் வெல்லும்
படியான கீர்த்தியுமுண்டாகும் எ-று. 9

10-வது தீவில் நின்றபலன்.

உரைத்திடமேற்கடுத்த உற்றதீவதனில்நின்று
கருத்துடன்நினைத்துகேட்ட காரியஞ்சித்தியாக
வருத்தமேயதிகமாகும் வஞ்சியர்பகையுமுண்டாம்
வெருத்துமேபோனஜிவன் வருகநாள்செல்லும்பாரே

(இ-ள்) மேற்கை அடுத்ததீவில் நின்றுகேட்ட ஆரூடத்தினால்
நினைத்தகாரியஞ் சித்தியாகாது வருத்தமுண்டாகும் ஸ்திரீகளின்
பகைநேரும் வெருப்பாக போனஜீவன் வரநாட்செல்லும் 10

11-வது வடமேற்கில் நின்றபலன்.

பாறெனவடமேற்குதன்னில் பரிவுடன்நின்றுகேட்ட
கோறெனகுறித்துகேட்ட கொள்கையும்முடிவதாகும்
சீறெனமணமுங்கூடுஞ் செய்தொழில்விருத்தியாகும்
நேறெனநேசராலே நீடுமுத்தியோகஞ்சாற்றே

(இ-ள்) வடமேற்கில் நின்று கேட்டகாரியம் முடிவாகும் கலி
யாணம் முடியும், செய்யும்படியான தொழிலும் விருத்தியாகும்,
சிநேகிதர்களாலே உத்தியொகம் நீடும் எ-று. 11

12-வது தீவில் நின்றபலன்.

சாற்றவேவடமேற்கைதான் சாந்ததீவதனில்நின்று
தோற்றவேநினைத்துகேட்ட தூரத்தின்சேதிகிட்டா
ஏற்றதோர்மனைவிமக்கள் யாவரும்பகையுமாவார்
தோற்றவேவாய்த்தநோயுந் தீரநாள்செல்லும்பாரே

(இ-ள்) வடவேற்கை அடுத்ததீவில் நின்றுகேட்ட ஆரூடத்தி
னால் துலதூரத்து செய்திவரமாட்டாது, மனையாளும் மைந்தரும்
புகையாகுவார் நோய்தீர நாட்செல்லும் எ-று. 12

13-வது வடக்கு நி றபலன்.

பார்க்கவேவடக்குதானும் பரிவுடன்நின்றுகேட்ட
தீர்க்கமாம்பொருளுந்தானுந் திகழுடன்வந்துசேரும்
மூர்க்கமாமெதிரிதன்னை முனிவுடன்வெல்லலாகும்
சேர்க்கையாம்வியாபாரத்திற் சிக்கிடும்லாபமென்னே

(இ-ள்) வடக்கில் நின்று கேட்ட ஆரூடத்தினால் நினைத்த
பொருள் வந்து சேரும், யெதிரியை வெல்லலாகும், சேர்க்கையா
கிய வியாபாரத்தினால் லாபமானது கிடைக்கும் எ-று. 13

14-வது தீவில் நின்றபலன்.

என்னவேவடக்கடுத்த யேற்றதீவதனில்நின்று
உன்னியேகேட்டகர்மம் வொருதிங்கட்குள்ளேயாகும்
அன்னியனொருவனாலே யடுத்ததோருதவிகூடுங்
கன்னியமிகவுண்டாகுங் கருதுமூர்போகநன்றே

(இ-ள்) வடக்கை அடுத்த தீவில் நின்று கேட்ட ஆரூடத்தி
னால் நினைத்த காரியம் ஒரு மாதத்திற்குள் முடிவாகும், அன்னிய
மனிதன் ஒருவனால் உதவியுண்டாகும், கீர்த்திபெருகும் குறித்த
ஊர்க்குப்போக நன்மைதருகும் எ-று. 14

15-வது வடகிழக்கில் நின்றபலன்.

நன்றெனவடகிழக்கில் நலமுடன்நின்றுவகட்ட
நின்றதோர்வழக்குவெல்லும் நேருங்கியபந்துகூடும்
சென்றதோர்ஜீவன்றானுஞ் சிறப்புடன்வந்துசேரும்
கன்றுடன்காலிகொள்ள களிப்புடன்வி ருத்தியாமே

(இ-ள்) வடகிழக்கில் நின்றுகேட்ட ஆரூடம் என்னவெனில்
நின்ற வழக்கானது வெல்லும், பந்துக்கள் கூடுவார்கள், போன
ஜீவன்வந்துசேரும், கன்றுகாலிகொள்ள விருத்தியாகும் எ-று-

16-வது தீவில் நின்றபலன்.

ஆமெனவடகிழக்கை அடுத்ததீவதனில்நின்று
தாமெனநினைத்துகேட்ட தக்கதோர்பொருளுங்கிட்டா
போமெனபோனஜீவன் பொருந்திடவந்துசேரா
நாமெனத்தொழிலில்மெத்த நஷ்டமும்வருகும்பாரே

(இ-ள்) வடகிழக்கை அடுத்த தீவில்நின்று கேட்ட ஆரூடத்தி தினால் நினைத்து கேட்டபொருள் கிடைக்கமாட்டாது, தெருப் பட்டுப்போன ஜீவன் வந்துசேரமாட்டாது செய்யுந் தொழில்க ளில் நஷ்டமும் கஷ்டமும் உண்டாகும் எ-று. 16

திசைகளின் ஆரூடம்

முற்றிற்று.

கிரகங்களின் ஆரூடம்

சக்கரம்.

1 சூரியன்	2 சந்திரன்	3 செவ்வாய்
4 புதன்	5 வியாழன்	6 சுக்கிரன்
7 சனி	8 இராகு	9 கேது

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங்கேட்க வந்து எதிர்நின்றோர்களை ஒன்பதில் குறை யக்கேட்டு அவர்கள்சொல்லிய லக்கத்தை கியாபகமாக வைத்து அந்த லக்கத்திற்கு எந்த கிரகம் உதயமாகின்றதோ அந்தக் கிரக பாடலை வாசித்து பலாபலன்களை சொல்வதாம் அல்லது மேற் கண்ட சக்கரத்தில் அடைத்திருக்கும் கிரகங்களில் ஏதேனும் ஒன் றைத் தொடச்சொல்லி அவர்கள் தொட்ட கிரகபாடலை வாசித் தும் சொல்லாம்.

1-வது சூரியன் பலன்.

விருத்தம்.

காணவேகதிரோன்றானுங் களிப்புடனுதித்ததாலே
பூணவேபொருளுமுண்டாம் போனவர்வந்துசேர்வார்
நாணயமிகவுண்டாகும் நாடியவழக்குவெல்லும்
ஊணவேயுத்தியோக மோங்கிடுமென்றுபேசே

(இள்) சூரியன் உதயமானதால் பொருள் கிடைக்கும், போனவரும் வந்து சேர்வார்கள் நாணயமுண்டாகும் தொடுத்த வழக்கானது வெல்லும், உத்தியோகம் விருத்தியாகும் எ-று. 1

2-வது சந்திரன் பலன்.

பேசவேசந்திரன்தான் பொட்புடனுதித்ததாலே
நேசராலுதவியாகும் நிலமதிற்பலனுண்டாகும்
வாசமாம்மாதுராலே வண்மையும்புகழுண்டாகும்
தோஷமாம்பிணியுந்தீர்ந்து தொல்லையுமகலும்பாரே

(இ-ள்) சந்திரன் உதயமானதால் நேசர்களால் உதவியாகும். பூமியில் பலன் தருகும், தாயாரினால் புகழுண்டாகும், தோஷமா கியப் பிணியானது தீர்ந்து தொல்லையானது ஒழியும் எ-று. 2

3-வது செவ்வாயின் பலன்.

பார்க்கவேசெவ்வாய்தானும் பரிவுடனுதித்ததாலே
மூர்க்கமாம்மாதராலே மூண்டிடும்கலகமெத்த
வேர்க்கவேகுடும்பந்தன்னில் வாய்த்திடுஞ்சிறுகுசண்டை
ஆர்க்குமேபொல்லானாக்கி அகத்தைவிட்டோட்டுங்காணே

(இ-ள்) செவ்வாய் உதயமானதால் ஸ்திரீகளினால் கலகமா னதுஉண்டாகும், குடும்பத்திலும் சிறுகுசண்டை நேரும், யாவ ருக்கும் பொல்லாதவனாகச் செய்விக்கும், வீட்டைவிட்டு ஓட்டி வைக்கும் எ-று. 3

4-வது புதன் பலன்.

காணவேகணக்கன்றானுங் களிப்புடனுதித்ததாலே
வாணியம்விருத்தியாகும் வளம்பெறவித்தையோங்கும்
பூணவேபூமிகொள்ளப் பலனதுமிகவுண்டாகும்
நாணியேபிணியுமோடும் நங்கையும்வந்துசேர்வாள்

(இ-ள்) புதன் உதயமானதால் வர்த்தகம் விருத்தியாகும் வித்தை பலிதமாகும், பூமிவாங்கப் பலன் தருகும், பிணியானது தீரும், பிரிந்துபோன ஸ்திரீயும் வந்துசேர்வாள் எ-று. 4

5-வது வியாழன் பலன்.

சேரவேவியாழன்றானும் சிறப்புடனுதித்ததாலே
நேரெனபுத்திரருண்டாம் நீடும்மனையிற்செல்வம்

பேறெனபெண்ணுங்கிட்டும் பேசியமணமுமாகும்
கோரியதெய்வத்தாலுங் குணமதுவுண்டாமென்னே

(இ-ள்) வியாழன் உதயமானதால் புத்திரவிருத்தியுண்டாகும் செல்வம் நீடும், குறித்த பெண்ணுங் கிடைக்கும் பேசிய கலியாணக் காரியம் முடியும் இப்போது கோறிவரும்படியான தெய்வ சகாயமுண்டாம் எ-று. 5

6-வது சுக்கிரன்பலன்

என்னவேபுகறென்றுனு மெழிலுடனுதித்ததாலே
கன்னியும் வந்துசேர்வாள் கலியாணமனையிலாகும்
பன்னியவழக்குதீரும் பந்துவுமுறவுமாவார்
வின்னமாய்பிணியுந்தீரும் வேந்தராலுதவியாமே

(இ-ள்) சுக்கிரன் உதயமானதால் குறித்த கன்னியும் வந்து சேர்வாள், கலியாணம் மனையில் நடக்கும், வழக்காணது தீரும், பந்துக்கள் உறவாவார்கள், வின்னமாகியப் பிணியானது தீரும், அரசர்களால் உதவியானது உண்டாகும் எ-று. 6

7-வது சனியின் பலன்

ஆமெனசனியன்றுனு மடவுடனுதித்ததாலே
சோமெனபொருளும்போகும் பொல்லாப்புமிகவுண்டாகும்,
நானெனவரசராலே நாடியபயங்கள்நேரும்
தாமெனயெதைசெய்தாலுந் தடைபடுந்தொழிலும்போமே

(இ-ள்) சனி உதயமானதால் பொருட்சேதமாகும் பொல்லாப்பு நேரும், அரசர்பயமுண்டாகும் எதைசெய்ய முயற்சிதேடினும்தடைபடும் தொழில்கெடும் எ-று. 7

8-வது இராகுவின் பலன்

போகவேயிராகுதானும் பொருந்திடயுதித்ததாலே
ஏகவேவெளியூர்போக யிமிசைகள்மிகவுண்டாகும்
தோகையர்பகையினாலே தோஷமாம்பொருளும்போகும்
தாகமாங்கடனினாலே தாங்கிடுந்துயரந்தானே

(இ-ள்) இராகு உதயமானதால், வெளியூர்போக இமிசையானது உண்டாகும், ஸ்திரீகளினுடைய பகையினால் தோஷமும் பொருட்சேதமுமாகும் கடன்படுகையால் எப்போதும் மனதிற்கு துயரமானது உண்டாகும்எ-று. 8

9-வது கேதுவின்பலன்.

தானெனகேதுவுந்தான் தங்கியேயுதித்ததாலே
ஊனெனசோரததாலும் உற்றிடும்பயங்கள்மெத்த
கானெனகஷ்டமோடு காட்டிடும்பொருளும்நஷ்டம்
நானெனசிநேகனாலே நண்ணிடும்வருத்தம்பாரே

(இ-ள்) கேது உதயமானதால் சோரத்தால் பயம் நேரும் கஷ்ட முண்டாகும், பொருள் நஷ்டமாகும், சினேகிதனால் வருதத முண்டாகும் எ-று. 9

பொருளிருக்கும் இடமறியும்

கிரகங்கள்.

வேறு-விருத்தம்.

கதிரவன் புதனுதிக்கில் சுவரின்பேரில்
  காணவே சசிபுகர்க்கு நீர்ச்சார்தன்னில்
பதியான செவ்வாய்க்குப் பகரக்கேளாய்
  பார்க்கதிண்ணை பொட்டெலது சுவரெட்டென்பாய்
துதியான குருவுதிக்கி லடுக்கனையில்
  துலங்கிய சனியுதிக்கி லடுப்பிலென்பாய்
சதியான பாம்புதிக்கில் துவாரமுள்ள
  சார்பான யிடமென்று சாற்றுவாயே

(இ-ள்) சூரியன் புதன் இவர்கள் உதயமாகில் களவுபோன பொருள் சுவரினபேரில் இருக்குமென்றும், சந்திரன் சுக்கிரன் இவர்கள் உதயமாகில் நீர்ச்சால்களிலென்றும், செவவாய் உதிக்கில் திண்ணையொட்டு அல்லது சுவரொட்டிலென்றும், குருவுதிக்கில் அடுக்கனையிலென்றும், சனி உதிக்கில் அடுப்பி லென்றும் இராகு கேது இவர்களுதிக்கில் துவாரமுள்ள இடங்களிலென்றும் பொருளிருக்குமிடமறிந்து சொல்கவேண்டும். 10

கிரகங்களின் ஆரூடம்

முற்றிற்று.

தேவதைகளின் ஆரூடம்

சக்கரம்.

1 சரஸ்தி	2 துர்கை	3 அக்கினி	4 பிரமன்
5 சந்திரன்	6 பரமசிவன்	7 அதிதி	8 குரு
9 ஆதிசேஷன்	10 சுக்கிரன்	11 பார்வதி	12 சூரியன்
13 சாத்தா	14 விஸ்வகர்மா	15 வாயு	16 குமரன்
17 இலக்குமி	18 இந்திரன்	19 அசுரர்	20 வருணண்
21 கணபதி	22 விஷ்ணு	23 வசுக்கள்	24 இயமன்
25 குபேரன்	26 காமதேனு	27 சனி	1 சரஸ்வதி

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங் கேட்க வந்து எதிர்நின்றோர்களைப் பார்த்து இருபத்தேழில் குறையச் சொல்லச்சொல்லி அவர்கள் சொல்லிய லக்கத்தை கியாபகமாக வைத்து அந்த லக்கத்திற்குறிய தேவதையின் பாடலை வாசித்து அவர்கள் கேட்ட காரியங்களையும், பொருளிருக்குமிடமும் அவை கிடைக்கும் கிடைக்காதென்றும் சொல்ல வேண்டும். அப்படிக்கல்லது இருபத்தேழில் குறையச் சொல்லத் தெரியாத பெயர்களை மேற்கண்ட சககரத்தில் அடைத்திருக்கும் தேவதைகளில் ஏதேனுமொன்றை தொட்ச்சொல்லி அவர்கள் தொட்ட தேவதைக்குறிய பாடலை வாசித்தும் சொல்லலாம்,

1-வது சரஸ்வதியின் பலன்.

விருத்தம்.

மிக்கவேசரஸ்வதிதான் மேலெனவுதித்ததாலே
சிக்கவேநினைத்துகேட்ட சீவனும்வந்துசேரும்

பக்குவமாகப்போன பரிவுடபொருளேதானும்
இக்கனவூருக்குள்ளே யிருக்குமென்றுறைத்திடாயே

(இ-ள்) சரஸ்வதி ஆரூடமாக உதிக்கில் நினைத்துக்கேட்ட ஜீவன் வந்து சேரும், கைவிட்டுப்போன பொருளும் ஊருக்குள்ளேதானே யிருக்குமென்று உறுதியாகச் சொல்கவும் எ-று. 1

2-வது துர்க்கையின் பலன்.

உரைற்றிடதுர்க்கைதானு முதையமேயானதாலே
திருத்தமாய்போனபொருள் தெருவுக்குள்ளிருக்குமென்பாய்
கரைத்திடநினைத்துக்கேட்ட காரியங்கைகூடாது
வருத்தமாய்போனசொத்து வாராதுயென்றுசொல்லே

(இ-ள்) துர்க்கை ஆரூடமாக உதிக்கில் போனபொருள் தெருவுக்குள் இருககும், இப்போது நீ நினைத்துகேட்ட காரியம் கைகூடிவரமாட்டாது போனசொத்துங் கிடைக்கமாட்டாது எ-று. 2

3-வது அக்கினியின் பலன்.

சொல்லவேயக்கினிதானுஞ் சுகமுடனுதித்ததாலே
அல்லவேகேட்டபொருள் அடவியிலிருக்குமென்பாய்
புல்லவேயதுவுமேதான் புகழுடன்வருவதில்லை
தொல்லையாங்கேட்டகார்யந் துலங்கிடாதென்றுசாற்றே

(இ-ள்) அக்கினிதேவன் ஆரூடமாக வுதிக்கில் இப்போது கேட்டபொருள் காட்டினிலிருக்கும், அப்பொருளும் வந்துசேரமாட்டாது நினைத்த காரியமும் பலிதமாகாது எ-று. 3

4-வது பிரமன் பலன்.

சாற்றவேபிரமன்றானுஞ் சார்புடனுதித்ததாலே
தோற்றவேபொருளுந்தானுந் துலங்கிடுங்காடிச்சாலில்
நேற்றியாமதுவேதானும் நேர்படகிடைக்குமப்பா
போற்றவேகேட்டகர்மம் புகழுடன்சித்தியாமே

(இ-ள்) பிரமதேவன் ஆரூடமாக வுதிக்கில் போனபொருள் காடிச்சால்களில் இருக்கும் அதுவும் அகப்படும் இப்போது நினைத்துகேட்ட காரியங்களும் சித்தியாக முடியும எ-று. 4

5-வது சந்திரன் பலன்.

சித்தியாஞ்சந்திரன்ருனுஞ் சீருடனுதித்ததாலே
பததியேநின்றுகேட்ட பண்புளப்பொருளுந்தானும்
சுத்தமாங்கட்டிலின்கீழ் சுகமுடன்தேடகிட்டும்
நத்தியமாதினலே நலமதுப்பெருகும்பாரே

(இ-ள்) சந்திரன் ஆரூடமாக உதிக்கில் இப்போதுக் கேட்ட பொருள் கட்டிலின்கீழ் தேடக்கிடைக்கும் நாடியிருக்கும்படியான ஸ்திரீயினல் நன்மையானது பெருகும் எ-று. 5

6-வது பரமசிவன் பலன்.

பார்க்கவேபரமன்ருனும் பண்புடனுதித்ததாலே
கோர்க்கவேகேட்டபொருள் கோவிலிலிருக்குமென்பாய்
தீர்க்கமாயதுவுமேதான் தேடிடகிடைக்கும்நோய்
பூர்க்கவேசகலமுந்தான் புகழுடன்சித்தியாமே

(இ-ள்) பரமசிவன் ஆரூடமாக வுதிக்கில் கேட்ட பொருள் கோவிலிற்குள் இருக்கும், அதை பிரயாசைப்பட்டுத் தேடக் கிடைக்கும், சகல காரியமுஞ் சித்தியாகும் எ-று. 6

7-வது அதிதியின் பலன்.

ஆமெனஅதிதிதானு மடவுடனுதித்ததாலே
நேமெனகேட்டபொருள் நெற்களஞ்சியமற்றிற்ருனும்
சேமெனதேடிப்பார்க்க சிரப்புடன்கிட்டுமென்பாய்
தாமெனதொழிலினுலுந் தனமதுபெருகுபென்னே

(இ-ள்) அதிதி ஆரூடமாக வுதிக்கில் கேட்ட பொருள் நெற் களஞ்சியத்தில் தேடிப்பார்க்க கிடைக்கும் செய்யும்படியானத் தொழிலினல் தனமானதுப் பெருகும் சேமமுண்டாகும் எ-று. 7

8-வது குருவின் பலன்.

என்னவேகுருவேதானு மெழிலுடனுதித்ததாலே
கன்னவேகேட்டபொருள் காணுமேவீட்டிற்குள்ளே
மன்னவேநினைத்தயெண்ணம் மகிழுடன்முடிவதாகும்
புன்னியநோயுந்தீரும் பகையதுவிலகும்பாரே

(இ-ள்) குரு ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் வீட் டிற்குள்ளேதானே கிடைக்கும், நினைத்த எண்ணமும் முடிவாகும் வாய்த்த நோயுந்தீரும், பகையுந் துலைந்துபோகும் எ-று. 8

9-வது ஆதிசேஷன் பலன்.

பாறெனஆதிசேஷன் பரிவுடனுதித்ததாலே
கோறெனகேட்டபொருள் குப்பையிலிருக்குமென்பாய்
நேறெனநினைத்தவேலை நேசமுல்முடிவதாகும்
பேசெனநோயுந்தீரும் பெருமையுண்டாகுமபாரே

(இ-ள்) ஆதிசேஷன் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் குப்பையோடு கலந்திருக்கும், இப்போது நினைத்திருக்கும்படி யானக்காரியம் சினேகிதர்களால் முடிவாகும், நோயானதுத் தீரும், பெருமையானது உண்டாகும் எ-று. 9

10-வது சுக்கிரன் பலன்.

பேசவேசுக்கிரன்ருன் பெட்புடனுதித்ததாலே
நேசமாய்கேட்டபொருள் நெல்லுரைதன்னிற்காண்பாய்
வாசமாய்வெளியூர்போக வர்த்தகம்பலிதமாகும்
பாசமாம்மனையாளலே பாக்கியம்மிகவுண்டாமே

(இ-ள்) சுக்கிரன் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் நெல்லு உரையில் பார்க்கக் கிடைக்கும், வெளியூர்போக வர்த்த கம் விருத்தியாகும், மனையாளினல் பாக்கியமுண்டாகும் எ-று.

11-வது பார்வதியின் பலன்.

உண்டெனபார்வதிதான் யுகந்திடவுதித்ததாலே
பண்டெனக்கேட்டபொருள் பாழ்மனைதன்னிற்காண்பாய்
தொண்டெனகோதையாலே குடும்பத்தின்வழக்குதீரும்
சண்டையுமொழிந்துநல்ல சவுக்கியமுண்டாம்பாரே

(இ-ள்) பார்வதி ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் பாழடைந்த மனைக்குள் கிடைக்கும் கொண்ட மனையாளினலே குடும்பத்தின் வழக்கானது தீரும், சண்டையானது ஒழியும், சவுக்கியமுண்டாகும் எ-று. 11

12-வது சூரியன் பலன்.

பாறெனசூரியன்ருன் பரிவுடனுதித்ததாலே
நேறெனகேடடபொருள் நீரினிலிருக்குமென்பாய்

பேறெனயவையுங்கிட்டும் பெருமையுமிகவுண்டாகும்
சீறெனசெய்யும்வேலை சிததியாமென்றுபேசே

(இ-ள்) சூரியன் ஆரூடமாக உதிக்கில் கேட்டபொருள் நீரி விருக்கும், அவையும் பிரயாசப்பட கிடைக்கும், பெருமையா னது உண்டாகும், செய்யும் வேலையும் சித்தியாகும் எ-று. 12

13-வது சத்தாவின் பலன்.

பேசவேசத்தாதானும் பெட்புடனுதித்ததாலே
கூசவேகேட்டபொருள் குளத்தினிலிருக்கும்பாரு
தோஷமாம்பிணியினாலே தொந்திரமிகவுண்டாகும்
நேசரால்கலகந்தானும் நேருமென்றுரைத்திடாயே

(இ-ள்) சத்தா ஆரூட்மாக உதிக்கில் கேட்டபொருள் குளத் தினிலிருக்கும், தோஷமாகியப் பிணியினால் தொந்திரவு உண்டா கும், நேசர்களால் கலகமானது உண்டாகும் எ-று. 13

14-வது விஸ்வகர்மாவின் பலன்.

உரைத்திடவிஸ்வகர்மா உதயமாயுதித்ததாலே
கருத்துடன்கேட்டபொருள் காணும்நீர்க்கரையிலென்பாய்
வருத்தமாமதுவுங்கிட்டா வழக்கதுகெலித்திடாது
திருத்தமாயெதைசெய்தாலுந் தீமையுண்டாகுஞ்சொல்லே

(இ-ள்) விஸ்வகர்மா ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் நீர்க்கரையிலிருக்கும், அவையுங் கிடைக்கமாட்டாது வழக்குங் கெலிக்காது, திருத்தமாகத்தானே யெத்தொழில் செய்யினும் அதனால் தீமையானது உண்டாகும் எ-று. 14

15-வது வாயுவின் பலன்.

சொல்லவேவாயுதானுஞ் சுகமுடனுதித்ததாலே
கெல்லவேகேட்டபொருள் கழனியிலிருக்குமென்பாய்
வெல்லவேயதுவுமேதான் விளங்கிடவசமாய்கிட்டும்
நல்லோர்நேசங்கூடும் நாடியதொழில்களாமே

(இ-ள்) வாயு ஆரூடமாக வுதிக்கில் கேட்டபொருள் கழனியி லிருக்கும், அதைத் தேடிப்பார்க்கக் கிடைக்கும், நேசமானது கூடும், நாடிப்போகும்படியான தொழிலும் முரூவாகும் எ-று.

16-வது குமரன் பலன்.

ஆமெனகுமரன்றானு மடவுடனுதித்ததாலே
போமெனக்கேட்டபொருள் பரித்தியும்விளையுகின்ற
நாமெனுமிடத்திலேதான் நாடியேதேடக்கிட்டும்
தாமெனநினைத்தவேலை தடையிலாமுடியும்பாரே

(இ-ள்) குமரன் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் பரித்திவிளையுமிடத்தில்போய் பார்க்கக் கிடைக்கும், இப்போது நினைத்துப் போகும்படியான வேலை தடையில்லாமல் முடிவாகும்.

17-வது இலக்ஷுமியின் பலன்.

பாறெனலக்குமிதான் பண்புடனுதித்ததாலே
சாறெனகேட்டபொருள் காணுமேபள்ளகாட்டில்
தேறெனபோனஜீவன் திகழுடன்வந்துசேரும்
சீறெனமனையாளாலே செல்வமும்பெருகுமென்னே

(இ-ள்) இலக்குமி ஆரூடமாக உதிக்கில் கேடட பொருள் பள்ளக் காட்டில்போய் பார்க்க அகப்படும், போன ஜீவனும் வந்து சேரும், மனையாளினால் செல்வமானதுப் பெருகும் எ-று.

18-வது இந்திரன் பலன்.

என்னவேயிந்திரந்தா னெழிலுடனுதித்ததாலே
மன்னியேகேட்டபொருள் மருவும்பாலவனத்தில்
பன்னியபவையுந்தானும் பரிவுடன்வசமாய்கிட்டும்
கன்னியமிகவுண்டாகுங் கருதியகருமமாமே

(இ-ள்) இந்திரன் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் பாலைவனத்தில்போய் பார்க்கக் கிடைக்கும், கன்னியமுண்டாகும் 18
நினைத்தகாரியம் முடியும் எ-று.

19-வது அசுரர் பலன்.

ஆமெனயசுரர்தானு மன்புடனுதித்ததாலே
கோமெனகேட்டபொருள் குதிரைபந்தலிலேகாணும்
போமெனவெளியூர்போக புகழுடன்கீர்த்தியோங்கும்
நாமெனநாடிசெய்யும் நற்றொழில்விருத்தியாமே

(இ-ள்) அசுரர் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் குதி ரைப் பந்தலில்போய் பார்க்கக் கிடைக்கும் வெளியூர்போக புக ழுங் கீர்த்தியுமோங்கும், நாடிசெய்யும்படியான தொழிலானது 19
விருத்தியாகும் எ-று.

20-வது வருணன் பலன்.

விருத்தியாம்வருணன்றானும் விளங்கிடவுதித்ததாலே
குறித்துநீகேட்டபொருள் கூரைவீட்டினிலிருக்கும்
வருத்தமாமதுவுந்தானும் வளம்பெறகிடைத்திடாது
பெருத்ததோர்வழக்கினாலே பொருளதுசிலவாஞ்சொல்லே

(இள்) வருணன் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் கூரை வீட்டிலிருக்கும், அதை எவ்வளவு பிறையாசை பட்டுதேடினும் கிடைக்கமாட்டாது பெருத்தவழக்கினால் பொருள் சேதமாகும் எ-று. 20

21-வது கணபதியின் பலன்.

சொல்லவேகணபதிதான் சுகமுடனுதித்ததாலே
வல்லவேகேட்டபொருள் வண்ணான்றன்றுறையிற்காணும்
தொல்லையுமகன்றுபோகும் தூரததுசெய்திகிட்டும்
நல்லதோர்பூமிவாங்க நலந்தருமபலனுண்டாமே

(இ-ள்) கணபதி ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் வண்ணான்துறையி லிருக்கும் அவையுங்கிடைக்கும், தொல்லையானது ஒழியும், தூரத்திலிருந்து சேதியானது வருகும் பூமியானது வாங்க பலனுண்டாகும் எ-று 21

22-வது விஷ்ணுவின் பலன்.

உண்டெனவிஷ்ணுதானு முதயமாயுதித்ததாலே
கண்டெனகேட்டபொருள் சண்டைசெய்பிடத்திற்காணும்
பண்டெனபழயநாளின் பருநிதிவந்துசேரும்
கொண்டதோர்மனையாளாலே குலவிடுஞ்செல்வந்தானே

(இ-ள்) விஷ்ணு ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் சண்டைசெய்யும் இடத்திலிருக்கும் அவையும் வந்துசேரும் பழய தனமுங்கிடைக்கும் கொண்டமனையாளினால் செல்வமுண்டாகும்.

23-வது வசுக்களின் பலன்.

தானெனவசுக்கள்தானுந் தங்கிடவுதித்ததாலே
மானெனகேட்டபொருள் வாலையிருப்பிடமேயாகும்
தேனெனயவையேதானுந் தேடவெகைக்குக்கிட்டும்
ஊனெனயுத்தியோகம் வோங்கிடுமென்றுபேசே

(இ-ள்) வசுக்கள் ஆரூடமாக உதிக்கில் கேட்ட பொருள் ஆலை யிருப்பிடத்திலிருக்கும் அதையுந்தேடக் கிடைக்கும் உத்தியோகம் விருத்தியாகும் எ-று- 23

24-வது இயமன் டலன்.

பேசவேயியமன்றானும் பேணியேயுதித்ததாலே
தோசமாய்போனபொருள் தெருவுக்குளிருக்கும்பாறு
கூசவேயவையுமேதான் கூடியேவரமாட்டாது
நேசரும் பகையேயாவார் நிந்தையுண்டாகுங்கூறே

(இ-ள்) இயமன் ஆரூடமாக உதிக்கில் கேட்டபொருள் தெருவிற்குளிருக்கும் அவைகிடைக்க மாட்டாது நேசர்களும் பகையாகுவார் நிந்தையுண்டாகும் எ-று. 24

25-வது குபேரன் பலன்

கூறவேகுபேரன்றானுங் குலவிவந்துதித்ததாலே
தேறவேகேட்டபொருள் தென்கிழக்கில்காணும்
நேறவேயதுவுமேதான் நேர்படக்கையிற்கிட்டும்
பேறவேபிரபுவாலே பெருகிடும்நிதியுமெனனே

(இ-ள்) குபேரன் ஆரூடமாக உதிககில் கேட்டப் பொருள் தென்கிழக்கு மனையிலிருக்கும், அவையுங் கிடைக்கும், பிரபுக்களால் நிதியானது பெருகும் எ-று. 25

26-வது காமதேனு பலன்.

என்னவேகாமதேனு மெழிலுடனுதித்தாலே
கன்னவேகேட்டபொருள் காணுமேசேற்றிற்றானும்
மன்னியபகையுந்தீரும் மனையாளும்வந்துசேர்வாள்
வின்னமாய்வாய்த்தநோயும் விட்டகன்றோடும்பாரே

(இ-ள்) காமதேனு ஆரூடமாக உதிக்கில் கேட்டபொருள் சேற்றிலிருக்கும் அகப்படும், பகையானது தீரும் மனையாளும்வந்து சேர்வாள், வின்னமாக வாய்த்தநோயானது அகன்றோடும். 26

27-வது சனியின் பலன்.

பாறெனசனியேதானும் பரிவுடனுதித்ததாலே
ஏறெனகேட்டபொருள் இருக்கும்பூந்தோட்டந்தன்னில்
சீறெனயதுவுமுன்கை சிக்கிடநாளேயாகும்
கோறெனகுறித்தகர்மம் கூடிடாதென்றுமாதே

(இ-ள்) சனி ஆரூடமாக உதிக்கில் கேட்டபொருள் பூந்தோட்டத்திலிருக்கும், அவையும் உன்கையில் சிக்கசிலநாட்செல்லும், இப்போது நினைத்தகாரியமும் கைகூடிவரமாட்டாது எ-று. 27

தேவதைகளின் ஆரூடம்

முற்றிற்று.

அதுர்ஷ்ட ஆரூடம்.

சக்கரம்.

1	2	3	4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27	28	29	30
31	32	33	34	35	36	37	38	39	40
41	42	43	44	45	46	47	48	49	50

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்கண்ட சக்கரத்தில் அடைத்திருக்கும் நெம்பர்களில் ஏதேனு மொன்றை தொடச்சொல்லி அவர்கள்தொட்ட நெமபரை கியாபகமாகவைத்து அவரவர்களுளுடைய அதுர்ஷ்டானுகூலத்தை சொல்லவேண்டும்.

1-வது நெம்பரை தொட்டபலன்.

விருத்தம்.

உருதியாய்யொன்றைதானு யுகந்துமேதொட்டதாலே
கருதியலாபந்தானுங் காண்பதுநிருசையாகும்
அகுதியாய்போனஜீவன் யவையுமேவாரதில்லை
குருகியநஷ்டந்தானும் கூடவேதோற்றும்பாரே

(இ-ள்) முதலாவது ஒரும் நெம்பரைதொட்டதால் நினைத்து கேட்ட தொழில்முகாந்திரத்தில் லாபங்காண்பது நிருசையாகும், அருதியாக வீடுவிட்டுப்போனஜீவன் வந்துசேரமாட்டாது நஷ்டமுண்டாகும எ-று. 1

2-வது நெம்பரை தொட்டபலன்.

பார்க்கவேரண்டைதானும் பரிவுடன்தொட்டதால்
சேர்க்கையாய்நினைத்துகேட்ட சொத்திற்குப்பழுதுமில்லை
ஏற்கையாய்வீட்டிற்குள்ளே யிருந்ததுவெளியேயாகும்
தீர்க்கமாய்கையுமெய்யாம் தானதைபிடிப்பாய்தானே

(இ-ள்) இரண்டாவது நெம்பரை தொட்டதால் இப்போது நீ கேட்ட சொத்திற்குப் பழுது இல்லை, அந்தசொத்து வீட்டிற்குள்ளிருந்து வெளிப்படும், அதை கையும் மெய்யுமாகப் பிடிப்பாய் எ-று. 2

3-வது நெம்பரை தொட்டபலன்.

தானெனமூன்றைதானுந் தாவியேதொட்டதாலே
கானெனகோரிகேட்ட காரியங்கைகூடாது
நானெனயதனைத்தானும் நம்பவேண்டியதேயில்லை
ஊனெனயுறவினாலே யுட்பகைநேருங்காணே

(இ-ள்) மூன்றுவது நெம்பரை தொட்டதால் இப்போதுக் கோரிகேட்டகாரியங் கைகூடாது அதை நம்புவதில் பிரையோசனமில்லை உறவினாலே உட்பகையானது நேரும் எ-று. 3

4-வது நெம்பரை தொட்டபலன்.

காணவேநான்கைதானுங் களிப்புடன்தொட்டதாலே
பூணவேகொண்டயெண்ணம் புகழுடன்முடிவதாகும்
வேணவேவிரவிற்றுனும் வேண்டியபடியேயாகும்
தோணவேதொடுவழக்குந் துலையுமென்றுரைத்திடாயே

(இ-ள்) நான்காவது நெம்பரை தொட்டதால் இப்போதுக் கொண்டயெண்ணம் முடிவாகும் யாதொரு காரியமும் சீக்கிரத்தில் முடிவுபெருகும் தொடுவழக்குத்துலையும் எ-று. 4

5-வது நெம்பரை தொட்டபலன்.

உரைத்திடயைந்தைதானு முகந்துமேதொட்டதாலே
கருத்துடன்நீயுமிப்போ கருதியஞாயந்தானும்
வெழித்திடவீணேயாகும் விலக்கிடுமதனைநீயும்
பொருத்திட திங்களெட்டு பின்புமேசுகங்களாமே

(இ-ள்) ஐந்தாவது நெம்பர தொட்டதால் இப்போது நீ பேசும் படியான ஞாயம் வீண்ஞாயமாகும் அதனைவிலக்கி விட வேடுண்ம், இன்னம் எட்டுமாகத்திற்குப் பின்பு சுகமுண்டாகும்.

6-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனயாரைத்தானு மடவுடன்தொட்டதாலே
போமெனபொருளுந்தானும் போகுமேதப்பியேகான்
தாமெனயதனால்வேஷ்டை தையலும்பகையுமாவாள்
நாமெனநாடிப்போகும் நாடடமுமுடிந்திடாதே

(இ-ள்) ஆருவது நெம்பரை கொட்டதால் பொருளானது கைதப்பிப்போய்விடும் அதனால்மனதிற்கு வேஷ்டையாகும், ஸ்திரீகளின் பகையானது நேரும், இப்போது நாடிப் போகும்படியான நாட்டமாகியக் காரியமும் முடிவுபெறமாட்டாது எ-று. 6

7-வது நெம்பரை தொட்டபலன்.

முடிந்திடயேழைத்தானு முனைந்துமேதொட்டதாலே
படிந்திடதெய்வத்தாலே பாரநோயதுவுந்தீரும்
தொடர்ந்ததோர்வழக்குவெல்லுந் தோஷமும கன்றுபோகு
கடந்ததோர்பொருளுந்தானுங் கைவசமாகும்பாரே

(இ-ள்) ஏழாவது நெம்பரை 'தொட்டதால் தெய்வ சகாயத்தினால் நோயானதுதீரும், தொடர்ந்த வழக்கானது வெல்லும், தோஷமானது அகலும், கைவிட்டுப் போனபொருள் வந்துசேரும் 7

8-வது நெம்பரை தொட்டபலன்.

பாறெனயெட்டைதானும் பரிவுடன்தொட்டதாலே
நேறெனநினைத்தஎண்ணம் நிலைபடுமுரிதியாகும்
கோறெனயரசராலுங் கூடியநேசராலும்
பேறெனநன்மைதானும் பெருகிடுமென்றுசாற்றே

(இ-ள்) எட்டாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்த யெண்ணம் முடிவாகும். அரசராலும் நேசர்களாலும் நன்மையுண்டாகும் எ-று. 8

9-வது நெம்பரை தொட்டபலன்.

சாற்றவேயொன்பான்தன்னை சார்புடன்தொட்டதாலே
நேற்றியாயெதைசெய்தாலும் நஷ்டமேதானுண்டாகும்

தோற்றுமேஐயமுந்தான் தொல்லையாங்கஷ்டம்நேரும்
ஏற்றவேபோறவேலை யிடாதுசெய்யுமென்னே

(இ-ள்) ஒன்பதாவது நெம்பரை தொட்டதால் எந்தக் காரியஞ் செய்தாலும் நஷ்டம் உண்டாகும், பயந்தோணும், தொல்லையாகிய கஷ்டமுண்டாகும், போகும்படியான வெலையில் இடராகும் எ-று. 9

10-வது நெம்பரை தொட்டபலன்.

என்னவேபத்தைதானு மேற்கையாய்தொட்டதாலே
வின்னமாம்போறவேலை வருத்தமும்பீடைநேரும்
கன்னியங்குறைவதாகும் கைப்பொருள்விரையமாகும்
மன்னியமாடுயாடு மனையதுபாழதாமே

(இ-ள்) பத்தாவது நெம்பரை தொட்டதால் போகும்படியான வேலை வின்னமாகும் வருத்தமாகிய பீடைநேரும், கன்னியமானதுக் குறையும் கைப்பொருள் விரையமாகும், மாடு ஆடுமனையும் பாழாகும் எ-று. 10

11-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனபதினொன்றைதா னடையுடன்தொட்டதாலே
நாமெனநாடிபோகும் நல்லதோர்கார்யமாகும்
ஓமெனயருளினாலே ஓங்கிடும்விளவுமேலாய்
தாமெனயுத்தியோகந் தழைத்திடுமென்றுபேசே

(இ-ள்) பதினொருவது நெம்பரை தொட்டதால் இப்போது நாடிபோகும் படியானக் காரியமாகும், தெய்வவருளால் வேளாண்மை விருத்தியாகும், உத்தியோகம் தழைத்து ஓங்கும் 11

12-வது நெம்பரை தொட்டபலன்.

பேசவேபனிரண்டைதான் பெட்புடன்தொட்டதாலே
ஏசவேகஷ்டத்தின்மேல் இஷ்டஜீவனமேயாகும்
கூசவேகுடும்பந்தன்னில் கோளுடன்கலகம்நேரும்
தோசமாம்பேயினாலே தொல்லையுண்டாகுஞ்சொல்லே

(இ-ள்) பனிரண்டாவது நெம்பரை தொட்டதால் கஷ்டத்தின் பேரில் இஷ்ட ஜீவனமாகும், குடும்பத்தில் கோளுங் கலகமும் நேரும் தோஷமாகியபேயினால் தொல்லையானது உண்டாகும் எ-று. 12

13-வது நெம்பரை தொட்டபலன்.

சொல்லவேபதிமூன்றைதான் சோர்வுடன்தொட்டதாலே
தொல்லையாம்பிணியினாலே தோஷமுமிகவுண்டாகும்
நல்லவர்பகையுமாவார் நாடியதொழிலும்போகும்
கல்லுடன்நீரினாலே கண்டமுண்டென்றுகூறே

(இ-ள்) பதிமூன்றாவது நெம்பரை தொட்டதால் தொல்லையாகிய பிணியால் தோஷமுண்டாகும், நல்லோர்களும் பகையாவார்கள், செய்யும்படியானத் தொழிலும்போகும், கல்லினாலும், நீரினாலும் கெண்டமுண்டாகும் எ-று. 13

14-வது நெம்பரை தொட்டபலன்.

கூறவேபதினான்கைதான் குறிப்புடன்தொட்டதாலே
சேறவேசம்பந்தந்தன்னால் ஜெயிக்கலாம்நினைத்தகர்மம்
நேறவேநாற்கால்ஜீவன் நிருதியில்தேடக்கிட்டும்
தேறவேதெய்வத்தாலுந் தீமையும்விலகும்பாரே

(இ-ள்) பதினான்காவது நெம்பரை தொட்டதால் சம்பந்தமதனால் நினைத்தகாரியங்களை ஜெயம்பண்ணலாம் இப்போது கோரியநாற்கால் ஜிவன் நிருதிமூலையில் தேடக்கிடைக்கும், தெய்வ சகாயத்தினால் வாய்த்த தீமையானது விலகும் எ று. 14

15-வது நெம்பரை தொட்டபலன்.

பார்க்கவேபதினைந்தைதான் பரிவுடன்தொட்டதாலே
வேர்க்கவேநினைத்தபொருள் வருகவேசிலநாட்செல்லும்
சேர்க்கையா யெதைசெய்தாலும் சிந்தனைமிகவுண்டாகும்
ஏர்க்கையாய் வெளியூர்போக யிமிசையாம்பிணியேகாட்டும்

(இ-ள்) பதினைந்தாவது நெம்பரை தொட்டதால் நினைத்த பொருள் வர சிலநாட்செல்லும், யெந்தகாரியங்களை செய்யினும் சிந்தனையுண்டாகும், வெளியூர்போக பிணியானதுக்காட்டும் 15

16-வது நெம்பரை தொட்டபலன்.

காட்டவேபதினாறைதான் களிப்புடன்தொட்டதாலே
நாட்டமாய்கொண்டயெண்ணம் நலமுடன்பலிதமாகும்
கூட்டமாம்பந்துசேருங் கோரியவழக்குவெல்லும
பூட்டமாம்சுயங்கள்தானும் புகழுடன்நடக்கும்பாரே

(இ-ள்) பதினாறாவது நெம்பரை தொட்டதால் இப்போதுக் கோரியயெண்ணம் முடிவாகும், பந்துக்கள் சேர்க்கையாயும், வழக்கானது வெல்லும் சுபகாரியங்கள் நடக்கும் சுபமுண்டாகும். 16

17-வது நெம்ப்ரை தொட்டபலன்.

பாறெனபதினேழைத்தான் பரிவுடன்தொட்டதாலே
கோறியகருமமாகா கோளினால்குற்றம்நேரும்
சீறெனகளவுபோன ஜிவனும்நஷ்டமாகும்
பேறெனப்பயணந்தன்னில் பீடையுண்டாகுமென்னே

(இ-ள்) பதினேழாவது நெம்பரை தொட்டதால் நினைத்தகாரியம் முடியாது, கோளினால் குற்றமுண்டாகும், களவுபோன ஜிவனும் நஷ்டமாகும், போகும்படியானப் பயணத்தில் பீடையுண்டாகும். 17

18-வது நெம்பரை தொட்டபலன்.

என்னவேபதினெட்டைதா னெழிலுடன்தொட்டதாலே
வின்மாம்நினைத்தவேலை வேந்தரால்தடையதாகும்
பன்னியவழக்குண்டாகும் பலபொருள்சேதமாகும்
மன்னியமாதராலும் மனையிலுங்கலகமாமே

(இ-ள்) பதினெட்டாவது நெம்பரை தொட்டதால் இப்போது நீ நினைத்தகாரியம் அரசர்களால் தடையாகும், வழக்கானது உண்டாகும், அதனால் பலவிதமானப் பொருளுஞ் சேதமாகும், மாதர்களால் வீட்டிற் கலகமானது உண்டாகும் எ-று. 18

19-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனபத்தொன்பானை அன்புடன்தொட்டதாலே
நாமெனயெடுத்தவேலை நலமுடன்செய்யநன்றாம்
தாமெனயுத்தியோகந் தழைத்திடுந்தனமுண்டாகும்
போமெனபோனஜிவன் புகழுடன்வந்துசேரும்

(இ-ள்) பத்தொன்பதாவது நெம்பரை தொட்டதால் எடுத்த வேலையை செய்ய நன்மையுண்டாகும், உத்தியோகம் பெருகும் தனங்கிடைக்கும், போனஜிவனும் வந்துசேரும் எ-று. 19

20-வது நெம்பரை தொட்டபலன்.

சேரவேயிருபான்றன்னை சிறப்புடன்தொட்டதாலே
கோரவேநினைத்தகர்மங் கூடுஞ்சீக்கிரத்திலாகும்

தேரவேதேவியாலுந் திருவதுவந்துசேரும்
நேரவேபெரியோர்நேசம் நீடுமென்றுரைசெய்வாயே

(இ-ள்) இருபதாவது நம்பரை தொட்டதால் நினைத்தகாரியஞ் சீக்கிரததில் முடிவாகும், மனையாளினால்திருவானது வந்துசேரும் பெரியோர்களின் நேசமானது நீடும் எ-று. 20

21-வது நெம்பரை தோட்டபலன்.

செய்யவேயிருபாநொன்றை சேரவேதொட்டதாலே
நையவேநினைத்தவேலை நாட்படமுடிவதாகும்
பையவேபயங்கள்தீரும் பயனமும்போகநன்றாம்
துய்யவேதுணைவராலுந் துலங்கிடுங்கீர்த்தியென்னே

(இ-ள்) இருபத்தோராவது நெம்பரை தொட்டதால் நினைத்த காரியம் நாட்பட முடிவதாகும், பயங்கள்தீரும் ஊர்பயணம்போக நன்மையுண்டாகும், துணைவர்களால் கீர்த்திபெருகும் எ-று. 21

22-வது நெம்பரை தோட்டபலன்.

என்னவேயிருபான்ரண்டை யிஷ்டமாய்தொட்டதாலே
கன்னியருரவுகூடுங் காரியஞ்சித்தியாகும்
மன்னியமனைவியாலும் மாடாடுவந்துசேரும்
தன்னியதந்தைதாயார் தனமதுகிடைக்கும்பாரே

(இ-ள்) இருபத்திரண்டாவது நெம்பரை தொட்டதால் ஸ்திரீகள் உறவுகூடும், காரியஞ்சித்தியாகும், மனையாளினால் மாடு, ஆடு வந்துசேரும், தந்தைதாயாருடைய தனமானதுக்கிடைக்கும் எ-று. 22

23-வது நெம்பரை தோட்டபலன்.

பார்க்கவேயிருபான்மூன்றை பரிவுடன்தொட்டதாலே
ஏர்க்கையாய்நினைத்தவேலை யாவுமேதடைத்தாகும்
மூர்க்கமாங்கலகம்மூளும் முந்தியபொருளும்போகும்
தோர்க்கவேசெய்யுமல்லால் துலங்கிடாதென்றுபேசே

(இ-ள்) இருபத்தி மூன்றாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தவேலையுந் தடையாகும், கலகம்நேரும் பொருள்சேதமாகும், தோர்வையடையச் செய்யும் ஜெயமில்லை எ-று, 23

24-வது நெம்பரை தோட்டபலன்.

பேசவேயிருபான்நாலை பேட்புடன்தொட்டதாலே
நேசமாம்நினைத்தபொருள் நேர்படவந்துசேரும்

தோசமுமகன்று போகுந்தொல்லையாம் பிணியுந்தீரும்
வாசமாம்பெரியோராலே வருகுநற்கீர்த்திகாண்பாய்

(இ-ள்) இருபத்திநாலாவது நெம்பரை தொட்டதால் நினைத்த பொருளானது வந்துசேரும், தோஷமகலும் தொல்லையாகிய நோய்தீரும், பெரியோர்களின் உதவியால் கீர்த்தியானது பெருகும் எ-று. 24

25-வது நெம்பரை தோட்டபலன்.

காணவேயிருபானைந்தை கருதியேதொட்டதாலே
தோணவேநினைத்தகர்மம் தோஷமாம்பலிதமில்லை
நாணவேகளவுபோன நற்பொருள்கிடைத்திடாது
பூணவேபூவையாலும் பொல்லாப்புண்டாகுஞ்சொல்லே

(இ-ள்) இருபத்தைந்தாவது நெம்பரை தொடடதால் நினைத்த காரியம் தோஷமாகும் பலிதமிராது, களவுபோன பொருள் கிடைக்க மாட்டாது, ஸ்திரீயினால் பொல்லாப் புண்டாகும் எ-று. 25

26-வது நெம்பரை தோட்டபலன்.

சொல்லவேயிருபானாறை சுகமுடன்தொட்டதாலே
நல்லவேநினைத்தவாறு நன்மனைகொள்ளநன்றாம்
வெலலவேவழக்குதீரும் வேண்டியபொருளுங்கிட்டும்
புல்லவேபோனஜ்வன் புகழுடன்வருகுஞ்சாற்றே

(இ-ள்) இருபத்தாறாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தமனை வாங்க நன்மையுண்டாகும், வழக்குதீரும், பொருள் கிடைககும், போனஜீவனும், வந்துசேரும் எ-று. 26

27-வது நெம்பரை தோட்டபலன்.

சாற்றவேயிருபானேழை சார்புடன்தொடடதாலே
தோற்றமாந்தொடுத்தவேலை தோஷமாம்பலித்திடாது
நேற்றியாயெதைசெய்தாலுந் நிந்தையாம்பகையதாகும்
போற்றியபொருளும்போகும் போனதோர்பொருள்கிட்டாதே

(இ-ள்) இருபத்தேழாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தவேலை தோஷமாகும் பலிதமிராது, எந்ததொழில் செய்தாலும் நிந்தையும் பகையுண்டாகும், பொருள் போகும் போனபொருள் கிடைக்கமாட்டாது எ-று. 27

28-வது நெம்பரை தொட்டபலன்.

கிட்டவேயிருபத்தெட்டை கீர்த்தியாய்தொட்டதாலே
நஷ்டமுமினிமேலில்லை நாடியபொருளுங்கிட்டும்
இஷ்டமாம்நேயங்கூடும் யெதிரியைவெல்லலாகும்
கஷ்டமுங்கவலைதீரும் கடந்ததோர்பொருளுங்காணும்

(இ-ள்) இருபத்தெட்டாவது நெம்பரை தொட்டதால் நஷ்டமானது யினிமேல் நேராது, நினைத்தபொருளுங் கிடைக்கும் இஷ்டமாகிய சிநேகங்கூடும், எதிரியை ஜெயஞ் செய்குவாய் கஷ்டமுங் கவலையுந்தீரும், போனபொருளுங் கிடைக்கும் எ-று. 28

29-வது நெம்பரை தொட்டபலன்.

காணவேயிருபானொன்பான் களிப்புடன்தொட்டதாலே
நாணயமிகவுண்டாகும் நாடியபொருளுங்கிட்டும்
பூணவேபோனஜீவன் புகழுடன்வந்துசேரும்
வேணதோருறவுகூடும் வேந்தராலுதவியாமே

(இ-ள்) இருபத்தொன்பதாவது நெம்பரை தொட்டதால் நாணயமுண்டாகும், நாடிப் போகும்படியானப் பொருளுங்கிடைக்கும், போனஜீவனும் வந்துசேரும், உறவானதுக் கூடும், அரசராலுதவியுண்டாகும் எ-று. 29

30-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனமுப்பதைதான் அடவுடன்தொட்டதாலே
போமெனநினைத்தஜீவன் பொருந்திடவாரத்தில்லை
தாமெனஸ்திரீயினாலே தாங்கியகலகம்நேரும்
நாமெனநஷ்டமோடு கஷ்டமுண்டாகுஞ்சொல்லே

(இ-ள்) முப்பதாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தஜீவன் வந்து சேரமாட்டாது ஸ்திரீகளினால் கலகம்நேரும் நஷ்டமும் கஷ்டமுண்டாகும் சுபகாரியங்கள் நடக்கமாட்டாது எ-று. 30

31-வது நெம்பரை தொட்டபலன்.

சொல்லவேமுப்பத்தொன்றை சுகமுடன்தொட்டதாலே
வெல்லவேநினைத்தவேலை வெகுசுருக்காகவாகும்
நல்லவருறவுகூடும் நாடியவழக்குவெல்லும்
தொல்லையாம்பிணியுந்தீரும் தோகையும்பெருவாள்பிள்ளை

(இ-ள்) முப்பத்தோருவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம் வெகுசீக்கிரத்தில் முடிவுபெறும், நல்லோர்களுடைய உறவானதுகூடும், தொடுத்த வழக்கானது கெலிக்கும் வாய்த்தநோயானது தீரும், கொண்ட பெண்டீரும் ஆண்பிள்ளையைப்பெருவாள் எ-று. 31

32-வது நெம்பரை தொட்டபலன்.

பெருகவேமுப்பானரண்டை பெட்புடன்தொட்டதாலே
குருகவேநினைத்தவேலை கூடிடதிங்களாகும்
வருகவேவருமையோடு வரசரால்பயமும்நேரும்
தருகவேதனமுமேதான் தானதுசிலவுமாமே

(இ-ள்) முப்பத்திரண்டாவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்தகாரியம்கைகூடிவர ஒருமாதஞ்செல்லும், வருமையுண்டாகும் அரசரால்பயம்நேரும், தனச்சிலவாகும் எ-று. 32

33-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனமுப்பான்மூன்றை அடவுடன்தொட்டதாலே
தாமெனயோககாலங் தயவுடனுதவியாச்சு
நாமெனகுடும்பந்தனில் நலமுடன்செல்வமோங்கும்
போமெனபொருளுஞ்சேரும் போனவர்வருவார்பாரே

(இ-ள்) முப்பத்திமூன்றுவது நெம்பரை தொட்டதால் இப்போது போகலாம் உதவியாச்சுது குடும்பத்தில் செல்வமானது ஓங்கும், பொருள்வந்து சேரும், போனவரும் புகழுடன் வருவார்கள் எ-று. 33

34-வது நெம்பரை தொட்டபலன்.

பார்க்கவேமுப்பானாலை பரிவுடன்தொட்டதாலே
சேர்க்கையால் பிறக்கும்பெண்ணால் செல்வம்போம்கஷ்டமுண்டாம்
மூர்க்கமாம்கோபத்தாலே மூண்டிடுமுயிற்குசேதம்
தோர்க்கவேதொடுவழக்கால் தொல்லையுமுண்டாமென்னே

(இ-ள்) முப்பத்திநாலாவது நெம்பரை தொட்டதால் பிறக்கும் பெண்குழந்தையினால் செல்வமானது அழியும் கஷ்டமுண்டாகும், கோபத்தினால் உயிர்ச்சேதம்நேரும், தொடுவழக்கினால் தொல்லையானது உண்டாகும் எ-று. 34

35-வது நெம்பரை தொட்டபலன்.

என்னவேமுப்பானைந்தை யெழிலுடன்தொட்டதாலே
உன்னியகாரியமாகும் உற்றதோர்லாபங்காணு
மன்னரால்வழக்குவெல்லும் மாதராலுதவியாகும்
கன்னியமாகத்தானுங் கலியாணம்நடக்கும்பாரே

(இ-ள்) முப்பத்தைந்தாவது நெம்பரை தொட்டதால் நினைத்தகாரியம் முடியும் ஆனால் லாபங்கிடைக்க மாட்டாது. அரசர் முகாந்திரத்தால் வழக்கானது தீரும் ஸ்திரீகளால்உதவி யுண்டாகும், கன்னியமாக மனையிற்கலியாணம் நடக்கும் எ-று. 35

36-வது நெம்பரை தொட்டபலன்.

பாறெனமுப்பத்தாரை பரிவுடன்தொட்டதாலே
தீறெனத்தேடிப்போகுஞ் சீவனுங்கிடைத்திடாது
கூறெனக்குறித்தபெண்ணுங் குலவிடவந்துசேருள்
ஏறெனயெதிரியாலே யிமிசையுண்டாகும்பாரே

(இ-ள்) முப்பத்தாராவது நெம்பரை தொட்டதால் இப்போ தேடிப்போகும் படியான ஜீவன்கிடைக்கமாட்டாது, குறித்திருக்கும்படியான பொண்ணும் வாராது, எதிரிகளால் இமிசையானது வுண்டாகும் மத்திபம் எ-று. 36

37-வது நெம்பரை தொட்டபலன்.

பார்க்கவேமுப்பத்தேழை பரிவுடன்தொட்டதாலே
கோர்க்கவேவழக்குவெல்லுங் கோதையும்பெருவாள்பிள்ளை
ஏர்க்கையாய்மனையுங்கிட்டு மெதிரியுமுறவேயாவார்
பூர்க்கவேகளவுபோன பொருளதுகிட்டுமென்னே

(இ-ள்) முப்பத்தேழாவது நெம்பரை தொட்டதால் வழக்கு தொடுக்க வெல்லும் மனையாளும் ஆண்குழந்தைகளைப் பெருகுவாள், மனையானதுக் கிடைக்கும் யெதிரிகளு முறவாவார்கள் களவாகப் போனப் பொருளுங் கிடைக்கும் எ-று. 37

38-வது நெம்பரை தொட்டபலன்.

என்னவேமுப்பத்தெட்டை யேற்கையாய்தொட்டதாலே
அன்னியனாலேமெத்த ஆபத்துத்தானுண்டாகும்
முன்னமேபோனஜீவன் மீண்டுமேவந்திடாது
கன்னியால்கலகம்நேருங் கைப்பொருள்விரையாமே

(இ-ள்) முப்பதெட்டாவது நெம்பரை தொட்டதால் அன்னிய மனிதனால் ஆபத்துநேரும், முன்னாகப்போன ஜீவன் மீண்டு வரமாட்டாது, ஸ்திரீயினால் கலகம் நேரும், பொருள் விரையமாகும் எ-று. 38

39-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனமுப்பத்தொன்பா னடவுடன்தொட்டதாலே
நாமெனகினறுவெட்ட நல்லதோர்சலமுண்டாகும்
தாமெனபசுவேகொள்ள தழைத்திடும்பாலுமுண்டாம்
போமெனபோனஜீவன் புகழுடன்வந்துசேரும்

(இ-ள்) முப்பத்தொன்பதாவது நெம்பரை தொட்டதாலே, கிணறு யெடுக்க ஜலம் பெருகும், பசுகொள்ள தழைக்கும், பால்பெருகும், வீடுவிட்டுபோன சீவனும் வந்துசேரும் எ-று. 39

40-வது நெம்பரை தொட்டபலன்.

சேரவேநாற்பான்றன்னை சிந்தித்துதொட்டதாலே
நேரவேதெண்டம்நேரும் நேசரும்பகையேயாவார்
கோரவேசுதன்தன்னாலே குடும்பமேபிரிவதாகும்
சிரவேசிறப்பும்போகும் சிந்தையிற்கவலைசொல்லே

(இ-ள்) நாற்பதாவது நெம்பரை தொட்டதால் தெண்டமுண்டாகும், சிநேகிதர்களும் பகையாவார்கள், புத்திரரால் குடும்பம் பிரிவாகும், சிறப்பானதுப்போகும், கவலையுண்டாகும் எ-று. 40

41-வது நெம்பரை தொட்டபலன்.

சொல்லவேநாற்பத்தொன்றை சுகமுடன்தொட்டதாலே
சல்லியமென்றுமில்லை சகலமும்நன்மையாகும்
புல்லவேமெய்யிற்றோன்றும் பிணியதுபரந்துபோகும்
கல்வியும்பலிதமாகும் கடந்ததோர்பொருளுங்கிட்டும்

(இ-ள்) நாற்பத்தோராவது நெம்பரை தொட்டதால் சல்லியமில்லை, சகல காரியமும் நன்மையாகும், தேகத்திற் றோன்றும் பிணியானது துலைந்துபோகும், கல்வி பலிதமாகும், போன பொருள் தானேவந்து சேரும் சுபம் எ-று. 41

42-வது நெம்பரை தொட்டபலன்.

கிட்டவேநாற்பான்றெண்டை கீர்த்தியாய்தொட்டதாலே
அஷ்டமச்சனியினாலே அலைச்சலும்மெத்தவுண்டாம்

தொட்டதோர்தொழில்களெல்லாந் தோஷமாங்கெடுதிநேரும்
இஷ்டரும்பகையேயாவார் யேகனுந்திங்களொன்றே

(இ-ள்) நாற்பத்திரண்டாவது நெம்பரை தொட்டதால் அஷ்டமச்சனியினல் அலச்சல்படச் செய்யும், தொழில்களிலும் தோஷமாகியக் கெடுதிநேரும், இஷ்டமாகயிருந்த பெயர்களும் பகையாவார்கள், இவைகளெல்லாம் ஒழிந்து நன்மையானது உண்டாக இன்னம் ஒருமாதங் கழியவேணும் மத்திபம் எ-று. 42

43-வது நெம்பரை தோட்டபலன்.

ஒன்றெனநாற்பான்மூன்றை உகந்துமேதோட்டதாலே
நன்றெனநினைத்தகர்மம் நலமுடன்பலிதமாகும்
குன்றிடாக்கும்பமோங்குங் குலமதுவிருத்தியாகும்
சென்றிடும்பயணந்தன்னில் சிலபொருள்கிடைக்குமென்னே

(இ-ள்) நாற்பத்திமூன்ருவது நெம்பரை தொட்டதால் இப்போது நினைத்த காரியம் நன்மையாகத்தானே முடிவாகும் குடும்பமும் விருத்தியாகும் குலம் விளங்கும் போகும்படியான பயணத்தினல் சில பொருளானது கிடைக்கும் எ-று. 43

44-வது நெம்பரை தோட்டபலன்.

என்னவேநாற்பானலே யிஷ்டமாய்தொட்டதாலே
கன்னியமிகவுண்டாகுங் காணுதபொருளுங்காணும்
சொன்னசொல்பலிதமாகுஞ் சோரமும்வெளியதாகும்
பென்னுடன்பந்துசேரு புகழ்மணமுடியும்பாரே

(இ-ள்) நாற்பத்திநாலாவது நெம்பரை தொட்டதால் கன்னியமுண்டாகும் களுமற்போன பொருளுங் கிடைக்கும், சொன்ன சொல்லானது பலிதமாகும் சோரமும் வெளிப்படும், பென்னேடு பந்துக்கள் சேருவார்கள், கலியாணம் முடியும் எ-று. 44

45-வது நெம்பரை தோட்டபலன்.

பாறெனநாற்பத்தைந்தை பரிவுடன்தொட்டதாலே
காரியங்கேடதாகும் களவதாய்பொருளும்போகும்
கோறெனகோரிநின்ற குள்ளமாம்மனிதனலே
சீரியவழக்குநேர்ந்து சிலவதுவாகுந்தள்ளே

(இ-ள்) நாற்பத்தைந்தாவது நெம்பரை தொட்டதாலே நினைத்த காரியம் கெடுதியாகும், களவாகப் போருள்போகும், இப்போது

க்கோரியிருக்குப்படியான குள்ள மனிதனல் வழக்கானது நேர்ந்து தனச்சிலவாகும், அவனை நீக்கவும் எ-று. 45

46-வது நெம்பரை தோட்டபலன்.

தள்ளவேநாற்பத்தாரை தாவியேதொட்டதாலே
கள்ளர்கைபோனசொத்து காணுமேதிங்கட்குள்ளே
உள்ளதோர்வழக்குதீரு முதவியுந்தானுண்டாகும்
வள்ளலின்கிருபையாலே வாண்பிள்ளைபிறக்குஞ்சீறே

(இ-ள்) நாற்பத்தாருவது நெம்பரை தொட்டதால் கள்ளர்கள் கைவசமாகப்போன பொருள் இன்னம் ஒரு மாதத்தில் கிடைக்கும், வழக்கானது கெலிக்கும், உதவியுண்டாகும், பரமசிவனுடையக் கிருபையினல் ஆண்பிள்ளையானதுப் பிறக்கும் எ-று. 46

47-வது நெம்பரை தோட்டபலன்.

சீறெனநாற்பானேழை சிறப்புடன்தொட்டதாலே
பேறெனபெண்ணல்மெத்த பழியுடன்கலகம்நேரும்
நேறெனசிறையினேடு நேர்ந்திடுஞ்சிறுகுசண்டை
காறெனயதனல்மெத்த கஷ்டமும்விளையுங்காணே

(இ-ள்) நாற்பத்தேழாவது நெம்பரை தொட்டதால் ஸ்திரீயினல் பழியாகியக் கலகம்நேரும், சிறைபடச் செய்யும், சிறுகுடன்.। சண்டையுண்டாகும், அதனல் ரொம்பவுங் கஷ்டமுண்டாகச் செய்யும் எ-று. 47

48-வது நெம்பரை தோட்டபலன்.

காணவேநாற்பானெட்டை கருதியேதொட்டதாலே
பூணவேபூவைசேர்வாள் புதுமனையாங்கநேரும்
தோணவேயுத்தியோகந் துலங்கிடும்நாட்குநாளும்
வேணவேயுறவுகூடும் விசனமும்பரக்கும்பாரே

(இ-ள்) நாற்பத்தெட்டவது நெம்பரைத் தொட்டதால் ஸ்திரீகள் சேர்க்கையாகும், புதுமனை வாய்குவாங்குவாய் உத்தியோகம்நாட்குநாள் விருத்தியாகும், உறவுகூடும், விசனந்தீரும் எ-று. 48

49-வது நெம்பரை தோட்டபலன்.

பார்க்கவேநாற்பானென்பான் பரிவுடன்தோட்டதாலே
மூர்க்கமேமுடியதாகும் மூண்டிடும்சிறுகுசண்டை

தோர்க்கவேநாட்குநாளுந் தொல்லையுமதிகமாகும்
சேர்க்கையாஞ்சிநேகத்தாலே சிலபொருள்நஷ்டமாமே

(இ-ள்) நாற்பத்தொன்பதாவது நெம்பரை தொட்டதால் கோபமே யதிகரிக்கும், சிறுகு சண்டைநேரும், நாட்குநாள் தொல்லைசெய்யும், சிநேகத்தினால் சிலபொருள் சேதமாகும் எ-று. 49

50-வது நெம்பரை தொட்டபலன்.

ஆமெனஅன்பான்றன்னை அடவுடன்தொட்டதாலே
சேமமேமிகவுண்டாகுஞ் சிந்தையின்கவலைதீரும்
தாமெனதமயன்சொத்தும் தடையிலாவந்துசேரும்
பூமெனபூமிவாங்க பெருமையுண்டாகும்பாரே.

(இ-ள்) அன்பதாவது நெம்பரை தொட்டதால் க்ஷேமமுண்டாகும் மனக்கவலை தீரும், தமையனுடைய சொத்துங் கிடைக்கும், பூமியானது வாங்கப் பெருமையானது உண்டாகும் எ-று. 50

அதுர்ஷ்ட ஆரூடம்

முற்றிற்று.

அவயவங்களின் ஆரூடம்.

ஆரூடம் சொல்லும் விபரம்.

வசனம்.

ஆரூடங் கேட்கவந்து எதிர்நின்றோர்களை பார்த்து அவர்களுடைய தேகத்தில் அவர்களை எங்கையேனுந் தொட்டுக்கொள்ளும்படியாகச் சொல்லி அவர்கள் தொட்டயிடத்தை கண்ணுற்று அந்த அவயவக் குறிக்குறிய பாடலை வாசித்து பலாபலன்களையும் அவர்கள் நினைத்துவந்த காரியங்களையும் சொல்லவேண்டும்.

வலது பாதத்தை தொட்டபலன்.

விருத்தம்.

காணவே வலதுபாதந் தன்னையேதான்
கண்மணியே தொட்டதினால் நன்மையுண்டாம்
பேணவே யூர்பயணம் போகநன்று
பெருமையாம் வர்த்தகங்கள் செய்யநன்று
வேணவே வழக்கதுவுந் தொடுக்கநன்று
விளங்கவே பயிர்தொழிலுஞ் செய்யநன்று
தோணவே குறித்தபெண் கொள்ளநன்று
தொல்லைபோ மவிழ்தமுந் தின்னநன்றே

(இ-ள்) வலதுபாதத்தை தொட்டதால் நன்மையானது உண்டாகும், ஊர்பயணம்போக சவுக்கியமுண்டாகும், வர்த்தகஞ் செய்ய விருத்தியாகும், வழக்கு தொடுக்க செலிக்கும், பயிர்த் தொழிலில் பலிதமாகும், குறித்த பெண்ணைக்கொள்ள குடும்பம் செழிக்கும் தொல்லையானது ஒழியும் அவிழ்தங்கொள்ள பிணி தீரும், எ.று. 1

இடது பாதத்தை தொட்டபலன்.

நன்றென தன்னிடது பாதந்தன்னை
நண்ணியே தொட்டதினால் நலியேகாணும்

குன்றுதக் குடும்பமது குறுகிப்போகும்
கோரியே போமிடத்திற் பகையுண்டாகும்
நின்றதோர் வழக்குமே கெலித்திடாது
நெருங்கிய பந்துவால் துயரம்நேரும்
கன்றுடனே காலிபொருள் சேதமாகும்
கருதியே யவிழ்தமது கொள்ளதீதாம்

(இ-ள்) தன்னுடைய இடது பாதத்தை தொட்டதால் நலியானது காட்டும், குடும்பமானது குறுகிப்போகும் கோரிப்போகுமிடத்தில் பகையுண்டாகும், வழக்கு கெலிக்காது, பந்துக்களால் துயரமுண்டாகும், கன்றுகாலியும் பொருள் சேதமுமாகும், 2
அவிழ்தமானதுக் கோள்ளதீதாம் எ-று.

வலது கணுக்காலை தொட்டபலன்.

கொள்ளவே வலதுகணுக் காலைதானும்
குணமாகத் தொட்டதினாற் குலவுஞ்செல்வம்
விள்ளவே வேந்தருட வுதவியுண்டாம்
வெகுவாக பூமிமனை கொள்ளநன்றாம்
தெள்ளியப் புதுமனை கோலநன்றாம்
தேடியே கிணர்துறவு யெடுக்கநன்றாம
உள்ளதோர் பிணியதுவு மொழியத்தானே
உத்தமனே சாந்தியது செய்யப்போமே

(இ-ள்) வலது கணுக்காலை தொட்டதால் செல்வமானதுப் பெருகும், அரசர்களுட உதவியுண்டாகும், கிணர் துறவு எடுக்க நன்றாம் பூமியும் மனையுங்கொள்ள நன்றாம் புதுமனை கோலவும் நன்றாம், வாய்த்திருக்கும் படியான நோயானது தீர சாந்தி செய்ய 3
ஒழியும் எ-று.

இடது கணுக்காலை தொட்டபலன்.

போமென யிடதுகணுக் காலைத்தானும்
புண்ணியனே தொட்டதினால் புகழொன்றில்லை
நாமென யெத்தொழிலை செய்யினுந்தான்
நஷ்டமே யாகுமல்லால் நலமிராது
தாமென வூறெங்கும் பகைசெய்விக்கும்
தானிருக்கு மிடம்விட்டு பேறச்செய்யும்

ஆமெனவே யரும்பொருளுஞ் சேதமாகும்
அரியபிணி பாதையுண்டா மென்றுசாற்றே

(இ-ள்) இடது கணுக்காலை தொட்டதால் புகழானது இல்லை எந்த தொழிலைசெய்யினும் நஷ்டமுண்டாகும், ஊர் முழுதும் பகை செய்விக்கும் இருக்கும் இடம் விட்டுப் பெயரச்செய்யும் 4
பிணியால் பாதையுண்டாம் எ-று.

வலது முழங்காலை தொட்டபலன்.

சாற்றவே வலதுமுழங் காலைத்தானும்
சார்பாக தொட்டதினால் சவுக்கியமுண்டாம்
நேத்தியா யாத்திரைகள் போகநன்றாம்
நேராகப் பசுவதுவுங் கொள்ளநன்றாம்
தோற்றவே சுபங்களது செய்யநன்றாம்
துணையாக சிநேகிதங்கள் செய்யநன்றாம்
போற்றவே யாலயம் போகநன்றாம்
புகழாக கீர்த்தியது பெருகும்பாரே

(இ-ள்) வலது முழங்காலைத் தொட்டதால் சவுக்கியமுண்டாகும், யாத்திரைசெய்ய நன்மையுண்டாகும், பசுக்கொள்ள பால் விருத்தியாகும், சுபகாரியங்கள் செய்ய உத்தமம் சிநேகிதங்கள் தேட வுதவியுண்டாகும், ஆலயம் போகநன்று அதனால் கீர்த்தி 5
யானதுப்பெருகும் எ-று.

இடது முழங்காலை தொட்டபலன்.

பார்க்கவே யிடதுமுழங் காலைத்தானும்
பரிவாகத் தொட்டதினால் பலன்களற்பம்
ஏர்க்கவே யெண்ணியதோ றெண்ணந்தானும்
இன்னமொரு திங்களைந்துக் குள்ளேயாகும்
பேர்க்கவே போனதோர் நாற்கால்ஜீவன்
பேசவே வாரமதில் வந்துசேரும்
தீர்க்கமா முன்னுடைய குலதெய்வத்தை
தேடியே பூசிக்க சுகமுண்டாமே

(இ-ள்) இடது முழங்காலை தொட்டதால் அற்பபலனை தரும், இப்போது எண்ணியயெண்ணம் இன்னம் ஐந்து மாதத்திற்

குள் முடிவாகும் போன நாற்கால்ஜீவன் ஒருவாரத்திற்குள் வந்து சேரும், உன்னுடைய குலதெய்வத்தை மறவாமல் பூசித்துவர சுக முண்டாம் எ-று. 6

வலது துடையை தொட்டபலன்.

உண்டாக வலதுதுடை தன்னையேதான்
உத்தமனே தொட்டதினால் சிததியாகும்
பண்டாக பழையநாள் தனமுங்கிட்டும்
பரிவாகப் பெரியோர்கள் நேயங்கூடும்
கொண்டதோர் மாதராலே குடிவிளங்கும்
கோரியதோர் தொழில்புரிய லாபங்காணும்
விண்டதோர் வாக்கியமு முண்மையாகும்
வெகுபேர்கள் நேயமுண்டா மென்றுகூறே

(இ-ள்) வலது துடையைத் தொட்டதால் நினைத்தகாரியஞ் சித்தியாகும், பழையநாளின் தனங்கிடைக்கும், பெரியோர்களுடைய நேயங்கூடும், கொண்ட பெண்டீரினால் குடும்பவிருத்தியாகும், நினைத்ததொழில் செய்ய லாபங்காணும், சொன்னமொழி உண்மையாகும், வெகுபேர்களுடைய நேசமானதுகூடும் எ-று. 7

இடது துடையை தொட்டபலன்.

கூறவே யிடதுதுடை தன்னைத்தானுங்
குணமாக தொட்டதினால் குலவுஞ்செல்வம்
ஏறவே வண்டிமாடு கொள்ளநன்றும்
இஷ்டம்போல் கைதொழிலுஞ்செய்யநன்றும்
நேறவே ஊர்பயணம் போகநன்றும்
நாடிய வர்த்தகர்கள் செய்யநன்றும்
பேறவே பேசியபெண் கொள்ளநன்றும்
பெருமையாய் கலியாணஞ் செய்யநன்றும்

(இ-ள்) இடது துடையை தொட்டதால் செல்வம்பெருகும் வண்டிமாடுகொள்ள விருத்தியாகும், கைதொழில்செய்ய நன்மை தருகும், ஊர்பயணம்போக நலமுண்டாம், வர்த்தகம் செய்ய லாபம்பெருகும், பேசியிருக்கும்படியானப் பெண்ணையேகொள்ளவும் கலியாணஞ் செய்யவும் நன்றும் எ-று. 8

வலது யிடையை தொட்டபலன்.

நன்றாக வலதுயிடை தன்னையேதான்
நாடியே தொட்டதினால் நன்மையில்லை
சென்றதோர் ஜீவனுமே வருவதில்லை
சேனையுள் வழக்கதுவுங் கெலித்திடாது
நின்றதோர் நிலையதனை விட்டுப்பேற்கும்
நேசமது பிரிந்துவிடும் நிந்தைநேரும்
குன்றாதப் பலமதுவுங் குன்றிபோகும்
குடும்பமும் வேராகு மென்றுசொல்லே

(இ-ள்) வலது யிடையைத் தொட்டதால் நன்மையானது ஒன்றுமில்லை, சென்ற ஜீவனும் வந்து சேரமாட்டாது, வெகுநாட்களாய் கோரியிருந்த வழக்கு கெலிக்கமாட்டாது, நிலையைவிட்டுப் பெயரச் செய்யும், சிநேகிதத்தில் விரோதம் நேரும், நிந்தையுண்டாகும், பலன் குறையும், குடும்பம் வேறாகும் எ-று. 9

இடது யிடையை தொட்டபலன்.

சொல்லவே யிடதுயிடை தன்னைதானும்
சுத்தமுடன் தொட்டதினால் சுயங்களுண்டாம்
வெல்லவே வெகுபேர்கள் நேயங்கூடும்
வெளிதேசம் போனவரும் வந்துசேர்வார்
புல்லவே புதுமனையும் புதுக்கநன்றும்
புகழாக பயிர்தொழிலுஞ் செய்யநன்றும்
நல்லதோர் துறவதுவு மெடுக்கநன்றும்
நாடிய தொழில்புரிய நன்மையாமே

(இ-ள்) இடது யிடையைத் தொட்டதால் சுகமுண்டாகும், வெகு பெயர்களுடைய நேசமானதுக் கூடும், வெளியூர் போனவர்களும் வந்து சேர்வார்கள், புதுமனை வாங்கிகட்ட நன்மையுண்டாகும் பயிர்த்தொழில் செய்ய விருத்தியாகும், துறவானது எடுக்க அதிகமாக நீர்சுறப்புண்டாகும், நாடியிருக்குந் தொழில்புரிய நன்மையானதுப் பெருகும் எ-று. 10

அடிவயற்றை தொட்டபலன்.

ஆமெனவே யடிவயறை தொட்டதாலே
அலைச்சல்மெத்த காண்பதுடன் யபாயம்நேரும்

N. DORAIRAJAN,
ELECTRICAL WIRING CONTRACTOR,
5, VADAMALAI PILLAI ST.,
VEPERY POST, MADRAS

தாமெனவே புத்திரற்குந் தோஷஞ்சாரும்
 தங்கிய கெர்ப்பமது யழிந்துபோகும்
நாமென வயற்றுவலி பாதைசெய்யும்
 நண்ணிய விஷத்தினால் பயங்களுண்டாம்
போமென போனதோர் ஜீவன்றானும்
 பிடிபட்டு மாண்டதெனப் புகலுவாயே

(இ-ள்) அடிவயற்றை தொட்டதால் அலைச்சலுண்டாகும், அபாயம் நேரும், புத்திரர்களுக்கும் தொஷஞ்சாறும், கெர்ப்பமானது அழியும் வயற்றுநோய் பாதைசெய்யும், விஷபயமுண்டாகும் வீடுவிட்டுப்போன ஜீவன் ஒருவர் கையில் பிடிபட்டு மாண்டு போகும் எ-று.
11

தொப்புளை தொட்டபலன்.

புகலவே தொப்புள்தனை தொட்டதாலே
 போனதோர் பொருள்வருகும் புகழுண்டாகும்
அகலவே யயலூரில் கிடைக்கும்லாபம்
 அப்பனே கைத்தொழிலால் சீர்த்தியோங்கும்
இகலவே யெதிரிதன்னை வெல்லச்செய்யும்
 இஷ்டரால் நன்மையது தானுண்டாகும்
தகலவே கஷ்டமொடு கவலைதீரும்
 தங்கிய வழகதுவுங் கெலிக்கும்பாரே

(இ-ள்) தொப்புளை தொட்டதால் கைவிட்டுப்போன பொருள் கிடைக்கும், அயலூருக்குப்போக லாபமுண்டாகும், கைத்தொழிலினால் கீர்த்தியானது பெருகும் எதிரியை வெல்லலாகும், நேசர்களால் நன்மையானது உண்டாகும் கஷ்டமுங் கவலையுந் தீரும், வழக்கானது கெலிக்கும் எ-று.
12

வலதுபக்கம் விலாவை தொட்டபலன்.

பாறென வலதுபக்கம் விலாவைதானும்
 பரிவாகத் தொட்டதினால் பழியேநேரும்
சீறென ஸ்திரீதளினால் கலகமெத்த
 . சிந்தனையாங் கைப்பொருளுஞ் சேதமாகும்
பேறென காலிகன்று மனையுஞ்சேதம்
 பெண்டீர்க்கும் பொல்லாத பீடைகாட்டும்

தேறென தேசாந்திரம் போனபேரும்
 திரும்பிவந்து சேரார்களென்று செப்பே

(இ-ள்) வலது பக்கம் விலாவை தொட்டதால் பழியானது நேரும், ஸ்திரீகளினால் கலகமானது உண்டாகி மனவருத்தமாக பொருள் சேதமாகும், அத்துடன் கன்றுகாலியும் மனையும் சேதமாகும், மனையாளுக்கும் பொல்லாத பீடையானதுகாட்டும் தேசாந்திரம் போனபேரும் வந்துசேரமாட்டார்கள் எ-று.
13

இடதுபக்கம் விலாவை தொட்டபல.

செப்பவே யிடதுபக்கம் விலாவைத்தானும்
 சிறப்பாகத் தொட்டதினால் செல்வமோங்கும்
ஒப்பவே ஊர்பயணம் போகத்தானும்
 உன்னுடைய மனம்போலு முதவியாகும்
மெப்பவே யுத்தியோகம் மேலதாகும்
 மைந்தருக்கும் வித்தையது பலிதமாகும்
கொப்பவே குடும்பமது விருத்தியாகும்
 கோறிய மனிதரா லுதவியுண்டாம்

(இ-ள்) இடதுபக்கம் விலாவை தொட்டதால் செல்வமானது பெருகும், ஊர்பயணம்போக உன்மனம்போல் முடிவாகும் உத்தியோகம் மேலோங்கும், மைந்தர்களுக்கும் வித்தைபலிதமாகும், குடும்பமும் விருத்தியாகும், இபபோது கோரியிருக்கும்படியான மனிதரால் உதவியுண்டாகும் எ-று.
14

வலது ஸ்தனத்தை தொட்டபலன்.

உண்டென வலதுஸ்தனந் தன்னைத்தானும்
 உத்தமனே தொட்டதினால் சித்தியுண்டாம்
கொண்டதோர் கோவாலும் விருத்தியாகும்
 கொம்பனையாள் தன்னாலே குலவுஞ்செல்வம்
பண்டான பழையமனை வந்துசேரும்
 பாராளு மரசர்களா லுதவியாகும்
மிண்டான மிடியதுவுந் துலைந்துபோகும்
 மேலான பந்துவுற வாகும்பாரே

(இ-ள்) வலதுபக்கம் ஸ்தனத்தை தொட்டதால் நினைத்தகாரியஞ்சித்தியாகும், கொண்டபசுவினால் விருத்தியுண்டாகும் மனையாளினால் செல்வம்பெருகும், பழையமனையும் வந்துசேரும் அரசர்க

ளுடைய உதவியுண்டாகும், மிடியென்னும் பயமானது துலையும், மேலாகிய பந்துக்கள் உரவாகவந்து சேர்வார்கள் எ-று. 15

இடது ஸ்தனத்தை தோட்டபலன்.

பார்க்கவே யிடதுஸ்தனந் தன்னைத்தொட்டால்
பரிவாகத் தொட்டதினல் பயங்களுண்டாம்
ஏர்க்கவே யெதிரிகளால் பொருளுஞ்சேதம்
என்னேரம் மனைதனிலே கலகம்நேரும்
தோர்க்கவே தோஷங்கள் வந்துசாரும்
துலையாமல் பேய்பிடித்து பாதைசெய்யும்
யார்க்குமே பொல்லாத னுக்கிவைக்கும்
யண்டிய தொழிலதுவும் போகுந்தானே

(இ-ள்) இடதுபக்கம் ஸ்தனத்தை தொட்டதால் பயமுண்டாகும், எதிரிகளால் பொருள்சேதமாகும் எந்நேரமும் மனையில் கலகம்நேரும், தோஷங்கள் வந்துசாறும், பேயானது பிடித்து பாதையுண்டாகும், யார்க்கும் பொல்லாதவனுகச் செய்யும் அடுத்து செய்யும்படியானத் தொழிலும்போகும் எ-று. 16

மார்பை தோட்டபலன்.

தானென மார்பைதனை தொட்டதாலே
தைரியங்க ளுண்டாகுந் தனமுஞ்சேரும்
கோனென வாகன திகளுண்டாகும்
கோரிய தொழில்கிடைகுங் குற்றம்நீங்கும்
தேனென தேடியதோர் ஜீவன்கிட்டும்
தேவியரு மாண்பிள்ளை பெற்றெடுப்பாள்
நானென நாடியப் பயணந்தன்னில்
நன்மையுண் டாகுமென நவிலுவாயே

(இ-ள்) மார்பை தொட்டதால், தைரியமுண்டாகும் தனஞ் சேரும் வாகனதிகள் உண்டாகும் இப்போது கோரியதொழில் கிடைக்கும், குற்றமானதுநீங்கும், தேடிப்போகும்படியான ஜீவன் கிடைக்கும், மனையாளும் ஆண்பிள்ளையைப் பெருகுவாள் இப்போது நாடிப்போகும்படியான பயணத்தில் நன்மையானது உண்டாகும் எ-று, 17

நெஞ்சை தோட்டபலன்.

நவிலவே நெஞ்சைதனை தொட்டதாலே
நலமான செய்தொழிலும் விரையமாகும்
கௌவியவே கஷ்டமொடு கலகமுண்டாம்
காரியங் கெடுதலொடு பயமுண்டாகும்
குவியவே குடும்பமது பிரிவுமுண்டாம்
கோதையெனு மாதரால் கெண்டமுண்டாம்
புவியினில் பொல்லாங்கு மெத்தவுண்டாம்
போனதோர்பொருள்வராதென்றுபேசே

(இ-ள்) நெஞ்சை தொட்டதால் செய்யும்படியானத் தொழில் போகும், பொருள் விரையமாகும், கஷ்டம்நேரும், கலகமுண்டாகும், காரியங்கெடும், பயமுண்டாகும், குடும்பமானது பிரிந்து போகும், ஸ்திரீகளால் கெண்டம் நேரும், பொல்லாப்பு மெத்த வுண்டாகும், போனபொருளுங் கிடைக்கமாட்டாது எ-று. 18

தொண்டையை தோட்டபலன்.

பேசவே தொண்டைதனை தொட்டதாலே
பொல்லாத நிந்தையொடு பழியுமுண்டாம்
தோஷமாந் துலதூரம் போனபேற்கும்
தொல்லையா மலைச்சலொடு பீடையுண்டாம்
பாசமாம் பந்துகளில் பகையுண்டாக்கும்
பாராளும் வேந்தர்களால் சிறையுமுண்டாம்
கூசவே கொண்டதோ ரெண்ணமெல்லாம்
கொடுமையாய் விளையுமெனக் கூறுவாயே

(இ-ள்) தொண்டையை தொட்டதால் நிந்தையுண்டாகும் பழிநேரும், தூரதேசம்போன பேர்களும் தொல்லையாகிய அலைச்சலும் பீடையுமுண்டாகி வாடுவார்கள், பந்துக்களில் பகைநேரும் அரசர்களால் சிறைபடச் செய்யும், கொண்ட எண்ணங்கள் யாவும் கொடுமையாக விளையும் எ-று. 19

வலதுபக்கம் கழுத்தை தோட்டபலன்.

கூறவே வலதுபக்கம் கழுத்தைதானும்
குணமாகத் தொட்டதினல் கொடுமைநீங்கும்
தேறவே தேடிய பொருளுங்கிட்டும்
தேசாந்திரம் போனவரும் வந்துசேர்வார்

பேறவே பேசியபெண் கொள்ளத்தானும்
பெருமையொடு குடும்பமது விருத்தியுண்டாம்
நேறவே நெடுநாளின் வழக்குதீரும்
நேசங்கள் கூடுமென நீசொல்வாயே

(இ-ள்) வலது பக்கம் கழுத்தை தொட்டதால் கொடுமையானது நீங்கும், தேடிப்போகும்படியான பொருள் கிடைக்கும், தேசாந்திரம் போனபேரும் வந்து சேர்வார்கள், பேசிய பெண்ணைகொள்ள பெருமையும் குடும்பவிருத்தியுமுண்டாகும், நெடுநாளாக நின்றிருந்த வழக்கானது தீரும், நேசர்கள் வந்துக் கூடுவார்கள் எ-று. 20

இடதுபக்கம் கழுத்தை தோட்டபலன்.

சொல்லவே யிடது பக்கங் கழுத்தைதானும்
சோதனையாய் தொட்டதினுல் சுகமொன்றில்லை
புல்லவே பிணியெனும் தோஷத்தாலே
பெருகிடும் பாதையது மெத்தவுந்தான்
தொல்லையாந் தொடுவழக்கால் பொருளும்போகும்
துலங்கிய மாடாடு கன்றுஞ்சாகும்
அல்லலா மிருப்பிடத்தை விட்டுயேக
அவகேடு யுண்டாகு மென்றுசாற்றே

(இ-ள்) இடதுபக்கம் கழுத்தை தொட்டதால் சுகங்களில்லை பிணியென்னும் தோஷத்தினுல் பாதையானது உண்டாகும் தொடுவழக்கினுல் பொருள் சேதமாகும், மாடு ஆடு,கன்றுசாகும் இப்போதிருக்குமிடத்தை விட்டுயேக அவகேடானது உண்டாகும் எ-று. 21

பின்கண்டத்தை தோட்டபலன்.

சாற்றவே கழுத்துபின் கண்டந்தன்னை
சார்பாகத் தொட்டதினுல் சங்கடங்கள்தீரும்
தோற்றவே மாடாடு பொருளுஞ்சேரும்
தோஷமாய் தொடர்ந்தபிணி பறந்துவோடும்
ஏற்றவே யெடுத்ததோர் தொழிலுமாகும்
யெழிலான பெரியோர்கள் நேயங்கூடும்
போற்றவே புதுமனையும் புதுக்கவோங்கும்
பொல்லாதக் கலகமது வொழியும்பாரே

(இ-ள்) கண்டத்தை தொட்டதால் சங்கடமானது தீரும் ஆடு மாடு பொருள் இவைகள்சேரும் தோஷமாகிய பிணியானது துலைந்து போகும், இப்போது நினைத்ததொழில் கைகூடிவரும் பெரியோர்களுடைய நேயங்கூடும், புதியமனைகட்ட விருத்தியாக வோங்கும், பொல்லாதக் கலகமானது ஒழியும்பாரே எ-று. 22

வலதுகை விரல்களை தோட்டபலன்.

பார்க்கவே வலதுகை விரலைத்தானும்
பரிவாகத் தொட்டதினுல் பயங்கள்தீரும்
ஏர்க்கவே யெதிரிதனை வெல்லலாகும்
இஷ்டம்போல் ஊர்பயணம் போகலாகும்
தீர்க்கமாங் கலியாணஞ் செய்யலாகும்
தேடியே பந்துக்கள் வந்துசேர்வார்
யார்க்குமே நல்லோனு யாக்கிவைக்கும்
அரியவே யிப்பலனை தெரியச்சொல்லே

(இ-ள்) வலதுகை விரல்களைதொட்டதால் பயமானது தீரும், எதிரியை வெல்லலாகும், இஷ்டம்போல் ஊர்பயணம் போக நன்மையுண்டாகும், கலியாணஞ்செய்ய சுகம்பெருகும் பந்துக்கள் வந்துசேர்வார்கள், யார்க்கும் நல்லவனுகச் செய்விக்கும் எ-று. 23

இடதுகை விரல்களை தோட்டபலன்.

சொல்லவே யிடதுகை விரலைத்தானும்
சோதனையாய் தொட்டதினுல் சோரமாகும்
அல்லலா மடிவயற்றில் நோயுண்டாகும்
அடுத்ததோர் தொழில்தனிலே பகையேநேரும்
புல்லவே பொருளோடு மனைமாடாகும்
போனதுவு மொருக்காலுங் கிடைத்திடாது
தொல்லையாம் தோஷங்கள் வந்துசாறும்
துணைவர்களும் பகையாவா றென்றுகூறே

(இ-ள்) இடதுகை விரல்களை தொட்டதால் சோரமானது செய்விக்கும், அடிவயற்றில்நோயுண்டாகும், செய்யுந் தொழிலில் பகைநேரும், பொருள் மனை மாடு ஆடு இவைகள்போனது மறுபடியுங் கிடைக்கமாட்டாது, தோஷமானது சாறும் துணைவர்களும் பகையாவார்கள் எ-று. 24

வலது உள்ளங்கையை தொட்டபலன்.

கூறவே வலதுவுள்ளங் கையைத்தானும்
குணமாகத் தொட்டதினால் குற்றம்நீங்கும்
தேறவே தனதான்னியம் விருத்தியாகும்
தெய்வவரு ளால்பிணியு மொழிந்துபோகும்
சேறவே சென்னலது விளைவுமுண்டாம்
சேயர்களும் மேலாக தழைத்துவாழ்வர்
பேறவே பெண்பாலா லுதவியாகும்
பெருமையாய் குடும்பமது செழிக்கும்பாரே

(இ-ள்) வலது உள்ளங்கையை தொட்டதால் குற்றமானது நீங்கும் தனதானியம் விருத்தியாகும், தெய்வத்தின் கிருபையால் பிணியானது ஒழியும், சென்னல் விளைவுண்டாகும், மைந்தர்களும் செழித்து வாழ்வார்கள், ஸ்திரீகளால் உதவியானது உண்டாகும் குடும்பம் செழிக்கும் எ-று. 25

இடது உள்ளங்கையை தொட்டபலன்.

பாறென யிடதுவுள்ளங் கையைதானும்
பரிவாகத் தொட்டதில் பலன்களற்பம்
சீறென சிலபொருளுஞ் சேதமாகும்
சிந்தனையாம் மைந்தருக்கும் பிணியேகாட்டும்
போறெனவே பொல்லாதக் கலகம்நேரும்
பூவையுட கெர்ப்பமது யழிந்துபோகும்
காறெனவே களவதினால் கவலையாகும்
கஷ்டங்கள் வாய்க்குமெனக் கண்டுவிள்ளே

(இ-ள்) இடது உள்ளங்கையை தொட்டதால் பலன்கள் யாவும் அற்பமாகும், பொருள் சிலது சேதமாகும், பிள்ளை பெண்கள் இவர்களுக்கு பிணியானது காட்டும், கலகம் செய்விக்கும், மனையளினுடைய கெர்ப்பமானது அழிந்துபோகும் களவினால் கவலையானது உண்டாகும், கஷ்ட முண்டாகும் எ-று. 26

வலது புறங்கையை தொட்டபலன்.

விள்ளவே வலதுபுறங் கையைத்தானும்
விளங்கவே தொட்டதினால் வருத்தமுண்டாம்
கொள்ளவே யகவிளையு மாகுமப்பா
கோளினால் குற்றமது வந்துசாறும்

தள்ளவே தானினைத்த தொழிலேதானும்
தடையாகுங் கருத்தவோர் நேசனாலும்
உள்ளதோர் பொருளதுவு மொழிந்துபோகும்
உடம்பினில் நோயதுவு முண்டாம்பாரே

(இ-ள்) வலது புறங்கையை தொட்டால் வருத்தமுண்டாகும், கொள்வது அகவிலையாகவிருக்கும், கோளினால் குற்றமானது வருகும், இப்போது தான் நினைத்திருக்கும்படியான தொழில் ஒரு கருத்த நேசனால் தடையாகும், பொருள் சேதமாகும், உடம்பில் நோயுண்டாகும் எ-று. 27

இடது புறங்கையை தொட்டபலன்.

பார்க்கவே யிடதுபுறங் கையைத்தானும்
பரிவாகத் தொட்டதினால் பலன்களுண்டாம்
சேர்க்கவே வெகுஜெனங்க ளுறவேகூடும்
சேனைநாள் பிணியொழியும் செல்வமோங்கும்
பூர்க்கவே பெண்டிரும் பெருவாள்பிள்ளை
புத்திரிக்கு மணமாகும் பேயோடிப்போம்
ஏர்க்கவே யெத்தொழிலுஞ் செய்யநீடும்
எண்ணிய யெண்ணமது முடியும்நேரே

(இ-ள்) இடது புறங்கையைத்தொட்டதால் பலன்களுண்டாகும், வெகுஜனங்கள் உறவாகவந்து கூடுவார்கள், வெகுநாளாயிருந்த நோயானதுதீரும், செல்வமானதுப் பெருகும், மனையாளும் ஆண்பிள்ளையைப் பெருகுவாள், புத்திரிக்கும் கலியாணமாகும் பிடித்திருந்த பேயானது ஓடிப்போகும் எந்த தொழிலை பிரவேசித்துச் செய்யினும் நீடியோங்கும்' எண்ணிய எண்ணம்போல் காரியங்கள் முடிவாகும் எ-று. 28

வலது மணிகட்டை தொட்டபலன்.

நேறென வலதுமணிகட்டைத்தானும்
நேற்றியாய் தொட்டதினால் நினைத்ததாகும்
சீறென சென்றதோர் பொருளுங்கிட்டும்
சிக்கியே வாய்த்ததோர் கலகந்தீரும்
கோறென கோரியப் பெண்ணுங்கிட்டும்
குடும்பமும் தான்செழிக்கும் குலமும்நீடும்

பேறென பெரியோர்க ளுதவியாகும்
பேசிய மனைவாங்க நன்மையாமே

(இ-ள்) வலது மணிகட்டை தொட்டதால் நினைத்தகாரியம் முடிவாகும், போனபொருள் கிடைக்கும் சிக்காகவாய்த்த கலக மானதுதீரும், கோரியிருக்கும்படியான பெண்கிடைக்கும் குடும்ப மானது செழிக்கும், குலவிருத்தியாகும், பெரியோர்கள் உதவி யுண்டாகும், பேசியமனைவாங்க நன்மையாகும் எ-று. 29

இடது மணிகட்டை தொட்டபலன்.

ஆமென யிடதுமணி கட்டைத்தானும்
அடவாகத் தொட்டதினால் அலைச்சலுண்டாம்
தாமென யெண்ணதோ றெண்ண மெல்லாம்
தடையாகப் போகுமப்பா தனமுஞ்சேதம்
நாமென நாடியே போமிடத்தும்
நல்லவரும் பகையாவார் நலியேகாட்டும்
போமென போனபொருள் திரும்பாதப்பா
பொருந்தவே யிப்பலனை புகலுவாயே

(இ-ள்) இடது மணிகட்டை தொட்டதால், அலைச்சல்படச் செய்யும், இப்போது எண்ணி யிருக்கும்படியான எண்ணங்கள் யாவும் தடைபடும், தனச்சேதமாகும், நாடி போகும்படியான இடத்திலும் நல்லோர்களும் பகையாவார்கள், நலியானது காட் டும் போனபொருள் திரும்பிவரமாட்டாது, ஆராய்ந்து இப்பலனை சொல்குவாய் எ-று. 30

வலது கணுக்கையை தொட்டபலன்.

புகலவே வலதுகணுக் கையைத்தானும்
பொருந்தவே தொட்டதினால் பலன்களற்பம்
இகலவே யெண்ணியதோர் கருமந்தானும்
இஷ்டம்போல் நாள்சென்று முடிவதாகும்
அகலவே போனதோ ராணும்பெண்ணும்
ஆண்டுக்குள் வந்துமே சேருவார்கள்
தகலவே யெத்தொழிலை செய்யினுந்தான்
தக்கதோர் லாபமிலை யென்றுசாற்றே

(இ-ள்) வலது கணுக்கையைத தொட்டதால் அற்பபலன்க ளுண்டாகும், இப்போது எண்ணிய காரியம் இஷ்டம்போல் நாள்

சென்று முடிவாகும், வீடுவிட்டுப்போன ஆண்பெண் இவர்கள் ஒரு வருடத்திற்குள் வந்து சேர்வார்கள், எந்த தொழில் செய்யி னும் லாபங்கிடைக்கமாட்டாது நஷ்டமுண்டாகும் எ-று. 31

இடது கணுக்கையை தொட்டபலன்.

சாற்றவே யிடதுகணுக் கையைத்தானும்
சார்பாகத் தொட்டதினால் சவுக்கியமுண்டாம்
ஏற்றவே பூமியோடு கன்றுகாலி
யெழிலாக வாகனங்கள் கொள்ளநன்றாம்
தோற்றவே துரவெடுக்க தோட்டம்வைக்க
தோஷமில்லை நன்றாக விருத்தியாகும்
நேற்றவே வர்த்தகத்தில் நேரும்லாபம்
நேசனா லுதவிமெத்த வாகுமென்னே

(இ-ள்) இடது கணுக்கையைத் தொட்டதால் சவுக்கியமுண் டாகும், பூமி கன்று காலி வாகனாதிகள் கொள்ள நன்மை தருகும், துரவு யெடுக்க தோட்டம் வைக்க நன்றாக விருத்தியாகும், வர்த்த கம் செய்ய லாபம் அதிகரிக்கும், சிநேகிதர்களால் உதவியுண்டா கும் எ-று. 32

வலது முழங்கையை தொட்டபலன்.

என்னவே வலதுமுழங் கையைத்தானும்
ஏற்கையாய் தொட்டதினா விமிசையுண்டாம்
மன்னியே நினைத்தகர்மம் முடிந்திடாது
மாதரால் கலகம்வரும் மனைவேராகும்
பண்ணிய பலபொருளுஞ் சேதமாகும்
பழியாக பிணியதுவும் பாதைசெய்யும்
வின்னமாம் விவாகமது முடிந்திடாது
வேந்தரால் வெகுபாதை நேருஞ்சொல்லே

(இ-ள்) வலது முழங்கையைத் தொட்டதால் இமிசையானது உண்டாகும், நினைத்த காரியம் முடிவுபெறமாட்டாது, ஸ்திரீக ளால் கலகம்நேரும், மனையானது வேறாகப் பிரிந்துபோகும், பல விதமானப் பொருளும் சேதமாகும், நோய் பாதைசெய்யும்; கலியாணம் முடியாது, அரசர்களால் பலவிதமான பாதைகள் நேரும் எ-று. 33

இடது முழங்கையை தொட்டபலன்.

சொல்லவே யிடதுமுழங் கையைத்தானும்
  சுத்தமுடன் தொடடதினல் சுகங்களுண்டாம்
வல்லவே நினைத்ததோர் வேலையாகும்
  வழக்கிட்டுப் போனவரும் வந்துசேர்வார்
நல்லதோர் நிலம்வாங்க விருத்தியாகும்
  நலியெனும் பிணியது பறந்துபோகும்
புல்லவே குடிபோக மாடுகொள்ளப்
  புகழுண்டா மென்றுநீ புகலுவாயே

(இ-ள்) இடது முழங்கையைத் தொட்டதால் சுகமுண்டாகும், நினைத்தகாரியம் முடியும், வழக்காடிப் பிரிந்துபோனவரும் வந்து சேர்வார்கள், உத்தேசித்திருக்கும் நிலத்தைவாங்க விருத்தியாகும், பிணியானது பறந்துபோகும், குடிபோகவும் மாடுகொள்ளவும் புகழானது உண்டாகும் எ-று. 34

வலது புஜத்தை தொட்டபலன்.

வாயென வலதுபுஜந் தன்னைத்தானும்
  வாகாகத் தொட்டதினல் வருகுஞ்செல்வம்
நேயென நினைத்ததோர் கருமந்தானும்
  நீடிட கைவசமாய் நிலையதாகும்
தோயென துலதூரம் போனபேரும்
  துலங்கவே பொருளோடு வந்துசேர்வார்
நேயென நெடுநாளின் பகையுந்தீரும்
  நேசரா லுதவியது யுண்டாமாதே

(இ-ள்) வலது புஜத்தை தொட்டதால் செல்வம் பெருகும் நினைத்த காரியம் கைவசமாகும், தூரதேகம் போனவரும் பொருளோடு வந்து சேர்வார்கள், நெடுநாளாகவிருந்த பகையானது துலையும், நேசர்களால் உதவியானது உண்டாகும் எ-று. 35

இடது புஜத்தை தொட்டபலன்.

மாதென யிடதுபுஜந் தன்னைத்தானும்
  மைந்தனே தொட்டதினல் நிந்தையுண்டாம்
போதென நினைத்ததுவும் முடிந்திடாது
  பொருளோடு மாடுமனை சேதமாகும்

ஓதென வாங்கியதோர் கடன்தீராது
  உத்தமனே ஊர்பயணம் போகலாகா
தோதென துணைவர்களும் பகையேயாவார்
  தோஷமாம் பிணியதுவும் சாறும்பாரே

(இ-ள்) இடது புஜத்தை தொட்டதால் நிந்தையானது உண்டாகும், நினைத்தகாரியம் முடியாது பொருள் மாடு, மனை இவைகள் சேதமாகும், வாங்கின கடனனதுதீராது, ஊர்பயணம்போக நன்மை தரமாட்டாது, துணைவர்களும் பகையாகுவார் தோஷமாகிய பிணியானது சாறும் எ-று. 36

மோவாய் கட்டையை தொட்டபலன்.

பார்க்கவே மோவாய் கட்டைதன்னை
  பரிவாக தொட்டதினல் பலன்களுன்டாம்
தீர்க்கமாம் நினைத்ததுவும் மனம்போலாகும்
  திசைதப்பி போனவரும் வந்துசேர்வார்
ஏர்க்கையா யுத்தியோகம் விருத்தியாகும்
  எழிலாக சுபசோப னங்களாகும்
கோர்க்கவே கொடுக்கலொடு வாங்கலாகும்
  குறவில்லா பாக்கியங்க ளுண்டாம்பாரே

(இ-ள்) மோவாய் கட்டையை தொட்டதால் பலன்களுண்டாகும்' நினைத்தகாரியமும் மனம்போல் முடிவாகும், திசை தப்பிப் போனவரும் வந்துசேர்வார், உத்தியோகம் விருத்தியாகும், சுபசோபனங்கள் நடக்கும்' கொடுக்கல் வாங்கல்நடக்கும், குறவில்லாத பாக்கியம் உண்டாகும் எ-று. 37

வாயின் கீழுதட்டை தொட்டபலன்.

என்னவே வாயின்கீ ழுதட்டைதானும்
  ஏற்கையாய் தொட்டதினல்லி மிசையுண்டாம்
பன்னவே நினைத்ததுவும் முடிந்திடாது
  பழியோடு பகையுமே வந்துசாறும்
அன்னிய னொருவனல் அவத்தைநேரும்
  அலைச்சலுந் திரிச்சலால் பொருளும்போகும்
மன்னிய மாதரால் மானம்போகும்
  மாறுத மனக்கவலை தானுண்டாமே

(இ-ள்) வாயின் கிழ் உதட்டைதொட்டதால் இம்சையுண்டாகச்செய்யும், நினைத்தகாரியம்முடிவுபெறமாட்டாது, பழியும்பகையும் வந்தணுகும், அன்னியமனிதன் ஒருவனால் அவஸ்தையுண்டாகும், அலைச்சலும் திரிச்சலினால் பொருள் சேதமாகப் போகும் மாதர்களால் மானங்கெடும், சதாகாலமும் மாறாத மனக்கவலையும் உண்டாகும் எ-று. 38

வாயின் மேலுதட்டை தோட்டபலன்.

உண்டென வாயின்மே லுதட்டைத்தானும்
    உத்தமனே தொட்டதினால் சித்தியாகும்
பண்டாக நினைத்ததுவு முடியுமப்பா
    பாதைசெய் பிணியதுவும் பரந்துபோகும்
மிண்டாக யெதிரிகளை வெல்லச்செய்யும்
    மேலாக வர்த்தகமும் விருத்தியாகும்
கொண்டதோர் மனையாளால் குலம்விளக்கும்
    கொடியதோர் கெண்டமது துலையும்பாரே

(இ-ள்) வாயின் மேல் உதட்டைதொட்டதால் சித்தியாகும், நினைத்தகாரியம் முடியும், பாதை செய்யும்படியான பிணியாது பரந்துபோகும், எதிரிகளை வெல்லதிரமையுண்டாகும் வர்த்தகம் விருததியாகும், மனையாளினால் குலமானது விளக்கும், கொடிய கெண்டமும் துலைந்துபோகும் எ-று. 39

வலது தாடையை தோட்டபலன்.

பாறென வலதுதாடைத் தன்னைத்தானும்
    பண்பாகத் தொட்டதினால் பாக்கியமுண்டாம்
சீறென நினைத்ததுவுஞ் சித்தியாகும்
    செய்தொழிலும் நாட்குநாள் விருத்தியோங்கும்
நேறென நெடுந்தூரம் போனோர்தாமும்
    நல்லதோர் சேதிதனை தெரிவிப்பார்கள்
பேறென போனபொருள் வந்துசேரும்
    பெரியோர்க ளுதவியுண்டா மென்றுபேசே

(இ-ள்) வலது தாடையை தொட்டதால் பாக்கிய முண்டாகும், நினைத்தகாரியங்கள் சித்தியாகும், செய்யும்படியான தொழிலும் நாட்கு நாள் பெருகியோங்கும் நெடுந்தூரமாகப் போயிருப்பவரும் நல்ல சேதியைத் தெரிவிப்பார்கள், போன பொருளும் வந்துசேரும், பெரியோர்களுடைய உதவியுண்டாகும் எ-று.

இடது தாடையை தோட்டபலன்.

பேசவே யிடதுதாடை தன்னைத்தானும்
    பேணியே தொட்டதினால் ஊனமாகும்
ஆசையாய் நினைத்ததுவும் முடிந்திடாது
    அடுத்ததோர் கலகமது தீர்ந்திடாது
தோஷமாய் வாய்த்தபிணி யொழிந்திடாது
    துலதூரம் போனவரும் வந்துசேரார்
பாசமாம் கொண்டபெண்டீர் பகையுமாவாள்
    பாதையும் விளையுமென பகருவாயே

(இ-ள்) இடது தாடையை தொட்டதால் ஊனமுண்டாகும். ஆசையாகத்தானே நினைத்த காரியம் முடியாது, அடுத்த கலகமும் ஒழியாது, பிணியுந்தீராது, தூரதேசம் போனவரும் வந்து சேரமாட்டார்கள், பெண்டீரும் பகையாகுவாள், பாதையானது விளையும் எ-று. 41

வலது மீசையை தோட்டபலன்.

பகரவே வலதுமீசைதனை தொட்டதாலே
    பரிவாக நினைத்ததுவும் முடிவதாகும்
புகரவே பொய்மெய்யும் வெளியாய்காணும்
    பொன்பொருளும் மனைதனிலே வந்துசேரும்
இகரவே யெதிரிதனை வெல்லச்செய்யும்
    யெடுத்ததோர் வழக்கதுவுங் கெலிக்கலாகும்
தகரவே தயிரியமுந்தானுண்டாகும்
    தக்கதோ ருத்தியோகம் பெருகுங்காணே

(இ-ள்) வலது மீசையைத் தொட்டதால் நினைத்த காரியம் முடிவாகும், பொய்யும் மெய்யும் வெளியாகும், பொன் பொருள் மனையில் வந்துசேரும், எதிரியை வெல்லும்படியாகச் செய்யும், தொடுத்த வழக்குங் கெலிக்கும் தயிரியமுண்டாகும், உத்தியோகம் உயர்ந்து நீடும் எ-று. 42

இடது மீசையை தோட்டபலன்.

காணவே யிடதுமீசை தன்னைத்தானுங்
    கருதியே தொட்டதினால் கவலையாகும்

தோணவே நினைத்ததுவுங் கைகூடாது
தோஷமாஞ் சந்ததியு மற்பமாகும்
பூணவே பொல்லாத மிடியம்நேரும்
பூவையெனும் பெண்டிர்க்கு பிணியேகாட்டும்
நாணவே நல்லோரைபகை செய்விக்கும்
நடுக்கமுமுண்டாகு மென்று சாற்றே

(இ-ள்) இடது மீசையைத் தொட்டதால் கவலையானது உண்டாகும், நினைத்த காரியங் கைகூடி வரமாட்டாது, சந்ததி அற்பமாகும், பொல்லாத மிடியானது நேரும், பெண்டிர்க்கும் பிணியுண்டாகும், நல்லோரை பகைசெய்விக்கும், நடுக்கமுண்டாகும்,

வலது காதை தொட்டபலன்.

சாற்றவே வலதுசெவி தன்னைத்தானும்
சார்பாகத் தொட்டதினால் ஜெயங்களுண்டாம்
ஏற்றவே யெண்ணியதோ றெண்ணமாகும்
எதிரிகளும் வந்துவுற வாடுவார்கள்
தோற்றவே துணைவரா லுதவியுண்டாம்
தோஷமுந் துலைந்துவிடுந் துலங்குஞ்செல்வம்
போற்றவே தெய்வபக்தி தானுண்டாகும்
புகழாக தருமமது வோங்கும்பாரே

(இ-ள்) வலதுபக்கங் காதை தொட்டதால் ஜெயமுண்டாகும் எண்ணிய யெண்ணம் முடியும், எதிரிகள்வந்து உறவாடுவார்கள், துணைவர்களாலும் உதவியானது உண்டாகும், தோஷமானது துலையும், செல்வமானது வோங்கும் தெய்வபக்தி உண்டாகும் தானதருமங்கள் ஓங்கும் எ-று. 44

இடது காதை தொட்டபலன்.

பார்க்கவே யிடதுசெவி தன்னைத்தானும்
பழியாகத் தொட்டதினால் பலன்களற்பம்
மூர்க்கமாய் நினைத்ததுவு முடிந்திடாது
மோசமாய் போனபொருள் தான்வாராது
ஏர்க்கையாய் வர்த்தகமு மோங்கிடாது
எத்தொழிலை செய்தாலும் நலந்தராது
கோர்க்கவே வழக்கதுவுங் கெலித்திடாது
குற்றமுண் டாகுமெனக் கூறுவாயே

(இ-ள்) இடது காதை தொட்டதால் பலன்கள் அற்பமாகும், நினைத்த காரியம் முடிவுபெறாது, மோசமாகப்போன பொருள் வந்து சேரமாட்டாது, வர்த்தகம் செய்ய ஓங்காது,எந்த தொழில் செய்யினும் நன்மைதரமாட்டாது, வழக்குத் தொடுக்க கெலிக்காது, குற்றமானது உண்டாகும், எ-று. 45

மூக்கை தொட்டபலன்.

கூறவே மூக்கதனை தொட்டதாலே
குற்றமில்லை நினைத்ததுபோல் முடிவதாகும்
சேறவே கூட்டுவியா பாரஞ்செய்ய
செல்வமது தான்பெருகும் விருத்தியாகும்
நேறவே வெளியூரில் லாபங்காணும்
நிலையாகப் பிரபுக்கள் நேயங்கூடும்
பேறவே பேசியதுப் போல்நடக்கும்
பின்னமிலை யென்றுநீ பேசுவாயே

(இ-ள்) மூக்கை தொட்டதால் நினைத்தபடி காரியம் முடிவாகும், கூட்டு வியாபாரஞ்செய்ய செல்வமானது பெருகும், விருத்தியாகும், வெளியூரில் லாபங் கிடைக்கும், பிரபுக்களுடைய நேசமானதுக் கூடும், பேசிய மொழிபோல் நடக்கும், பின்னமானது ஒன்றும் வாராது எ-று. 46

வலதுகண்ணை தொட்டபலன்.

பேசவே வலதுகண்ணை தொட்டதாலே
பெருமையாய் நினைத்ததுவும் முடிவதாகும்
நேசமாய் நினைத்ததோர் பெண்ணுங்கிட்டும்
நேர்மையுடன் கலியாணந் தானுமாகும்
பாசமாய் பந்துக்கள் வந்துசேர்வார்
பரியோடுங் கன்றுகாலி விருத்தியாகும்
வாசமாய் நிலங்கொள்ள பயிருண்டாகும்
வஞ்சியரு மாண்பிள்ளை பெருவாள்காணே

(இ-ள்) வலதுகண்ணைத் தொட்டதால் நினைத்தகாரியம்முடிவாகும், கோரியிருக்கும்படியானப் பெண்ணுங் கிடைக்கும், கலியாணமாகும், பந்துக்கள் வந்து சேர்வார்கள், குதிரையோடு கன்றுக்காலி விருத்தியாகும், நிலம்வாங்க பயிர்த்தொழில் விருத்தியாகும், மனையாளும் ஆண்பிள்ளைகளை பெருகுவாள் எ-று. 47

இடது கண்ணை தொட்டபலன்.

காணவே யிடதுகண்ணை தொட்டதாலே
கஷ்டமாம் நினைத்ததுவும் முடிந்திடாது
நாணவேசெய்விக்கும் நலியுண்டாகும்
நல்லதோர் நேசங்கள் பிரிந்துபோகும்
ஊணவே யுறவில்பகை யாக்கிவைக்கும்
உற்றதோர் கைபொருளுஞ் சேதமாகும்
தோணவேதுலையாதத் துன்பஞ்சாறும்
தோகையெனுஞ் ஸ்திரீகளினல் கலகமாமே

(இ-ள்) இடது கண்ணை தொட்டதால் கஷ்டமுண்டாகும், நினைத்தகாரியம் முடியாது நாணும்படியாகச் செய்விக்கும், நலியானது உண்டாகும்,நல்ல சினேகமானதுப் பிரிந்துபோகும், உறவில் பகைசெய்விக்கும், கைப்பொருள் சேதமாகும், துலையாத துன்பமானது சாரும், ஸ்திரீகளினல் கலகமுண்டாகும் எ-று. 48

வலது புருவத்தை தொட்டபலன்.

ஆமென வலதுபுரு வத்தைத்தானும்
அடவாகத் தொட்டதினல் அதுர்ஷ்டமுண்டாம்
நாமென நினைத்ததுவும் முடிவதாகும்
நாடிய பயணமதில் லாபங்காணும்
போமென புதுவுறவு வந்துகூடும்
பொல்லாதப் பகையொழியும் பொருளுஞ்சேரும்
தாமெனவே ஸ்திரீகளுட நேயங்கூடும்
தவரியே போனஜீவன் வருகும்பாரே

(இ-ள்) வலது புருவத்தை தொட்டதால் அதுர்ஷ்டமுண்டாகும், நினைத்தகாரியம் முடியும், நாடியிருக்கும்படியான ஊர்க்குப் போக இலாபங் கிடைக்கும், புதுவுறவானது வந்து கூடும், பகையானது ஒழியும், பொருள் வந்துசேரும், ஸ்திரீகளுடைய நேசமானது உண்டாகும், தவரிப்போன ஜீவனும் வந்துசேரும் எ-று. 49

இடது புருவத்தை தொட்டபலன்.

பார்க்கவே யிடதுபுரு வத்தைத்தானும்
பரிவாகத் தொட்டதினல் பலன்களற்பம்
ஏர்க்கையாய் நினைத்ததுவும் முடிந்திடாது
என்னேறம் மனைதனிலே கலகம்மூளும்

சேர்க்கையா யிருந்தசிநே கிதமும்போகும்
செய்கின்ற தொழில்களிலே நஷ்டங்காணும்
மூர்க்கமாம் மொழிகளுமே தானுண்டாகும்
மோகத்தால் நிந்தையுண்டா மென்றுசாற்றே

(இ-ள்) இடது புருவத்தை தொட்டதால் பலன்கள் அற்பமாகும், நினைத்த காரியம் முடிவுபெறமாட்டாது, என்னேரமும் வீட்டிற் கலகமாகும், சேர்க்கையாக யிருந்த சிநேகிதமும் பிரிந்துபோகும், செய்யும்படியானத் தொழிலில் நஷ்டமானது உண்டாகும், கோபமாகிய வார்த்தைகளே சதாகாலமுமுண்டாகும், மோசத்தினல் நிந்தையான சொல்வருகும் எ-று. 50

வலது கன்னத்தை தொட்டபலன்.

சாற்றவே வலதுகன்னந் தன்னைத்தானும்
சார்பாகத் தொட்டதினல் சகலமாகும்
போற்றவே நினைத்ததுவும் புகழாய்கிட்டும்
போனதோர் பொருளதுவும் வந்துசேரும்
தோற்றவே புத்திரரும் விருத்தியாவார்
தோஷமெனும் பிணியதுவு மகன்றுபோகும்
ஏற்றவே யெத்தொழிலும் பலிதமாகும்
எந்தமுகம் போனலும் நன்மையாமே

(இ-ள்) வலது கன்னத்தைத் தொட்டதால் சகலமுஞ் சித்தியாகும், நினைத்த பொருளுங் கிடைக்கும், போன பொருளும் வந்து சேரும், புத்திரர்களும் விருத்தியாவார்கள், பிணியானது தீரும், எந்த தொழில் செய்யினும் பலிதமுண்டாகும், எந்த திசையை நோக்கிப்போகினும் லாபமும் நன்மையுண்டாகும் எ-று. 51

இடது கன்னத்தை தொட்டபலன்.

ஆமென யிடதுகன்னந் தன்னைத்தானும்
அடவாகத் தாட்டதின லபஜெயந்தான்
நாமென நினைத்ததுவு முடிந்திடாது
நாடியப் பொருளதுவுங் கிடைத்திடாது
போமென போனவரும் வந்துசேரார்
பொல்லாத பிணியதுவுந் தீர்ந்திடாது
தாமென தாய்தந்தை பகையுமாவார்
தானினைத்த வூர்போக கெடுதியுண்டாம்

(இ-ள்) இடது கன்னத்தை தொட்டதால் அபஜெயமுண்டாகும், நினைத்தக் காரியம் முடியாது, நாடியிருக்கும்படியானப் பொருளுங் கிடைக்காது, விடுவிட்டுப் போனபேர்களும் வந்து சேரமாட்டார்கள், இப்போது தேகத்தில் தோன்றியிருக்கும் பிணியானது ஒழியாது தாய் தந்தையர்களும் பகையாவார்கள், தான் நினைத்திருக்கும்படியான ஊர்க்குப்போக கெடுதியுண்டாகும், எ-று. 52

நெத்தியை தொட்டபலன்.

உண்டாக நெத்திதனை தொட்டாலே
உன்மனம்போல் சகலமுமே யுருதியாகும்
பண்டாக பழையதனந் தான்கிடைக்கும்
பழனிமலை வேலருடைக் கிருபையுண்டாம்
கொண்டாடக் குழந்தையது தானுண்டாகும்
குடும்பமது தான்செழிக்குங் குலவுஞ்செல்வம்
மிண்டான யெதிரிகளும் வணங்குவார்கள்
மேலான கீர்த்தியது வாகும்பாரே

(இ-ள்) நெத்தியை தொட்டதால் உன்னுடைய மனம்போல் சகலமுஞ் சித்தியாகும், பழைய தனமானது கிடைக்கும், வடிவேலருடைய கிருபையுண்டாகும், சந்ததி உண்டாகும், குடும்பமானது செழிக்கும், செல்வமுண்டாகும், எதிரிகள் வந்து வணங்குவார்கள், மேன்மையாகிய கீர்த்தியானது உண்டாகும் எ-று. 53

சிரசை தொட்டபலன்.

பார்க்கவே சிரசுதனை தொட்டாலே
பழியான கலகமது தானுண்டாகும்
ஏர்க்கையாய் நினைத்ததுவு மபலமாகும்
யேந்திழைக்கு மடிவயிற்றில் பிணியேகாணும்
சேர்க்கையா யிருந்ததனம் சிதறிப்போகும்
சிநேகிதத்தில் பொல்லாப்பு வந்துநேரும்
மூர்க்கமாய் ராஜாங்க மேறச்செய்யும்
முனைவாக தனசிலவு மாகுமாதே

(இ-ள்) சிரசை தொட்டதால் பழியாகிய கலகமுண்டாகும், நினைத்த காரியம் அபலமாகப்போகும், மனையாளுக்கும் அடிவயற்றில் நோயுண்டாகும், தனம் சிதறிப்போகும் சிநேகிதத்தில்

பொல்லாப்பு நேரும், ராஜாங்கமேறச் செய்யும், அதனால் தனச் சிலவாகும் எ-று. 54

சிரசின் உச்சியை தொட்டபலன்.

வேறு-விருத்தம்.

சென்னியினுச்சிதன்னை சிறப்புடன்தொட்டாலே
மன்னர்கள்நேயங்கூடும் மாதனம்வந்துசேரும்
உன்னியேநினைத்தவாறு யோங்கிடும்பலிதமாகும்
தன்னிகராகவேதான் தரணியில்வாழ்குவாவே

(இ-ள்) சிரசின் உச்சியைத் தொட்டதால் மன்னர்களுடைய நேயங்கூடும், தனம் சேர்க்கையாகும், உன் மனதில் நினைத்தக் காரியம் பலிதமாகும், தன்னிகராகத்தானே வாழ்குவாய் எ-று. 55

அவயவ தொடுகுறி ஆரூடம்

முற்றிற்று,

பஞ்சபட்சி ஆரூடம்

ஆரூடம் சொல்லும் விபரம்.

ஆரூடம் கேட்கவந்து எதிர்நின்றோர்களுடைய பெயரைக் கேட்டு அவர்கள் சொல்லும் பெயரினுடைய முதல் எழுத்தைக் கியாபகமாக வைத்து அந்த எழுத்திற்குறிய பட்சியை கண்டு பிடித்து ஒவ்வொரு வாரங்களுக்கும் ஒவ்வொரு பட்சிகள் தொழில் முறைகளை அறிய வேண்டும். அதாவது ஊண், அரசு, நடை, நித்திரை, மரணம் இவைகளை அறிந்து ஆரூடம் சொல்க வேண்டும்.

ஊண் பட்சியின் பலன்.

விருத்தம்.

காணவே யூண்பட்சிப் பலனைக்கேளாய்
காசினியில் மழைபொழியுங் கவலைதீரும்
பூணவே போனபொருள் வந்துசேரும்
பொல்லாத மிடியொழியும் பிறக்கும்பின்னை

வேணவே வுத்தியோகம் விருத்தியாகும்
வெகுபேர்கள் நேயங்கள் வந்துகூடும்
தோணவே துடர்ந்ததோர் பேயும்போகும்
தோஷங்க ளகலுமென தெளிவாய்சொல்லே

(இ-ள்) ஊண்பட்சியின் பலன் யாதெனில், ஊரெங்கும் மழையானது பொழியும் கவலையானது தீரும், போன பொருள் வந்து சேரும், மிடியானது வொழியும், ஆண்பிள்ளை பிறக்கும், உத்தியோகம் விருத்தியாகும், வெகு பேர்களுடைய நேயமானது கூடும் பிடித்திருந்த பேயும் விட்டோடிப்போகும் தோஷமகலும் எ-று. 1

அரசு பட்சியின் பலன்.

சொல்லவே யரசுபட்சிப் பலனைக்கேளாய்
சுகமாக மன்னரைபோல் வாழ்வுண்டாகும்
நல்லதோர் காரியங்கை வசமதாகும்
நங்கையற்கும் பீடையது துலைந்துபோகும்
புல்லவே பூமியொடு பொருள்கிடைக்கும்
புகழாக யடிமைகன்று காலிசேரும்
வெல்லவே தனதான்யம் விருத்தியாகும்
விளங்கவே குலமதுவும் செழிக்கும்பாரே

(இ-ள்) அரசு பட்சியின் பலன் யாதெனில் மன்னரைபோல் வாழ்வானது உண்டாகும், நன்மையாகிய காரியங்கள் கைவசமாகும், மனையாளுக்கும் பீடை துலைந்துபோகும் பூமியோடு பொருளுங் கிடைக்கும், அடிமையோடு கன்றுகாலி சேரும், தனதானியம் விருத்தியாகும், குலமானது செழிக்கும் எ-று. 2

நடை பட்சியின் பலன்

பார்க்கவே நடைபட்சிப் பலனைக்கேளாய்
பகையாக நிலைகுலையும் பழியுமுண்டாம்
ஏர்க்கவே பயணமதி லிடரேகாணும்
எண்ணிய எண்ணமது யபலமாகும்
மூர்க்கமாய் சிலுகுசண்டை வந்தேமூளும்
மோசமாய் கையிலுள்ள பொருளும்போகும்
சேர்க்கையாய் போனவரும் வந்துசேரார்
செண்மத்தில் வாய்த்தபிணி தீராதென்னே

(இ-ள்) நடை பட்சியின் பலன் யாதெனில், பகையுண்டாகும், நிலைகுலையச்செய்யும், பழிநேரும், ஊர்பயணம்போக இடரானது உண்டாகும், எண்ணிய யெண்ணம் அபலமாகும், சிலுகு சண்டை மூளும், மோசமாக கைப்பொருள் போகும். சேர்க்கையாக சேர்ந்து போன பேரும் வந்து சேரமாட்டார்கள், ஜென்மத்தில் வாய்த்திருக்கும்படியான பிணியானது தீராது எ-று. 3

நித்திரை பட்சியின் பலன்

என்னவே நித்திரைபட்சி பலனைக்கேளாய்
இயம்பொணு நஷ்டமொடு யிடரேநேரும்
மன்னனால் பயமோடு சிறைமுண்டாம்
மருதேசம் போனவரும் வாடுவார்கள்
வின்னமாம் வெகுபேர்கள் பகையுண்டாக்கும்
வீணாகக் கைப்பொருளும் விரையமாகும்
கன்னியால் கைகாலில் விலங்குபூணும்
கஷ்டங்கள் வாய்க்குமென கண்டுபேசே

(இ-ள்) நித்திரை பட்சியின் பலன் யாதெனில் சொல்ல முடியாத நஷ்டமானது உண்டாகச் செய்யும், இடர் நேரும், அரசர்களால் பயமும் சிறையுமுண்டாம், மருதேசம் போனவரும் மனம் வாடுவார்கள், யாவரையும் பகையுண்டாகச் செய்யும், கைப்பொருள் விரையமாகும், ஸ்திரீயினால் கைகாலிற்கு விலங்குவரும் சதா கஷ்டமுண்டாம் எ-று. 4

மரண பட்சியின் பலன்.

பேசவே மரணபட்சி பலனைக்கேளாய்
பெருத்ததோர் பிணியினால் பாதைநேரும்
தோஷமாய் நினைத்ததுவு முடிந்திடாது
துலதூரம் போனவரும் மரணமாவார்
கூசவே குடும்பமது பிரிந்துபோகும்
கொண்டதோர் பெண்டீரால் கோளும்நேரும்
ஏசவே யேக்கமோடு தூக்கமுண்டாம்
இஷ்டமுள நேசர்களும் பிரிவார்மாதே

(இ-ள்) மரணபட்சியின் பலன் யாதெனில் பெருத்தப் பிணியால் பாதையுண்டாகும், நினைத்தகாரியம் முடிவுபெறமாட்டாது. துலதூரம் போனவர் மரணமாகுவார், குடும்பமானது பிரிந்து வெவ்வேறாகும், கொண்ட பெண்டீரினால் கோளாகியச் சொல் நேரும், ஏக்கமும் தூக்கமுமதிகமுண்டாகும், இஷ்டமாகிய நேசர்களும் பிரிந்துபோவார்கள் எ-று. 5

பஞ்சபட்சி ஆரூடம்
முற்றிற்று,

பலகரை ஆருடம்

ஆருடம் சொல்லும் விபரம்.

ஆருடங்கேட்க வந்தோர்களை எதிரில் உட்காரச்சொல்லிப் பனிரண்டு பலகரையை அவர்கள் கையில்கொடுத்து அவாள்கோரி வந்ததை அவர்கள் மனதில் நினைத்துக்கொள்ளச் சொல்லி பின்பு பலகரையை கீழே உருட்டவேண்டும் அப்படி உருட்டியப்பலகரை ஒன்று முதல் பனிரண்டு வரையில் எத்தனை நிமிர்ந்திருக்கின்றனவோ அத்தனைக்கும் ஒன்றிலிருந்து வரிசையாக பலன்கள் சொல்கவேண்டும் பனிரண்டு பலகரையும் கவர்ந்து விடுமாகில் அதற்கும் பலன்கள் சொல்கவும் மலகரையை ஒரேவிசைதான் உருட்டவேண்டியது

ஒன்றின் பலன்.

விருத்தம்.

அரியவே யொன்றுவரில் பலனைக்கேளாய்
ஆவலாய் நினைத்ததுவும் முடிவேயாகும்
பிரியமாய்குடிபோக நன்மையாகும்
பிணியதுவுந் தானொழியு மருந்தேயுண்ண
குரியவே பசுக்கொள்ள விருத்தியாகும்
கோதையெனும் பெண்டீரால் குலவுஞ்செல்வம்
உரியதோர் பந்துக்கள் வந்து சேர்வார்
உருதியுட னிப்பலனை யோதுவாயே

(இ-ள்) ஒன்றின் பலன் யாதெனில் ஆவலாக மனதில் நினைத்தகாரியம் முடிவாகும், குடிபோக நன்மையைத்தரும், மருந்து உண்ணபிணியானது ஒழியும், பசுக்கொள்ள பால் பாக்கியமுண்டாகும், பெண்டீரால் செல்வமானது பெருகும், பந்துக்கள் வந்துசேர்வார்கள், இப்பலனை உருதியாகச்சொல்வாய் எ-று. 1

இரண்டின் பலன்.

ஓதவேயிரண்டுவரில் பலனைக்கேளாய்
உத்தமனே நினைத்தகர்மம் பொருந்தேயாகும்
போதவேபீடிக்கும் பிணியேதானும்
பொருந்தாமல் திங்ளுக்குள் பரந்தேபோகும்

வேதையாம் வெகுதூரம் போனபேரும்
வேண்டியே வருவார்கள் ஆண்டிற்குள்ளே
நீதியாய் நேர்ந்ததோர் வழக்கும்வெல்லும்
நிலைதப்பிப் போனபொருள் வருகும்பாரே

(இ-ள்) இரண்டின் பலன் யாதெனில், இப்போது நினைத்த காரியம் பொருத்து முடிவாகும், பீடிக்கும்படியான பிணியானது ஒரு மாதத்தில் தீர்ந்துவிடும்' வெகுதூரம் போனபேர்களும் ஒரு வருடத்திற்குள் வந்து சேர்வார்கள், நேர்ந்த வழக்கானது வெல்லும், நிலைதப்பிப் போனபொருள் வந்துசேரும் எ-று. 2

மூன்றி ்ன பலன்.

பாறென மூன்றுவரில் பலனைக்கேளாய்
பரிவாக நினைத்தகர்மம் பழியாய்நேரும்
நேறென கஷ்டமே யதிகமாகும்
நிலையாக செய்தொழிலில் பகையுண்டாகும்
பேறென பேசுமொழி யபலமாகும்
பிள்ளையொடு பெண்டீரும் பகையுமாவாள்
சீறென சிநேகிதனால் கலகம்நேரும்
சிலபொருளுஞ் சேதமென செப்புவாயே

(இ-ள்) மூன்றின் பலன் யாதெனில், இப்போது நினைத்தக் காரியம் பழியாக முடியும், கஷ்டம் அதிகரிக்கும் செய்யும்படியான தொழிலில் பகையுண்டாகும், பேசிய வார்த்தைகள் யாவும் அபலமாகப்போகும், பிள்ளைகளும் பெண்டீரும் பகையாவார்கள், சிநேகிதனால் கலகம் நேரும், சிலபொருள் சேதமாகும் எ-று. 3

நான்கின் பலன்.

செப்பவே நான்குவரில் பலனைக்கேளாய்
செயமாக நினைத்ததுவுஞ் சித்தியாகும்
மெப்பவே மேலான வரவுகூடும்
மேன்மையாய் தொழிலதுவும் விருத்தியாகும்
ஒப்பவே மாடுமனை பூமிவாங்க
ஓங்கிடுஞ் செல்வமது தானுண்டாகும்
தப்பவே வாய்த்தகெண்டந் தவரிப்போகும்
தானகுந் தீர்க்கவய தென்றுசாற்றே

(இ-ள்) நான்கின்பலன் யாதெனில், நினைத்த காரியம் ஜெயமோடு சித்தியாகும், மேலாகிய உறவுகூடும், மேன்மையாகத் தொழில் விருத்தியாகும், மாடு மனை பூமி இவைகள் வாங்க விருத்தியாகி செல்வமுண்டாகும், வாய்த்த கெண்டமானது தவரிப்போகும், தீர்க்கமாகிய வயதுண்டாகும் எ-று. 4

ஐந்தின் பலன்.

சாற்றவே யைந்துவரில் பலனைக்கேளாய்
சார்பாக நினைத்தபொருள் கண்ணிற்காண்பாய்
ஏற்றவே யேகியப் பயணந்தன்னில்
யெழில்பெருக லாபமது தானுண்டாகும்
போற்றவே பொன்பொருளும் வந்துசேரும்
பொல்லாத நோயோடு கவலைதீரும்
தேற்றவே போனதோர் நாற்கால்ஜீவன்
தோஷமிலா வீடுவந்து சேருங்காணே

(இ-ள்) ஐந்தின் பலன் யாதெனில், இப்போது நினைத்தப் பொருளை நேராகக் கண்ணிற் காண்பாய், போகும்படியானப் பயணத்தில் இலாபமுண்டாகும், பொன் பொருள் வந்துசேரும் நோயுங் கவலையுந் தீரும், வீடுவிட்டுப்போன நாற்கால்ஜீவன் தோஷமில்லாமல்தானே வீடுவந்து சேரும் எ-று, 5

ஆறின் பலன்

காணவே யாறுவரில் பலனைக்கேளாய்
கருதியே நினைத்ததுவுங் கைகூடாது
பூணவே பொல்லாத மிடியுண்டாகும்
பூவையற்கும் பேயினல் தோஷமுண்டாம்
நாணவே நஷ்டங்க ளதிகரிக்கும்
நாடிய யிடங்களிலே பகையுண்டாகும்
வேணவே வருத்தமது தானுண்டாகி
வீடுவிட்டு வெளிதாண்ட செய்யும்பாரே

(இ-ள்) ஆறின்பலன் யாதெனில், இப்போது நினைத்த காரியங் கைகூடிவரமாட்டாது, பொல்லாத மிடியானது உண்டாகும், மனையாளுக்கும் பேயினல் பாதையுண்டாம் நாணும்படியாகத் தானே நஷ்டமானது உண்டாகும், நாடிப்போகும்படியானயிடங்களில் பகையுண்டாகும், வருத்தமானது உண்டாகி வீடுவிட்டு வெளியே தாண்டிப்போகும்படியாகச் செய்யும் எ-று 6

ஏழின் பலன்.

பார்க்கவே யேழுவரில் பலனைக்கேளாய்
பண்பாக நினைத்தபொருள் வந்துசேரும்
மூர்க்கமாய் சண்டையிட்டுப் போனோர்தாமும்
முனைவாக திங்களுக்குள் வந்துசேர்வார்
சேர்க்கவே சேயர்களும் விருத்தியாவார்
செய்தொழிலும் மேலோங்கி லாபங்காணும்
ஏர்க்கவே குடும்பமது மிகத்தழைக்கும்
யெழிலாக கன்றுகாலி விருத்தியாமே

(இ-ள்) ஏழின் பலன் யாதெனில் நினைத்த பொருள் ஒருவர் மூலமாக வந்துசேரும், கோபமாக சண்டையிட்டுப் போனவர்கள் இன்னம் ஒருமாதத்திற்குள் வந்து சேர்வார்கள் புத்திரர்கள் விருத்தியாகுவார், செய்யும்படியான தொழிலும் மேலோங்கி லாபமுண்டாகும், குடும்பமானது தழைக்கும் கன்று காலி விருத்தியாகும் எ-று. 7

எட்டின் பலன்.

ஆமென யெட்டுவரில் பலனைக்கேளாய்
அடவாக நினைத்தபொருள் அழிந்துபோகும்
நாமெனும் பொல்லாத கிரகத்தாலே
நலியது வுண்டாகும் நசியச்செய்யும்
தாமென தமயனோடு கலகம்நேரும்
தக்கதோர் பாகமது பிரிவதாகும்
போமென பொல்லாப்புத் தானுண்டாகும்
பொருளதுவுஞ் சேதமா மென்றுசொல்லே

(இ-ள்) எட்டின் பலன் யாதெனில் இப்போது நினைத்தப் பொருள் வந்து சேராது அழிவுண்டுபோகும் பொல்லாத கிரகத்தின் கொடுமையினால் நலியுண்டாகும் நசித்துப் போகும்படியாகச் செய்யும், தமயனோடு கலகம்நேரும், பாகமானது பிரிவாகும் பொல்லாப்பு உண்டாகும் பொருள் சேதமாகும் எ-று. 8

ஒன்பதின் பலன்.

சொல்லவொன் பதுவருகில் பலனைக்கேளாய்
சுகமாக நினைத்தபொருள் வந்துசேரும்
தொல்லையாம் பிணியதுவு மொழிந்துபோகும்
தொடுத்ததோர் வழக்கதுவுங் கெலிப்பதாகும்
புல்லவே குடும்பமதுப் பெரிகிநீடும்
புகழாக வுறவினரும் வந்துசேர்வார்
வெல்லவே வேந்தருட வுதவியாகும்
வேணதோர் சினேகமது கூடும்பாரே

(இ-ள்) ஒன்பதின் பலன் யாதெனில் நினைத்தப் பொருள் வந்து சேரும், தொல்லையாகிய பிணியொழியும், வழக்கானது கெலிக்கும், குடும்பமானது பெருகி நீடும், உறவின் முறையார்கள் வந்து சேர்வார்கள், வேந்தர்களுடைய உதவியுண்டாகும், வெகு பேர்கள் சிநேகமாக வந்து கூடுவார்கள் எ-று. 9

பத்தின் பலன்.

பாறென பத்துவரில் பலனைக்கேளாய்
பரிவாக நினைத்ததுவும் பழியாய்நேரும்
சீறென செய்தொழிலும் சேதமாகும்
சிரிய விஷத்தினால் நோயுண்டாகும்
ஏறென யிருக்குமிடம் விட்டுபேற்கும்
யென்னேறம் சிலவழக்கு வந்துநேரும்
பேறென பெருமையுந் தாழ்வதாகும்
பெண்டீர்க்கும் மனவருத்த முண்டாமென்னே

(இ-ள்) பத்தின் பலன் யாதெனில் நினைத்த காரியம் பழியாக நேர்ந்துபோகும், செய்யும்படியான தொழில் சேதமென்னும் நஷ்டமுண்டாகும், விஷத்தினால் நோயானது உண்டாகும், இருக்குமிடத்தை விட்டுப் பேற்கும், என்னேரமும் வழக்குநேரும், பெண்டீர்க்கும் மனவருத்தமுண்டாகும் எ-று. 10

பதினொன்றின் பலன்.

ஏன்னபதி னொன்றுவரில் பலனைக்கேளாய்
ஏர்க்கையாய் நினைத்ததுவு முடிவதாகும்

மன்னிய மாடாடு வந்துசேரும்
மங்கையற்கும் பிணிதீரும் தருவுண்டாகும்
பன்னிய பால்பாக்கிய மிகவுண்டாகும்
பரிவாக யுத்தியோக முயர்ந்துநீடும்
உன்னிய வுறவுக்கள் வந்துகூடும்
உத்தமனே மனைதனிலே சுபங்களாமே

(இ-ள்) பதினொன்றின் பலன் யாதெனில், நினைத்த காரியம் முடிவாகும், ஆடு மாடுகள் வந்துசேரும், பெண்டீர்க்கு பிணியானது தீரும், கெர்ப்பமுண்டாகும், பால்பாக்கியமுண்டாகும், உத்தியோகம் உயர்ந்து நீடும், உறவுகள் வந்து கூடும், மனையில் சுபகாரியங்கள் நடக்கும் எ-று. 11

பன்னிரண்டின் பலன்.

ஆகபனி ரன்டுவரில் பலனைக்கேளாய்
அருமையாய் நினைத்தபொருள் வாராதப்பா
தாகமால் தனமதுவே விரையமாகும்
தன்மனையி லிருந்துபொருள் களவுபோகும்
பாகமா யிருந்தபொரு ளழிவதாகும்
பழியாக ஸ்திரீகளினால் கலகம்நேரும்
சோகமாம் சோரத்தாற் கெண்டமுண்டாம்
சோதனையாய் தனச்சேத மாகும்பாரே

(இள்) பன்னிரண்டின் பலன் யாதெனில் இப்போது அருமையாக நினைத்த பொருள் கிடைக்கமாட்டாது, தனவிரையமாகும், வீட்டிலிருந்து பொருள் களவுபோகும், பாகமாக யிருந்த பொருள் அழிந்துபோகும், ஸ்திரீகளால் கலகம் நேரும், சோரத்தினால் கெண்டம் நேரும், அதனால் தனச்சேதமாடிகும் எ-று. 13

பலகரை பனிரண்டுங் கவர்ந்த பலன்.

பலகரைதான் பனிரண்டுங் கவருமாகில்
பகருவேன் பலாபலனை பன்பாய்கேளு
நலமாக நாடியதோர் கருமமாகும்
நல்லதோர் நேயத்தால் பொருளுங்கிட்டும்

N. DORAIRAJAN,
ELECTRICAL WIRING CONTRACTOR,
5, VADAMALAI PILLAI ST.,
VEPERY POST, MADRAS.

துலவாகப் போனவரும் வந்துசேர்வார்
தொல்லையெனுங் கடனதுவுந் தீர்ந்துபோகும்
கலனுக யிருந்ததோர் வழக்குதீரும்
கஷ்டங்க ளகலுமென கழருவாயே

(இ-ள்) பலகரை பனிரண்டுங் கவர்ந்திடில் அதன்பலன் யாதெனில் நாடிய காரியம் முடிவாகும், நல்ல சினேகிதத்தால் பொருள் கிடைக்கும் தூரதேசம் போனபேரும் வந்துசேர்வார்கள் கடன் தீரும், வழக்குவொழியும், கஷ்டங்கள் யாவும் நிவர்ததியாகும் 13

பலகரை ஆரூடம்
முற்றிற்று.

ஜெனன ஆரூடம்.

விருத்தம்.

அரியவேமேடந்தன்னில் அன்புடன்செனிக்கிற்பாலன்
பிரியனுமெவர்களுக்கும் பொருளதுவுடையோனுகும்
நெரியுளானழகன்மெத்த நேரிழைமாற்குநேயன்
உரியவேசாஸ்திரங்கள் உணர்ந்திடும்வல்லோனென்னே

(இ-ள்) மேடவிராசியில் செனனமானவன் யாவர்களுக்கும் பிரியமுடையவன், பொருளுடையவன், நெரியுடையவன் அழகன் மாதர்களுக்கு நேயன், சாஸ்திரங்கள் ஓதவல்லவனுகும் எ-று. 1

என்னவேரிஷபந்தன்னில் எழிலுடனுதித்தபாலன்
மன்னியதெய்வபக்தி மாராதவாக்குமுள்ளான்
கன்னியமுடையோனுவான் கணிதசாஸ்திரம்படிப்பான்
உன்னியக்கபடேயில்லா உத்தமனென்றுபேசே

(இ-ள்) ரிஷபவிராசியில் ஜெனனமானவன் தெய்வபக்தியுடையவன் வாக்கு நிலமையுடையவன், கன்னியமுடையவன், கணித சாஸ்திரம் படிப்பான், கபடில்லாதவன் உத்தமன் எ-று. 2

பேசவேமிதுனந்தன்னில் பெட்புடனுதித்தபாலன்
நேசமுங்கீர்த்தியோடு நெரியதுமில்லானுகும்
வாசமாய்தனதுகார்யம் வண்மையதாகபார்ப்பன்
கூசிடான்வெட்கமில்லான் குணமிலாநென்றுசாற்றே.

(இ-ள்) மிதுன விராசியில் ஜெனனமானவன் நேசமில்லாதவன், கீர்த்தியில்லாதவன், நெரியில்லாதவன் தனது காரியங்களையேபார்ப்பவன் வெட்கமில்லாதவன் குணமில்லாதவன் எ-று. 3

சாற்றவேகடகந்தன்னில் சார்புடன்பிறந்தபாலன்
நேற்றியான்சிகப்புதேகன் நீடுஞ்சாமார்த்தியமுள்ளான்
தோற்றமாய்துலதூரங்கள் துரிதமாய்நடப்போனுகும்
தேற்றவேதனவானுக திரமுடனிருப்பான்பாரே

(இ-ள்) கடகவிராசியில் ஜெனனமானவன் நேற்றியான சிகப்புதேகன் சாமார்த்தியமுடையவன் துலதூரம் நடப்பவன் எந்நாளும் தனவானுக வாழ்ந்துக்கொண்டிருப்பான் எ-று. 4

பார்க்கவேசிங்கந்தன்னில் பரிவுடனுதித்தபாலன்
ஏர்க்கையாய்சிவனைத்தானும் எண்ணியேயர்ச்சிப்போனும்
தீர்க்கமாய்தானதர்மம் திரமுடன்மரவாமல்செய்வான்
யார்க்குமேநல்லோனுகும் பரிவுளானென்றுசொல்லே

(இ-ள்) சிங்கவிரர்சியில் ஜெனனமானவன் சிவபெருமானையே யென்னேரம் அற்சிப்பவன், தானதருமங்கள் மரவாமல் செய்பவன், யார்க்கும் நல்லோனுகவிருப்பான் அறிவுடையோன்.

சொல்லவேகன்னிதன்னில் சுகமுடன்பிறந்தபாலன்
நல்லவன்தருமவானும் நீடுமாசாரமுள்ளான்
வல்லவன்பின்வயதில் வாகுடன்ஸ்தனங்கள்சேர்ப்பான்
புல்லவேபலகர்மங்கள் புத்தியாலறிவான்காணே

(இ-ள்) கன்னியா விராசியில் ஜெனனமானவன் நல்லவன் தருமவான், ஆசாரமுடையவன் வல்லவன் பின்வயதில் தனந்தேடிச்சேர்ப்பான், பலகர்மங்களையும் தன்புத்தியாலறிகுவான் எ-று.

காணவேதுலாத்திற்ருனுங் கருதியேயுதித்தபாலன்
தோணவேமனைவிரண்டு தானுளான்குழந்தையுள்ளாள்
பூணவேதிரவியங்கள் பெருகுவான்பிரபுவாவான்
வேணவேபெரியோர்நேசம் வாய்த்திடுமென்றுகூறே

(இ-ள்) துலாவிராசியின் ஜெனனமானவன் இரண்டு மனைவிகள் உள்ளவன் குழந்தைகள் கூட்டமுடையவன் அதிக திரவியந்தேடுவான் பிரபாகுவன் பெரியோர்களுடைய நேயமுடையவன்.

கூறவேவிருட்சிகத்திற் குலவியே யுதித்தபாலன்
பேறுளன்தாய்தந்தைக்கு பிரியனும்பெண்டீர்நேயன்
நேறவேயெவர்களுக்கும் நல்லதோர்வார்த்தையுள்ளான்
கோறியேநினைத்தகாரியம் குணமுடன்முடிப்போனேமே

(இ-ள்) விருச்சிக விராசியில் ஜெனன மானவன் தாய்தந்தை யற்கு பிரியமுடையவன் பெண்டீருக்கும் நேசமுடையவன் யார்க்கும் நல்லவார்த்தை யுடையவன் நினைத்தகாரியங்களை முடிப்பான் எ-று. 8

ஆமென்தனுசுதன்னில் அன்புடனுதித்தபாலன்
நாமெனுங்கீர்த்தியுள்ளான் நல்லவனடக்கமுள்ளான்
காமெனுஞ்சத்ருதன்னை கண்டுமேபிடிக்கவல்லான்
தாமெனயிளமைதன்னில் தான்கற்பன்கல்வியென்னே

(இ-ள்) தனுசுவிராசியில் ஜெனன மானவன் கீர்த்தியுடையவன் நல்லவன், அடக்கமுடையவன், சத்துருக்களை கண்டுபிடிக்க வல்லவன், இளமையில்தானே வித்தைகளை சற்றுணற்குவான் எ-று. 9

என்னவேமகரந்தன்னில் எழிலுடனுதித்தபாலன்
இன்னியரகசியமான யிடத்தினில்மருவேயுள்ளான்
மன்னும்வாசனைகளுள்ள மலர்களின்மேற்பிரியன்
உன்னியபெண்டீர்மீது உற்றதோர்பிரியநாமே

(இ-ள்) மகரவிராசியில் ஜெனனமானவனுக்கு இரகசியமான யிடத்தில் மருவானதுயிருக்கும், வாசனைகளுள்ள மலர்களின்மேல் பிரியமுடையவன், மனையாளின்மீது ஆசையும அன்புமுடையவன் எ-று. 10

ஆமெனகும்பந்தன்னில் அன்புடனுதித்தபாலன்
போமெனதன்னைத்தானே புகழ்ந்துமேபேசிக்கொள்வான்
நாமெனபிறர்கள்தம்மை நாடியேயிகழ்ச்சிசொல்வான்
தாமெனகொஞ்சங்கல்வி யறிபலனென்றுசாற்றே

(இ-ள்) கும்பவிராசியில் ஜெனனமானவன் தன்னைத்தானே புகழ்ந்துபேசுவான், பிறர்களை யிகட்சியாகச்சொல்குவான் கொஞ்சம் கல்வியறிகுவான் எ-று. 11

சாற்றவே மீனந்தன்னில் சார்புடனுதித்தபாலன்
தோற்றவே தனவானுவான் துலங்கியச் சூரமுள்ளான்
ஏற்றதோர் மனைவிரெண்டு யுள்ளவன் ஞானியாவான்
நேத்திர ரோகந்தானு முள்ளவ னென்பாய்மாதே

(இ-ள்) மீனவிராசியில் ஜெனனமானவன் தனவானுகுவான், சூரமுடையவன், இரண்டு மனைவியருடையவன், ஞானவான், நேத்திரரோகன் எ-று. 12

ஜெனன ஆருடம்

முற்றிற்று.

ருதுக்களின் ஆருடம்.

விருத்தம்.

தானென வசந்தருதுந் தன்னிலே பிறந்தபாலன்
நானென யலங்கரிப்பன் நற்பொருள் தேடவல்லான
தேனென வயதுதானுந் தீர்க்கவான் திண்டிதின்பான்
பானென பாலின்மீதுப் பிரியவா னென்றுபேசே

(இ-ள்) வசந்தருதுவிற் பிறந்தவன் அலங்காரமுடையவன், பொருள் தேடுவான் தீர்க்காயுசுமுடையவன், அதிகமாக அன்னம் புசிப்பான் பாலின்மீது அதிகப் பிரியமுடையவன் எ-று. 1

பேசன கிரிஷ்மருதுப் பெருகிடப் பிறந்தபாலன்
நேசவான் நரம்பனுகும் நற்குணம் யோக்கியவானும்
வாசவான் சலத்தின்மீது வாகுளப் பிரியமுள்ளான்
கூசிடான் சாமார்த்தியமாக கூறுவான் வார்த்தையென்னே

(இ-ள்) கிரிஷ்மருதுவிற் பிறந்தவன் நேசமுடையவன் நரம்பனுகவிருப்பான், நற்குணமுடையவன், யோக்கியவான், சலத்தின் மீதுப் பிரியமுடையவன், கூச்சமில்லாமல் சாமர்த்தியமான வார்த்தைகள் பேசுவான் எ-று. 2

என்னவே வருஷருதுத் தன்னிலே பிறந்தபாலன்
உன்னிதன் நாகரீகன் உவர்ப்பான வஸ்துதின்பான்
கன்னியன் நல்லிடத்திற் களிப்புடன் வாசஞ்செய்வன்
பன்னியப் பலரூமெச்ச பன்புடன் நடப்பான்பாரே

(இ-ள்) வருஷருதுவிற் பிறந்தவன் உன்னிதமுடைய நாகரீகன், உவர்ப்பான வஸ்துககளை பிரியமாகப் புசிப்பான், கன்னிய

முடையவன், நல்லிடத்தில் சாவகாசஞ் செய்வான், பலரும் மெச்சும்படி நடப்பான் எ-று. 3

பாரென சரருதுவிற் பண்புடன் பிறந்தபாலன்
சீறென ஸ்திரீகள்மீது சிந்தையும் விருப்பமுள்ளான்
பேறென சம்பாத்தியமோடு பெருமையு மிகவேயுள்ளான்
ஆறெனக் காணநல்ல அந்தஸ்து வுடையோன்கூறே

(இ-ள்) சரருதுவிற் பிறந்தவன் ஸ்திரீகளின்மீது பிரியமுடையவன், சம்பாத்தியமுடையவன், பெருமையுடையவன் பார்க்க நல்ல அந்தஸ்துடையவனாகயிருப்பான் எ-று. 4

கூறவே மந்தருதுக் குலவிடப் பிறந்தபாலன்
நேறென நுடபமீதகி நல்லவன் கனவானுவான்
ஆறென யழகேயுள்ள அரிவையர் மேல்விருப்பன்
ப்பறென பிறத்தியாருக்கு பேருப காரஞ்செய்வான்

(இ-ள்) எமந்த ருதுவிற் பிறந்தவன் நுட்பமான தேகமுடையவன், நல்லவன், கனவன் அழகிய ஸ்திரீகளின்மேல் விருப்பமுடையவன் பிரத்தியார் களுக்கு உபம்கரஞ் செய்வான் எ-று. 5

செய்யவே சசிருதுவிற் சீருடன் பிறந்தபாலன்
நய்யவே சலப்பிரியன் நல்லதோர் நடக்கையுள்ளான்
வையமே புகழத்தானும் வாகுளப் புண்ணியவானும்
துய்யநற் கீர்ததியுள்ள துலங்கிடு தைர்யவானே

(இ-ள்) சசிருதுவிற் பிறந்தவன் சலத்தின்மேல் பிரியமுடையவன், நல்ல நடக்கையுடையவன், உலகமெங்கும் புகழும்படியானப் புண்ணியவானுகுவான், கிர்த்தியுடையவன், தைரியசாலி.

ருதுக்களின் ஆரூடம்

முற்றிற்று.

வேளைகளின் ஆரூடம்.

விருத்தம்.

மன்னும் சாத்வீகவேளை மருவிடப் பிறந்தபாலன்
துன்னும்நற் புத்திசாலி துலங்கிய யழகேயுள்ளான்
உன்னிய தெய்வபக்தி யுள்ளவன் கீர்த்திவானும்
வின்னமே யில்லாநல்ல விதரண சாலியென்னே

(இ-ள்) சாத்வீகவேலையிற் பிறந்தவன் புத்திசாலியாகவிருப்பான், அழகுடையவன், தெய்வபக்தியுடையவன், கீர்த்திவான் வின்னமில்லாதவன், விதரணசாலியாகும் எ-று. 1

என்ன ராஜசவேலையாக யெழிலுடன் பிறந்தபாலன்
உன்னிய உலகோருக்கு உபகாரி யாகவாழ்வான்
நன்னு நல்லறிவினோடு நடத்துவன் சமமாய்தானும்
கன்னிய சுகத்தினோடு கல்விவான் யென்றுசாற்றே

(இ-ள்) இராஜஸவேளையிற் பிறந்தவன் உலோக உபகாரியாகயிருப்பான், நல்லறிவு உடையவன் சமமாக நடப்பான சுகமும் கல்வியுமுடையவன் எ-று. 2

சாற்ற தாமதத்திற்றனும் சார்புடன் பிறந்தபாலன்
போற்றவே பொய்யேசொல்வன் புகழிலான் சோம்பனாகும்
ஏற்றவே யசதியாளன் யெவருக்கும் பாவியாவான்
தேற்றவே படிப்போயில்லா தடியனு மென்றுசொல்லே

(இ-ள்) தாமதவேளையிற் பிறந்தவன் பொய் சொல்பவன் சோம்பலுடையதன் அசதியுடையவன், யாவருக்கும் பாவியாகவிருப்பான், படிப்பில்லாதவன், தடியன் எ-று. 3

வேளைகளின் ஆரூடம்

முற்றிற்று.

ஜாமங்களின் ஆரூடம்.

விருத்தம்.

அரியவே முதலாஞ்சாமம் அன்புடன் பிறந்தபாலன்
பிரியவான் யெவர்க்கும்நல்லோன் பெருமையு முடையோனுவான்
உரியதோ ரழகன்வித்தை புத்தியு முடையதீரன்
சரியென யெவருமெச்ச சமமதாய் நடப்பான்பாரே

(இ-ள்) முதலாம் சாமத்திற் பிறந்தவன் பிரியமுடையவன் எவர்களுக்கும் நல்லவனாகவிருப்பான், பெருமையுடையவன் அழகுடையவன், வித்தையும் புத்தியும் உடையதீரன், யாவரும் மெச்ச சபமாக நடப்பான் எ-று. 1

பார்க்கவே யிரண்டாஞ்சாமம் பரிவுடன் பிறந்தபாலன்
தீர்க்மாம் வயதுமுள்ளான் திரவியந் தேடவல்லோன்

ஏர்க்கையாய் பெரியோருக்கு யிஷ்டமுமுள்ளோனவான்
சேர்க்கையாய் யுபகாரங்கள் செய்குவா னென்றுபேசே

(இ-ள்) இரண்டாம் சாமத்திற்பிறந்தவன் தீர்க்காயுசுடைய வன் திரவியந்தேட வல்லவன் பெரியோர்களுக்கு இஷ்டமுடையவனாக யிருப்பான் யார்க்கும் உபகாரங்கள் செய்குவான் எ-று. 2

பேசவே மூன்றாஞ்சாமம் பெடபுட னுதித்தபாலன்
தேசமாம் தொழில்கள்செய்ய துணிவது வுடையோனாகும்
வாசமாம் பொருள்கள்தேட வகையது சற்றுமில்லான்
நேசமு மில்லான்கேட்ட நிந்தைவானாகுமென்னே

(இ-ள்) மூன்றாம் சாமத்திற் பிறந்தவன் தோஷமாகியத் தொழில்செய்யத் துணிவுடையவன் பொருள்தேடவகையில்லாதவன், நேசமில்லாதவன், நிந்தையுடையவனாக விருப்பான் எ-று.

என்னவே நான்காஞ்சாம மெழிலுடன் பிறந்தபாலன்
கன்னிய முடையோன்நல்ல கனமுளான் புத்திசாலி
மன்னியப் பொருளுந்தேட மாபல சாலியாகும்
தன்னினத் தாரின்மீது தயவது யுள்ளான்பாரே

(இ-ள்) நான்காம் சாமத்திற் பிறந்தவன் கன்னியமுடையவன் கனவான் புத்திசாலி பொருள்தேடவல்லவன் பலசாலி தன்னுடைய இனதத்தார்கள்மீதுப் பிரியமுடையவன் எ-று. 4

பாறென யைந்தாஞ்சாமம் பண்புட னுதித்தபாலன்
சீறென செல்வமுள்ளான் சேர்க்கையாம் பந்துமுள்ளான்
பேறெனப் பொருளுந்தேடிபிறர்க்குப காரஞ்செய்வான்
நேறென நிலமையுள்ளான் நேசவா னென்றுகூறே

(இ-ள்) ஐந்தாஞ்சாமத்திற் பிறந்தவன் செல்வமுடையவனாக யிருப்பான், பந்துக்களுடையவன், பொருள்தேடி பிறர்களுக்கு உபகாரஞ்செய்குவான், நிலமையுடையவன், நேசமுடையவன். 5

ஜாமங்களின் ஆரூடம் முற்றிற்று.

சித்தர் ரஹஸ்யமென்னும்

ஆரூட அலங்காரம்.

முற்றுப்பெற்றன.